வெளியீடு 31-8-2005

Issued 31-8-2005

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

திங்கட்கிழமை, மார்ச் 28, 2005 தொகுதி 76 எண் 2

Monday the 28th March, 2005 — Volume 76 — No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

[Price Rs. 3.00

D
V2",3' pos
pos. 76.2
226622

337/2005

**28-3-2005**

**உள்ளடக்கம்**


பக்கங்கள்

**1. இரங்கற் குறிப்பு—**

முன்னாள் உறுப்பினர் மறைவு 239-240

**2. வினாக்கள்–விடைகள்—**

உடுக்குறியிட்ட வினாக்கள் 240-273

**3. தகவல் கோரல்—**

மாண்புமிகு முதலமைச்சர் பேரவை விதி 110–ன்கீழ் அறிவிப்புகளை வெளியிடுதல் மற்றும் மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சரின் சில கருத்துகள் பற்றி விளக்கம் கோரல் 273-290

**4. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்—**

(அ) விவசாயத் தொழிலாளர்களின் குறைந்தபட்ச ஊதியத்தை உயர்த்துதல்—மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை 287, 290-293

(ஆ) விரைவு நீதிமன்றங்கள் 31–3–2005–க்குப் பிறகும் செயல்பட மாநில அரசு நிதி வழங்குதல்—மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை 294-295

**5. கவன ஈர்ப்பு—**

சென்னை, தண்டையார்பேட்டையில் துணை மின் நிலையம் அமைக்கும் பணி 296-298

**6. அறிவிப்பு—**

உறுப்பினர் இல்லாததால் கவன ஈர்ப்பு தள்ளிவைப்பு 299

பக்கங்கள்

**7. மானியக் கோரிக்கைகள், 2005–2006, விவாதமும் வாக்கெடுப்பும்** — தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 4—ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை
(ஆ) கோரிக்கை எண் 9—பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை — 2991-370

| | |
|---|---|
| *மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி | 299,307, 340-342, 355-367 |
| *மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி | 303,307-308 315-317, 347-355 |
| *திரு. ப. அரசன் | 301-302 305-306 308-315 317-318 |
| திரு. நா. சந்திரமோகன் | 318-325 |
| *திருமதி வி. சிவகாமி | 325-333 |
| முனைவர் செ.கு. தமிழரசன் | 334-340 342-347 |

**8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** — 370-372

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## பங்குனி 15, தாரண – திருவள்ளுவர் ஆண்டு 2036

## 2005 மார்ச் 28, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை"

எண்ணிலடங்கா நிறைந்த பண்புகள் பலவற்றையும் உடைய அறிவாற்றலிற் சிறந்த சான்றோரைப் போற்றிப் புகழ்ந்து வணங்காதவர்கள், ஐம்புலன்களையும் இழந்த ஐம்பொறிகளைப் போல பயனற்றவர்களாகவே கருதப்படுவார்கள்.

## 1. இரங்கற் குறிப்பு

### முன்னாள் உறுப்பினர் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரங்கற் குறிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினரான திரு. என்.கே. பழனிசாமி அவர்கள் 23–3–2005 அன்று மறைவுற்ற செய்தியினை பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என்.கே. பழனிசாமி அவர்கள் 1952 முதல் 1957 வரை அன்றைய ஊத்துக்குளி தொகுதியிலிருந்தும், 1957 முதல் 1962 வரை மற்றும் 1971 முதல் 1976 வரை பெருந்துறை தொகுதியிலிருந்தும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு போற்றத்தக்க வகையில் பணியாற்றியுள்ளார்.

இம்முன்னாள் உறுப்பினரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

[பேரவைத் தலைவர்] [2005 மார்ச் 28

மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காத்தனர்.)*

## 2. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள், வினா எண் 201, 202 மற்றும் 203 பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினா எண் 204, திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி, மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

**204—**

### கணினி பயிற்சி

***5333—திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:**

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கணினி பயிற்சி நடத்தும் தனியார் அனைவரும் அரசிடம் அனுமதி பெற்று நடத்துகிறார்களா?

(ஆ) அனுமதி பெறாதவர்கள்மீது அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) கணினி பயிற்சி நடத்தும் தனியார் அனைவரும், அரசிடம் அனுமதி பெற வேண்டுமென விதி ஏதுமில்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி, இருக்கையில் இல்லை. வினா எண் 205, திரு. மே.ப. காமராஜ், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

226622



2005 மார்ச் 28]

**205—**

### நகைக் கடன்

*** 7827—திரு. மே.ப. காமராஜ்:**

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதிக்குட்பட்ட ஆரூர்ப்பட்டி ஊராட்சியிலுள்ள ஆரூர்ப்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு நகைக் கடன் வழங்க சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் மூலம் அனுமதி அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆரூர்ப்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் உறுப்பினர்களது கடன் நிலுவைக்கும், மேற்படி வங்கி மத்தியக் கூட்டுறவு வங்கிக்குச் செலுத்த வேண்டிய கடன் நிலுவைக்கும் சமன்பாடு இல்லை. 31–3–2003 அன்றுள்ளபடி உறுப்பினர்கள் அளவில் சமமின்மை ரூ.85.66 இலட்சமும், மத்திய வங்கி அளவில் ரூ.113.76 இலட்சமும் ஆக உள்ளது. 31–3–2004 அன்றுள்ளபடி உறுப்பினர் அளவில் ரூ.85.19 இலட்சமும், மத்திய வங்கி அளவில் ரூ.115.76 இலட்சமும் உள்ளது. எனவே, நகைக் கடன் வழங்க போதிய சொந்த நிதி ஆதாரம் இல்லை என்பதோடு நகைக் கடன் வழங்க தேவையான நிபந்தனைகளையும் வங்கியால் பூர்த்தி செய்ய இயலவில்லை. ஆகவே, சொந்த நிதி ஆதாரத்தைப் பெருக்கி, தேவையான நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும்பொழுது இவ்வங்கிக்கு நகைக் கடன் வழங்க அனுமதி அளிக்கப்படும்.

(ஆ) கேள்வி எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை. வினா எண் 206, திரு. ஆர்.டி. கணேசன், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

[2005 மார்ச் 28

**206—**

## மத்திய கூட்டுறவு வங்கி

*** 22534—திரு. ஆர்.டி. கணேசன்:**

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேனியில் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டத்தில் அரசு மருத்துவமனை மருத்துவக் கல்லூரி, கலைக் கல்லூரி, மகளிருக்கான தொழிற்பயிற்சி நிறுவனம், மாவட்ட விளையாட்டு அரங்கம், மாவட்ட நீதிமன்ற வளாகக் கட்டடம், மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகம், ஆண்டிப்பட்டி, சேடப்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆகியவற்றை ஏற்படுத்தி, பல்வேறு துறைகளிலும் பல வளர்ச்சிப் பணிகளைக் கொடுத்து, பின்தங்கிய மாவட்டமான தேனி மாவட்டத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லும் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். தேனி மாவட்டம் 1995 ஆம் ஆண்டு தனி மாவட்டமாகப் பிரிந்து 10 வருடங்கள் ஆகின்ற நிலையில் அரசின் பல்வேறு துறைகளும் தேனியில் இயங்கி வருகின்றன. தேனி மாவட்டத்தில் தற்போது அண்ணா கூட்டுறவு நூற்பாலை ஒன்றும், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் 83–ம், நகரக் கூட்டுறவு வங்கிகள் 5–ம், கூட்டுறவு நிலவள வங்கிகள் 4–ம், கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கம் 283–ம், நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கம் 22–ம், பணியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் 20–ம், கூட்டுறவு விற்பனைச் சங்கம் 2–ம், விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கம் 2–ம், தனியாருக்கான ராஜஸ்ரீ சர்க்கரை ஆலை ஒன்றும் இயங்கி வருகின்றன.



2005 மார்ச் 28]

முற்பகல் 10–05

தற்சமயம் அனைத்து கூட்டுறவுச் சங்கங்களிலும் கடன் உதவி பெறும் மகளிர் குழுக்கள், விவசாயிகள் மற்றும் வேளாண் பெருங்குடி மக்கள், பொதுமக்கள் கடன் அனுமதி பெறுவதற்கு, கூட்டுறவுச் சங்கங்களின் சார்பில், மதுரையில் அமைந்துள்ள மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியில் அனுமதி பெற்று கடன் பெறுகின்ற சூழ்நிலை உள்ளது. ஆகவே, வளர்ந்து வருகின்ற தேனி மாவட்டத்தில், தேனியை மையமாக வைத்து, தேனி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி அமைக்க மாண்புமிகு அம்மா அவர்கள் அரசில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்பதனை பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி 1912–ல் தொடங்கப்பட்டது. அதன்பிறகு 1945–ல் அவ்வங்கியைப் பிரித்து இராமநாதபுரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி என புதிய மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தொடங்கப்பட்டது. பின்னர் 1991–ல் மீண்டும் மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியை இரண்டாகப் பிரித்து, திண்டுக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி என ஏற்படுத்தப்பட்டது. அவ்வங்கியின் குவிந்த நட்டம் 31–3–2003–ல் ரூ. 14.12 கோடியாக உள்ளது. அதனைத் தொடர்ந்து அவ்வங்கியின் செயல்படா ஆஸ்திகளின் மதிப்பு N.P.A. ரூ. 51 கோடியே 14 இலட்சமாக உயர்ந்துள்ளது. இந்நிலையில் ஏற்கெனவே நட்டத்தில் இயங்கிவரும் மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியை, தற்போது, மேலும் இரண்டாகப் பிரித்து, தேனி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி என அமைக்கப்படும்பட்சத்தில், தொடக்கத்திலேயே ரூ.339 இலட்சத்து 9 ஆயிரம் நட்டத்துடன் செயல்படக்கூடிய சூழ்நிலை நேரிடும். அத்துடன் புதிய மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள், வாழ்திறனுடனும் மற்றும் இலாபத்துடனும் செயல்படவேண்டும் என்று தேசிய வங்கி அறிவுறுத்தியுள்ளது என்கின்ற பதிலைச் சொல்லி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.டி. கணேசன்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றுபட்ட மதுரை மாவட்டத்தில், இராமநாதபுரம், திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்கள் இருந்தன. தற்சமயம் மதுரையிலிருந்து 3

[2005 மார்ச் 28

மாவட்டங்களும் தனித் தனியாகப் பிரிந்துள்ளன. இராமநாதபுரம் மாவட்டத்திற்கும், திண்டுக்கல் மாவட்டத்திற்கும், மத்திய கூட்டுறவு வங்கி அமைந்து இருக்கும்பட்சத்தில், தேனி மாவட்டம், தலைநகராக விளங்குகின்ற காரணத்தினால், சிறப்பு நிலை கருதி வருகின்ற காலத்தில் அமைத்துத் தர முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட புதிய மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, வாழ்திறன் மற்றும் இலாபத்துடன் செயல்படவேண்டும். வங்கியின் நிதி ஆதாரங்கள், நிர்வாகம், நடைமுறை மூலதனம், வியாபார அபிவிருத்திக்கான சாத்தியக்கூறுகள், வைப்பீட்டாளர்களின் பாதுகாப்பு, முன்னோடி வங்கியின் மாவட்ட குழுவின் தடையில்லாச் சான்றிதழுடன் பதிவாளரின் ஒப்புதலும் பெறவேண்டும். அத்துடன் புதிய வங்கியின் நிர்வாகக் குழுவின் தீர்மானங்கள் மற்றும் பரிந்துரைகள் ஆகியவற்றைப் பரிசீலித்து, அதன்பிறகு அனுமதி வேண்டி தேசிய வங்கிக்கு அனுப்பப்படுகிறது. ஆகவே, தேனி மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே, மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியே, தேனி மாவட்டத்திற்குத் தேவையான முழு கடன்களையும் வழங்கிக்கொண்டு வருகிறது என்கின்ற பதிலைச் சொல்லி அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்பும்கு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தமிழகத்திலே 30 மாவட்டங்கள் இருக்கின்றன. இந்த 30 மாவட்டங்களில், எத்தனை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் இயங்கி வருகின்றன? எந்தெந்த மாவட்டங்களுக்கு இன்னும் அந்த மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் அமைக்கப்படவில்லை? வருகின்ற காலத்திலாவது அந்த மாவட்டங்களுக்கு எல்லாம் அமைப்பதற்கு, அரசு முன் வருமா என்று தெரிந்துகொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அளவில் 23 மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் இயங்கிக்கொண்டு இருக்கின்றன. எதிர்காலத்தில் இதுகுறித்து மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று ஆய்வு செய்யப்படும் என்கின்ற தகவலைச் சொல்லி அமர்கிறேன்.



2005 மார்ச் 28]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ச. ராமராஜ்.

**திரு. ச. ராமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில், தேனி மாவட்டம் மிகவும் பின்தங்கி இருந்த மாவட்டம். கடந்த 4 ஆண்டுகளில் பல துறைகளில் முன்னேற்றமான மாவட்டமாகச் செயல்படுகின்ற சூழ்நிலையில், மகளிர் சுய உதவிக் குழு, தேனி மாவட்டத்தில் முன்னிலை வகிக்கின்றது. அதைப்போன்று, சற்றேறக்குறைய 110 கிலோ மீட்டர் வரை மதுரைக்குச் செல்ல வேண்டிய விவசாயிகள் அதிகம் இருக்கின்ற பகுதியான தேனி மாவட்டத்திற்கு முன்னுரிமை கொடுத்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தேனி மாவட்டத்தில் மத்திய கூட்டுறவு வங்கி அமைத்திட ஆவன செய்யுமாறு, எங்களது தேனி மாவட்டத்தினுடைய மக்களின் சார்பாகக் கேட்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, இலாபத்தில் இயங்காத ஒரு சூழ்நிலையில் நட்டத்தில் இயங்கிக்கொண்டு இருக்கிறது. எனவே, அந்த வங்கியை இரண்டாகப் பிரிக்கும்போது, தேனி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியானது, தொடங்கப்படும்போதே நட்டத்தில் இயங்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படும். ஆகவே, அத்தகைய சூழ்நிலைகள் மாறிய பிறகு மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று தங்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்கின்ற விடையினைச் சொல்லி அமர்கிறேன்.

முற்பகல் 10–10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை நகரக் கூட்டுறவு வங்கி, Urban Co-operative Bank, அது இப்போது 'மலர்ந்தும் மலராத பாதி மலர்போல' செயல்பட்டு வருகிறது. அதனுடைய முழுமையான செயல்பாட்டுக்கு ஊழியர் நியமனம்—அதில் இருந்தவர்களில் பலபேர் நீக்கப்பட்டு இப்போது வேலையில்லாத நிலையில் இருக்கிறார்கள்; இதுகுறித்து அரசின் நடவடிக்கைகள் சம்பந்தமாக அமைச்சர் விளக்குவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை நகர மத்திய கூட்டுறவு வங்கி குறித்து தனியாகக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.ஆர். இராமசாமி.

**திரு. கே.ஆர். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை வங்கியை 3 மாவட்டங்களுக்கு, மூன்றாக முதல் கட்டமாகப் பிரித்தார்கள். அதிலே சிவகங்கை மாவட்டமும் ஒன்று. இப்போது சிவகங்கை மாவட்டத்திலே இருக்கக்கூடிய வங்கி நலிவுற்று கடைசி நிலையிலே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதைச் சீர் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால தேர்ந்தெடுக்கப்பட்ட வங்கிகளுடைய நிர்வாகக் குழுக்களுடைய காலத்தில் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளிலே பல்வேறு முறைகேடுகள் நடைபெற்றதன் காரணமாகவும், நிர்வாகச் சீர்கேடுகள் காரணமாகவும், முறையற்ற கடன்கள் வழங்கியதன் காரணமாகவும், Non–Performance Assets அதிக அளவிலே உயர்ந்துவிட்ட காரணங்களால் பல்வேறு வங்கிகள் நட்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அவை குறித்து மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, இப்போது அவையெல்லாம் சீர்படுத்தப்பட்டு வருகின்றன என்கிற தகவலைச் சொல்லி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி க. பாலபாரதி.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம், சேலம் உட்பட 6 மாவட்டங்களில் உள்ள கூட்டுறவு வங்கிகளில் 40 சதம்கூட அவர்கள் கடனை வசூலிக்கவில்லை என்று சொல்லி அவற்றினுடைய செயல்பாட்டை முடக்கி வைப்பதற்கு மத்தியில் இருக்கக்கூடிய வங்கி உத்தரவிட்டிருப்பதாக ஒரு தகவல் இருக்கிறது. அந்த உத்தரவை நீக்கி, தொடர்ந்து செயல்பட வைப்பதற்கு மாநில அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா என்பதனை அமைச்சர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர்தான் நபார்ட் வங்கிக்கு அறிவுறுத்தி, நபார்ட் வங்கியானது இவ்வங்கிகள் செயல்படுவதற்கான ஆணைகளை வழங்க வேண்டும் என்ற தகவலைச் சொல்லி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சிவசாமி.





**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கக்கூடிய மத்திய கூட்டுறவு வங்கிகளில் எத்தனை வங்கிகள் இலாபத்தில் இயங்குகின்றன? எத்தனை வங்கிகள் நட்டத்தில் இயங்குகின்றன? நட்டத்தில் இயங்குகின்ற வங்கிகள் நட்டம் அடைந்ததற்கு என்ன காரணம்? அவை இலாபம் அடைவதற்கு அரசு ஏதேனும் சிறப்பு நடவடிக்கைகளை எடுக்க இருக்கிறதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய கூட்டுறவு வங்கிகள் கடந்த காலத்தில், gas loan, consumer loan, non–farm sector loan போன்ற பல்வேறு loan-களை ஏராளமான அளவிலே தகுதியற்றவர்களுக்கு வழங்கியதன் காரணமாக நட்டத்தில் இயங்க வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டு வருகிறது. இப்போது அவை எல்லாம் ஆராயப்பட்டு சரியாக்கப்பட்டு வருகின்றன என்ற தகவலைச் சொல்லி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. இளவழகன்.

**திரு. ப. இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாகத் தொடங்கப்பட்ட மாவட்டங்களில் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் அமைக்கப்படவில்லை. அப்படி புதிதாக மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் அமைக்கப்பட வேண்டுமானால், அதற்கான அடிப்படை சாத்தியக்கூறுகள் என்ன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக ஒரு மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியானது அமைக்கப்படும்போது அதனுடைய வாழ்திறன் இலாபத்தில் அமையத்தக்க வகையில் அமைய வேண்டும் என்கின்ற அளவில் பதிலைச் சொல்லி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 207, திரு. கே. சி. கருணாகரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**207—**

**மருத்துவக் கட்டணம்**

***39406—திரு. கே.சி. கருணாகரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தனியார் மருத்துவமனைகளில் நடந்துவரும் அறுவை சிகிச்சை உள்ளிட்ட முக்கிய சிகிச்சைகளுக்குக் கட்டண வரம்பை மாநில அரசு நிர்ணயிக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் மருத்துவமனைகளில் கட்டண வரம்பை நிர்ணயிக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் மருத்துவமனைகள் தமிழ்நாட்டிலே வளர்ந்து வருகிற மிகப் பெரிய தொழில் துறையாக மாறி வருகிறது. மனித குலத்திற்குச் சேவை செய்வதற்காக இந்த மருத்துவத் துறை சேவை துறையாக இருந்தது கொஞ்சம் கொஞ்சமாக மாறி, இப்போது அது தொழில்ரீதியான துறையாக மாற்றப்பட்டிருக்கிறது. அதுவும் தனியார் மருத்துவமனைகளில் தங்களுடைய இஷ்டத்திற்கு அறுவை சிகிச்சைக்கான rate-ஐ நிர்ணயம் செய்து கொள்கிறார்கள், கட்டணத்தை நிர்ணயம் செய்து கொள்கிறார்கள். அதில் இருதய மாற்று அறுவை சிகிச்சை, சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை, மூட்டு மாற்று அறுவை சிகிச்சை போன்ற முக்கியமான, இதுமாதிரி உயிர் காக்கும் சிகிச்சைகளை நாம் பொது மருத்துவமனையில் அரசுரீதியாகச் செய்ய முடியாத சூழ்நிலையில், தனியார் மருத்துவமனைகளில் பல இலட்சங்கள் இருந்தால் மாத்திரமே இதைச் செய்ய முடியும் என்கிற சூழ்நிலை இருக்கிறது. அதேபோல கர்ப்பப்பை மாற்று சிகிச்சை, பெண்களுக்கான இன்னும் பல்வேறு முக்கியமான சிகிச்சைகளுக்கு கூடுதல் கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றன. ஆகவே, அரசுத் துறைகளில் செய்ய முடியாத சிலவற்றைத் தனியார் அமைப்பில், இவ்வாறு செய்கிறபோது, அவற்றைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதும், தமிழக மக்கள் நலனைக் காப்பாற்றுவதும், இந்த அரசின் கடமை என்பதன்பேரில், தனியார் மருத்துவமனைகளுக்கான வரம்பை அரசு நிர்ணயிக்குமா? கட்டணத்தை நிர்ணயிக்க முன்வருமா என்பதுதான் கேள்வி.

முற்பகல் 10–15

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் மருத்துவமனைகளைப் பொறுத்தவரையிலே, Tamil Nadu Private Clinical Establishment (Regulation) Act என்ற ஒரு Act-ஐ, 1997-லே கொண்டு வந்திருக்கிறார்கள். அதற்கான சட்ட விதிகள்





இதுவரையிலே வரவில்லை. சட்டத் துறைக்கு அனுப்பி, அதற்கான கோப்புகள் இன்றையதினம் சட்டத் துறையிலே இருக்கிறது. உறுப்பினர் கூறியதுபோல், தனியார் மருத்துவமனைகளிலே வசூலிக்கக்கூடிய கட்டணங்கள்--அறுவை சிகிச்சைக்காக வசூலிக்கக்கூடிய கட்டணங்களைப் பொறுத்து, அது இருதய அறுவை சிகிச்சையாக இருந்தாலும் சரி அல்லது சிறுநீரக அறுவை சிகிச்சையாக இருந்தாலும், எந்த அறுவை சிகிச்சையாக இருந்தாலும், அளவுக்கு அதிகமாக வாங்குகிறார்கள் என்ற ஒரு குறையை இங்கே கூறியிருக்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில் இருக்கக்கூடிய அரசு மருத்துவமனைகளிலே, சிறந்த முறையிலே சிகிச்சை அளிக்கப்படுகின்றன. அதேபோல, சென்னையிலே இருக்கக்கூடிய அரசுப் பொது மருத்துவமனையிலேகூட, ஒரு நாளைக்கு மட்டும், மூன்று Open Bye-pass Surgery நடந்து கொண்டிருக்கிறது. சிறுநீரக அறுவை சிகிச்சையும் நடந்து கொண்டிருக்கிறது. அதேபோல, Illness Society-க்குக்கூட, மாண்புமிகு இதய தெய்வம் தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், முதலமைச்சர் நிதியிலேயிருந்து, நிதியைக் கொடுத்து, அறுவை சிகிச்சை நடந்து கொண்டிருக்கிறது. அடுத்து, கட்டணத்தைப் பொறுத்தவரையிலே, தனியார் கட்டணத்தைப் பொறுத்தவரையிலே, regulation — அதாவது, அப்படிப்பட்ட மருத்துவமனைகளை registration செய்வதற்கும், அதேபோல, அங்கு இருக்கக்கூடிய கட்டமைப்புகள், என்னென்ன கருவிகள் வைக்கப்பட வேண்டும்; எந்தெந்த மருத்துவர்களை நியமிக்க வேண்டுமென்ற ஒரு நிர்ணயம்தான் அந்த Act-லே இருக்கிறது. தற்சமயம், உங்களுடைய கோரிக்கையை ஏற்று, தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் இதை எடுத்துச் சென்று, அந்தச் சட்டங்கள் இயற்றும்போது, அதற்கும் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை அவசியம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவது என்பது, பல இலட்சக்கணக்கான தமிழ்நாட்டு மக்களின் நலனைக் கருதி, உடனடி அவசியமாகிறது. இருதய அறுவை சிகிச்சைகளைத் தனியார் மருத்துவமனைகளிலே செய்கிறபோது, முதல்வர் நிவாரண நிதியிலேயிருந்து அல்லது பொது நிதியிலேயிருந்து இருபத்தையாயிரம் ரூபாய் அல்லது ஒட்டுமொத்த அறுவை சிகிச்சையிலே ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தை நிவாரணமாக அரசு வழங்குவது உண்மை. ஆனால்,

[2005 மார்ச் 28

அந்தத் தொகையும்கூட, அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்களுக்கேகூட, பல இலட்சக்கணக்கான ரூபாய் பாக்கி, நிலுவையிலேயே இருக்கிற சில மருத்துவமனைகளின் பட்டியல் என்னிடம் இருக்கிறது. ஏற்கெனவே, நான், நிதித் துறைச் செயலகத்திற்குக்கூட, அதைத் தெரிவித்திருந்தேன். அந்தப் பணமும் கிடைக்கவில்லை. சரியான முறையிலே அந்த ஜனங்களுக்குப் போகமாட்டேன் என்கிறது. இயற்கையாக, தனியார் மருத்துவமனைகளில்போய் சிகிச்சை செய்துகொள்வதிலே பிரச்சினை இருக்கிறது. உதாரணமாக, மூட்டு மாற்று அறுவை சிகிச்சைகளெல்லாம் செய்ய வேண்டுமென்றால், சில இலட்சங்கள் இல்லாமல் முடியாது. (மணியடிக்கப்பெற்றது) ஆகவே, மீண்டும் அதை அரசின் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். கட்டாயமாக, இதை ஒரு கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரவில்லையென்றால், காளான்களைப்போல், தனியார் மருத்துவமனைகள், மேலும், மேலும் அதிகரித்து, ஜனங்களைத் தொல்லைபடுத்தும். அதற்கு முடிவு காண வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் இங்கே கூறும்போது, அறுவை சிகிச்சைக்கான நிதியை ஒதுக்கவில்லை என்று சொன்னார்கள். மொத்தமாக 15 கோடி ரூபாய் நிதி, அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதாவது, 2 : 1—10 கோடி ரூபாய் தமிழக அரசும், 5 கோடி ரூபாய் மத்திய அரசும் கொடுக்க வேண்டும். தற்சமயம், அதை ஆய்வு செய்தபோது, மத்திய அரசிடமிருந்து அந்த 5 கோடி ரூபாய் வரவில்லை. இருந்தபோதிலும், தமிழக அரசிடமிருந்து, அந்த ரூபாயை எடுத்து, எந்தெந்த மருத்துவமனைகளிலே, யார் யார் சிகிச்சை பெற்றார்களோ, அவர்களுடைய அறுவை சிகிச்சைக்கான தொகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மேலும், வருகின்ற இந்த மார்ச் மாதக் கடைசிக்குள், மீதமுள்ள மருத்துவமனைகள், அத்தனை மருத்துவமனைகளுக்கும் அந்த நிதி ஒதுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல, இந்தக் கட்டண வரம்பைப் பொறுத்தவரையிலே, ஏற்கெனவே நான் உங்களிடம் கூறியதுபோல, இதற்கும் அரசு கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன்.



2005 மார்ச் 28]

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவமனைகளில், அறுவை சிகிச்சை செய்வது சம்பந்தமான இந்தக் கேள்வியிலே, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்பிக் கேட்க விரும்புவது, அரசு மருத்துவமனைகளிலே, பல இடங்களிலே, Operation Theatres இருந்தும், Operation Theatres செயல்படுத்தப்படாத நிலையில், பல மருத்துவமனைகளில் Operation Theatre–களே இல்லாமல், அரசு மருத்துவமனைகளில், Operation Theatre – களில் அறுவை சிகிச்சை வசதி இல்லாமல் இருப்பதன் காரணமாக, மக்கள், தனியார் துறைக்குச் செல்கிற ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக, என்னுடைய தொகுதியிலே, அருமனையிலே, நானே M.L.A. Fund–லே, ஒரு Operation Theatre கட்டிக் கொடுத்ததற்குப் பிறகும், கருவிகள் இல்லை என்ற காரணத்தைச் சொல்லி, அதைப் பயன்படுத்தாத நிலை இருந்து கொண்டிருக்கிறது. இதுபோன்ற குறைபாடுகளை, அரசு மருத்துவமனைகளிலேயிருந்து போக்குவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–20

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறும்போது, அவருடைய சட்டமன்ற நிதியிலேயிருந்து அறுவை சிகிச்சை அரங்கம் கட்ட பணம் கொடுத்ததாகக் கூறினார். மாண்புமிகு இதய தெய்வம், தமிழகத்தினுடைய முதல்வர், புரட்சித் தலைவி அம்மா அவர்கள், நான் ஏற்கெனவே என்னுடைய மானியக் கோரிக்கையில் கூறியதுபோல, உலக வங்கியினுடைய நிதியைப் பெற்று, இப்போது 5 மாவட்டங்களைத் தேர்வு செய்திருக்கிறார்கள். அந்த 5 மாவட்டங்களிலே கன்னியாகுமரி மாவட்டமும் ஒன்று. அந்த மாவட்டத்திலே உங்களுடைய சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அந்த அரசு மருத்துவமனையும் அந்த உலக வங்கியினுடைய நிதியிலே வருகிறது. நீங்கள் அறுவை சிகிச்சை அரங்கம் கட்ட பணம் கொடுப்பதற்கு முன்னால் அரசிடம் பரிந்துரை பெற்று அரசு மூலமாக அறுவை சிகிச்சை செய்வதற்கான ஏற்பாடுகள், அதாவது உபகரணங்கள் வாங்க வேண்டும். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி நிதியிலிருந்து நிதியைக் கொடுக்கலாம். ஆனால், அதேபோல அரசு மூலமாக இருக்கக்கூடிய மருத்துவமனைகளிலே அந்தக் கருவிகளை வாங்குவதற்கான ஒப்பந்தங்களை நீங்கள் அங்கே இருக்கக்கூடிய மாவட்டத்தினுடைய அதிகாரிகளுக்கு எழுதிக் கொடுத்து அதன் மூலமாக வரவில்லை என்றால் அரசு கண்டிப்பாக நடவடிக்கை

[2005 மார்ச் 28

எடுக்கும். கன்னியாகுமரி, தேனி, தருமபுரி, கிருஷ்ணகிரி, புதுக்கோட்டை ஆகிய 5 மாவட்டங்களில் முதல் கட்டமாக இந்த உலக வங்கியினுடைய நிதியைப் பெற்று, இருக்கக்கூடிய அத்தனை மருத்துவமனைகளிலும் அடிப்படை வசதிகளாகிய அறுவை சிகிச்சைக் கருவிகள் மற்றும் பல்வேறு சாதனங்களை வாங்குவதற்காக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே தற்சமயம் அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு, வருகின்ற நிதியாண்டிலேயே அத்தனை வேலைகளையும் முடிக்க வேண்டுமென்று அம்மா அவர்கள் ஓர் உத்தரவு இட்டிருக்கிறார்கள். ஆகவே, உங்களுடைய கோரிக்கையை இந்த மாமன்றத்திலே வைத்தது மட்டும் அல்லாமல், அதையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிறைவேற்றியிருக்கிறார்கள் என்பதை நான் இந்த மாமன்றத்திலே பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. போளூர் வரதன்.

**திரு. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் மருத்துவமனைகளிலே அறுவை சிகிச்சை செய்கின்றபோது வசூலிக்கப்படுகின்ற தொகையைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் அரசு இருக்கிறது, 1997-லேயே சட்டம் இயற்றியிருக்கிறார்கள்; அதை மாற்றியமைக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்றைக்கு தமிழகத்திலே பல தனியார் மருத்துவமனைகளிலே இறந்துபோனவர்களின், சடலத்தை உள்ளேயே வைத்து treatment கொடுத்ததாக பல இலட்சம் ரூபாய் கேட்டார்கள். இராயபுரத்திலே சில மாதங்களுக்கு முன்னாலே பெரிய போராட்டம் நடந்தது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. கேள்வி நேரத்திலே குற்றச்சாட்டு கூடாது. (குறுக்கீடு) வினா எண் 208, திருமதி மல்லிகா சின்னசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர். (குறுக்கீடு) இல்லை, இல்லை, வேண்டாம்.

**208—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

***48762—திருமதி மல்லிகா சின்னசாமி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2005 மார்ச் 28]

(அ) முசிறி தொகுதி, புத்தனம்பட்டி ஊராட்சியில் புதிதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி ஊராட்சி ஒன்றியம், புத்தனம்பட்டி கிராமத்தில் புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் எதுவும் இல்லை.

**திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர் ஒன்றியத்தில், சிறுகாம்பூர் பகுதியில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. அந்த மருத்துவமனைக்கு தரத்தை உயர்த்தியதோடு மட்டுமல்லாமல் 30 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடும் செய்து, கட்டட வசதியைச் செய்து தந்த புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது கோடானுகோடி நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தற்போது மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் புத்தனம்பட்டியில் ஓர் அரசு மருத்துவமனை அமைப்பதற்குக் கேட்டிருந்தேன். அதற்கு சாத்தியக்கூறு இல்லை என்று கூறினார்கள். இருந்தபோதிலும், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் எனது தொகுதியில் இந்த 4 ஆண்டுகளாக கேட்டதையெல்லாம் வாரி வழங்கிக் கொண்டிருக்கக்கூடிய அந்த அன்னை, 10 வருடங்களாக திருச்சி – நாமக்கல் சாலை, திமுக. ஆட்சியில் கேட்பாரற்ற நிலையிலிருந்த அந்தச் சாலைக்கு 2 கோடியே 20 இலட்சம் ரூபாய் நிதியை ஒதுக்கீடு செய்தும், முசிறி – புலிவலம் சாலைக்கு 20.98 இலட்சத்தை நிதி ஒதுக்கீடு செய்தும், எனது தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றித் தந்த அந்த அன்னைக்கு, புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு இந்த நேரத்தில் நன்றியினைக் கூறிக்கொள்கிறேன். இந்த புத்தனம்பட்டி பகுதி சிறிய ஊராட்சி. இருந்தபோதிலும், அந்தப் பகுதியில், புத்தனம்பட்டியில் மட்டும் 3,500 மக்கள் தொகை இருக்கின்றது. அதைச் சுற்றியுள்ள சாத்தனூர், நரேந்திரபுரம், வெள்ளக்கல்பட்டி, அவனிமங்கலம் ஆகிய ஊர்களைச் சேர்த்து, ஆக மொத்தம் 5,300 பேர் மக்கள் தொகை இருக்கின்றது. அது மட்டுமல்லாமல் அங்கு மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டு

இருக்கக்கூடிய புத்தனம்பட்டி அரசு கலைக் கல்லூரி இருக்கின்றது. அந்தக் கலைக் கல்லூரியில் மட்டும் 3,000–க்கும் மேற்பட்ட மாணவ மாணவியர் கல்வி பயின்றுகொண்டு இருக்கின்றார்கள். எல்லோரையும் சேர்த்தால் 12,000–க்கும் மேற்பட்ட மக்கள் தொகை அங்கு இருப்பதினால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்து அந்தப் பகுதியில் அரசு மருத்துவமனை அமைக்க ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10–25*

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று, வருகின்ற நிதி ஆண்டிலே நிதிநிலைமைக்கு ஏற்ப, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 209, திரு. கோவை தங்கம், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

**209—**

## சிறு தொழில்

*** 39024—திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கதர்த் துறை மூலம் மகளிருக்கு சிறு தொழில் தொடங்க அரசு உதவி புரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் விளிம்புத் தொகைத் திட்டம் கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தில் ஆண்/பெண் தொழில் முனைவோர்களுக்கு தங்களது திட்டங்களுக்குப் பெறும் வங்கிக் கடனுக்கு 20 முதல் 30 விழுக்காடு வரை விளிம்புத் தொகை மானியம் வழங்கப்படும் திட்டம் தற்போது





நடைமுறையில் உள்ளது. இந்தத் திட்டத்தில் மகளிருக்கென்று 30 விழுக்காடு வரை அதிகபட்சமாக விளிம்புத் தொகை மானியம் அளிக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் கதர் வாரியத் துறை மூலமாக சிறு தொழில் செய்வதற்கு மகளிருக்கு உதவித் தொகை வேண்டுமென்று சொல்லி, வங்கிகளை அணுகுகின்றபோது எந்த வங்கியிலும் கடன் கொடுக்க முன்வருவதில்லை. அதேசமயத்தில், அரசிடம் அணுகி, சிறு தொழில் செய்வதற்கு மகளிர் முயற்சி எடுத்துக்கொண்டால், அதற்குரிய வசதி வாய்ப்புகளையும் அரசாங்கம் உடனடியாகச் செய்து கொடுக்கின்ற சூழ்நிலையில் வால்பாறை தொகுதியில், படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கின்ற மகளிருக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்துவதற்கு, சிறு தொழில் செய்வதற்குரிய நடவடிக்கைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விளிம்புத் தொகைத் திட்டத்தின் மூலமாக இதுவரை மும்பை கதர் வாரியத்தினுடைய ஆணைக் குழுவின் ஆணையின்பேரில் 4 கோடியே 72 இலட்சத்து 52 ஆயிரத்து 561 ரூபாய் இதுவரை பயனாளிகளுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. 1,118 பயனாளிகள் பயனடைந்திருக்கிறார்கள். வால்பாறை தொகுதியிலே வழங்கப்படவில்லை என்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். நீங்கள் பாரத ஸ்டேட் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, பேங்க் ஆஃப் மகாராஷ்டிரா, அலகாபாத் வங்கி, கார்ப்பரேஷன் வங்கி, தேனா வங்கி, ஸ்டேட் பாங்க் ஆஃப் மைசூர், யூகோ. வங்கி, ஸ்டேட் பாங்க் ஆஃப் திருவாங்கூர் இதுபோன்ற வங்கிகளில் இந்த விளிம்புத் தொகை டெபாசிட் செய்யப்பட்டு, அதன் அடிப்படையிலே வழங்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருடைய தொகுதியிலே மகளிர் தொழில் முனைவோர் இருப்பார்களேயானால், அவர்கள் இந்த வங்கிகளை அணுகுகின்றபோது, மும்பை கதர் வாரியத்தினுடைய ஆணைக் குழுவால், தமிழ்நாடு கதர் வாரியத்திற்கு அளிக்கப்பட்டிருக்கின்ற விளிம்புத் தொகை விடுவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2005 மார்ச் 28

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வால்பாறை சட்டமன்றத் தொகுதியைப் பொறுத்தவரையில் அங்கே மகளிர் சிறு தொழில் செய்வதற்கு bag செய்வதற்கு, ஊதுபத்தி, மெழுகுவர்த்தி, கற்பூரம் தயாரித்தல், கயிறு தயாரித்தல் போன்ற சிறு தொழில்களோடு கைவினைப் பொருட்கள் தயாரிக்கின்ற சிறு தொழிலைச் செய்ய வேண்டுமென்று சொல்லி கடந்த 2, 3 ஆண்டு காலமாக அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகளில் கடன் கேட்டு அவர்கள் எடுத்துக்கொண்ட பல முயற்சிகளும் வீணாகிவிட்டன. குறிப்பாக, வேட்டைக்காரன்புதூரில் சண்முக கவுண்டர் என்பவரின் மகள் கவிதா என்பவர் கடந்த 3 ஆண்டு காலமாக அவர்கள் வங்கிக்கும் வீட்டிற்கும் நடந்து கொண்டே இருக்கிறார்கள். ஆனால், அவருக்கு இதுவரை சிறு தொழில் செய்வதற்கு கடன் வழங்கப்படவில்லை. கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள்கூட Lead Bank கூட்டத்திலேயே இதைக் கண்டித்து சிறு தொழில் செய்வதற்கு கடன் வழங்க வேண்டுமென்று உத்தரவிட்டும்கூட அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள் எந்தவிதமான கடன் உதவி செய்வதற்கும் முன்வரவில்லை. மேலும் K.V.I.C. மற்றும் மாநில அரசும் சேர்ந்து, மகளிர் சிறு தொழில் செய்வதற்கு வருடா வருடம் வழங்குகின்ற மானியத் தொகையைக் கூடுதலாக வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசும், மாநில அரசும் வழங்குகின்ற இந்த மானியத் தொகை மிகக் குறைவாக இருப்பதால்தான் எங்களால் கடன் வழங்க முடியவில்லை என்று வங்கியிலே இருக்கின்ற அதிகாரிகள் சொல்கின்றார்கள். ஆகவே, நான் இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். வால்பாறை தொகுதியைப் பொறுத்தவரை மில்களோ, ஆலைகளோ, தொழிற்சாலைகளோ எதுவுமே கிடையாது. படித்துவிட்டு வேலையில்லாத மகளிருக்கு இதைத் தவிர வேறு வழி கிடையாது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வால்பாறை தொகுதியினுடைய மகளிர் சிறு தொழில் செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுப்பதற்கு முன்வருவாரா என்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்வதோடு, நான் ஏற்கெனவே குறிப்பிட்ட படித்துவிட்டு மூன்று ஆண்டு பட்டம் பெற்ற கவிதா என்ற பெண் – மூன்று ஆண்டு காலமாக வங்கிக்கு அலைந்து கொண்டிருக்கிறார்; அவருக்குக் கடன் வழங்க முன்வரவில்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள். கோவை மாவட்ட ஆட்சித் தலைவரோடு தொடர்புகொண்டு இந்தப் பெண்ணிற்கு உடனடியாகக் கடன் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2005 மார்ச் 28]

*முற்பகல் 10–30*

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கதர்த் துறையின் மூலமாக வழங்கப்படுகின்ற, விளிம்புத் தொகைத் திட்டம் என்பது வால்பாறை தொகுதிக்கு மட்டுமல்ல. இந்தக் கடனைப் பெறுவதற்கு சில தகுதிகள் நிர்ணயம் செய்திருக்கிறார்கள் மும்பை கதர் வாரியம். கதர் ஆணைக் குழு என்பது மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலே இருக்கிறது. தனி நபரான கைவினைஞர் அல்லது தொழில் முனைவோர் அல்லது நிறுவனங்கள், தொழில் அமைப்புகள், கூட்டமைப்புகள், அறக்கட்டளைகள், சுய உதவிக் குழுக்கள் இதுபோன்ற கூட்டமைப்பு சேர்ந்து கடன் பெறுவதற்கு முயற்சி செய்கிறபோது கண்டிப்பாக வங்கிகள் சொல்லக்கூடிய தகுதியின் அடிப்படையிலும், நம்முடைய கதர் கிராமத் தொழில் வாரியம் சொல்லுகின்ற தகுதியின் அடிப்படையிலும் கடன் வழங்கப்பட்டு வருகிறது. அதைத்தான் நான் ஏற்கெனவே, முன்னாலேயே குறிப்பிட்டேன்; எவ்வளவு தொகை விடுவிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்தேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னும் அதிகப்படுத்த வேண்டும் என்று சொன்னார்கள். அதிகப்படுத்துவதற்கு நீங்கள்தான் முயற்சி செய்ய வேண்டும். மத்தியிலே இருக்கிற நிதி அமைச்சரிடம் எடுத்துச் சொல்லி இந்த விளிம்புத் தொகையை வால்பாறைக்கு மட்டுமல்ல 234 தொகுதிகளுக்கும் விடுவிப்பதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 210, திரு. டி.பி. பொன்னம்பலம், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**210—**

## வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்

***49875—திரு. டி.பி. பொன்னம்பலம்:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையில் மாட்டுத்தாவணி அருகில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2005 மார்ச் 28

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) மதுரை (வடக்கு) வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு மாட்டுத்தாவணி அருகில் சொந்தக் கட்டடம் கட்ட தல்லாகுளம் கிராமம் 4-ல் எண் 134/2 ஏ 1-ல் 3.57 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு போக்குவரத்துத் துறைக்கு நிலமாற்றம் செய்யப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றதும் சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. டி.பி. பொன்னம்பலம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை வடக்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் திருவள்ளுவர் பணிமனையில் இயங்கி வருவதால் மாட்டுத்தாவணி அருகில் சொந்தக் கட்டடம் கட்ட நிலம் தேர்வு செய்து, நிலமாற்றம் செய்ததற்கு இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மதுரை மாவட்ட மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வருகிற நிதி ஆண்டில் இக்கட்டடம் கட்ட நிதி ஒதுக்கப்பட்டு அடுத்த ஆண்டில் முடிக்கப்படுமா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்பொழுது மதுரை வடக்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அரசு சொந்தக் கட்டடத்தில் இல்லாமல் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான கட்டடத்தில் வாடகை அடிப்படையில் இயங்கி வருகிறது. அந்தச் சூழ்நிலையினைக் கருத்தில்கொண்டு வருகின்ற ஆண்டில் நிதிநிலைக்கு ஏற்ப அரசு பரிவுடன் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி.பி. பொன்னம்பலம்.

**திரு. டி.பி. பொன்னம்பலம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே இரண்டாவது இடமான மதுரை மாவட்டம், அனைத்து அலுவலகங்களும் நிறைவுபெற்று இருப்பதால், வட்டாரப் போக்குவரத்துக் கழகம் மட்டும் வாடகைக் கட்டடத்தில் இயங்குவது ஒரு பெரிய அதிர்ச்சியை உண்டாக்குகிறது மக்களுக்கு. ஆகவே, வருகின்ற நிதி ஆண்டில் ஒதுக்கப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் கூறியதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2005 மார்ச் 28]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. சிவசாமி.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்றுமதி நகராகத் திகழ்கின்ற திருப்பூர் நகரத்தில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்க வேண்டும் என்பதற்காக 50 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள இடத்தை கடந்த இரண்டு ஆண்டு காலத்திற்கு முன்பு இலவசமாக போக்குவரத்துத் துறைக்கு வழங்கி இருக்கின்றோம். வருகின்ற நிதியாண்டில் அந்த இடத்தில் புதிதாக வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் கட்டுவதற்கு, வருகின்ற போக்குவரத்து மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்ல ஒரு பதிலை அளிப்பார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆலோசனையைப் பெற்று, அவருடைய அறிவுரையைப் பெற்று மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று, அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுப்பது குறித்து, அரசு பரிசீலனை செய்து வருகிறது என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே கல்குளம் பகுதியில் இருக்கக்கூடிய வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் வாடகைக் கட்டடத்திலே இயங்கி வருகிறது. இப்போது புதிய norms-ன்படி குறைந்தபட்சம் 3 ஏக்கர் இடம் இருந்தால் அங்கே வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கான கட்டடம் கட்டப்படும் என்று உத்தரவு இருக்கிறது. அதுசம்பந்தமாக எங்களுடைய நல்லூர் பகுதியிலே அரசுப் புறம்போக்கு நிலம்—மிக மேடும், பள்ளமுமாக இருந்ததை நாங்கள் 2,3 இலட்சம் ரூபாய் செலவு செய்து, சம நிலப் பரப்பாக்கியுள்ளோம்—அந்த இடத்திலே வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைத்துத் தர வேண்டுமென்று கோரிக்கை வைத்து, மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்கும் கொண்டு சென்றிருந்தோம். பரிந்துரை செய்யப்பட்டது. ஆனால், அங்கேயுள்ள அதிகாரிகள் தூரமாகச் சென்று டீ குடிக்க வேண்டும், காபி குடிக்க வேண்டும், அதனாலே அந்த இடம் சரியாக வராது என்று காரணம் சொல்லி வருவதாகக் கேள்விப்படுகிறோம்.

[2005 மார்ச் 28

எனவே, ஒரு கிராமப்புறத்தினுடைய வளர்ச்சியைக் கருத்திலே கொண்டும், 3 ஏக்கர் இடத்திலே அமைப்பதற்கானச் சாத்தியக்கூறு இருக்கிற காரணத்தினாலே, அதுவும் குறிப்பாக அம்மாவினுடைய ஆட்சியிலே என்னுடைய தொகுதியிலே நல்ல ஒரு ஸ்தாபனம் வந்தது என்கிற ஒரு நிலையான பெயர் பெறுகின்றவிதத்திலும், அதைக் கருத்திலேகொண்டு, நல்லூர் பகுதியிலே அந்த வட்டாரப் போக்குவரத்துக் கழகத்தை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதி, அந்த இடம் தகுதியானதுதானா, அலுவலகம் அமைப்பதற்கு போதுமானதா என்பதை அதிகாரிகளைக் கொண்ட குழுவை வைத்து ஆய்வு செய்து, அப்படி அந்த நிலம் போதுமானது என்று கருதினால், அந்த இடத்திலே வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் கட்டுவதற்காக அரசு அந்த இடத்தை எடுத்துக்கொள்வதற்குத் தயாராக இருக்கிறது. ஆனால், கட்டடம் கட்டுவதற்கு — நிதி ஆதாரத்தைப் பொறுத்து, நிதிநிலைமையைப் பொறுத்து அங்கே புதிய கட்டடம் கட்டுகின்ற பணி மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. தென்னரசு.

**திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டத் தலைநகராக இருக்கிறது. ஈரோடு நகரத்தில் இருக்கின்ற ஈரோடு வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், நகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. இதைக் கருத்தில்கொண்டு, வருங்காலத்தில், ஈரோடு வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குப் புதிதாக இடம் தேர்வு செய்து, புதிய கட்டடம் கட்டிக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே பல கேள்விகளுக்குச் சொன்ன பதில் போல, இதற்கும் அரசினுடைய நிதிநிலைமையைப் பொறுத்து, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை அரசு பரிவுடன் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2005 மார்ச் 28]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே.டி. பச்சைமால்.

**திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் இயங்கி வருகிற வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் பல ஆண்டு காலமாக வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அதுவும் ஆண்டுக்கு ஒரு முறை பல்வேறு பகுதிகளிலே அது மாற்றியமைக்கப்படுவதால், பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, எனது தொகுதிக்கு உட்பட்ட இராஜாக்கமங்கலம் பகுதியில் சுமார் 300 ஏக்கருக்கும் மேல் அரசுப் புறம்போக்கு நிலம் உள்ளது. அதில்கூட மத்திய விளையாட்டு ஆணையத்திற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் சுமார் 59 ஏக்கர் நிலத்தை வழங்கியுள்ளார்கள். எனவே, அந்தப் புறம்போக்கு நிலத்தில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தைக் கட்டித் தர அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இதற்கு முன்பு வாடகைக் கட்டடத்திலே இயங்குகிற வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கு அரசு சொந்தக் கட்டடம் கட்டுமா என்று உறுப்பினர்கள் கேட்ட கேள்விக்கு அரசினுடைய நிதிநிலைமையைப் பொறுத்து அரசு பரிவுடன் பரிசீலிக்கும் என்ற பதிலைச் சொல்லியிருக்கிறேன். இனிமேல் இதுசம்பந்தமாக கேள்விகள் யார் கேட்டாலும் இதே பதில் அதற்கும் பொருந்தும் என்பதையும் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 211, திரு. கா. கந்தசாமி, மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

**211—**

## பாலம் கட்டுதல்

***48598—திரு. கா. கந்தசாமி:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டம், கோத்தகிரி ஒன்றியம், தெங்குமரஹாடா கல்லம்பாளையம் அருகே மோயாற்றின் குறுக்கே பாலம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வனப் பாதுகாப்புச் சட்டம், 1980-ன்படி மோயாற்றின் குறுக்கே பாலம் கட்ட இயலாத நிலை உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த தெங்குமரஹாடா கிராமத்திலிருந்து கோத்தகிரி பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்திற்கும், கோத்தகிரியிலுள்ள தாலுகா அலுவலகத்திற்கும் செல்வதற்கு பவானிசாகர் வழியாக ஈரோடு மாவட்டத்தைக் கடந்து, கோவை மாவட்டத்தைக் கடந்து செல்ல வேண்டும். 2 நாட்கள் ஆகிறது. எனவே, அரசு இதைப் பரிசீலனை செய்து, அமைச்சர் அவர்கள் வனப் பாதுகாப்புச் சட்டம் 1980-ன்படி பாலம் கட்ட முடியாது என்று சொன்னார்கள். தொகையினை வனத் துறையிடமே கொடுத்துவிட்டால் வனப் பாதுகாப்புச் சட்டம் 1980-ன் பிரகாரம் பாலம் கட்டலாம். இந்தப் பாலம் கட்டினால் 12 கி.மீ. தூரம் குறையும். எனவே, மத்திய அரசிடம் எடுத்துச்சொல்லி அரசு இந்தப் பாலத்தை கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மத்திய அரசின் அனுமதி பெற வேண்டும். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று, மத்திய அரசின் அனுமதி பெற்று தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இந்தப் பிரச்சினையை கடந்த 4 வருடங்களாக எழுப்பி வருகின்றேன். மாவட்ட வன அலுவலர் அவர்கள் எனக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கின்றார்கள். தொகையை வனத் துறையிடம் கொடுத்து விட்டால் மத்திய அரசினுடைய அனுமதி பெறாமலேயே இந்தப் பாலத்தைக் கட்டலாமென்று சொல்லியிருக்கின்றார்கள். இப்போது வனத் துறையினுடைய திருச்சியில் இருக்கின்ற Engineering Division மூலமாக 3 கோடியே 63 இலட்சம் செலவில் இந்தப் பாலத்தைக் கட்டுவதற்கும் தெங்குமரஹாடா கிராமத்திலிருந்து பவானிசாகர் வரையுள்ள 20 கி.மீ. தூரத்தில் பாதை அமைக்கவும் இந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டு அதிகாரிகள் மத்தியிலே ஆலோசிக்கப்பட்டு வருகிறது. எனவே, மத்திய அரசினுடைய அனுமதி பெறாமலேயே வனத் துறையே





இந்தப் பாலத்தையும், சாலையையும் போடலாம். எனவே, அரசு மீண்டும் பரிசீலனை செய்து இந்தப் பாலத்தைக் கட்டுவதற்கும் தெங்குமரஹாடா கிராமத்திலிருந்து பவானிசாகர் வரை புதிய சாலை அமைக்கவும் அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** வனம் மற்றும் தேசிய பூங்காக்கள், சரணாலயம் இவற்றில் எந்தவிதமான நடவடிக்கையை எடுத்தாலும் மத்திய அரசு மற்றும் உச்ச நீதிமன்றத்தினுடைய அனுமதி பெற வேண்டும். காப்புக் காட்டில் இந்தப் பாலம் கட்ட வேண்டிய சூழ்நிலை இருப்பதால் மத்திய அரசின் அனுமதி பெற்று, இதற்கு வேண்டிய நிதியினைப் பெற்று, இந்தப் பாலம் கட்டுவதற்கு தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலமானது மிகவும் முக்கியமான பாலம். நீலகிரி மாவட்டத்தில் தெங்குமரஹாடா இருக்கிறது. அதே தெங்குமரஹாடாவிற்கு போவதற்கும், வருவதற்கும் இரண்டு மாவட்டங்களைத் தாண்டிச் செல்ல வேண்டும். மீண்டும் கோயமுத்தூர், பெரியார் மாவட்டத்தைத் தாண்டி வர வேண்டி இருக்கிறது. ஏற்கெனவே இந்த மாமன்றத்திலே இந்தக் கேள்விகள் பலமுறை கேட்கப்பட்டு கூடலூரிலிருந்து சிறியூர் வழியாக தெங்குமரஹாடா மற்றும் சத்தியமங்கலத்திற்கு 166 கி.மீ. தூரத்திற்கு பதிலாக வெறும் 66 கி.மீ. தூரத்திலேயே வழி அமைக்கலாம் என்று சொல்லியிருக்கிறோம். இந்தப் பாலம் கட்டி விட்டால் ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல உச்ச நீதிமன்றமும் கண்டிப்பாக முக்கியமான தேவைகளுக்கு இல்லையென்று சொல்வதில்லை. உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்று சொன்னால் அன்றைய கமிஷனர் திரு. சல்லிவன் அவர்கள் நீலகிரியை கண்டுபிடிக்கும்போது, துணைத் தலைவர் அவர்களே, மரத்தை வெட்டித்தான் அந்தச் சாலையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆகவே, இது மிகவும் முக்கியமான சாலை. 2, 3 மாவட்டங்களைச் சேர்க்கும் சாலை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் பாலத்தை கட்ட அனுமதித்தால் 3 மணி நேரம் குறையும்; 100 கி.மீ. தூரம் குறையும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிந்துரையைச் சிறப்பாகச் செய்து இந்த நீலகிரி மாவட்ட மக்களுக்கு உதவி செய்ய முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2005 மார்ச் 28

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீலகிரியைக் கண்டுபிடித்தபோது வனப் பாதுகாப்புச் சட்டம் இயற்றப்படவில்லை. இப்போது வனப் பாதுகாப்புச் சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. அதன்படி மத்திய அரசின் அனுமதி பெற்று, தக்க நிதி பெற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தெங்குமரஹாடா என்பது மலையின்மீது இல்லாமல் கீழே இருக்கிறது. அது ஒரு மாதிரி கிராமம். அநேகமாக தமிழ்நாட்டிலே அதுமாதிரி ஒரு கிராமத்தையே நீங்கள் பார்க்க முடியாது. அந்தக் கிராமம் முழுவதும் இருக்கின்ற வேளாண் நிலங்கள் அனைத்தும் கூட்டுறவின்கீழ் இயங்கிக் கொண்டிருக்கிறது. முழுமையான கூட்டுறவு கிராமம் இங்கே தமிழ்நாட்டிலே ஒன்று பார்க்க வேண்டுமென்று சொன்னால், மாதிரி கிராமம் ஒன்று பார்க்க வேண்டுமென்று சொன்னால் அது தெங்குமரஹாடாதான். இப்போது நீங்கள் அங்கு போகவேண்டுமென்று சொன்னால் பல மணி நேரம் பயணம் செய்ய வேண்டும். ஒரு வாகனத்தில் போக வேண்டுமென்று சொன்னால், பவானிசாகருக்குப் போய் வேறு இடங்களுக்குப் போய் அங்கேயிருந்து போக வேண்டும், குறைந்தபட்சம், 3 மணி நேரம் ஆகிறது. எனவே, கல்லம்பாளையத்திற்குக் குறுக்கே, அந்த இடத்தைத் தாண்ட வேண்டுமென்றால் படகிலே போக வேண்டும். அந்த நிலைமைகளை எல்லாம் மாற்றுவதற்கு நீங்கள் ஒரு பாலம் அமைக்க வேண்டும். அதற்கான முழுமையான முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். நிச்சயமாக சாத்தியமான பாலம்தான். பல காலமாக இருக்கிற அது கோரிக்கை. எனவே, அதை அமைச்சர் அவர்கள் முனைந்து, தேவையான அனுமதியும் பெற்று, வனத் துறையினரிடமேகூட அந்த நிதியை நாம் கொடுத்து, அவர்களைப் போடச் சொல்லலாம்; போட வைக்க வேண்டும். செய்வார்களா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 10–45*

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எஸ்.ஆர்.பி.–யினுடைய கோரிக்கை நியாயமானதுதான். அதற்கு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு மத்திய



2005 மார்ச் 28]

அரசிடம் அனுமதி பெற்று, இதற்கு வேண்டிய நிதியாதாரத்தைத் தேடி தக்க நடவடிக்கையை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**212—**

## குடியிருப்புகள்

***70083—திரு. பி.கே. சேகர்பாபு:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, 11–வது வட்டத்தில் உள்ள பாரதி நகரில் மேலும் 108 குடியிருப்புகளைக் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, 11–வது வட்டத்தில் உள்ள பாரதி நகரில் 108 குடியிருப்புகள் கட்டுவதற்கு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின்மூலம் 14–3–2000 அன்று வரைபட ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுள்ளபடி பாரதி நகர்த் திட்டத்தில் மேற்கொண்டு குடியிருப்புகளைக் கட்டுவதற்கு அம்மா அவர்களுடைய அரசு விரைவான நடவடிக்கையை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரதி நகர்த் திட்டப் பகுதியில் 1995 ஆம் ஆண்டு இந்தக் குடியிருப்புகள் கட்டுவதற்குத் திட்டம் தீட்டப்பட்டது. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு 11–6–2003 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு, 27–11–2004 அன்று அம்மா அவர்களின் பொற்கரங்களால் அந்தப் பகுதி திறந்து வைக்கப்பட்டது. கடந்த 16–12–2004 அன்று திடீரென்று சி.பி. ரோடு பகுதியிலே இருக்கின்ற இரயில்வே இருப்புப் பாதையின் ஓரமாக வசிக்கின்ற மக்களை, இரயில்வே நிர்வாகம் காலி செய்ய உத்தரவிட்டபோது, பின்னால் வருகின்றவற்றை முன்கூட்டியே அறிந்து செயல்படுகின்ற அரசாக உள்ள புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசின் தீர்க்கதரிசனத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாக இந்தப் பகுதி மக்கள் அந்த இடத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட

வேண்டிய சூழ்நிலையைக் கருத்திலே கொண்டு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதி மக்களுடைய குடியிருப்புகளை அந்தப் பகுதியிலேயிருந்து காலி செய்து, கட்டி முடிக்கப்பட்டு அம்மா அவர்களால் திறந்துவைக்கப்பட்டிருந்த அந்த பாரதி நகர்க் குடியிருப்புப் பகுதியிலேயே அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேலும், இப்போதும் நூற்றுக்கும் மேற்பட்ட குடிசைவாசிகள், ஏழை எளிய மக்கள் அந்த இரயில்வே இருப்புப் பாதைப் பகுதியிலேயே குடியிருக்கின்றார்கள். இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அம்மா அவர்கள் இந்த 108 குடியிருப்புகள் கட்டுவதற்கு ஆணை வழங்கியிருக்கின்றார்கள் என்பதை அறிவித்தார்கள். இப்படி கட்டப்படுகின்ற இந்தக் குடியிருப்புகள் அந்த இரயில்வே இருப்புப் பாதைப் பகுதியிலே வசிக்கின்ற மக்களுக்கு ஒதுக்கித்தரப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை எளிய மக்களுக்குப் பயன்படும் இந்தக் குடியிருப்புகளை தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின்மூலம் விரைந்து கட்டி முடிப்பதற்கு, ஏழைகளின் ஒளிவிளக்காக விளங்கும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள், ஏறக்குறைய 1 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவிலே விரைவிலே கட்டி முடிப்பதற்கான ஆணைகளை வழங்கியிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுபோன்ற ஒதுக்கீடுகளை அரசு செய்யுமா என்ற கேள்வியை இங்கே தொடுத்துள்ளார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான கருத்தினைப் பெற்று மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.கே. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அறிவிப்பிற்கு மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படி இரயில்வே இருப்புப் பாதை மற்றும் கால்வாய்கள் ஓரம், ஆட்சேபகரமான பகுதிகளில் குடியிருக்கின்ற மக்களுக்கு தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் சார்பில் சென்னை மற்றும் சென்னைப் புறநகர்ப் பகுதிகளில் எத்தனை வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன? தற்போது எத்தனை வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மற்றும் சென்னைப் புறநகர்ப் பகுதிகளிலே ஆட்சேபகரமான பகுதிகளான நதிக் கரைகள், சாலையின் மருங்குகள் மற்றும் பொது நலத் திட்டப் பணிகளுக்குத் தேவைப்படும் நிலங்களில் வாழ்ந்து வரும் குடிசைப் பகுதிவாழ் குடும்பங்களுக்கு மாற்று இடங்களில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் மற்றும் தனி வீடுகள் அமைத்தும் மறுகுடியமர்வு செய்ய குடிசைவாழ் மக்களின் நலனிலே பெரிதும் அக்கறைகொண்ட மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கையின் பேரில், வியாசர்பாடி மகாகவி பாரதி நகரிலே 48 வீடுகளும், செம்மஞ்சேரியில் 88 வீடுகளும், அம்பத்தூர் காமராஜர் நகரில் 144 வீடுகளும், தாம்பரம், பீர்க்கன்கரணையில் 198 வீடுகளும், சென்னை, எண்ணூர் தாழங்குப்பம் பகுதியிலே 168 வீடுகளும், சென்னை, இராயபுரத்திலே 552 வீடுகளும், சென்னைப் பெருநகர உள்கட்டமைப்புத் திட்டத்தின்கீழ், சென்னை, செம்மஞ்சேரிப் பகுதியிலே 1,512 வீடுகளும், ஒக்கியம் துரைப்பாக்கத்தில் 2,538 வீடுகளும், சென்னை, செம்மஞ்சேரியில் 5,164 குடியிருப்புகளும், ஆகமொத்தம், 10,712 குடியிருப்புகள் ஏறக்குறைய 131 கோடியே 82 இலட்சம் மதிப்பீட்டில் கட்டிமுடித்தும், கட்டப்பட்டும் வருகின்றன என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 213, திரு. வி.கே. லட்சுமணன், மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

**213—**

## ஆசிரியர் காலிப் பணியிடங்கள்

***71185—திரு. வி.கே. லட்சுமணன்:**

மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டிலுள்ள அரசுக் கலைக் கல்லூரிகளிலும், உதவிபெறும் கல்லூரிகளிலும் காலியாகவுள்ள ஆசிரியர் பணியிடங்கள் எத்தனை?

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே உள்ள 67 அரசுக் கலைக் கல்லூரிகளில் 1,504 விரிவுரையாளர்களும்,

தமிழகத்தில் இருக்கின்ற 162 உதவிபெறும் அரசுக் கல்லூரிகளிலே 1,862 விரிவுரையாளர் பணியிடங்களும் காலியாக உள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே உதவிபெறும் தனியார் கல்லூரிகள்தான் அதிகமாக இருக்கின்றன. அந்தக் கல்லூரிகளிலே ஒரு கல்லூரிக்கு சராசரியாக 15 பணியிடங்களிலேயிருந்து 30 பணியிடங்கள் வரை காலியாக இருக்கின்றன. ஏறத்தாழ, தமிழகத்திலே இன்றைக்கு உதவிபெறும் கல்லூரிகளிலே 2,000 பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. அதேபோல, அரசுக் கலைக் கல்லூரிகளிலே, அதாவது, உறுப்புக் கல்லூரிகளிலே 1,100 இடங்கள் காலியாக இருக்கின்றன. இந்தக் காலியிடங்களுக்கு ஆசிரியர்களை நியமிக்க வேண்டிய பொறுப்பு தனியார் கல்லூரி நிர்வாகத்திற்கு இருந்தது. ஆசிரியர்களை நியமிக்கவில்லை என்று சொன்னால், கல்வித் தரம் குறைந்து போகின்றது, மாணவர்கள் மத்தியிலே போராட்டம் ஏற்படுகின்றது. ஆக, இது அந்தத் தனியார் கல்லூரிகளுக்குப் பெரிய பணிச்சுமையாக இருக்கிறது. எனவே, இந்தக் காலியிடங்களை உடனடியாக நிரப்பினால்தான், நம்முடைய கல்வித் தரத்தைக் காப்பாற்றமுடியும். அதேபோல, உறுப்புக் கல்லூரிகளிலும் இந்தப் பணியிடங்களை உடனடியாக நிரப்பவேண்டும். இன்றைக்கு உறுப்புக் கல்லூரிகளுக்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன், கேள்வியாகக் கேளுங்கள்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** அடுத்தது கேள்விதான் வருகின்றது. உறுப்புக் கல்லூரிகளுக்கு, அங்கே பணி செய்கிற ஆசிரியர்களுக்குத் தொகுப்பூதியமாக ரூ.4,000/- கொடுக்கப்பட்டு வருகின்றது. ஆனால், பல்கலைக்கழக மானியக் குழு சொல்லியிருக்கிற விகிதப்படி கொடுக்காவிட்டாலும்கூட, அந்த ஆசிரியர்கள் வாரம் ஒன்றுக்கு 16 மணி நேரம் பாடம் எடுக்கவேண்டிய நிலைமை இருக்கிறது. ஆக, அதையெல்லாம் கணக்கிலே எடுத்துக்கொண்டு, மணிக்கு 100 ரூபாய் வீதம் கணக்கிட்டாலும்கூட, ஆசிரியர்களுக்கு மாதம் ஒன்றுக்கு தொகுப்பூதியமாக 6,000 ரூபாய் கொடுத்தால்தான் அங்கே M.Phil. படித்தவர்கள், Ph.D. படித்த ஆசிரியர்கள் கிடைப்பார்கள். எனவே, கலைக் கல்லூரிகளிலே, குறிப்பாக, உதவி பெறும் கலைக் கல்லூரிகளிலே கல்வித் தரத்தைக் காப்பாற்றுவதற்காக அரசு இந்தப் பணியிடங்களை நிரப்ப முன்வரவேண்டும். அதிகபட்சமாக தனியார்...





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லட்சுமணன், கேள்வியாகக் கேளுங்கள்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** முடித்துவிடுகிறேன். அடுத்தது கேள்விதான். இப்படிச் சொல்லித்தான் கேட்க முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்தது என்றால், என்றைக்கு?

**திரு. வி.கே. லட்சுமணன்:** ஆக, தமிழ்நாட்டிலே இருக்கிற தனியார் உதவிபெறும் கல்லூரிகளிலேயும், அரசு உறுப்புக் கல்லூரிகளிலேயும் மொத்தப் பணியிடங்களை நிரப்புவதற்கு, ஆண்டொன்றுக்கு 20 கோடி ரூபாய்தான் செலவாகும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அதை அளித்து கல்வியைக் காப்பாற்ற அரசு முன் வருமா என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் 67 அரசு கலை மற்றும் அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளும், 162 அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளும் உள்ளன. அரசு கலை மற்றும் அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளுக்கு 4,847 ஆசிரியர் பணியிடங்களும், அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளுக்கு 9,948 ஆசிரியப் பணியிடங்களும் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளிலே 2004–2005 ஆம் நிதியாண்டில் 1,496 விரிவுரையாளர் காலிப் பணியிடங்கள் இருப்பதாகக் கண்டறியப்பட்டன. மாணவர்கள் நலனைக் கருத்தில்கொண்டு, 1,250 விரிவுரையாளர்கள் காலிப் பணியிடங்கள் கௌரவ விரிவுரையாளர்களைக் கொண்டு நிரப்பப்பட்டுள்ளன. கௌரவ விரிவுரையாளர்களுக்கு ஒரு மணி நேரத்திற்கு ரூ.100 என்ற வீதத்திற்கு, ஒரு மாதத்திற்கு அதிகபட்சமாக ரூ.4,000/- வழங்கப்பட்டு வருகிறது. தமிழகத்திலே உள்ள 162 உதவிபெறும் கல்லூரிகளிலே 1,892 விரிவுரையாளர் பணியிடங்கள் காலியாக உள்ளன. இக்கல்லூரிகளிலே சுயநிதி அடிப்படையிலே, தொழில் சார்ந்த பாடப் பிரிவுகள் ஆரம்பிப்பதற்கு அனுமதிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. இப்பிரிவுகளுக்கு மாணவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் கட்டணங்கள் கல்லூரி நிர்வாகத்தையே சார்ந்ததாகும். இப்பிரிவுகளுக்கு நிர்வாகமே ஆசிரியர்களை நியமித்து ஊதியம் வழங்கி நடத்தி வருகின்றன. சுயநிதி பிரிவு ஆசிரியர்களை தேவைப்படும் உதவிபெறும் பாடப் பிரிவுகளுக்கும் பயன்படுத்தி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. அதுமட்டுமல்லாமல்,

பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் மூலமாகவும் அந்த விரிவுரையாளர்கள் நியமிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா கல்லூரிகளிலும் பெற்றோர் ஆசிரியர் சங்கங்கள் வசதியான சங்கங்களாக இல்லை. எனவே, இந்தக் குறைபாடு நீக்கப்படவேண்டுமென்று சொன்னால், உடனடியாக காலியாக இருக்கின்ற 2000 பணியிடங்களுக்கும் தொகுப்பு ஊதியமாவது அளித்து ஆசிரியர்களை நியமித்தால்தான் நம்முடைய கல்லூரிகளினுடைய கல்வித் தரத்தை நாம் காப்பாற்ற முடியும் என்று கருதுகிறேன். எனவே, அதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த உதவி பெறும் கல்லூரிகளிலே, முதன்முதலாக ஆரம்பிக்கும்போதே ஐம்பது சதவிகிதம் அதற்கான செலவுகளை, அந்தக் கல்லூரிகளே ஏற்றுக்கொண்டு நடைபெற்று வந்தன. பிறகு அதை 80 சதவிகிதமாக அரசு ஏற்றுக்கொண்டது. பிறகு அதை முழுவதுமாக அரசு ஏற்றுக்கொண்டிருந்த நிலையில் இருந்தது. ஆகவே, அந்தக் கல்லூரிகளுக்கு அனுமதி அளிக்கும்போதே, அந்தக் கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலே, ஐம்பது சதவிகிதம் அந்தக் கட்டணங்கள் விரிவுரையாளர்களுக்கு ஆகும் செலவினம், அந்தக் கல்லூரிகளே ஒருகாலத்தில் ஏற்றுக்கொண்டிருந்தன. இப்போது அந்த சுயநிதி அடிப்படையிலே, அந்தப் பாடப் பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டு, வசூலிக்கப்படுகின்ற கட்டணங்களை நிர்வாகமே எடுத்துக்கொள்கின்றது. அந்த நிர்வாகம் தேவைப்படுகின்ற விரிவுரையாளர்களை நியமித்து நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே கூறுகிறபோது, தொகுப்பு ஊதியத்தின் அடிப்படையிலே இப்போது ஆசிரியர்கள் கல்லூரிகளிலே நியமிக்கப்படுவதாகத் தெரிவித்தார்கள். அரசுக் கல்லூரிகளிலும், அதேபோல அரசு நிதியுதவி பெறுகின்ற கல்லூரிகளிலும் தொகுப்பு ஊதியத்திலே பணியாற்றக்கூடிய ஆசிரியர்களை வைத்து நடத்துவது





என்பது நிச்சயமாகத் தரத்தை உருவாக்காது. பல ஆண்டுகள் பயிற்சி பெற்ற பேராசிரியர்கள் இருந்தால்தான், இதுபோன்ற கல்லூரிகளிலே கல்வியினுடைய தரத்தை நம்மாலே வளர்க்கமுடியும். இப்போது Teachers Recruitment Board என்று வைத்திருக்கிறார்கள். அந்த Recruitment Board மூலமாக, அந்த ஆசிரியர் பணியிடங்களையும் நிரப்பவில்லை அல்லது பல்கலைக்கழகங்கள் தன்னாட்சி பெற்ற நிறுவனம் என்று சொல்லி அதன்மூலம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்விக்கு வாருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** முடித்துவிடுகிறேன். ஆகவே, யார் இவர்களை நியமிப்பது என்று இன்னும் அரசாங்கம் ஒரு முடிவுக்கு வராமல் இன்னும் நீங்கள் அப்படியே தத்தளித்துக்கொண்டு இருக்கிற காரணத்தால்தான் இப்படிப்பட்ட இடங்கள் பல ஆண்டுகளாக காலியாக இருக்கின்றன. அமைச்சர் அவர்கள் உடனடியாக ஒரு முடிவு எடுத்து, அரசுக் கல்லூரிகளிலே நிரந்தரமாக— தொகுப்பு ஊதியம் என்பது தரத்தை வளர்க்காது என்ற காரணத்தினாலே, கல்வியினுடைய தரத்தை வளர்க்கின்ற முகத்தான் நிரந்தரமாக—நீங்கள் பேராசிரியர்களை நியமிப்பதற்கு இந்த ஆண்டே வழிவகை காணப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக் கல்லூரிகளிலே விரிவுரையாளர்களை நியமிப்பது, தற்போது கௌரவ விரிவுரையாளர்களைக் கொண்டு நியமிக்கப்பட்டு இருக்கின்றது. அந்தந்தக் கல்லூரிகளின் முதல்வர்கள்மூலம் கௌரவ விரிவுரையாளர்கள் அந்தத் தகுதியின் அடிப்படையிலே, பத்திரிகையிலே விளம்பரம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகின்றார்கள். இப்போது நியமிக்கப்பட்டிருக்கின்ற அந்தக் கௌரவ விரிவுரையாளர்கள் அந்தந்த ஆண்டு மட்டும் தேர்ந்தெடுக்கப்படவில்லை. பல்வேறு கல்லூரிகளிலே தொடர்ந்து ஐந்து ஆண்டு காலம், ஆறு ஆண்டு காலம் தகுதிவாய்ந்த கௌரவ விரிவுரையாளர்கள் நியமிக்கப்பட்டு அவை நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தக் கல்லூரிகளுக்கு நிரந்தரமாக விரிவுரையாளர்கள் நியமிக்கவேண்டுமென்று கோரியுள்ளார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் அதைப்பற்றி சிந்தித்து நடவடிக்கை எடுப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுவதுபோல, கௌரவ

விரிவுரையாளர்கள் ஐந்து ஆண்டுகள், ஆறு ஆண்டுகளாக திறமையாகப் பணியாற்றியவர்களை நிரந்தரம் செய்வதற்கான முயற்சியையாவது இந்த அரசு மேற்கொள்ளுமா? இப்படி பல கல்லூரிகளிலே காலி பணியிடங்கள் இருக்கிற காரணத்தினாலே, சரியான கல்வி வழங்க முடியவில்லை. குறிப்பாக, என்னுடைய மன்னார்குடி தொகுதியிலே இருக்கிற அரசு கலைக் கல்லூரியில் 48 இடத்திற்கு மேற்பட்ட காலி பணியிடங்கள் இருக்கின்றன. ஒரே கல்லூரியில் 48 காலிப் பணியிடங்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அப்படியானால், இவ்வளவு காலி பணியிடம் இருந்தால் எப்படி அங்கே மாணவ, மாணவியர்கள் கல்வி பயில இயலும் என்ற காரணத்தைக் கருதி அந்த இடத்தை நிரப்புவதற்கான முயற்சியைத் துரிதமாக, அவசர கதியிலே செய்வதற்கு அமைச்சர் அவர்களும், இந்த அரசும் முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக் கல்லூரிகளிலே தற்போது 1,496 இடங்கள் காலியாக உள்ளன. அதிலே 1,250 இடங்கள் கௌரவ விரிவுரையாளர்களைக் கொண்டு நியமிக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மன்னார்குடியிலே இருக்கின்ற அரசு கல்லூரியிலேயும் காலி இடங்கள் இருப்பதாகக் கூறினார். கண்டிப்பாக அந்தக் கல்லூரியிலேயும் கௌரவ விரிவுரையாளர்கள் நியமிக்கப்பட்டு நடைபெறுகிறது என நினைக்கின்றேன்.

முற்பகல் 11-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி க. பாலபாரதி. இதற்கு அமைச்சருடைய பதில் முடிகிற வரை கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரிகளில் காலிப் பணியிடங்களும், அதே இடங்களில் கௌரவ ஆசிரியர்களும் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த இடைவெளியை இட்டு நிரப்பக்கூடிய வகையில் இருக்கக்கூடிய அந்த Guest Lecturer post-களை அந்தக் கௌரவ பணியிலே இருக்கக்கூடியவர்களை அந்தக் காலியிடங்களில் அமர்த்துவதற்கு அரசிடம் எதிர்காலத் திட்டம் இருக்கிறதா என்பதனை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு கலைக் கல்லூரிகளில் இருக்கின்ற கௌரவ விரிவுரையாளர் பணியிடங்களை நிரப்புவதற்கான செயற்குறிப்பு





அரசிடம் இருக்கின்றது. மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவு பெற்று, அம்மா அவர்களின் அனுமதியுடன் அதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி(*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 3. தகவல் கோரல்

### மாண்புமிகு முதலமைச்சர் பேரவை விதி 110-ன்கீழ் அறிவிப்புகளை வெளியிடுதல் மற்றும் மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சரின் சில கருத்துகள் பற்றி விளக்கம் கோரல்

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து (குறுக்கீடு) திரு. எஸ்.ஆர்.பி. கொஞ்சம் இருங்கள். (குறுக்கீடுகள்) முதலமைச்சருடைய அறிக்கை முடிந்துவிடட்டும். (குறுக்கீடுகள்)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்தில் காவல், கல்வி, வேளாண்மை, சுனாமி நிவாரணம் போன்ற பல பணிகளுக்கு மானியக் கோரிக்கைகள் வைக்கப்பட்டு விவாதிக்கப்பட்டு வருகின்றன. சில மானியக் கோரிக்கைகளுக்கு ஏற்கெனவே மன்றம் ஒப்புதல் அளித்துவிட்டது. இன்னும் பல மானியக் கோரிக்கைகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட வேண்டும். இந்த நிலையில் மானியக் கோரிக்கைகள் அனுமதிக்கப்பட்ட பின்னரும், அதற்கு முன்னரும் முதலமைச்சர் அவர்கள் தானாகவே சில அறிவிப்புகளை வெளியிட்டு வருகிறார்கள். இந்த அறிவிப்புகள் ஏற்கெனவே கோரிய தொகையைக் காட்டிலும் அதிக நிதி செலவு செய்யக்கூடிய வகையில் அமைந்திருக்கின்றன. இந்த அறிவிப்புகள் அரசியல் சட்டத்திற்கும் நம்முடைய சட்டமன்றத்தின் விதிமுறைகளுக்கும் உட்பட்டதுதானா? உட்பட்டதாகத் தோன்றவில்லை. அதுமட்டுமல்ல, எந்த அடிப்படையில் முதலமைச்சர் அவர்கள் அதுபோன்ற

[திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்] [2005 மார்ச் 28

அறிவிப்புகளை வெளியிட்டு வருகின்றார்கள்? இதற்கு அமைச்சரவையின் ஒப்புதல் பெறப்பட்டிருக்கிறதா? எந்த ஓர் அமைச்சரும் இடையிடையே இதுபோன்ற அறிவிப்புகளை வெளியிடலாமா என்பதையும் நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

ஒரு மானியக் கோரிக்கை என்பது சட்டப்பேரவையிலே வைக்கப்படுவதற்கு முன்பாக அமைச்சரவையால் முடிவு செய்யப்பட்டு ஆளுநருடைய அனுமதியும் பெற்று, அந்த மானியக் கோரிக்கை அமைச்சர் வழியாக அரசால் தாக்கல் செய்யப்படுகிறது. அதன்மீது வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. கொடுக்கப்பட்ட இந்த அடிப்படையில்தான் இங்கே விவாதங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால், இதிலே எதுவுமே சம்பந்தம் இல்லாமல் அறிவிப்புகள் வெளிவருகின்றன. அந்த அறிவிப்புகள் சரிதானா? இந்த அறிவிப்புகள் எல்லாம் அரசியல் சட்டத்தின் விதிமுறைகளுக்கும் சட்டமன்ற விதிமுறைகளுக்கும் உட்பட்டுதானா என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல. இங்கே அமைச்சர்கள் தங்களுடைய மானியக் கோரிக்கைகளுக்குப் பதில் அளிக்கிறார்கள். தவறு அல்ல. பெரும்பாலும் அவர்கள் அளிக்கின்ற பதில்கள் ஏற்கெனவே கொள்கை விளக்கக் குறிப்பு ஏடுகளில் கொடுக்கப்பட்டிருக்கின்றன, அதிலே இருக்கின்ற பதில்கள் வருகின்றன. அந்தப் பதில்கள் முடிந்துவிட்ட நிலையில் அவர்கள் கொடுக்கின்ற விளக்கங்கள் என்பது **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. எஸ்.ஆர்.பி., அப்படி ஜாதியை இழிவுபடுத்தி யாரும் பேசவில்லை. (குறுக்கீடு) அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஜாதியை இழிவுபடுத்தி என்பது அல்லாமல் வேறு எதைச் சொல்வது? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. சி. ஞானசேகரன்:** இது unparliamentary word இல்லையே?

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2005 மார்ச் 28]

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அது அவைக் குறிப்பில் இருக்கிறது என்று நான் சொன்னேனா? (குறுக்கீடு) நான் என்ன சொல்கிறேன் என்றால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது unparliamentary word என்பதற்காகச் சொல்லவில்லை. (குறுக்கீடு) அப்படி யாரும் பேசவில்லை. ஜாதியை இழிவுபடுத்தி யாரும் அப்படிப் பேசவில்லை. (குறுக்கீடு)

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு விளக்கத்தை நானும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்.(குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசமைப்புச் சட்டம் என்பது, ஜாதி மதங்களுக்கு அப்பாற்பட்டதாக இந்த அரசாங்கம் இயங்கிக் கொண்டிருக்க வேண்டும். ஆனால், ஒரு குறிப்பிட்ட ஜாதியை இழித்து, பழித்து ஏளனம் செய்து பேசுவதோ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள், அப்படி ஜாதியை இழிவுபடுத்தி யாரும் பேசவில்லை. தாங்கள் அப்படிக் குற்றஞ்சாட்டுவதே நியாயம் இல்லை. (குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நான் சொல்கிறேன். ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் பேசினார். அன்றையதினம் பேசியதைத்தான் நான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஊரக தொழில் மற்றும் சிறு தொழில் துறை அமைச்சர் அவர்கள் அன்றையதினம் பேசினார்கள். ஜாதியை சொல்லி, அந்த ஜாதியினுடைய தொழிலைச் சொல்லி, அதை ஏளனப்படுத்தி, கேவலப்படுத்தி, மிக மோசமாக...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அப்படி குறிப்பிடப்பட்டு... (குறுக்கீடுகள்)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொஞ்சம் விடுங்கள், தயவுசெய்து விடுங்கள் (குறுக்கீடுகள்) தயவுசெய்து விடுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) இல்லை, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் கூறுவது உண்மைக்கு மாறானது. ஜாதியை இழிவுபடுத்துகின்ற முறையில் – இவர்தான் தற்போது ஒருவேளை எண்ணிக்கொண்டு பேசுகிறார் என்று கருதுகிறேன். எந்த ஓர் அமைச்சரும் ஜாதியைக் குறித்தோ, ஜாதியை இழிவுபடுத்துகிற நோக்கத்திலோ எதுவும் பேசவில்லை. ஜாதியை இழிவுபடுத்தி, இவரே அதற்கு ஒரு விளக்கம் தந்து, இலக்கணம் தந்து, ஜாதிப் பிரச்சினையை அவையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களே உருவாக்குகிறார்கள் என்பது என்னுடைய குற்றச்சாட்டு.

*முற்பகல் 11-05*

இரண்டாவது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவையில் எந்த நேரத்தில் வேண்டுமென்றாலும், சட்டரீதியாக விதிகளுக்கு உட்பட்டு, எந்த அறிவிப்புகளையும் செய்யலாம். அடுத்து, (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதியாதாரத்தைப் பொறுத்தவரைக்கும் எந்த அறிவிப்பு செய்தாலும், ஏதோ வெளியில், பத்திரிகையில் கொண்டுபோய், அவைக்கு வெளியே முதலமைச்சர் அவர்கள் எந்த அறிவிப்பையும் செய்யவில்லை. அவையிலே அந்த அறிவிப்பைச் செய்கிறார். அதற்கான நிதியாதாரம், அந்த நிதியொதுக்கீட்டிற்கு மேலேயிருந்தால், R.E.–ல் அது adjust ஆகிவிடும் என்பது, சாதாரண ஒருவருக்குக்கூட தெரியக்கூடிய ஒரு ஞானம். இதுகூடத் தெரியாமல், பாலசுப்பிரமணியன் அவர்கள் பேசுவது முறையல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) சாதியைப் பற்றி இழிவுபடுத்தி, எந்த உறுப்பினரும் பேசவில்லை. புது விளக்கத்தை, புது இலக்கணத்தைக் கொடுத்து, அவையிலே அமளியை ஏற்படுத்த வேண்டுமென்ற உள்நோக்கோடு, திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் பேசுகிறார் என்று நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் பேசுகின்றபோது, கடந்த வெள்ளிக்கிழமை அன்று, ஊரகத் தொழில் துறை அமைச்சர் பேசியபோது, முதலமைச்சர் அவரைத் தடுத்திருக்க வேண்டும் அல்லது கட்டுப்படுத்தியிருக்க வேண்டும் என்று குறிப்பிட்டார். ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள், வெள்ளிக்கிழமை அன்று பேசும்போது, (குறுக்கீடு) கடந்த வியாழக்கிழமை—திருத்திக் கொள்கிறேன்—கடந்த வியாழன் அன்று ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்





பேசுகின்றபோது, யாரையும் பெயர் சொல்லி, அவர் குறிப்பிடவில்லை. எந்தச் சாதியின் பெயரையும் சொல்லி அவர் இழிவாகப் பேசவில்லை. அவர் பொதுவான ஒரு கருத்தைச் சொன்னார். ஆகவே, அவரைக் கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் எழவில்லை.

ஒரு மானியக் கோரிக்கை முடிந்த பின்னர், குறிப்பாக இங்கே திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள், காவல் துறைக்கான மானியக் கோரிக்கை முடிந்த பின்னர், இந்த அவையின் விதி 110–ன்கீழ் மீண்டும் அறிவிப்புகள் வெளியிடலாமா என்று கேட்டார். ஒரு மானியக் கோரிக்கையை அமைச்சரவையில் வைத்துப் பேசி, விவாதித்து, முடிவு செய்து, இந்த அவையில் வைக்கிறோம். அதை வெளியிடுகிறோம். அறிவிப்புகள் வெளியான பின்னர் இன்னும் சில கோரிக்கைகள் எழுகின்றன. அவை இந்த அரசால் பரிசீலிக்கப்படுகின்றன. இந்த அரசு இருப்பதே மக்களுக்காக. மக்களுடைய விருப்பங்களை நிறைவு செய்வதற்காக. (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, எந்தத் துறையானாலும், அந்தத் துறைக்கான மானியக் கோரிக்கையை இந்த அவையில் வைத்து, ஒப்புதல் பெற்ற பின்னர், அந்த அறிவிப்புகள் வெளியான பின்னர், சம்பந்தப்பட்ட மக்களிடமிருந்து மீண்டும் சில கோரிக்கைகள் எழுமானால், அவற்றைப் பரிசீலிக்கக்கூடாது என்று எந்தச் சட்டத்திலும் இல்லை. மக்களுடைய மேலும் சில கோரிக்கைகளை ஏற்று, அந்தக் கோரிக்கைகளை நிறைவு செய்யும் வகையில், புதிய அறிவிப்புகளை இந்த அவையில் வெளியிடக் கூடாது என்று எந்தச் சட்டமும் கூறவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தச் சட்டப் பேரவையின் பட்ஜெட் கூட்டத் தொடர் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, புதிய அறிவிப்புகளை இந்த அவைக்கு வெளியே வெளியிடக் கூடாது. அதுதான் மரபு. ஆனால், இந்த அவைக்குள் விதி 110–ன்கீழ் புதிய அறிவிப்புகளை வெளியிடுவதில் எந்தத் தவறும் இல்லை. எந்தச் சட்டமும் அதைத் தடுக்கவில்லை. மாறாக, மீண்டும் சொல்கிறேன். மக்களின் விருப்பம் என்னவோ, அதைப் புரிந்துகொண்டு, அதை நிறைவு செய்வதுதான் ஒரு அரசின் கடமை. அதைத்தான் நான் செய்து கொண்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எஸ்.ஆர்.பி., நீங்கள் கேட்டதற்கு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு) தாங்கள் கேட்டதற்கு முதலமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு)

[2005 மார்ச் 28

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு விளக்கம்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** இந்த மன்றத்திலே புதிதாக எந்த வார்த்தையையும்... (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள் அம்மா.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** ஒரேயொரு சின்ன விளக்கம் கொடுத்து விடுகிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** என்னைப் பேச அனுமதியுங்கள். என்னைப் பேச அனுமதியுங்கள். என்ன கஷ்டம் அதிலே?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, பேசுங்கள். திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள், சொல்லுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான், மக்களுடைய கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளக் கூடாது என்று சொல்லவில்லை. மக்களுடைய கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு, அதற்கு அதிகம் செலவானால், அதை எப்படி அவையிலே வைக்க வேண்டுமென்று அரசமைப்புச் சட்டமே சொல்கிறது. விதிமுறைகள் மட்டுமல்ல, அரசமைப்புச் சட்டம் சொல்கிறது. எதுவாக இருந்தாலும், முறையாக ஆளுநர் அவர்களின் அனுமதியைப் பெற்றுத்தான் நீங்கள் அறிவிக்க முடியும்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையில் அறிவிக்கின்ற எதற்கும், ஆதாரத்தோடுதான் அறிவிப்பு செய்யப்படுகிறது. அதற்கு நிதியாதாரம் தேவையென்றால், துணை மதிப்பீடு, Revised Estimate-லே அது கொண்டுவரப்படும். துணை மதிப்பீடு, Revised Estimate மீண்டும் அவைக்கு வருகின்றபோது, அதில் தரப்படும் என்பது, சாதாரணமானவர்களுக்குக்கூட தெரிந்த ஓர் உண்மை. இதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் பெரிதுபடுத்திப் பேசுவது, (மேசையைத் தட்டும் ஒலி) தவறாகப் பேசுவது, அவை விதிகளுக்கு உட்பட்டதல்ல.



2005 மார்ச் 28]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, திரு. எஸ்.ஆர்.பி. முடித்துவிடுங்கள். திரு. எஸ்.ஆர்.பி., அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லிவிட்டார்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இது விளக்கம் ஆகாது. (குறுக்கீடு) ஏன் பயப்படுகிறீர்கள்? ஏன் அஞ்சுகிறீர்கள்? ஏன் பயப்படுகிறீர்கள்? ஏன் பயப்படுகிறீர்கள்? பேசுவதற்கு அனுமதியுங்களேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன சொல்ல வேண்டும்? சொல்லுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** பேசுவதற்கு அனுமதியுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கேட்டதற்கு முதலமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லிவிட்டார்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அதற்கு ஒரு முறை இருக்கிறது. அதன்படி செய்யவில்லை. அதிகச் செலவாகுமேயானால், இன்னும் சொல்லப்போனால், இந்தத் துணை மதிப்பீடுகளிலே, எதற்காக, எங்கேயிருந்து அந்தப் பணம் தேவைப்படுகிறது என்றுகூட அவர் சொல்லவில்லை. என்ன சொல்லியிருக்க வேண்டும் முதலிலே? ஒருவேளை, எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து அந்த நிதி எடுக்கப்பட்டிருக்குமேயானால், எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து எடுக்கப்பட்ட நிதிக்கு இது போய்ச் சேரும் என்று சொல்லவில்லை. அந்த மாதிரி ஒரு வார்த்தைகூட அவர் சொல்லவில்லை. அவர் சில விஷயங்களை...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைச் சொல்ல வேண்டியதேயில்லை. அது எல்லோரும் சாதாரணமாகப் புரிந்து கொள்ளக்கூடிய அரிச்சுவடி. அரிச்சுவடி தெரியாமல் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே பேசக்கூடாது.

முற்பகல் 11-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எஸ்.ஆர்.பி. உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அதைப்போல...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் தொடர்ந்து இதைப் பற்றியே குறை சொல்லிப் பேசிக் கொண்டிருக்கிறார். இதிலிருந்து என்ன

தெரிகிறது என்றால், நாள்தோறும் இங்கே நான் வெளியிடுகின்ற அறிவிப்புகள் மக்களால் பெரிதும் வரவேற்கப்படுகின்றன; (மேசையைத் தட்டும் ஒலி) அவை மக்களின் பாராட்டைப் பெற்றிருக்கின்றன, அதைப் பொறுத்துக்கொள்ள முடியாமல் திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் எப்படியாவது அதற்குத் தடை போட வேண்டுமென்று பார்க்கிறார். மக்களுக்கு நன்மை செய்வதை எந்த சக்தியாலும் தடை செய்ய முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுக்கு அது புரிகிறது; ஏன் இந்த அறிவிப்புகளைக் கொடுக்கிறீர்கள் என்பது மக்களுக்குப் புரிகிறது. எதையும் தவறாகச் சொல்லவில்லையென்று சொன்னீர்கள். "அதைச் சில தலைவர்கள் ஊதி, ஊதிப் பெரிதாக்குகிறார்கள்; அந்த வித்வான்கள் ஐந்து சொட்டு கண்ணீரை விட்டு, அரைப்படி இரத்தம் குடிக்க அலைகிறார்கள்." இது ஏற்புடையதா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யாருடைய பெயரையும் சொல்லவில்லை.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் இன்றைக்கு தகராறு செய்ய வேண்டும் என்றே இந்த அவைக்கு வந்திருக்கிறார். அதற்கு என்ன காரணம் என்பதையும் நான் சொல்லிவிடுகிறேன். திரு. கருணாநிதி அவர்கள், தி.மு.க. தலைவர் அவர்கள் இந்த அவைக்கு வருவது இல்லை. அவர் வராததால் அவருடன் தோழமை கொண்டிருக்கின்ற மற்ற கூட்டணிக் கட்சிகளினுடைய தலைவர்களும் வரக் கூடாது, அந்தச் சட்டமன்ற உறுப்பினர்களும் இந்த அவையில் கலந்துகொள்ளக் கூடாது என்று அவர் விரும்புகிறார். ஆகவே, இதற்காக கடந்த மூன்று, நான்கு நாட்களாக பல விவாதங்கள் நடைபெற்றிருக்கின்றன. பல சந்திப்புகள் நடைபெற்றிருக்கின்றன. திரு. கருணாநிதி அவர்கள் மற்ற கட்சித் தலைவர்களை எல்லாம் அழைத்து இனி பட்ஜெட் கூட்டத் தொடரை மற்ற கூட்டணிக் கட்சிகள் எல்லாம் புறக்கணிக்க வேண்டுமென்று அவர் கேட்டுக்கொண்டிருக்கிறார். பெரும்பாலான கட்சிகள் ஒப்புக்கொண்டுவிட்டன. ஆனால், C.P.I. ஒப்புக்கொள்ளவில்லை என்ற தகவல் வந்திருக்கிறது. அதனால்தான் இவர்கள் வந்து இப்போது இந்த அவையில் உட்கார்ந்துகொண்டு அவை நிகழ்ச்சிகள் நடைபெற விடாமல் தகராறு செய்து கொண்டிருக்கிறார்கள்.



**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஒரேயொரு நிமிடம்...

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே...

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஒரேயொரு நிமிடம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் கொஞ்சம் உட்காருங்கள், நான் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடுகள்) கொஞ்சம் உட்காருங்கள், நான் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடுகள்) கொஞ்சம் உட்காருங்கள், நான் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடுகள்) கொஞ்சம் அமருங்கள், நான் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர் நின்றால் உறுப்பினர்கள் உட்கார வேண்டுமென்பது மரபு. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், நான் விளக்கம் சொல்லிவிடுகிறேன். உட்காருங்கள். திரு. எஸ்.ஆர்.பி அவர்கள், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள், அன்றைக்குப் பேசினார்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்லிவிடுகிறேன். நான் சொல்லிவிடுகிறேன். அன்றைக்குப் பேசியதற்கு தி.மு.க. சார்பிலே ஆற்காடு வீராசாமி அவர்கள் பதில் சொல்வதற்கு நான் அனுமதியளித்தேன். எதிர்க்கட்சிகளுக்கு ஒன்றும் வாய்ப்பூட்டுப் போடவில்லை. அனுமதியளித்தேன். தொடர்ந்து பரிதி இளம்வழுதி தவறான வார்த்தைகளை இங்கே அரங்கேற்றிய காரணத்தினால், அவர் அவையிலிருந்து நீக்கப்பட்டார். தி.மு.க-வை சேர்ந்த ஆற்காடு வீராசாமி அவர்கள் பதில் சொல்வதற்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டது. அதற்குப் பிறகு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே சொன்னார்கள், யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. எதற்காக நீங்கள் இப்படி ஆத்திரப்படுகிறீர்கள் என்று சொன்னார்கள். அவர்கள், பரிதி இளம்வழுதியை வெளியேற்றிய காரணத்தினால் அவர்கள் எல்லோரும் கிளம்பிப் போய்விட்டார்கள். அமைச்சர் அவர்களுடைய கடைசி பேச்சினுடைய பகுதியில் காங்கிரஸ் உறுப்பினர்களும் சொல்லிவிட்டு—(குறுக்கீடு)—ஞானசேகரன், அன்றைக்கு நீங்கள் இல்லை. ஞானசேகரன் அவர்களும் அதற்குக் கண்டனம் தெரிவித்து வெளியேறிப் போய்விட்டார்கள். அன்றைக்கே அது முடிந்தது. முந்தைய நாள் பெய்த மழைக்கு இன்றைக்குக் குடை

பிடித்தால் எப்படி? இது சரியில்லை. ஏற்கெனவே முடிந்துவிட்ட பிரச்சினை அது. ஏற்கெனவே, முடிந்துவிட்ட பிரச்சினை.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மூன்று, நான்கு நாட்களாக பல சந்திப்புகள் நடைபெற்றதாக முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நாங்கள் எல்லாம் சந்தித்துப் பேசியதாகச் சொன்னார்கள். மூன்று நாட்களாக நான் ஊரிலேயே இல்லை. வியாழக்கிழமை போனவன், இன்று திங்கள்கிழமை காலையிலேதான் வந்திருக்கிறேன். இன்னும் சொல்லப் போனால், இரண்டு நாட்களாக யாருமே என்னைத் தொடர்புகொள்ள முடியவில்லை; யாராலும் என்னைத் தொடர்புகொள்ள முடியவில்லை. காரணம், நான் வேறு ஊரிலேயிருந்தேன். நம்முடைய மாநிலத்திலேயே நான் இல்லை. வெளியூருக்குப் போய் இருந்தேன். அதனால்...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நான் சொன்னவை எல்லாம் நான் கேள்விப்பட்ட செய்திகள். அப்படியும் இருக்கலாம். அப்படித்தான் என்று நம்ப அதிக வாய்ப்பு உள்ளது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** தலைவர் அவர்களே, அதாவது, இது புதிய கருத்து; வேறு ஒன்றுமில்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. முடியுங்கள். (குறுக்கீடுகள்) பேரவை விதி 110-ன்கீழ்...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன். திங்கள்கிழமை, மே 15, 2000 ஆம் ஆண்டில் சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள் செயலக வெளியீட்டிலே, உள்ள ஒன்றை நான் படிக்க விரும்புகிறேன். அதிலே திரு. கருணாநிதி அவர்கள் பேசியிருக்கிறார். நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்கள் இங்கே ஒருசில வார்த்தைகளைச் சொன்னார்கள். என்ன சொன்னார்கள் என்று சொன்னால், விடுதலைப் புலிகள் மூலம் தமிழ் ஈழம் வந்தால் நான் சந்தோஷப்படுவேன் என்று அவர்கள் ஒருசில வார்த்தைகளைச் சொன்னார்கள் என்று பேசப்பட்ட பிறகு, அதற்கு அன்றைய முதலமைச்சர் திரு. கருணாநிதி எழுந்து பேசுகிறார். அவர் பேசுவது, "தலைவர் அவர்களே, நான் சொல்லாததை கற்பனையாகச் சொல்லி அதை ஒரு பிரச்சினையாக ஆக்கி, ஊதிப் பெருக்க வைக்கக்கூடாது என்று நான் தயவுசெய்து கேட்டுக்கொள்கிறேன்." அப்போது ஊதிப்



பெருக்க வைக்கக்கூடாது என்று ஜாதியைப் பற்றி அவரே பேசியிருப்பாரா, இதை எண்ணிப் பார்க்க வேண்டும். பிரச்சினையை பெரிதாக்கி, பெரிதாக்கி, அரசியல் ஆதாயம் தேடுவதற்கு ஊதுகுழலாக திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் இருக்கக்கூடாது என்பதுதான் என்னுடைய வேண்டுகோள். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அதாவது, ஞாயிற்றுக்கிழமை வக்கீலுக்கு எதுவுமே நேரிலே பார்க்கத் தெரியாது என்பது எனக்குத் தெரியும். அரைப்படி இரத்தம் குடிக்கத் துடிக்கிறார்கள் என்கின்ற வார்த்தைகள் சாதாரண வார்த்தைகள் என்று சொல்கிறீர்களா? வித்வான்கள் என்று சொல்லி இருக்கிறார்கள். ஊதி ஊதிப் பெரிதாக்குவதாகச் சொல்லியிருக்கிறார்கள்...

முற்பகல் 11-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள், அன்றைக்கே பேசி முடிந்துவிட்டது. (குறுக்கீடு) யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. அன்றைக்கே பேசி முடிந்துவிட்டது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அதில் தவறு இல்லை என்று சொன்னால் வேறு எதுதான் தவறு? ஜாதியைப் பற்றி பேசி இருக்கிறார். ** அதற்கு நாங்கள் என்ன பரிகாரம் என்று கேட்டால், இப்படி ஏளனம் செய்வதும், எள்ளி நகையாடுவதும்தான் முறையா? நான் ஊரிலேயே இல்லாமல், 3 நாட்கள் ஆகிறது. ஏதோ கலந்தாலோசனை பண்ணியதாக சொல்வது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எஸ்.ஆர்.பி., நீங்கள் சொல்ல வேண்டிய கருத்துகளைச் சொல்லிவிட்டீர்கள். முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். முடிந்துவிட்டது. உட்காருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) தயவுசெய்து உட்காருங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** சட்ட சபையில் இதுபோல்தான் தொடர்ந்து பேசுவார்களா? இதற்கு ஒரு அணைப் போடமாட்டீர்களா? இதுபோன்ற தவறுகள் இனிமேல் மேற்கொண்டு நடக்காமல் இருக்குமா என்பதை நாங்கள் தெளிவாக அறிந்துகொள்ள விரும்புகிறோம். அதை நியாயப்படுத்தி மேலும் மேலும் பேசுவதும், சிலருடைய உணர்வுகளைப் புண்படுத்துவதையும் யாராலும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2005 மார்ச் 28

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மாமியார் உடைத்தால் மண் குடம், மருமகள் உடைத்தால் பொன் குடம்' என்ற பழமொழிதான் நினைவுக்கு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இப்பொழுதுதான் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இங்கே வாசித்துக் காண்பித்தார். கடந்த வியாழன் அன்று ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது, அவர் ஊதி ஊதிப் பெருக்குவது என்ற சொற்களைப் பயன்படுத்தினார். அதற்குதான் அன்றைக்கு தி.மு.க.–வில் திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் ஆட்சேபம் தெவித்தார். தி.மு.க. உறுப்பினர்கள் அத்தனை பேரும் ஆட்சேபம் தெரிவித்தார்கள். இப்பொழுது ஊதுவது, பெருக்குவது என்ற வார்த்தைகளை வைத்துத்தான் அந்தச் சொற்களை வைத்துத்தான், ஒரு ஜாதியைக் குறிப்பிட்டு இழிவுபடுத்திவிட்டார்கள் என்று திரு. எஸ்.ஆர்.பி. அவர்களும் இங்கே குற்றம்சாட்டிக் கொண்டிருக்கிறார். ஆனால், அன்றைய முதலமைச்சர் திரு. கருணாநிதி அவர்களே, இந்த அவையில் அதை ஒரு பிரச்சினையாக ஆக்கி, ஊதிப் பெருக்க வைக்கக் கூடாது என்று ஊதுவதைப் பற்றியும், பெருக்குவதைப் பற்றியும் அவரே பேசி இருககிறார். அவர் பேசுவதில் தவறு இல்லை என்றால், ஊரகத் தொழில் துறை அமைச்சர் பேசியதிலும் எந்தத் தவறும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, முடித்துவிடுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவரே ஊதிப் பெரிதாக்குகிறார்கள் என்பதோடு நிறுத்திவிட்டார். இங்கே அந்த வித்வான்கள் 5 சொட்டு கண்ணீரை விட்டுவிட்டு என்று சொல்கிறார்கள். (குறுக்கீடுகள்) அது என்ன வித்வான்கள்? அது...(குறுக்கீடு) இல்லை, இல்லை நீங்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள், ஒவ்வொன்றுக்கும் பொழிப்புரை எழுத முடியாது. ஒவ்வொரு பேச்சுக்கும் பொழிப்புரை எழுத முடியாது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நாட்டில், குறிப்பாக, தமிழ்நாட்டில் பல தேர்ச்சி பெற்ற வித்வான்கள் இருக்கிறார்கள். பல ஜாதிகளைச் சேர்ந்த வித்வான்கள் இருக்கிறார்கள். ஆகவே, வித்வான் என்ற வார்த்தையே ஏதோ இழிவான ஒரு சொல் என்பதுபோல் திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் பேசக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)



2005 மார்ச் 28]

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** வித்வான்கள் என்று சொல்லி இருக்கிறார்கள். ஏதோ வித்வான் அல்ல.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் குற்றச்சாட்டைச் சொல்லிக்கொண்டே போகிறார்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்ப் பண்டிதர்களுக்கே வித்வான் என்றுதான் பெயர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** வித்வான் என்பது இங்கே கற்பனையில் இல்லாததை, பொல்லாததை, பொய்யான குற்றச்சாட்டுகளைத் தொடர்ந்து பெரிதுபடுத்திக் கூறுவதில் வித்வான்களாக உள்ளவர்கள் என்று மிகைப்படுத்துவோர், பொய்யுரைக்கின்றவர்களை, உண்மைக்கு மாறான கோயபல்ஸ் தத்துவங்கள் கூறுபவர்களை வித்வான்கள் என்ற பொருளில் எடுத்துக்கொள்ள வேண்டுமேயொழிய, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி மீது ஏதோ கோபமாக இருக்கிறார் என்று கருதுகிறேன். அவருக்கு விளம்பரம் தேடி, அவரை இழிவுபடுத்துகிற முகத்தான் ஊதி ஊதி இங்கே வேறு ஒரு பொருளை, ஜாதிப் பெயரைத் தருகிறார். இது வேதனைக்குரிய ஒன்று. தி.மு.க.–காரர்கள் இங்கு இருந்தால் உங்களை எதிர்த்து அவர்கள் வெளிநடப்பு செய்திருப்பார்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் தமிழிலே புலவர், பாண்டித்யம் பெற்றவர். நான் சொல்கிறேன். (குறுக்கீடு) ஊதி ஊதிப் பெருக்குவது (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள், உட்காருங்கள். தாங்கள் பேச வேண்டியதற்கெல்லாம் முழு அனுமதி கொடுக்கப்பட்டுவிட்டது. (குறுக்கீடு) இனிமேல் பேச அனுமதிப்பதாக இல்லை. (குறுக்கீடு) பேரவை விதி 110–ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிக்கைகள் இரண்டினை அளிக்க அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல் – குழப்பம்)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே தெரிவித்ததுபோல், என்னுடைய சந்தேகம், இங்கே பலருக்கு இருக்கின்ற சந்தேகம் இன்னும் உறுதியாவதைப் போலத்தான் இருக்கிறது, திரு. எஸ்.ஆர்.பி. அவர்களின் பேச்சு. தி.மு.க.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2005 மார்ச் 28

உறுப்பினர்கள் இந்த அவைக்கு வராமல், வேறு சிலரை ஏவிவிட்டு, இந்த அவையின் நிகழ்ச்சிகளுக்குத் தடை போட பார்க்கிறார்கள். ஆகவே, திரு. எஸ்.ஆர்.பி. போன்ற பொறுப்புள்ள மூத்த உறுப்பினர்கள் இதற்குப் பலியாகிவிடக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) இப்போது விதி 110-ன்கீழ் எனது அறிக்கையைத் தர விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தயவுசெய்து உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் பேச அழைத்திருக்கிறேன். அனுமதி அளித்திருக்கிறேன். முதலமைச்சர் அவர்கள் பேசுவார்கள். (குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** No, No, No, No.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டது. தாங்கள் பேச வேண்டியதை எல்லாம் பேசி முடித்துவிட்டீர்கள். இனிமேல் உங்களுக்கு வாய்ப்பு கிடையாது. தயவுசெய்து உட்காருங்கள். தயவுசெய்து உட்காருங்கள். அவை நடவடிக்கைகளைக் குந்தகப்படுத்தாதீர்கள். தயவுசெய்து உட்காருங்கள்.

*முற்பகல் 11-20*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவர்கள் எழுப்புகிற பிரச்சினையில் பொருள் இல்லை என்ற காரணத்தால் அதற்கான தீர்ப்பை, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அந்தத் தீர்ப்பை நீங்கள் வழங்க வேண்டும். (கூச்சல்–குழப்பம்) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை அலுவலைத் தடுக்கக்கூடிய வகையிலே நீங்கள் குறுக்கீடு செய்யக் கூடாது. எல்லோரும் பொறுப்புள்ள உறுப்பினர்கள். (குறுக்கீடுகள்) ஜி.கே. மணி போன்றவர்கள், ஹேமச்சந்திரன் போன்றவர்கள், எஸ்.ஆர்.பி., போன்றவர்கள் தயவுசெய்து அவையினுடைய அலுவல்களைத் தடுக்கக்கூடிய வகையிலே பேச்சுரிமையைப் பயன்படுத்தக் கூடாது. வீணாகக் குழப்பம் செய்யாதீர்கள். தாங்கள் பேசுவதற்கு முழு அனுமதியையும் நான் தந்தேன். (குறுக்கீடுகள்) பேச வேண்டியது அனைத்தையும் நீங்கள் பேசிவிட்டீர்கள். முதலமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் வழங்கிவிட்டார்கள். நிதி அமைச்சர், ஊரகத் தொழில்



2005 மார்ச் 28] [பேரவைத் தலைவர்]

துறை அமைச்சர் அனைவருமே பதிலைச் சொல்லியிருக்கிறார்கள். தயவுசெய்து உட்காருங்கள்.

## 4. விதி 110-ன்கீழ் அறிக்கைகள்

### (அ) விவசாயத் தொழிலாளர்களின் குறைந்தபட்ச ஊதியத்தை உயர்த்துதல்—மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 110-வது விதியின்கீழ் இப்போது அறிக்கையை வழங்குவார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் வளமைக்கும், கிராமங்களில் வாழும் மக்களின் மேன்மைக்கும் வேளாண் தொழிலே அடிப்படையாக அமைந்துள்ளது. (குறுக்கீடுகள்) விவசாயம் தழைத்தோங்கினால் கிராமங்கள் செழித்தோங்கும். (குறுக்கீடுகள்) கிராம மக்களின் வாழ்க்கைத் தரம் உயரும். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு மேல் நீங்கள் இதைச் சகித்துக் கொண்டிருக்கக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

## 3. தகவல் கோரல்—தொடர்ச்சி

### மாண்புமிகு முதலமைச்சர் பேரவை விதி 110-ன்கீழ் அறிவிப்புகளை வெளியிடுதல் மற்றும் மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சரின் சில கருத்துகள் பற்றி விளக்கம் கோரல்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. தாங்கள் இதுவரைக்கும் சட்டமன்றத்திலே பொறுப்போடு நடந்து இருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) அந்த அத்தியாயத்திலே ஒரு கறுப்புப் புள்ளியைத் தயவுசெய்து ஏற்படுத்திவிட வேண்டாம். ஒரு களங்கத்தை ஏற்படுத்த வேண்டாம். ஜி.கே. மணி போன்றவர்கள், ஹேமச்சந்திரன் போன்றவர்கள் இதுவரைக்கும் பொறுப்போடு நடந்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) ஒரு பிரச்சினையிலே கண்டனம் தெரிவிப்பதாக இருந்தால்கூட வெளிநடப்புதான் செய்திருக்கிறீர்கள். இன்றைக்கு, தி.மு.க. பாணியை நீங்கள் கடைப்பிடிக்க முன்வருவது சரியல்ல, முறையல்ல. (குறுக்கீடுகள்) ஆகவே, தயவுசெய்து—உங்களுக்கு முழு உரிமையும் பேசுவதற்குத்

தந்தேன். அனைத்திற்கும் முதலமைச்சர் பொறுப்போடு பதில் சொல்லியிருக்கிறார்கள். எல்லாம் சொல்லி முடிக்கப்பட்டுவிட்டது. (குறுக்கீடுகள்) ஆகவே, இனிமேல் நீங்கள் இதிலே குறுக்கிடக்கூடாது. வேறு ஏதாவது பேசுவதாக இருந்தால்—முதலமைச்சர் அவர்கள் 110-வது விதியில் அவர்களுடைய அறிக்கையை வழங்கியதற்குப் பிறகு வேறு யாராவது பேசுவதாக இருந்தால், நான் பேசுவதற்கு அனுமதி வழங்குகிறேன். தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இதற்கு மேலும் நீங்கள் அவை அலுவலைத் தடுக்க வேண்டும் என்று நினைத்தால் தவிர்க்க முடியாத கட்டத்தை எனக்கு தயவுசெய்து உண்டாக்காதீர்கள். அவை அலுவலைத் தடுக்க முயன்றால் நான் அவையை விட்டு வெளியேற்றுவதைத் தவிர வேறு வழி இல்லை. (குறுக்கீடுகள்) அவை அலுவலைத் தடுக்க முயன்றால் உங்களை அவையை விட்டு வெளியேற்றுவதைத் தவிர வேறு வழி இல்லை. தயவுசெய்து உங்களுடைய உரிமையைத் தவறாகப் பயன்படுத்தாதீர்கள். இது உங்களுடைய பொது வாழ்விற்கே ஒரு கறுப்புப் புள்ளியாக அமையும். தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிக்கையைத் தந்ததற்குப் பிறகு வேறு யாராவது, ஜி.கே. மணி பேசுவதாக இருந்தால் பேசுவதற்கு நான் அனுமதி வழங்குகிறேன். (குறுக்கீடுகள்) தாங்கள் அவை அலுவலைக் கெடுக்கக்கூடிய வகையிலே நடந்தால் தங்களை அவையை விட்டு அகற்றுவதைத் தவிர, வேறு வழி இல்லை. (கூச்சல்–குழப்பம்) அவை அலுவலைத் தடுக்கக்கூடிய உறுப்பினர்களை அவையைவிட்டு அகற்றுவதைத் தவிர வேறு வழி இல்லை. (குறுக்கீடுகள்) அவை அலுவலைத் தடுக்கக்கூடிய வகையில் செயல்படக்கூடிய உறுப்பினர்களை அவையை விட்டு அகற்றுமாறு அவைக் காவலர்களுக்கு நான் உத்தரவிடுகிறேன். (கூச்சல்–குழப்பம்) (குறுக்கீடுகள்) அவை அலுவலைத் தடுக்கின்ற வகையிலே செயல்படக்கூடிய உறுப்பினர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் அனைவரையும் அவையைவிட்டு அகற்றுமாறு நான் அவைக் காவலர்களுக்கு ஆணையிடுகிறேன்.

(இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் அவைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டனர்.)

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே...(குறுக்கீடுகள்)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பேசுவதற்கு அனுமதி அளியுங்கள்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஜி.கே. மணி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கையை வாசித்ததற்குப் பிறகு உங்களுக்கு அனுமதி வழங்குகிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் 110–வது விதியின்கீழ் அறிக்கையைத் தருவதற்கு அழைத்துவிட்டேன். அவர்கள் பேசி முடித்ததற்குப் பிறகு, அறிக்கை தந்ததற்குப் பிறகு உங்களுக்கு அனுமதி தருகிறேன். (குறுக்கீடுகள்) அனுமதி தருகிறேன், தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) தயவுசெய்து உட்காருங்கள், தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிக்கையை வழங்கியதற்குப் பிறகு உங்களுக்குப் பேச நான் அனுமதி வழங்குகிறேன். (குறுக்கீடுகள்) பேச அனுமதி வழங்குகிறேன். தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (கூச்சல்–குழப்பம்) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைத் தலைவர் சொல்லியதையும் கேட்காமல், வீணாக வேண்டுமென்றே குழப்பம் விளைவிக்கக்கூடிய உறுப்பினர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் அனைவரையும் அவையை விட்டு அகற்றுமாறு அவைக் காவலர்களுக்கு நான் ஆணையிடுகிறேன்.

(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் அவைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டனர். அவையிலிருந்து வெளியேற்றப்படும்போது அவர்கள் கோஷமிட்டுக் கொண்டே சென்றனர்.)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரனையும் அவையை விட்டு அகற்றுமாறு உத்தரவிடுகிறேன். அவைக் காவலர்கள் அவரையும் அவையை விட்டு அகற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன். (கூச்சல்–குழப்பம்) (குறுக்கீடுகள்)

(இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி (மார்க்சிஸ்ட்) மற்றும் இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்கள் அவைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டனர்.)

*முற்பகல் 11–25*

அவைக்குள்ளே இப்படி வீணாகக் கோஷம் போடக் கூடாது. அவைக்குள்ளே கோஷம் போட்டு, அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் செய்யக்கூடிய உறுப்பினர்கள் அனைவரையும் அவையைவிட்டு அகற்றுமாறு அவைக் காவலர்களுக்கு நான் ஆணையிடுகிறேன்.

(கூச்சல்–குழப்பம்) அவைக்குள்ளே கோஷம் போட்டு, அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் செய்யக்கூடிய உறுப்பினர்கள் அனைவரையும் அவையை விட்டு அகற்றுமாறு நான் ஆணையிடுகிறேன். (கூச்சல்–குழப்பம்)

(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் கோஷமிட்டுக் கொண்டே சென்று கொண்டிருந்தார்கள்.)

அவைக் காவலர்கள் அவையைவிட்டு அகற்றுகிறபோது, அவையைவிட்டு அகற்றுகிற நேரத்திலே குழப்பம் செய்யக்கூடிய உறுப்பினர்கள் மேலே கடுமையாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிக்கிறேன். முதலமைச்சருடைய சந்தேகம் சரியானது என்பது இப்போது உறுதிப்பட்டுவிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

## 4. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்–தொடர்ச்சி

### (அ) விவசாயத் தொழிலாளர்களின் குறைந்தபட்ச ஊதியத்தை உயர்த்துதல்-மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் வளமைக்கும், கிராமங்களில் வாழும் மக்களின் மேன்மைக்கும் வேளாண் தொழிலே அடிப்படையாக அமைந்துள்ளது. விவசாயம் தழைத்து ஓங்கினால் கிராமங்கள் செழித்து ஓங்கும். கிராம மக்களின் வாழ்க்கைத் தரம் உயரும். அதனால்தான் எனது அரசு வேளாண் தொழிலின் மேம்பாட்டுக்குப் பலப் பல உயரிய திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தி வருகிறது.

வேளாண்மை வளம் பெற்றிட ஏர் ஓட்டுதல், நாற்றுப் பறித்தல், நாற்று நடுதல், களை எடுத்தல், கதிர் அறுத்தல், கதிர்க் கட்டுகளைச் சுமந்து வந்து களத்தில் சேர்த்தல், கதிர் அடித்தல், நெல் தூற்றுதல், அளந்து மூட்டைகள் ஆக்குதல் என ஒவ்வொரு கட்டத்திலும் விவசாயத் தொழிலாளர்களின் உழைப்பு மிகவும் இன்றியமையாததாக உள்ளது. வேளாண் சாகுபடி பெருகி கிராம மக்கள் வாழ்வு வளம் பெற வேண்டுமெனில், நிலம் என்னும் நல்லாள் உதவிட வேண்டும். நீர் என்னும் நல்லாள் ஒத்துழைக்க வேண்டும். விவசாயத் தொழிலாளர்கள்





எல்லோரும் தங்கள் நல்லுழைப்பை உவப்புடன் வழங்கிட வேண்டும். விவசாயத் தொழிலாளர்கள் முழுத் திறனுடன் தங்களது உழைப்பை நல்கிடும் வகையில் அவர்கள் சிரமமின்றி வாழ்க்கை நடத்திட ஏதுவான ஊதியம் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டியது அவசியம் ஆகும்.

தமிழகத்தில் ஏறத்தாழ 86 இலட்சம் விவசாயத் தொழிலாளர்கள் உள்ளனர். வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளவர்களில் பெரும்பாலோர் விவசாயத் தொழிலாளர்களாகவே உள்ளனர். சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள விவசாயத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டியது நமது கடமையாகும். அவர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் அதிகரிக்கப்பட்டால்தான் அவர்களது வாழ்க்கைத் தரம் மேம்படும். கடந்த சில ஆண்டுகளில் தமிழகத்தில் தொடர்ந்து நிலவி வந்த கடும் வறட்சியின் காரணமாக விவசாயத் தொழிலாளர்களின் ஊதியத்தை உயர்த்த முடியாத நிலை இருந்தது. இந்த ஆண்டு பருவ மழை நல்ல முறையில் பெய்ததன் காரணமாக விவசாயம் புதிய வளம் பெற்றுள்ளது. இந்தச் சூழ்நிலையில், விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்துள்ள தொழில்களில் ஈடுபட்டு வரும் தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச ஊதியத்தை உயர்த்துவது பொருத்தமாக அமையும் என்பதால் அதனை உயர்த்திட நான் தற்போது முடிவெடுத்துள்ளேன்.

இதன்படி, விவசாயத் தொழிலாளர்கள் உயர்ந்த ஊதியம் பெற்றிடும் வகையில் குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளபடி, முதனிலை அறிவிக்கை—Preliminary Notification ஒன்றை உடனடியாக வெளியிட எனது அரசு முடிவு செய்துள்ளது.

தங்களது சொந்த ஏர் மற்றும் உழவு மாடுகளுடன் உழவுப் பணியில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தபட்ச ஊதியம் தற்போது நாள் ஒன்றுக்கு 100 ரூபாயாக உள்ளது. இதை 150 ரூபாயாக உயர்த்தி நிர்ணயிக்க (மேசையைத் தட்டும் ஒலி) எனது அரசு முடிவு எடுத்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) பணி அமர்த்துபவரால் ஏர் மற்றும் உழவு மாடுகள் வழங்கப்படுமாயின் உழவுப் பணிக்குத் தற்போது நாள் ஒன்றுக்கு 54 ரூபாய் ஊதியம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதனை 80 ரூபாயாக உயர்த்தி வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

கதிர் அறுத்தல், கதிர்க் கட்டுகளைச் சுமந்து வந்து களத்தில் சேர்த்தல், கதிர் அடித்தல், நெல் தூற்றுதல், நெல்லை அளந்து

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2005 மார்ச் 28

மூட்டைகள் ஆக்குதல் ஆகிய பணிகளில் ஈடுபட்டுள்ள ஆண் தொழிலாளர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தபட்ச ஊதியம் தற்போது நாள் ஒன்றுக்கு 6 மணி நேர வேலைக்கு 54 ரூபாயாக உள்ளது. இதனை 80 ரூபாயாக உயர்த்தி வழங்க எனது அரசு முடிவு எடுத்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று, இதே வேலைகளில் ஈடுபடும் பெண் தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு 5 மணி நேர வேலைக்கு தற்போது குறைந்தபட்ச ஊதியம் 45 ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதனை 70 ரூபாயாக உயர்த்தி வழங்க எனது அரசு முடிவு எடுத்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) வழங்கப்படும் ஊதியம் பணமாக வழங்கப்படாமல் சாகுபடிப் பொருளாக வழங்கப்பட்டால் மொத்த மகசூலில் எட்டில் ஒரு பங்கு ஊதியமாக வழங்கப்பட வேண்டும். பணம் அல்லது பொருள் இவ்விரண்டில் அதிகமானது எதுவோ அது வழங்கப்பட வேண்டும்.

முற்பகல் 11–30

இதேபோன்று, நெல் அல்லாத பிற பயிர்கள் அறுவடை செய்யும் பணியில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கும் இதே அளவில் ஊதியம் வழங்கப்பட வேண்டும். விதைத்தல், நாற்றுப் பறித்தல், நாற்று நடுதல் மற்றும் களை எடுத்தல் ஆகிய பணிகளில் ஈடுபடும் ஆண் தொழிலாளர்களுக்குத் தற்போது நாள் ஒன்றுக்கு 6 மணி நேர வேலைக்கு 54 ரூபாய் என குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதே வேலைகளில் ஈடுபடும் பெண் தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு 5 மணி நேர வேலைக்கு குறைந்தபட்ச ஊதியம் 45 ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதனை உயர்த்தி ஆண் தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு 6 மணி நேர வேலைக்கு 80 ரூபாய் என்றும்; பெண் தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு 5 மணி நேர வேலைக்கு 70 ரூபாய் என்றும் குறைந்தபட்ச ஊதியமாக நிர்ணயிக்க எனது அரசு முடிவு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

வரப்புகளையும் வயல்களையும் சீரமைத்தல், தேனீ வளர்த்தல், கோழி வளர்ப்பு, பால் பண்ணை மற்றும் மரம் ஏறுதல் ஆகிய வேலைகளில் ஈடுபடும் ஆண் தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு, 6 மணி நேர வேலைக்கு 54 ரூபாய் என்று குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதே வேலைகளில் ஈடுபடும் பெண் தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு, 5 மணி நேர வேலைக்கு, 45 ரூபாய்



2005 மார்ச் 28] [செல்வி ஜெ ஜெயலலிதா]

என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதனை உயர்த்தி, ஆண் தொழிலாளர்களுக்கு, 6 மணி நேர வேலைக்கு 80 ரூபாய் என்றும்; பெண் தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு, 5 மணி நேர வேலைக்கு 70 ரூபாய் என்றும் குறைந்தபட்ச ஊதியமாக நிர்ணயிக்க எனது அரசு முடிவு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

விவசாயத் தொழிலில் ஈடுபடுத்தப்படும் விவசாயத் தொழிலாளர்களுக்குப் பணி அமர்த்துபவரால் உணவு வழங்கப்படுமாயின், அவ்வாறு வழங்கப்படும் அந்த உணவின் பண மதிப்பு ஊதியத்தில் இருந்து கழிக்கப்படக் கூடாது. வேலை நேரங்களிலும், பணியின் தன்மையிலும் வேறுபாடு இல்லாது தொழில் புரியும் ஆண் மற்றும் பெண் தொழிலாளர் இருபாலருக்கும், 1976 ஆம் ஆண்டு சம ஊதியச் சட்டத்தின்படி சம ஊதியம் வழங்கப்பட வேண்டும்.

மேலே தெரிவித்த குறைந்தபட்ச ஊதிய விகிதங்கள் அரசுப் பண்ணைகளிலும், வேளாண்மைப் பல்கலைக்கழகங்களின் பண்ணைகளிலும் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும் பொருந்துவன ஆகும். இவ்வாறு குறைந்தபட்ச ஊதியங்களை உயர்த்துவதற்கான முதனிலை அறிவிக்கை Preliminary Notification உடனடியாக வெளியிடப்பட வேண்டும் என்று நான் ஆணையிட்டுள்ளேன். குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின்படி ஆட்சேபணைகள் மற்றும் ஆலோசனைகள் இரண்டு மாத காலத்திற்குள் தெரிவிக்கப்பட வேண்டும் என்று அந்த அறிவிக்கையில் குறிப்பிடப்படும். அவ்வாறு பெறப்படும் ஆட்சேபணைகள் மற்றும் ஆலோசனைகளை ஆய்வு செய்து இறுதி அறிவிக்கையை இவ்வாண்டு ஜூன் மாதத்தில் எனது அரசு வெளியிடும்.

தொழில்களில் உன்னதத் தொழில் என்று போற்றப்படும் விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயத் தொழிலாளர்கள் சிறந்த வாழ்க்கைத் தரம் பெறுவதை உறுதி செய்யும் வகையில், அவர்கள் மேற்கொள்ளும் வேலைகளுக்கு என நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தபட்ச ஊதிய விகிதங்களைக் கணிசமாக உயர்த்தி வழங்கிட எனது அரசு மேற்கொண்டுள்ள இந்த நடவடிக்கை, விவசாயத் தொழிலாளர்கள்மீது அக்கறை கொண்டுள்ள அனைவராலும் வெகுவாக வரவேற்கப்படும் என்ற என் நம்பிக்கையைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[2005 மார்ச் 28

## (ஆ) விரைவு நீதிமன்றங்கள் 31-3-2005-க்குப் பிறகும் செயல்பட மாநில அரசு நிதி வழங்குதல்--மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றவியல் அமர்வு நீதிமன்றங்களில் நிலுவையில் இருக்கும் வழக்குகளை விரைந்து விசாரித்து தீர்வு காண வேண்டுமென்பதற்காக நாடெங்கிலும் விரைவு நீதிமன்றங்கள் அமைக்கப்பட வேண்டுமென்று 11-வது நிதிக் குழு பரிந்துரைத்தது. இந்தப் பரிந்துரையின்படி தமிழ்நாட்டில் 49 விரைவு நீதிமன்றங்களை நிறுவிட மைய அரசு ஏற்பளித்தது.

இதன்படி முதற்கட்டமாக, 30 விரைவு நீதிமன்றங்களை அமைத்திட 3-8-2001 அன்று நான் ஆணையிட்டேன். இந்த நீதிமன்றங்கள் 2001 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் செயல்பட்டு வருகின்றன. 18-12-2001 அன்று அடுத்த கட்டமாக, மேலும் 19 விரைவு நீதிமன்றங்கள் அமைத்திட தமிழ்நாடு அரசு ஆணையிட்டது. இந்த கூடுதல் விரைவு நீதிமன்றங்கள் 2002 ஆம் ஆண்டு பிப்ரவரி/மார்ச் மாதம் முதல் செயல்பட்டு வருகின்றன.

முற்பகல் 11-35

இந்தியாவிலேயே விரைவு நீதிமன்றங்களை நிறுவுவதில் சாதனை புரிந்த ஒரு சில மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி) விரைவு நீதிமன்றங்களை அமைத்து வழக்குகளை விரைந்து விசாரித்து நீதி வழங்குவதில் இந்தியாவிலேயே தமிழகம் முதலிடம் வகிக்கிறது என்று மத்திய அரசே பாராட்டியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டில் உள்ள 49 விரைவு நீதிமன்றங்கள்மூலம் 31-1-2005 வரை, 1,23,503 வழக்குகள் தீர்வு காணப்பட்டுள்ளன என்பதைப் பெருமிதத்துடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

விரைவு நீதிமன்றங்கள் அமைத்து செயல்படுத்தப்படுவதற்கான முழுச் செலவினையும் மைய அரசு ஏற்க வேண்டும். இதன்படி இந்த விரைவு நீதிமன்றங்களைச் செயல்படுத்த மத்திய அரசு மொத்தம் 14.12 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்தது. விரைவு நீதிமன்றங்களின் செயல்பாடு 31-3-2005 அன்றுடன் முடிவடைகிறது.

1-4-2005 அன்று முதல் விரைவு நீதிமன்றங்களைத் தொடர்ந்து நடத்துவதற்குத் தேவையான நிதியை மத்திய அரசு இதுவரை ஒதுக்கீடு செய்யாததால், தமிழகத்தில் உள்ள இந்த விரைவு நீதிமன்றங்கள்



2005 மார்ச் 28] [செல்வி ஜெ ஜெயலலிதா]

தொடர்ந்து செயல்படுமா என்று தெரியாமல் வழக்குத் தொடுத்துள்ள பொதுமக்கள் குழப்பத்தில் தவிப்பதாக தெரிவித்து தேவையற்ற ஒரு கலக்கத்தை மக்கள் மத்தியில் உருவாக்க சிலர் முனைந்துள்ளனர். இது மிகவும் துரதிர்ஷ்டவசமானதும் வருந்தத்தக்கதும் ஆகும்.

விரைவு நீதிமன்றங்களில் 26,455 வழக்குகள் நிலுவையில் உள்ளன. எனவே, இந்த விரைவு நீதிமன்றங்கள் தொடர்ந்து செயல்படுவது மிகவும் இன்றியமையாதது ஆகும். வழக்கு தொடுப்போருக்கு விரைவு நீதிமன்றங்கள்மூலம் நீதி விரைவில் கிடைக்கப் பெறுவதால் விரைவு நீதிமன்றங்கள் தொடர்ந்து செயல்பட வேண்டும் என்பது எனது எண்ணம் ஆகும். 18-9-2004 அன்று புது டெல்லியில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மற்றும் உயர் நீதிமன்ற தலைமை நீதிபதிகளின் மாநாட்டில் நான் கலந்துகொண்டு, விரைவு நீதிமன்றங்கள் 31-3-2005-க்குப் பிறகும் தொடர்ந்து செயல்பட வேண்டும் என்றும், அதற்குத் தேவையான நிதியை மைய அரசு ஒதுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டேன். மேலும், விரைவு நீதிமன்றங்களை 31-3-2005-க்குப் பிறகும் நீட்டிப்பது குறித்த மைய அரசின் நிலைப்பாட்டினைத் தெரிவிக்குமாறு 18-3-2005 அன்று மத்திய அரசுக்குக் கடிதம் அனுப்பப்பட்டது.

தமிழ்நாட்டில் உள்ள விரைவு நீதிமன்றங்கள் தொடர்ந்து செயல்பட வேண்டும் என்ற தமிழக அரசின் கோரிக்கையை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளும் என்று நம்புகிறோம். ஒருவேளை மைய அரசிடமிருந்து 31-3-2005-க்குள் இதற்குச் சாதகமான பதில் வரவில்லை என்றாலும், தமிழகத்தில் தற்போது செயல்பட்டு வரும் 49 விரைவு நீதிமன்றங்களும் தொடர்ந்து செயல்பட வேண்டும் என்று நான் ஆணை பிறப்பித்துள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவ்வாறு இந்த நீதிமன்றங்கள் தொடர்ந்து செயல்படத் தேவைப்படும் நிதியான 5 கோடி ரூபாயை தமிழ்நாடு அரசே வழங்கிடவும் ஆணையிட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதன் அடிப்படையில், தமிழகத்தில் தற்போதுள்ள 49 விரைவு நீதிமன்றங்களும் மேலும் ஓர் ஆண்டுக்குத் தொடர்ந்து செயல்பட 24-3-2005 ஆம் நாளன்று அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. எனவே, தமிழ்நாட்டில் உள்ள விரைவு நீதிமன்றங்கள் கலைக்கப்பட்டுவிடுமோ என்ற அச்சத்திற்கு இடமில்லை என்றும், தமிழ்நாட்டில் தற்போது செயல்பட்டு வரும் 49 விரைவு நீதிமன்றங்கள் மக்கள் நலனைக் கருத்தில்கொண்டு தொடர்ந்து செயல்படும் என்பதையும் உறுதியுடன் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 5. கவன ஈர்ப்பு

### சென்னை, தண்டையார்பேட்டையில் துணை மின் நிலையம் அமைக்கும் பணி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. பி.கே. சேகர்பாபு.

***திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆர்.கே. நகர் தொகுதி, 7-வது வட்டம், தண்டையார்பேட்டையில் 110 கிலோ வாட் துணை மின் நிலையம் அமைக்க அனுமதி கிடைத்தும், இன்னும் பணி தொடங்கப்படாதது" குறித்த, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*முற்பகல் 11-40*

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று சபைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

#### அறிக்கை

சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்கள், ஆர்.கே. நகரில் துணை மின் நிலையம் அமைப்பதற்கான நிலத்தின் விலையை ரூபாய் 7.5 கோடி என நிர்ணயித்து, அதை துணை மின் நிலையம் அமைக்கத் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஒதுக்க தமிழக அரசிடமிருந்து ஒப்புதல் பெறுமாறு சிறப்பு ஆணையர், நில நிர்வாகம் அவர்களுக்கு எழுதியுள்ளார். இதனிடையில், துணை மின் நிலையம் அமைக்கக் குறைந்தபட்சம் 24,000 சதுர அடி நிலத்தை ரூ.2.39 கோடி விலையில் மின்சார வாரியத்திற்கு ஒதுக்குமாறு மாவட்ட ஆட்சியரிடம் மறு விண்ணப்பம் ஒன்று அனுப்பப்பட்டு உள்ளது. இந்த நிலையில், சிறப்பு ஆணையர், நில நிர்வாகம் அவர்கள் மேற்கண்ட நிலத்தைத் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஒதுக்க மாவட்ட ஆட்சியருக்குப் பரிந்துரை செய்துள்ளதோடு, பொதுப் பணித் துறை/மாநகராட்சியிடமிருந்து மறுப்பு இல்லாத சான்றிதழ் (என்.ஓ.சி.) பெற்றனுப்புமாறும் குறிப்பிட்டு உள்ளார். எனவே, நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன் துணை மின் நிலையம் அமைக்கும் பணிகள் தொடங்கப்படும்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.கே. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திற்குத் தடையில்லா மின்சாரம், சீரான மின்சாரம் தந்திடும் மாண்புமிகு தமிழகத்தின் ஒளிவிளக்கு அம்மா அவர்கள் ஆர்.கே. நகர் தொகுதியில் 110 கிலோ வாட் துணை மின் நிலையத்தை அமைக்க ரூபாய் 23 கோடியே 16 இலட்சம் ஒதுக்கீடு செய்தமைக்கு அந்தப் பகுதி மக்களின் சார்பில் அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் துணை மின் நிலையம் அமைக்கத் தேவைப்படும் நிலத்திற்கு அரசு வழிகாட்டி மதிப்பு இரண்டு மடங்கு நில நிர்வாகத் துறை கேட்டதால் காலதாமதம் ஏற்படுவதாக அறிகின்றேன். இரயில்வே துறைக்குச் சென்னை மாநகரத்தில் இலவசமாக நிலத்தினை ஒதுக்கீடு செய்வதுபோல், ஒதுக்கீடு செய்ய முயற்சிக்கவோ அல்லது சலுகை விலையிலே வழங்கவோ அனுமதியை உடனடியாக வழங்கி அப்பணியைத் தொடங்கிட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக சென்னைப் பெருநகரைப் பொறுத்த அளவிலே பெருநகரப் பகுதிகளில் துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு இடம் தேர்வு செய்வது மிகவும் கடினமாக உள்ளது. அப்படியே இடம் கிடைத்தாலும்கூட மின்சார வாரியம் ஒரு commercial நிறுவனம், வணிக நிறுவனம் என்ற கருத்தின் அடிப்படையில் இந்த நிலக் கிரயத்தை இரண்டு மடங்குக்கு மேல் அரசுத் துறை நிறுவனங்களே நிர்ணயிக்கின்றன. அப்படிப்பட்ட சூழ்நிலையில் அந்த ஆர்.கே. நகர் பகுதியினுடைய துணை மின் நிலையம் நிறுவுவதற்காக மின்சார வாரியம் ஏற்கெனவே மாண்புமிகு அம்மாவினுடைய உத்தரவின்பேரில் 20.38 கோடி ரூபாயை ஒதுக்கி இருக்கிறது.

அதற்குரிய நிலத்தைத் தேர்வு செய்கின்றபோது கிராமப் புல எண் 3912/4,5,46,47,48,49 மற்றும் 50-ல் 75 ஆயிரத்து 67 சதுர அடி பரப்புள்ள நிலம் தேர்வு செய்யப்பட்டது. ஆனால், இந்த நிலத்திற்கு, இதன் விலையை இரண்டு மடங்காக நிர்ணயித்து, ஏறத்தாழ 7.5 கோடி ரூபாய் வழங்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். ஆனால், இங்கே துணை மின் நிலையம் அமைப்பதற்கு ஒதுக்கப்பட்ட தொகையோ 20.38 கோடி ரூபாய்தான். இதிலே 7.5 கோடி ரூபாய் நிலத்திற்குச் சென்றுவிட்டால், அந்தத் துணை

[திரு. இரா. விசுவநாதன்] [2005 மார்ச் 28

மின் நிலையம் அமைப்பதிலே சிக்கல் ஏற்படும் என்ற காரணத்தினால், அந்த நிலத்தில் மின்சார வாரியத்தைப் பொறுத்த அளவிலே, நிலம் கூடுதலாக இருப்பதால் 75 ஆயிரத்து 67 சதுர அடி தேவையில்லை; 24 ஆயிரம் சதுர அடியே போதுமானது என்று இப்பொழுது தன்னுடைய தேவையைக் குறைத்துக் கொண்டு, அதற்காக மாவட்ட ஆட்சித் தலைவரிடம் நிலம் ஒதுக்கித் தரும்படி இன்றைக்குக் கேட்டிருக்கிறது. 75 ஆயிரம் சதுர அடிக்கு 7.5 கோடி ரூபாய் என்றால், 24 ஆயிரம் சதுர அடிக்கு ஏறத்தாழ 2.5 கோடி ரூபாய்தான் செலவாகும் என்ற காரணத்தினால், அந்த நிலத்தை இப்போது மின்சார வாரியம் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கேட்டிருக்கிறது. அந்த நிலத்தைப் பெறுவதற்கு உரிய நடவடிக்கை, தொடர் நடவடிக்கை இப்போது எடுக்கப்பட்டு வருகிறது. மிக விரைவிலே அந்த நிலத்தைக் கேட்டுப் பெற்று, அதற்குரிய தொகையும் வழங்கி, அந்தப் பகுதியிலே, ஆர்.கே. நகர்ப் பகுதியிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்தபடி அந்தத் துணை மின் நிலையத்தை அரசு விரைவில் அமைக்கும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.கே. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா அவர்களின் உத்தரவின்பேரில் துறை எடுத்து வருகின்ற நடவடிக்கையை அறிவித்த அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்ற அதேநேரத்தில் சென்னை மாநகரத்தில் பெருகி வரும் மக்கள் தொகை மற்றும் வியாபார ஸ்தலங்கள் போன்றவற்றிற்குக் கூடுதலாகத் தேவைப்படுகின்ற மின்சாரத் தேவைக்கேற்ப அம்மா அவர்கள் ஆட்சி மலர்ந்தபிறகு கடந்த 4 ஆண்டுகளில் 230 கிலோ வாட் மற்றும் 110 கிலோ வாட் மற்றும் 33 கிலோ வாட் துணை மின் நிலையங்கள் சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் இதுவரையில் எத்தனை அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளை சட்டமன்றத்தில் நடைபெறவிருக்கின்ற மானியக் கோரிக்கையில், மின்சாரம் மற்றும் போக்குவரத்து மானியக் கோரிக்கையில் அதற்கான விரிவான பதில்களைத் தருகின்றேன் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.



2005 மார்ச் 28]

## 6. அறிவிப்பு

### உறுப்பினர் இல்லாததால் கவன ஈர்ப்பு தள்ளிவைப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த கவன ஈர்ப்பு. திரு. எச்.எம். ராஜு, இருக்கையில் இல்லை. தள்ளிவைக்கப்படுகிறது.

முற்பகல் 11–45

## 7. மானியக் கோரிக்கைகள், 2005–2006, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 4 – ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

### (ஆ) கோரிக்கை எண் 9 – பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை

---

### (அ) கோரிக்கை எண் 4 – ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2005–2006 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 4 – ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை. மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானிய கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.407,33,95,000/–, மூலதனக் கணக்கில் ரூ.42,31,89,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.25,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2578, திரு. அ.இரா. மலையப்பசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3372, திரு. ஐ. கணேசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1330, திரு. கோ. இரவிராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4497, டாக்டர் ஆர். கோவிந்தசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4773, திரு. டி.கே. இராஜா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6312, திரு. தி. வேல் முருகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6225, திரு. சி. சண்முகம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6768, திரு. எஸ். நடராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6941, திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7190, திரு. கி. பாரிமோகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6681, திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6688, திரு. வி. கணேசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3187, திரு. கே.சி. கருணாகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3296, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4038, திரு. எச்.எம். ராஜு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5644, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை.



வெட்டுத் தீர்மானம் எண் 4090, திரு. வி.கே. லட்சுமணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4180, திரு. வே. கிருஷ்ணமூர்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3989, திரு. டி. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5129, திரு. மு. கார்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4046, திரு. ஆர். கிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3103, திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3011, திரு. கோவை தங்கம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5454, திரு. மு. பெ. சாமிநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5468, திரு. கா. சுந்தசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5472, திரு. என்.ஆர். ரங்கராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6014, திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6181, திரு. சி. ஞானசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6186, திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அறந்தாங்கி தொகுதி, திருப்புனவாசலில் ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளி தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்:



சென்னை-600 008

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.407,33,95,000, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.42,31,89,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6705, திரு. க. பாரமலை, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6198, திருமதி எ. எஸ். மஹேஸ்வரி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7235, திரு. ஆ. ராஜகோபால், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6811, திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தளி தொகுதி, தளி ஒன்றியம், களிகோபசந்திரம் கிராமத்தில் ஆதிதிராவிடர்களுக்கு 20 தொகுப்பு வீடுகள் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.407,33,95,000, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.42,31,89,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2758, திரு. என். நன்மாறன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3255, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நிலங்கள் இல்லாத ஆதிதிராவிடர், பழங்குடியின இனத்தவர்களை நிலமுள்ள விவசாயிகளாக மாற்றும்பொருட்டு அரசு சிறப்புக் கவனம் எடுத்து தரிசு நிலங்களை அவர்களுக்கு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.407,33,95,000, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.42,31,89,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1994, திரு. எ.வ. வேலு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 612, திரு. மீ.அ. வைதியலிங்கம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3202, திரு. அ. அசோகன், இருக்கையில் இல்லை.

## (ஆ) கோரிக்கை எண் 9 – பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 9 – பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை. மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி,

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.190,69,23,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.96,53,56,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2559, திரு. அ.இரா. மலையப்பசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3415, திரு. ஐ. கணேசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4315, திரு. கோ. இரவிராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4547, டாக்டர் ஆர். கோவிந்தசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4816, திரு. டி.கே. இராஜா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4959, திரு. தி. வேல் முருகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5767, திருமதி காசாம்பு பூமாலை, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6567, திரு. எஸ். நடராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7196, திரு. கி. பாரிமோகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7495, திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2769, திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3295, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4023, திரு. எச்.எம். ராஜு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5666, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3969, திரு. டி. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6366, திரு. கே.சி. கருணாகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6841, திரு. கே.வி. முரளிதரன்.



**திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தளி தொகுதியில் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட எஸ்.எஸ்.எல்.சி., பிளஸ்-2, பட்டப் படிப்பு படித்த இளைஞர்களுக்கு சுயதொழில் தொடங்க பயிற்சி அளித்து, மானியத்துடன்கூடிய கடன் தொகை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.190,69,23,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.96,53,56,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4605, திரு. ஆர். கிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4143, திரு. வே. கிருஷ்ணமூர்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7230, திரு. ஆ. ராஜகோபால், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5183, திரு. மு. கார்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5481, திரு. என்.ஆர். ரங்கராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6157, திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6230, திரு. சி. சண்முகம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6191, திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அறந்தாங்கி தொகுதி, சுப்பிரமணியபுரம், அறந்தாங்கி, கரூர் ஆகிய இடங்களில் உள்ள பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிக்கு கட்டடங்கள் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.190,69,23,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.96,53,56,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5452, திரு. மு.பெ. சாமிநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6746, திரு. கோவை தங்கம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6497, திருமதி எ.எஸ். மஹேஸ்வரி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4088, திரு. வி.கே. லட்சுமணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4460, திரு. கா. கந்தசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6170, திரு. சி. ஞானசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 615, திரு. மீ.அ. வைதியலிங்கம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2739, திரு. என். நன்மாறன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3109, திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3283, திரு. அ. அசோகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3275, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கள்ளர் சீரமைப்புத் துறையில் புதிதாக கலை மற்றும் பொறியியல் கல்லூரிகள் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்தும், மிகவும் பின்தங்கியவர்கள் பணியிடங்கள் பல துறைகளில் இருபது சதவிகிதம்



நிரப்பப்படாமல் இருப்பதால் அந்தப் பணியிடங்களை பின்னடைவுப் பணியிடங்களாகக் கருதி நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.190,69,23,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.96,53,56,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2083, திரு. டி.பி.எம். மைதீன்கான், இருக்கையில் இல்லை.

மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, மாமன்ற உறுப்பினர்களுக்கு அவுர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன.

---

@ 373 முதல் 427 வரையிலான பக்கங்களில் இணைப்பு-I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டிலே பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். விவாதத்தில் கலந்துகொள்ளும் மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த இரண்டு மானியக் கோரிக்கைகள்மீதும் ஒருங்கே தங்கள் கருத்துகளைத் தெரிவிக்கலாம். திரு. ப. அரசன்.

*முற்பகல் 11–50*

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் நலத் துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை மானியக் கோரிக்கைகளில் உரையாற்றுகிற அரிய வாய்ப்பினைத் தந்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் இளைஞன் தன்னுடைய காதலியை முரட்டுத்தனமாகக் காதலித்தான். (குறுக்கீடு) உங்களுக்குத் தெரியாது அண்ணே, உங்களுக்கு அந்த வயதில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வயதுக்குப் பொருத்தமில்லாத உவமையாக இருக்கிறதே!

**திரு. ப. அரசன்:** அதுதான் சொல்லிக்கொண்டிருக்கிறேன், திரு. ஹக்கீமிடம். அந்தக் காதலிக்கு அந்தக் காதலன் மேல் சந்தேகம் வந்தது. இவ்வளவு அதிதீவிரமாக நம்மைக் காதலிக்கிறானே, நம்மை உண்மையாகத்தான் காதலிக்கிறானா இல்லையா என்று அந்தப் பெண்ணுக்கு, இளம் நங்கைக்கு சந்தேகம் வந்தது. அந்த இளம் நங்கை ஒரு நாள் அவளுடைய காதலனைப் பார்த்து காதலரே எனக்கு உங்களுடைய தாயினுடைய இதயம் வேண்டுமென்று கேட்டாள். காதலன்தான் முரட்டுத்தனமான காதலனாக இருக்கிறானே; தாய் இருக்கிற இடம் நோக்கி ஓடினான் அந்தக் காதலன். தன்னுடைய தாயினுடைய இதயத்தை எடுத்துக்கொண்டு வேகமாக காதலி இருக்கிற

@ 428 முதல் 457 வரையிலான பக்கங்களில் இணைப்பு-II ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



இடத்திற்கு வந்துகொண்டிருந்தான். வருகிற வழியில், வந்த வேகத்திலே இடறி கீழே விழுந்துவிடுகிறான். அவன் விழுந்த இடத்திற்கு இரண்டு அடி தள்ளி அவனுடைய தாயினுடைய இதயம் தவறி விழுந்துவிடுகிறது. அப்போதும் அந்தத் தாயினுடைய இதயம் கேட்டது, அப்பா வேகமாக வந்தாயே; இடறி விழுந்துவிட்டாயே; உடம்பிலே காயம் ஏதாவது பட்டுவிட்டதா? மெதுவாக வந்திருக்கக் கூடாதா? உன்னுடைய காதலியினுடைய விருப்பத்தை நிறைவேற்றுவதற்குத் துடிக்கிற நீ, நிதானமாக வந்திருக்கக் கூடாதா என்று அந்தத் தாயினுடைய இதயம் கேட்டது. அந்த இக்கட்டான நேரத்திலும் தன்னுடைய மகனுடைய காதலியினுடைய விருப்பத்தைப் பூர்த்தி செய்வதற்காக அந்தத் தாயினுடைய இதயம் பேசியது. அதைப்போல, இன்றைக்கு தமிழகத்தில் பாதிக்கப்பட்டிருக்கிற ஆதிதிராவிட மக்களுக்கு, பிற்படுத்தப்பட்ட மக்களுக்குத் தாயாக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் விளங்குகிறார்கள் என்பதைப் (மேசையைத் தட்டும் ஒலி) பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள், தெய்வப் புலவர் திருவள்ளுவர் சொன்ன குறள்களுக்கிணங்க இன்றைக்கு தம்முடைய ஆட்சியை நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

> **"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு**
> **இறைஎன்று வைக்கப் படும்."**

என்று தெய்வப் புலவர் திருவள்ளுவர் சொன்னார். யாரை மக்கள் இறைவனாகக் கருதுவார்கள் என்று சொன்னால், முறை செய்து மக்களைக் காப்பாற்றுகிற மன்னவனை இறைவனாக மக்கள் கருதுவார்கள் என்று தெய்வப் புலவர் திருவள்ளுவர் சொன்னார். அந்த இலக்கணத்தின் அடிப்படையிலே இன்றைக்கு நம்முடைய முதல்வர் அவர்கள் நம்முடைய தமிழகத்தை ஆண்டுகொண்டிருக்கிறார்கள் என்று சொல்வதிலே நான் உண்மையிலேயே பெருமைப்படுகிறேன்.

அதைப்போல, ஓர் அரசுக்கு என்ன இலக்கணம் என்று சொன்ன தெய்வப் புலவர் திருவள்ளுவர்,

> **"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த**
> **வகுத்தலும் வல்லது அரசு."**

என்று சொல்லியிருக்கிறார். அந்த இலக்கணத்தின் அடிப்படையிலே இன்றைக்குத் தமிழகத்தை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆண்டுகொண்டிருக்கிறார்கள் என்று சொல்வதிலே நான் பெருமைப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் நலத் துறையிலே உரையாற்றத் தொடங்குவதற்கு முன்னாலே திருவள்ளுவருடைய ஒரு குறளை நான் சொல்லித் தொடங்க வேண்டும். திருவள்ளுவர் "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்று சொன்னார். நம்முடைய தமிழ்ச் சமுதாயத்தில் ஜாதிகள் சுமார் ஓர் ஆயிரம் ஆண்டு காலத்திற்கு முன்னாலேதான் தொடங்கப்பட்டிருக்க வேண்டும். அதற்கு முன்னாலே நம்முடைய தமிழ்ச் சமுதாயத்தில், தமிழகத்தினுடைய வரலாற்றில் ஜாதிகள் என்பது இருந்திருப்பதற்கான வாய்ப்புகள் இல்லை. தொழில் ரீதியாக மனிதர்கள் அழைக்கப்பட்டார்களே தவிர, ஜாதி ரீதியாக அழைக்கப்படவில்லை. காலத்தின் நெருக்கடி, காலத்தின் கட்டாயம், பிற்காலத்திலே ஜாதியாக மனிதன் பிரித்து வைக்கப்பட்டிருக்கிறான். அந்த நேரத்திலேதான் திருவள்ளுவர் "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்று சொல்லியிருக்கிறார்.

நாம் வரலாற்றை எண்ணிப் பார்க்க வேண்டும்; இந்தியாவை 600 ஆண்டு காலம் ஆங்கிலேயர் ஆண்டார்கள்; இந்தியாவை அவர்கள் ஆண்டபோதும் சரி, அதற்குப் பிறகு நாம் சுதந்திரம் பெற்று, இன்றைக்கு இந்த காலக் கட்டத்திலேயும் சரி, ஆதிதிராவிடப் பெருமக்கள் என்பவர்கள் மிகச் சிறந்த உழைப்பாளிகளாக, மிகச் சிறந்த பொது நலம் மிக்கவர்களாக, நம்முடைய நாட்டிலே இருக்கிறார்கள் என்பதை, இந்த நேரத்திலே நான் தெளிவுபட எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். உழைப்பு என்பது ஆதிதிராவிடப் பெருமக்களிடத்திலே நிறைய இருக்கிறது. ஆகவே, ஆதிதிராவிடப் பெருமக்களை நம்முடைய சகோதரர்களாக, நம்முடைய உற்ற நண்பர்களாக, நினைத்து சமுதாயத்திலே பாராட்ட வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11–55

ஆதிதிராவிடப் பெருமக்களை நம்முடைய முதல்வர் அவர்களும், நம்முடைய அரசும், மிகச் சிறப்பாக போற்றி, பாராட்டி வளர்க்கிறது என்பதை பல்வேறு உதாரணங்கள் மூலமாக நாம் சொல்ல முடியும். தமிழகத்திலே ஆதிதிராவிட நலப் பள்ளிகள், அவர்களுக்கான விடுதிகள், ஆதிதிராவிட வகுப்பினருக்கு மட்டுமான பள்ளிகள், அவர்களுக்கான விடுதிகள், இவற்றை நிறைய கட்டியிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல,



இன்றைக்கு ஆதிதிராவிடர் விடுதிகள் அரண்மனை போன்று மிக நல்ல புதுப் பொலிவுடன் தோற்றம் தருகின்றன. ஏற்கெனவே வாடகைக் கட்டடத்தில் இயங்கிய விடுதிகள் 40 பேர், 50 பேர் தங்குவதற்கு வசதி இல்லாது இருந்த நேரத்தில், இன்றைக்கு 100 பேர் தங்குவதற்கான வசதியை அந்த கட்டடங்கள் பெற்றிருக்கின்றன. நம்முடைய ஆதிதிராவிடப் பெருமக்கள் அந்த விடுதிகளிலே தங்கிப் படிப்பதற்கு நல்ல வசதியை இந்தத் துறை செய்து தந்து இருக்கிறது என்பதற்காக நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளைப் பொறுத்தவரைக்கும், அந்தப் பள்ளிகளிலே இன்னும் ஆசிரியர் காலிப் பணியிடங்கள் நிறைய நிரப்பப்படாமல் இருக்கின்றன. நம்முடைய ஆதிதிராவிட நலத் துறை அமைச்சர், மாண்புமிகு முதல்வர் அவர்களோடு கலந்து பேசி, அந்தப் பள்ளிகளிலே, ஆசிரியர் பணியிடங்களை நிரப்புவதற்கு முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்திலே ஒரு கோரிக்கையை நான் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முதுநிலைப் பட்டப் படிப்பிற்கு கட்டணம் கட்ட வேண்டியது இல்லை என்று சொல்லி ஓர் ஆணை பிறப்பித்து இருக்கிறோம். ஆனால், பல்வேறு தனியார் பள்ளிகளில், தனியார் கல்லூரிகளில் அந்த ஆணை நிறைவேற்றப்படவில்லை. அதுகுறித்து மாணவர்கள், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு அல்லது அந்தத் துறையினரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறபோது அதன்மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆதிதிராவிடப் பெருமக்கள் உயர்கல்வி பெறவேண்டும் என்பதற்குத்தான் அப்படிப்பட்ட ஆணையை நம்முடைய அரசாங்கம் செய்து இருக்கிறது. ஆனால் அந்த ஆணையை உயர்நிலைக் கல்வியைத் தருகிற பல்வேறு கல்லூரிகள் செயல்படுத்துவதில்லை. அதைக் கண்காணிக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே இருந்த ஆட்சியில், ஒரு மாணவனுக்கு ரூ.2.50 என்று இருந்த நிலையை மாற்றி, இன்றைக்கு ஒரு மாணவன் சாப்பிடுவதற்காக, நல்ல உணவு அருந்துவதற்காக ரூ.300–ஐ ஒதுக்கித் தந்திருக்கிற மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு, என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல இன்னொன்று, தமிழகத்தினுடைய எல்லாப் பகுதிகளிலும் காட்டுநாயக்கன் என்று ஓர் இனம் இருக்கிறது. அந்த இனத்திற்கு 20 ஆண்டு காலத்திற்கு முன்னாலே S.T. Certificate கொடுத்து இருக்கிறார்கள். மயிலாடுதுறை வட்டத்திலே தாயும் தந்தையும் காட்டுநாயக்கன் என்று

சான்றிதழ் வைத்திருக்கிறார்கள். ஆனால், அவர்களுடைய பையனுக்கு S.T. என்று சான்றிதழ் தர மறுக்கிறார்கள். அதேபோல என்னுடைய தொகுதியிலேயும் S.T. மக்கள் வசிக்கிறார்கள். மனுக்கள் குழுவிலே நாங்கள் சென்றபோது நம்முடைய அன்பிற்குரிய சகோதரர், நிலக்கோட்டை அன்பழகன் தொகுதியிலே, இதுபோன்ற ஒரு பிரச்சினை வந்து, நாங்கள் அந்தப் பகுதிக்கே சென்று அந்த மக்களையெல்லாம் சந்தித்தோம். அவர்களுக்கு, காட்டுநாயக்கனாக S.T. சான்றிதழ் தர வேண்டுமென்று சொன்னோம். ஆனால், அந்தப் பகுதியிலே இன்னும் தரப்படவில்லை என்று சொல்கிறார்கள். ஆக, காட்டுநாயக்கன்...

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய குடியரசுத் தலைவரால் அறிக்கை செய்யப்பட்டுள்ள பழங்குடியினர் பட்டியல்படி, பழங்குடியினத்தவர் ஜாதிச் சான்றிதழ், வருவாய்க் கோட்டாட்சியர் அளவில், விசாரணை மேற்கொள்ளப்பட்டு ஆதாரபூர்வமான ஆவணங்களின் அடிப்படையில் ஜாதிச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றன. பழங்குடியினர் ஜாதிச் சான்று உரியவர்களுக்கு குறித்த காலத்தில் கிடைக்க மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் எடுத்த சீரிய நடவடிக்கையால் 2001-2002, 2002-2003, 2003-2004, 2004-2005 ஆகிய 4 ஆண்டுகளில் இதுவரையில் 56,792 பேர்களுக்கு பழங்குடியினர் ஜாதிச் சான்றிதழ்கள் வருவாய்க் கோட்டாட்சியரால் வழங்கப்பட்டு உள்ளன. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டிய குறிப்பிட்ட சில இடங்களில் தாமதத்திற்குக் காரணம் ஏதேனும் இருக்குமேயானால், உடனடியாக நடவடிக்கை எடுத்து விரைந்து ஜாதிச் சான்றிதழ் வழங்க, S.T. சான்றிதழ் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

*நண்பகல் 12-00*

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என்னுடைய பணிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போல, கட்டப்படுகின்ற விடுதிகளில் 100 பேர் தங்குவதற்கான வாய்ப்பு இருக்கிறது. ஆனால் அதிகபட்சமாக 55, 60 பேர்களுக்குத்தான் அரசு அனுமதி அளித்திருக்கிறது. நிறைய பேர் விடுதியிலே தங்கிப் படிப்பதற்கு மனு செய்கிறார்கள். ஆகவே, அந்த எண்ணிக்கையையும் அதிகப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



எங்களுடைய புதுக்கோட்டை நகரில் ஒரு பெரிய கஷ்டம்; ஒரு மகளிர் கல்லூரிதான் எங்களுடைய மாவட்டத்திலே இருக்கிறது. அறந்தாங்கியிலேகூட ஒரு மகளிர் கல்லூரி வேண்டுமென்று நான் மாண்புமிகு கல்வி அமைச்சரை இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். அந்த மகளிர் கல்லூரியில் நிறைய பேர் மனு செய்கிறார்கள், விடுதியில் தங்க வேண்டுமென்று மனு செய்கிறார்கள். ஆனால், அவர்களுக்கு அங்கு போதிய இட வசதி செய்து கொடுக்க முடியவில்லை. மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் கலந்து பேசி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பிரத்தியேகமாக special order-ஆக ஓர் உத்தரவு வாங்க வேண்டும். அங்கே, கல்லூரிக்காக ஓர் ஆதிதிராவிடர் மகளிர் விடுதி தொடங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இலவச வீட்டுமனைப் பட்டாக்களைப் பொறுத்தவரைக்கும், நிறைய ஆதிதிராவிட சகோதரர்கள் வீட்டுமனைப் பட்டாக்கள் இல்லாமல் மிகவும் சிரமப்படுகிறார்கள். கடந்த இரண்டு ஆண்டுகளாக அதற்காக எங்களுடைய மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி மிகவும் குறைவு. இந்த ஆண்டு எங்கள் மாவட்டத்திற்கு அதற்காக நிறைய நிதி தர வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, 10, 15 ஆண்டுகளுக்கு முன்னாலே தாட்கோ மூலமாக நாம் வீடுகள் கட்டிக் கொடுத்தோம். அந்த வீடுகள் எல்லாம் இன்றைக்கு மிகவும் மோசமாகப் பழுதடைந்து இருக்கின்றன. அந்த வீடுகளைப் பழுது நீக்கம் செய்வதற்கு துறை முயற்சி எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் மிகச் சிறப்பாகப் பணியாற்றுகிறார்கள். என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், அனைத்து ஆதிதிராவிட நல விடுதிகளுக்கும் கட்டட வசதியைச் செய்து தந்தார்கள். அதற்காக நான் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையிலும் ஆதிதிராவிட சகோதரிகளுக்கு அளிப்பதைப் போலவே இன்றைக்கு +1, +2 படிக்கின்ற மாணவிகளுக்கு மிதிவண்டிகள் அளிக்கிறோம். இந்த ஆண்டு அவற்றை அளிப்பதிலே கொஞ்சம் காலதாமதம் ஏற்பட்டுவிட்டது. ஒரு மாதத்திற்கு முன்னால்தான் அளித்திருக்கிறோம். வருகின்ற கல்வி ஆண்டில் ஜூலை மாதத்திலேயே

அந்த மிதிவண்டிகளை அளிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

இட ஒதுக்கீடு சதவிகிதத்தைப் பொறுத்தவரைக்கும், கர்நாடகத்திலே எல்லாம் 50 சதவிகிதத்திற்கு மேல் பிற்படுத்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு இருப்பதாகச் சொல்கிறார்கள். உச்ச நீதிமன்றத்திலே மண்டல் கமிஷன்மீது தீர்ப்பு அளித்தபோது 50 சதவிகிதம்தான் இருக்க வேண்டுமென்று சொன்னதாகச் சொல்கிறார்கள். ஆனால், அப்படிச் சொல்லப்பட்ட பிறகும், எப்படி கர்நாடகத்திலே 70 சதவிகித அளவுக்கு பிற்படுத்தப்பட்டோருக்கு ஒதுக்கீடு தரப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆராய வேண்டும், பரிசீலிக்க வேண்டும். முயற்சி எடுத்துக்கொண்டு அந்தச் சட்டத்தை எப்படி இயற்றினார்கள் என்று கேட்டுத் தெரிந்துகொண்டு, நம்முடைய தமிழகத்திலேயும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினருக்கான இட ஒதுக்கீட்டை அதிகப்படுத்துவதற்கு முயற்சியை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போஷ்வே, குற்றப் பரம்பரையினர் என்று தமிழகத்திலே ஒரு பிரிவினர் இருக்கிறார்கள். நம்முடைய பிரமலைக் கள்ளர்கள் மதுரை, தேனி, திண்டுக்கல் மாவட்டங்களில் இருக்கிறார்கள். அதைப்போல இன்னும் வேறு சில பிரிவினரும் குற்றப் பரம்பரையிலே இருக்கிறார்கள். அது அரசினுடைய கணக்கில் இருக்கிறது. அவர்களுக்கும் தனியாகப் பள்ளிகள் தொடங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். ஏற்கெனவே ஒரு துணைக் கேள்வியிலேகூட நான் இதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே கோடிட்டுக் காட்டியிருக்கிறேன். குற்றப் பரம்பரையினருக்குத் தனியாக பள்ளிகள், தனியாக விடுதிகள் ஆரம்பிப்பதற்கு முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு வருத்தமான செய்தி என்னவென்றால், முக்குலத்தோரிலே 3 பிரிவுகள் இருக்கின்றன. அதிலே ஒரு பிரிவில் இருப்பவர்கள் MBC–ஆக இருக்கிறார்கள். ஒரு பிரிவிலே பிரமலைக் கள்ளர் என்பவர்கள் DNC போன்ற குற்றப் பரம்பரை என்கிற வகையிலே வருகிறார்கள். முக்குலத்தோர் பிரிவுகளில் இருக்கும் அனைவரையும் MBC–யாக ஆக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே பணிவன்போடு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் கலந்துபேசி அதற்கான ஆணையைப் பிறப்பிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



பிற்பகல் 12–05

அதைப்போல, தமிழகத்தில் 29 பட்டப் பெயர்களில் முத்தரையர் இன மக்கள் வாழ்கிறார்கள். அவர்கள், 29 பட்டப் பெயர்களிலே இருப்பவர்களை, முத்தரையர் என்று ஒரே பெயரில் அழைக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் 22–2–1996 அன்று, உத்தரவிட்டு இருக்கிறார்கள். ஆனால், அப்படி ஆணை பிறப்பிக்கப்பட்டதற்குப் பிறகும், அந்த ஆணை துறையினாலே செயல்படுத்தப்படவில்லை. இப்பொழுது அந்த முத்தரையர் இன மக்கள் திருச்சி, தஞ்சாவூர், புதுக்கோட்டையில் MBC–யாக இருக்கிறார்கள். மற்ற 27 மாவட்டங்களில் இருப்பவர்கள் BC–யாக இருக்கிறார்கள். ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள் 3 மாவட்டங்களிலே MBC–யாகவும், மற்ற 27 மாவட்டங்களிலே BC–யாகவும் இருப்பது என்பது அவ்வளவு சரியல்ல. ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே கலந்து பேசி அவர்களுக்கு இடப்பட்ட ஆணையை நிறைவேற்றித் தர வேண்டும். 30 மாவட்டங்களிலேயும் அவர்கள் MBC–யாக இருப்பதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் ஏற்கெனவே நிறைய விடுதிகளுக்குக் கட்டடம் கட்டித் தந்திருக்கிறார்கள். அதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆண்டு அதேபோல—அறந்தாங்கி, சுப்பிரமணியபுரம், கரூர் போன்ற இடங்களில் வாடகைக் கட்டடங்கள்கூட அங்கே கிடைக்கவில்லை. வாடகையை அரசு கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறது. ஆனால், வாடகைக் கட்டடங்கள்கூட அங்கே கிடைக்கவில்லை. அங்கே விடுதிக் கட்டடங்கள் கட்டித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மிகச் சிறப்பாகப் பணியாற்றுகிறது. அதற்காக நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன். ஆனால், அதிலேயும் ஒரு கஷ்டம் என்னவென்றால்...

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இட ஒதுக்கீட்டைப் பொறுத்தவரையில், இந்தியத் துணைக் கண்டத்திலேயே 69 சதவீதத்தை இன்றையதினம் நடைமுறைப் படுத்தக்கூடிய ஓர் அரசு, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா

அவர்களுடைய அரசுதான் என்பதை இந்த நேரத்திலே பணிவோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதுமட்டுமல்ல, இந்த 69 சதவீதம் என்பது, இந்தச் சட்டமன்றத்திலே ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு இந்தியத் துணைக் கண்டத்தினுடைய அரசியலமைப்புச் சட்டத்திலே 9-வது அட்டவணையிலே அங்கம் வகிக்கக்கூடிய வகையிலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செயலாற்றி வரலாறு படைத்துள்ளார்கள் என்பதையும் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அன்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது இங்கே பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர், தாழ்த்தப்பட்டவர்களுடைய விகிதாச்சாரங்களை அதிகப்படுத்த வேண்டுமென்பதைக் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சட்டமன்றத்திலேயே தீர்மானம் நிறைவேற்றப்பட்டது மட்டுமல்லாது, தொடர்ந்து மத்திய அரசை வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்தந்த மாநிலங்களுக்கு இட ஒதுக்கீட்டில், வேலைவாய்ப்பு மற்றும் கல்வியிலேயும் ஒதுக்கீடு செய்யக்கூடிய அளவை நிர்ணயிக்கும் அதிகாரத்தை மாநில அரசுகளுக்கே கொடுக்க வேண்டுமென்பதைத் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கின்றார்கள். 69 சதவீதத்தை எதிர்த்து இன்று உச்ச நீதிமன்றத்திலே வழக்கு இருக்கின்ற காரணத்தினால், தற்போது பிற்படுத்தப்பட்டோருடைய இட ஒதுக்கீட்டை முறைப்படுத்த முடியாது என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அன்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறும்போது, பிரமலைக் கள்ளர்கள்போல், மறவர்கள் இருக்கின்றார்கள். அதுபோன்றவர்கள் ஒருசில பகுதிகளில் மறவர்கள் என்றும் சில பகுதிகளில் சில ஜாதியைச் சார்ந்தவர்கள் தாழ்த்தப்பட்டவர்களாகவும், பிற்படுத்தப்பட்டவர்களாகவும், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களாகவும் இருந்து கொண்டிருக்கின்றார்கள். இதற்குக் காரணம், அன்றையதினம் இந்த இட ஒதுக்கீடு உருவாக்கப்பட்டபோது பிற்படுத்தப்பட்டவர் என்ற அமைப்பிலும், மிகவும் பின் தங்கியிருந்தவர்கள் இருந்ததை மனதில் வைத்துக்கொண்டு, அந்தந்தப் பகுதியிலே, வாழ்கின்ற பகுதியில் இருப்பவர்கள் • நிலையை குறிப்பாக எடுத்து, அந்தப் பிற்படுத்தப்பட்டவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் ஆகவும்,-- பிற்படுத்தப்பட்டவர்கள் என்பது வசதியின் அடிப்படையை வைத்துக்கொண்டு உருவாக்கப்பட்டது என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



பிரமலைக் கள்ளர்களைப் பொறுத்தவரையில், 1920-க்குப் பின்னர், பிரமலைக் கள்ளர்களுடைய வாழ்வுக்கு மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் 260 பள்ளிகளுக்கு இன்றையதினம் புதிய கூடுதல் கட்டடங்கள், அதற்குத் தேவையான விடுதிகள், அதற்குத் தேவையான அடிப்படை வசதிகள் ஆகியவற்றைக் கொடுத்திருக்கின்ற வரலாறு படைத்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த மாமன்றத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. நான் கேள்விப்பட்டதைச் சொன்னேன். கர்நாடக மாநிலத்திலே அப்படி இருப்பதாகச் சொல்கிறார்கள். அதைத் தெரிந்து ஏதாவது பிற்படுத்தப்பட்ட வகையில் ஒரு 70...

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த 69 சதவீத இட ஒதுக்கீடு தமிழகத்திலே நிரந்தரமாகக் கொடுக்கப்பட வேண்டுமென்பதற்காக, 9-வது அட்டவணையிலே மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் இந்தச் சட்டமன்றத்திலே ஒரு சட்டத்தை இயற்றி, அதை அட்டவணையிலே சேர்த்தார்கள். அதற்குப் பிறகு, அம்மா அவர்கள், அன்றைக்கு திரு. வாஜ்பாய் அவர்கள் பாரதப் பிரதமராக இருந்தபொழுது, அந்தச் செயற்குறிப்பிலே இந்திய அரசியலமைப்புச் சட்டம் Article 15-ஐ Amendment செய்து, அந்தச் சட்டத் திருத்தம் கொண்டுவர வேண்டுமென்று, அந்தச் செயற்குறிப்பிலே சேர்த்தார்கள். ஆனால், அதற்குப் பிறகு 5 ஆண்டு காலம் அந்த ஆட்சியிலே திராவிட முன்னேற்றக் கழகம் இருந்தது; இப்பொழுதும் ஆட்சியிலே அமர்ந்துகொண்டிருக்கிறார்கள். இட ஒதுக்கீட்டைப் பற்றிப் பேசுகின்ற அந்த எதிர்க் கட்சிகள், தங்களுக்கு இட ஒதுக்கீட்டைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்களே தவிர, அந்த மக்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைய வரைக்கும் அந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டுவரவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-10

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோல நம்முடைய தளி தொகுதியிலே இரண்டு இடங்களிலே விடுதிக் கட்டடங்கள் கட்டித் தர வேண்டும் என்று, அஞ்செட்டி, பாலதொட்டணாப்பள்ளி ஆகிய இரு இடங்களிலே விடுதிக் கட்டடங்கள் கட்டித் தர வேண்டுமென்று எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர்

அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதையும் செய்து தர வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஆதிதிராவிட சகோதரிகளைப் போலவே, புதுக்கோட்டை மகளிர் கல்லூரியிலே பிற்படுத்தப்பட்ட மாணவிகள் ஏராளமான பேர் படிக்கிறார்கள். வருடத்திற்கு 10 இடங்கள் வருகின்றன. நாங்கள் 5 சட்டமன்ற உறுப்பினர்கள். 5 பேரிலே ஒருவர் அமைச்சர். நாங்கள் 5 பேரும் அந்த 10 இடங்களைப் பங்கிட்டுக்கொள்வதற்குப் பெரிய கஷ்டமாகப் போய்விடுகிறது. அங்கே அந்தப் பிற்படுத்தப்பட்ட மகளிர்க்கான விடுதி ஒன்றைத் தொடங்குவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கலந்து பேசி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

முதல்வர் அவர்கள் இருப்பார்கள் என்று பாரதியார் பாடல் ஒன்றை தேர்ந்தெடுத்துக் கொண்டு வந்தேன். அவர்கள் இல்லை. (குறுக்கீடுகள்) என்றாலும், அந்தப் பாடலை எல்லோரும் விரும்புகிறார்கள். ஆகவே, அந்தப் பாடலை நான் சொல்லி, என்னுடைய உரையை நிறைவு செய்ய விரும்புகிறேன்.

"வீட்டுக் குள்ளே பெண்ணைப் பூட்டிவைப் போமென்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்."

என்கிற பாரதியார் பாடலைச் சொல்லி என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. சந்திரமோகன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

**திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2005–2006 ஆம் ஆண்டிற்கான ஆதிதிராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைகளின் மானியக் கோரிக்கைகளின்மீது பேச வாய்ப்பளித்தமைக்கு, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம், தங்கத் தாரகை, வாழ்நாள் சாதனையாளர், அம்மா அவர்களை வணங்கி எனது உரையைத் துவங்குகின்றேன்.



ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த, நலிவுற்ற மக்களின் எதிர்காலமே இருண்டு விடுமோ என்ற அச்சத்தை நீக்கி, அவர்களுக்கு சமூக மற்றும் பொருளாதார நிலையில் நிரந்தரமான மாறுதலை கல்வி அறிவை புகட்டுவதன் மூலமே ஏற்படுத்த இயலும் என்று உணர்ந்த, மகத்தில் பிறந்து ஜெகத்தை ஆளவந்த மாதரசியாம், மக்களுக்காக மகத்தான பணி செய்யும் மாமணியாம், மாண்புமிகு அம்மா அவர்கள், பல்வேறு திட்டங்களைத் தீட்டி, அவற்றை உரிய வழிகளில் சிறப்பாகச் செயல்படுத்தி வருகின்றார்கள். அதற்காக ஆதிதிராவிட சமுதாய மக்களின் சார்பாக எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆதிதிராவிட மக்களுக்காகவே, நாங்கள் அவதாரம் எடுத்திருக்கிறோம் என்றும், நாங்கள் ஆதிதிராவிட மக்களின் சம்பந்தி என்றும் சொல்கின்ற தலைவர்களெல்லாம் நினைத்துகூடப் பார்க்க முடியாத சாதனைகளை மாண்புமிகு அம்மா அவர்கள் செய்து வருகிறார்கள். இச்சமுதாயத்திற்காக உழைத்த தலைவர்களை நினைவுகூர்ந்து, அவர்களைப் போற்றும் வகையில் யாரும் செய்திடாத சாதனையாக தாத்தா இரட்டைமலை சீனிவாசன் அவர்களுக்கு நினைவு மண்டபம் கட்ட அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) என்றென்றைக்கும் ஆதிதிராவிட சமுதாய மக்களின் மேல் அம்மா அவர்கள் வைத்திருக்கும் பேரன்பை இது காட்டுகிறது. இதற்காக சமுதாய மக்களின் சார்பில் மனமார்ந்த நன்றியினையும், பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொருளாதார ரீதியில் பின்தங்கியுள்ள +1, +2 வகுப்புகள் படிக்கும் ஆதிதிராவிட மாணவிகள், நீண்ட தூரம் நடந்து சென்று பள்ளிப் படிப்பை தொடர முடியாத நிலையை அறிந்த மாண்புமிகு அம்மா அவர்கள், 2001 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தவுடன் இலவசமாக சைக்கிள் வழங்கும் திட்டத்தை இந்தியாவுக்கே முன்னோடியாக அறிவித்து, இன்றுவரை சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார்கள்.

கல்விக் கண் திறந்து வைத்த, மாண்புமிகு அம்மா அவர்கள் நடப்பு ஆண்டில் ரூ. 8.82 கோடி செலவில் 50,600 மிதிவண்டிகள் வழங்க ஆணையிட்டுள்ளார்கள். இது எந்த மாநில அரசும் செய்ய முடியாத வரலாற்றுச் சாதனையாகும்.

பிற்பகல் 12–15

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட சமுதாய மாணவியர் தங்கிப் படிக்கும் விடுதிகளுக்குச் சொந்தக்

கட்டடங்கள் கட்ட கொள்கை முடிவு எடுத்து, 2001 ஆம் ஆண்டில் அம்மா அவர்கள் அறிவித்துள்ளார்கள். மொத்தம் உள்ள 1,076 விடுதிகளில், ரூபாய் 155.30 கோடி செலவில் 493 விடுதிகள் கட்ட, மாண்புமிகு அம்மா அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்கள். இதில் 264 விடுதிகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள விடுதிகளுக்கு நடப்பு நிதியாண்டில் ரூபாய் 44.20 கோடி மதிப்பில், அனைத்து விடுதிகளையும், ஆதிதிராவிடர் மாணவ மாணவிகள் நலன் கருதி கட்ட இருப்பது, மாண்புமிகு அம்மா அவர்களின் சாதனைகளில் வரலாறு படைத்துள்ளது.

பெண் குழந்தைகளின் கல்வியை ஊக்குவிக்கும் பொருட்டு, 3 முதல் 5 ஆம் வகுப்பு வரை படிக்கும், 60,000 பெண் குழந்தைகளுக்கு ரூபாய் 50 வீதம் 10 மாதங்களுக்கு ஊக்கத் தொகையாக ரூபாய் 500 வழங்கிடவும், ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினருக்கான, ஊரக மாணவிகள் ஊக்க உதவித் திட்டத்தின்கீழ், 6 ஆம் வகுப்பில் படிக்கும் 30,000 பெண் குழந்தைகளுக்கு ரூபாய் 100 வீதம், ஓர் ஆண்டில் 10 மாதங்களுக்கு ரூபாய் 1,000 ஊக்கத் தொகை வழங்கவும், இப்படி கல்வித் தரத்தை மேம்படுத்த ஆண்டுக்கு ரூபாய் 6 கோடி, அம்மாவின் அரசு செலவிடுகிறது. இத்திட்டம், மாண்புமிகு அம்மா அவர்களால் முந்தைய ஆட்சிக் காலத்தில் துவங்கப்பட்டு தொடர்ந்து சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார்கள்.

இந்தியாவிலேயே எந்த மாநிலமும் செயல்படுத்தாத, பட்ட மேற்படிப்புக்காக மாணவிகளுக்கு இலவச கல்வித் திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு செயல்படுத்தி வருகிறது. பட்ட மேற்படிப்பு பயிலும் ஆதிதிராவிட மாணவிகளுக்கு சென்னையில், மாணவியர் விடுதி ஒன்றைத் தொடங்கி, மாணவிகள் தங்கிப் படிக்கும் வசதியை மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்கள்.

ஆதிதிராவிட நல விடுதிகளில் தங்கிப் படிக்கும், மாணவ மாணவிகளுக்கான உணவுக் கட்டணம், ரூபாய் 225/–லிருந்து ரூபாய் 300/– ஆக உயர்த்தப்பட்டு, அதற்காக ஒவ்வொரு ஆண்டும் ரூபாய் 9 கோடி கூடுதலாக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் செலவிடப்படுகிறது.

மகளிர் முன்னேற்றத்திற்காக அரும்பெரும் சாதனைகளைச் செய்து வரும், தங்கத் தாரகை மாண்புமிகு அம்மா அவர்கள், பாரதி கண்ட புரட்சிப் பெண்ணாக, புதுமைப் பெண்ணாக திகழ்கின்றார்.



கல்வி நிலையங்களுடன் இணைந்த விடுதிகளில் தங்கி, பட்டம் மற்றும் பட்ட மேற்படிப்பு பயிலும் மாணவ மாணவிகளுக்கு, விடுதிக்கு ஆகும் கூடுதல் செலவினத்தை ஈடு செய்ய, கடனாக வழங்கப்பட்டு வந்த உதவித் தொகை, இளங்கலைப் பட்டப் படிப்புக்கு ரூபாய் 6,500/–ம் மற்றும் முதுகலைப் பட்டப் படிப்புக்கு ரூபாய் 7,000/– 2002–2003 ஆம் ஆண்டு முதல், முழு மானியமாக வழங்கிட மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டது, அவரின் கருணை உள்ளத்தைக் காட்டுகிறது. அதுவும் இந்தியாவிற்கே முன்னோடித் திட்டமாக மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டு வந்து சாதனை படைத்துள்ளார்கள்.

பட்டப் படிப்பு பயிலும் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு, இலவசக் கல்வியும், முதுகலைப் பட்டப் படிப்பு பயிலும் மாணவிகளுக்கு, இலவசக் கல்வியென, கல்விக் கண் கொடுத்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றியை காணிக்கையாக்குகின்றேன்.

மகளிர் பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், திட்ட இலக்கு, தனிநபர் பயனாளிகளுக்கு மட்டும், உதவுவது என்ற நிலையை மாற்றி, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில், மாவட்ட செயலாக்கத் திட்டத்தில் 50 சதவீதம் உதவித் தொகை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இது மாண்புமிகு அம்மா அவர்களின் மற்றுமொரு சாதனையாகும்.

டெல்லியில் நடைபெற்ற சர்வதேச மகளிர் தின விழாவில், பல துறைகளைச் சேர்ந்த வல்லுனர்களும், நிபுணர்களும் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களுக்கு, புகழ் மகுடம் சூட்டி பாராட்டியிருக்கிறார்கள். இது மாண்புமிகு அம்மா அவர்கள், பெண் இனத்திற்கு செய்து வரும் சாதனைகளுக்குக் கிடைத்த மகத்தான பரிசாகும்.

2003–2004 ஆம் ஆண்டில், ஆதிதிராவிட மக்கள் நிலம் வாங்கும் திட்டத்தை, மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்தார்கள். அதன்படி 7,000 மகளிர் பயன் பெறும் வகையில், ரூபாய் 7 கோடியில் 50 சதவீதம் மானியத்துடன், விவசாய நிலம் வாங்கி, வழங்கும் புரட்சிகரமான திட்டத்தை செயல்படுத்தி வருகிறார்கள்.

2005–2006 ஆம் ஆண்டிற்கும், ஆதிதிராவிட மகளிர் 7,000 பேர் பயன்பெறும் வகையில், திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட இருக்கிறது. இது மாண்புமிகு அம்மா அவர்களால், ஆதிதிராவிட

[திரு. நா. சந்திரமோகன்] [2005 மார்ச் 28

மகளிருக்கு கிடைத்திருக்கும் வரப்பிரசாதமானத் திட்டமாகும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆதிதிராவிட சமுதாய மக்கள் வசிக்கும், தெருக்களில் உள்ள, 6,000 திருக்கோயில்களை புதுப்பிக்க திருக்கோயில் ஒன்றுக்கு ரூபாய் 25,000/- வீதம் 2004-2005 ஆம் ஆண்டில் ரூபாய் 15 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இது அம்மா அவர்களின் சிறப்பான சாதனையாகும். (மேசையைத் தட்டும் ஒலி) 2005-2006 ஆம் ஆண்டிலும் 6,000 திருக்கோயில்களைப் புதுப்பிக்க திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.25,000/- வீதம் ரூ. 15 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. தனி நபர் பயனாளிகளுக்கானத் திட்டத்தின்கீழ் 17,849 நபர்களுக்கு, சுயதொழில்கள் தொடங்க ரூ.34.17 கோடி நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது அம்மாவின் சாதனையின் சிறப்பு அம்சமாகும்.

பிற்பகல் 12-20

சிறப்புப் பொருளாதாரத் திட்டத்தின்கீழ் 2004-2005 ஆம் நிதியாண்டில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடும்பங்களில் குறிப்பிட்டோருக்கு வாழ்க்கைத் தரத்தை உயர்த்திட, இத்திட்டம் துவங்கப்பட்டுள்ளது. 2005-2006 ஆம் ஆண்டில் ரூ. 15 கோடி மானியத்துடன் 6,000 நபர்களுக்கு கடனுதவி வழங்கப்பட உள்ளது மாண்புமிகு அம்மா அவர்களின் புரட்சித் திட்டத்தில் ஒன்றாகும்.

ரூ.10 கோடி மானியத்துடன் ஆதிதிராவிட சமுதாய இளைஞர்கள் 4,000 பேர்களுக்கு சுய வேலைவாய்ப்பு வழங்க உத்தரவிட்டுள்ளதும், தாட்கோ மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 1,50,000 ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினர் பயன் பெறும் வகையில் கடனுதவி வழங்கப்பட்டுள்ளதும், தாட்கோ மூலம் 11,300 ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு, பல்வேறு தொழிற்பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருவதும், இதில் பெண்களுக்கு 33 சதவிகிதத்திற்கு மேல் அதிகமான தொழிற்பயிற்சிகள் அளித்து வருகிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இப்படி ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மக்கள் மேம்பாட்டிற்காக, சிறப்பான திட்டங்களைச் செயல்படுத்தி வரும் மாண்புமிகு அம்மா அவர்களை நன்றியுடன் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையைப் பொறுத்த அளவில், அச்சமுதாய மக்களின் நலனில் மிகவும் அக்கறை கொண்டு, பிற்படுத்தப்பட்டோரின் வாழ்க்கையில் வளம் பல சேர்க்க, அரிய பல திட்டங்களை வாரி வழங்கிடும், வாழ்நாள் சாதனையாளர், வான்புகழ் கொண்ட குறள்



2005 மார்ச் 28] [திரு. நா. சந்திரமோகன்]

நெறியாளர், மாண்புமிகு அம்மா அவர்களின் சாதனைகளைச் சொல்லச், சொல்ல இனித்திடும்.

2005-2006 ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவிகளுக்கு அவர்களின் கல்வித் தரத்தை மேம்படுத்த ரூ.100 கோடி செலவில் புதிதாக 318 தங்கும் விடுதிக் கட்டடங்கள் கட்டித் தரப்படும் என்ற மாண்புமிகு அம்மா அவர்களின் அறிவிப்பை அனைவரும் அகம் குளிர வரவேற்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தேசியமும், தெய்வீகமும் எனது இரு கண்கள் என்று சொன்ன மனிதநேயப் பண்பாளர், அனைத்து சமூக மக்களும் அடியொற்றி, போற்றிப் புகழும் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் திருமகனாருக்கு அவர் வாழ்ந்த திருநகரில் அவருக்கு நினைவிடம் அமைக்கப்படும் என்று அறிவித்த அறிவுசால் ஆட்சியாளர், அரும்பணிக்கு தன்னை ஆளாக்கிக் கொண்ட மாட்சியாளர் மாண்புமிகு அம்மா அவர்களை (மேசையைத் தட்டும் ஒலி) பிற்படுத்தப்பட்ட மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் அனைவரும் அளவில்லா மகிழ்ச்சி அடைந்து அன்னையைப் பாராட்டுகிறார்கள். நானும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குடும்பத்தின் வறுமை காரணமாக நீண்ட தூரத்திலிருந்து கால் கடுக்க நடந்து வந்து, கல்வி பயிலும் மாணவிகளின் கல்வித் தரம் உயர, கவனம் செலுத்தி தொடர்ந்து கல்வி பயில, 11 மற்றும் 12 ஆம் வகுப்பில் பயிலும் மாணவிகளுக்கு இலவசமாக மிதிவண்டிகள் வழங்கும் முன்னோடித் திட்டத்தின்கீழ் 1,26,000 மாணவிகள் பயன் பெறும் வகையில் ரூ.24.50 கோடி செலவில் இந்தக் கல்வியாண்டில், இலவச மிதிவண்டிகள் வழங்கிட அறிவிப்பு செய்த ஆற்றல்மிகு அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவிகள் தொழிற் கல்வி இலவசமாக பயில ரூ.5.60 கோடி ஒதுக்கிய, மாண்புமிகு அம்மா அவர்களைப் பாராட்டி வரவேற்று மகிழ்கின்றேன்.

'கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்று முன்னோர்கள் சொல்லி வைத்தார்கள். ஆனால் அத்திருக்கோயில்கள் பொதுமக்கள் சென்று வழிபட இயலாமல் பழுதடைந்திருந்தன. அதனால் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் வாழும் பகுதிகளிலுள்ள 4,000 திருக்கோயில்களைப் புதுப்பிக்க தலா

ரூ.25,000/- வீதம் மொத்தம் ரூ.10 கோடி நிதியொதுக்கீடு செய்திட்ட குலம் போற்றும் குல விளக்காம் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி, நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

மேலும், எனது சீர்காழி தொகுதி மக்களின் சார்பில் சில கோரிக்கைகளை இம்மாமன்றத்தில் வைக்கின்றேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசல் ஊராட்சியில் ஒரு புதிய காவல் நிலையம் துவக்க வேண்டுகிறேன். சீர்காழி நகரில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி இதுவரையில் இல்லை. அதனால் புதியதாக ஒரு பிற்படுத்தப்பட்ட மாணவர் நல விடுதி ஒன்றைத் தொடங்கக் கேட்டுக்கொள்கிறேன். சீர்காழி நகரில் உள்ள நகராட்சி நடுநிலைப் பள்ளியை மகளிர் உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்திக் கொடுக்க வேண்டுகிறேன். சீர்காழி நகரில் பாதாள சாக்கடை வசதி செய்துக் கொடுக்க வேண்டுகிறேன்.

'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள்.

> 'ஒன்று எங்கள் சாதியே, ஒன்று எங்கள் நீதியே,
> உழைக்கும் மக்கள் யாவரும் ஒருவர் பெற்ற மக்களே'

என்று அன்றைக்கு புரட்சித் தலைவர் பாடினார்.

பிற்பகல் 12-25

மாண்புமிகு அம்மா அவர்களும், சாதி மதங்களுக்கு அப்பாற்பட்டு, ஆதிதிராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்டோருக்கு, சமூக மற்றும் பொருளாதார சமத்துவம் கிடைக்க வேண்டுமென்ற உயரிய சிந்தனை கொண்டு உழைத்து வருகிறார்கள்.

> "எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும்
> இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்."

என்பதற்கு இலக்கணமாக, சாதனைகள் செய்து வரும் மாண்புமிகு அம்மா அவர்களின் பின்னால் தமிழக மக்கள் என்றென்றும் அணி வகுத்து நிற்பார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) குறிப்பாக ஆதிதிராவிட பழங்குடியின மக்கள் மற்றும் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் தொடர்ந்து அம்மா அவர்களுக்கு ஆதரவளிப்பார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.



என்ன தவம் செய்திட்டேன் எம் தலைவி ஆட்சியில், சாதனைகளைப் பேச சான்றோர் மன்றத்திலே, வாய்ப்பளித்த வள்ளலின் வாரிசாம் மாண்புமிகு அம்மா அவர்களின் பாதம் பணிந்து கோடானுகோடி நன்றியைக் காணிக்கையாக்கி அமர்கின்றேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி சிவகாமி.

***திருமதி வி. சிவகாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரிய வாய்ப்பைக் கொடுத்த சங்கத் தமிழ் நாட்டை ஆளப்பிறந்த சிங்கத் தலைவிக்கு என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்து, என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்து, என்னுடைய நன்றியைத் தெரிவித்து, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே ஆதிதிராவிட மக்கள், எதிர்க்கட்சியினர்கூட சில நாளைக்கு முன்பாக காணி நிலம் வேண்டும் என்றனர். காணி நிலம் வேண்டும் பராசக்தி, காணி நிலம் வேண்டும், ஒரு கேணி அருகிலே வேண்டும். பராசக்தி எங்களுக்கு ஒரு கேணி அருகிலே வேண்டும். 10, 15 தென்னை மரங்களும் பக்கம் இருக்க வேண்டும் என்று எண்ணியிருந்த ஆதிதிராவிட மக்களுக்கு மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் இலவசமாக நிலத்தையும் கொடுத்து, அதற்குண்டான அத்தியாவசியமுள்ள பம்புசெட்டுகளையும் கொடுத்து, அவர்களுக்கு நிலத்திலே பயிரிட அனைத்துப் பொருட்களையும் கொடுத்து, விதைப்பதற்கும் அவர்கள் வாழ்க்கை முன்னேறுவதற்கும் வழிவகை செய்த இதய தெய்வம் அம்மாவிற்கு இந்த நேரத்திலே உண்மையாகவே நன்றி சொல்லாவிட்டால் நான் இந்தச் சமுதாயத்தில் பிறந்ததற்கே அர்த்தமில்லாமல் போய் விடும். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல இன்று ஆதிதிராவிட மக்களுடைய நிலையை அறிந்து அவர்களுடைய வாழ்க்கைத் தரம் முன்னேற வேண்டும், இவர்கள் ஓட்டுப்போடும் வங்கிகள் அல்ல, அவர்கள் இந்த நாட்டினுடைய பிரதிநிதிகள். இந்த நாட்டு மக்கள், குறிப்பாக சொல்லப்போனால் மாண்புமிகு இதய தெய்வம் அம்மாவிற்காகவே ஓட்டுப்போட்டு, ஓட்டுப்போட்டு காலமெல்லாம் அவர் நினைவில் வாழும் அந்த மக்களுக்கு, இன்று ஊர்களில் எல்லாம் 6,000 கோயில்களுக்கும், மறுபடியுமாக 6,000 கோயில்களுக்கும் உத்தரவிட்ட மாண்புமிகு இதய தெய்வத்திற்கு இந்த நேரத்திலே வணக்கத்தைத் தெரிவிக்கிறேன்.

பிற்பகல் 12-30

50 ஆண்டு காலம் கோரிக்கை நிறைவேறப்படாமலிருந்தது. இரட்டை மலை சீனிவாசனுக்கு ஒரு மணிமண்டபம் கட்ட வேண்டுமென்று பலமுறை பலபேர் முன்வைத்தும்கூட நடக்காமல் இருந்தது. ஆனால், ஆதிதிராவிடர்கள் கலங்க வேண்டாம்; நான் இருக்கிறேன்; என்று

"கார் வந்தால் மழை பொழியும்;
களம் கண்டால் வீரன் மகிழ்வான்;
தேர் வந்தால் வீதி சிறக்கும்;
திரு வந்தால் குலம் சிறக்கும்."

இந்த ஆதிதிராவிட மக்களுக்கு யார் வந்தால் நன்மை செய்வார்கள் என்று அறிந்து அந்த தெய்வமே, 2001-ல் அம்மா ஆட்சியில் அமரும்போது நிதிநிலை எவ்வளவாக இருந்தது என்று தெரியும்; அந்தக் காலத்திலே மக்களுக்கு எத்தனையோ சிறு கதைகளை அம்மா அவர்கள் சொன்னார்கள் பல மேடைகளிலே. ஒரு வீட்டிலே 2 மகன்கள் இருந்தார்கள். அதையெல்லாம் அம்மா அவர்கள் சொன்னது. உங்களுக்கெல்லாம் நினைவிருக்கும். தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மக்களுக்கும் நினைவிருக்கும். ஆனால், அந்த சிறு கதைகளிலெல்லாம் என்ன சொன்னார்கள் என்றால், இரண்டு பேர் உள்ள ஒரு வீட்டிலே ஒருவன் கணக்குச் செய்யவும், மற்றொருவன் உழுதுவிட்டு சம்பாதித்துக் கொண்டு வந்ததை எல்லாம் இவன் சேகரித்து வைக்கவும், எப்படிச் செலவிட வேண்டுமென்றும் செலவுக் கணக்கும் வைத்திருந்தான். ஆனால், ஒருவன் உழுது கொண்டே இருந்தான்; உழைத்துக் கொண்டேயிருந்தான். உழைத்து உழைத்து ஓடாகி தேய்ந்து கொண்டிருந்தவனுக்கு அந்தத் தாய் கஞ்சியும், கூழும் ஊற்றினாள். ஆனால், இந்த மகன் படித்தவன். பண்புள்ளவன். நாட்டை எழுது கோலால் எழுதுகிறான் என்று இவனுக்கு அனுதினமும் அம்மா நெய்யில் சோறு கொடுத்தாள்; பாலில் சோறு கொடுத்தாள். பருப்பில் சோறு கொடுத்தாள். ஆனாலும், நாட்டில் விளையாமல் போய்விட்டது. மழை வரவில்லை. மழை இல்லாத காரணத்தினாலே நாடு வறட்சியில் மிதந்தது. அதன் காரணமாக, 'நீயும் அந்த கூழைக் குடிக்க வேண்டும்' என்று சொன்னபோது, அந்த படித்தவன் சொன்னான். 'நான் குடிக்கமாட்டேன், அவன்தான் குடிக்கப் பிறந்தான். நான் சாப்பிடத்தான் பிறந்தேன். நான் Chair-ல் உட்கார்ந்து எழுதுகிறவன். அதனால் நான் நிச்சயமாக இந்தக் கஷ்டத்தை எல்லாம் அனுபவிக்கமாட்டேன்' என்றான். அப்போது தாய் சொன்னாள், 'மகனே,



உன்னோடு கூடப்பிறந்தவன், இவ்வளவு கஷ்டப்பட்டு, கொண்டு வருகிறான், சம்பாதித்து வரியாகக் கட்டுகிறான். நமக்கெல்லாம் வியர்வையைச் சிந்தி சம்பாதித்துக் கொடுக்கிறான். நம்முடைய அரசும் நன்றாக இருக்கவேண்டும்; நாடும் நன்றாக இருக்கவேண்டும் என்று நினைக்கும் அந்த மகன், காலம் எல்லாம் கஷ்டப்படுபவனோடு நீயும் கொஞ்ச காலம் கஷ்டப்படு.நாடு செழித்த பின்பாக உனக்கு, நீ கேட்டது அனைத்தையும் தருவேன்' என்றார். ஆனால், இவர்கள் கேட்கவில்லை. அப்போதுதான் அரசு ஊழியர்களுக்கு அம்மா அவர்கள் சிறு, சிறு விதிகளைப் போட்டார்கள். ஆனால், இன்று அரசு எல்லாம் அள்ளி வழங்கியபோது,இவர்கள் எல்லாம் என்ன சொன்னார்கள்?எதிரிலே உட்கார்ந்திருப்பவர்கள் எல்லாம், தேர்தல் வருகிறது, அதனால் ஓட்டு வாங்குவதற்காக முதலமைச்சர் எல்லாவற்றையும் அறிவிக்கிறார் என்றார்கள். நிச்சயமாக அது தவறு. மக்களோடு மக்களாகப் பழகுகிறவள் நான். இதுபோன்ற A.C. room எல்லாம் எனக்குப் பழக்கம் இல்லை. நான் வயலுக்குப் போனாலும் அந்தப் பெண்களோடு பாடுபடுவேன். நேற்றைக்குக்கூட நிதியமைச்சரிடம் சொன்னேன். 'நான் இன்றுகூட தோட்டத்திற்குப் போய் வேலை செய்துவிட்டுத்தான் வந்தேன், ஐயா' என்று சொன்னேன்.

நான் அவர்களோடு சேர்ந்து இன்றைக்குச் சொல்கிறேன், மாண்புமிகு இதயதெய்வம் அம்மாவிற்கு; இங்கே பத்திரிகைகாரர்கள் எல்லாம் இருக்கிறார்கள்; அவர்கள் எல்லாம் கண்டிப்பாக இந்தச் செய்தியை மக்களிடத்திலே கொண்டு செல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். 'பயப்படாதீர்கள், வரும் தேர்தலிலே நிச்சயமாக இவர்களுக்கு என்ன பாடம் தருகிறோம் என்று நீங்களே பாருங்கள்' என்று அந்த மக்கள் சொல்கிறார்கள். ஏனென்றால், தெரியும், நாட்டின் நிலை தெரியும். நாட்டிலே மக்களுக்குச் சேவை செய்யத்தான். இங்கே அனுப்பி வைக்கிற மக்களை ஏமாற்றுவதற்காக, இவர்கள் ஆட்சியைப் பிடிப்பதையே கொள்கையாகக் கொண்டவர்கள்.

ஆட்சியில் இருந்தால்தான் நாங்கள் சட்டமன்றத்தில் உட்காருவோம். அந்த ஆட்சியை எப்படியாவது முடக்கவேண்டும். இதை எப்படியாவது கவிழ்க்கவேண்டும். எல்லோரையும் இழுத்துக்கொண்டு அவர்கள்தான் போகிறார்கள் என்றால், இவர்கள் எல்லாம் போய்விடுகிறார்கள். அது ரொம்ப வருத்தத்திற்குரியது. அதிலும் சில பேர், நான் சொல்லக்கூடாது, இருந்தாலும் சொல்ல வருகிறது. நிறைய பேர் இதிலே இருக்கிறார்கள், மாண்புமிகு இதய தெய்வத்தினுடைய விசுவாசிகள் இவர்கள்.

அவர்களைப் பற்றி உண்மையாகவே சொல்கிறேன். எதிர்க்கட்சியிலேயும் சில பேர் அம்மாவைப் பாராட்டுகிறார்கள். இப்பேர்ப்பட்ட வரை, இன்றைக்கு உலக நாடுகளிலே, மேலை நாடுகள் எல்லாம் அம்மாவைப் பாராட்டுகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் இந்த உலகத்திலேயே ஒரு சிறந்த, உலகத்தில் மட்டுமல்ல ஒரு கோடியில் அல்ல, உலகத்திலேயே ஒரேயொருவர் - இப்பேர்ப்பட்ட ஒரு சிந்தனையாளர், தன்னை ஒரு துறவி மாதிரி மாற்றிக்கொண்டு, 'எனக்கு எதுவும் வேண்டாம், என்னை ஓட்டு போட்டு மீண்டும் சட்டமன்றத்தில் உட்கார வைத்தார்களே, அந்த மக்களுக்காக, இதயம் மட்டுமல்ல, என்னுடைய உயிரையும் தரத் தயார், தியாகம் செய்ய தயாராக இருக்கிறேன்.' (மேசையைத் தட்டும் ஒலி) அந்த மக்களை நிச்சயமாக மறக்க மாட்டார்கள்.

அதுமட்டுமல்ல, இன்று ஆதிதிராவிட மக்களுக்காகக் கேட்டுக்கொள்வதெல்லாம், எத்தனையோ இடங்களிலே, என்னுடைய கோரிக்கைகள், எனக்கு இந்த வாய்ப்பு மிக மிக, என்னுடைய மூச்சு இருக்கும்வரை நிச்சயமாக நான் மறக்கமாட்டேன் இந்த வாய்ப்பைக் கொடுத்ததற்கு.

'என்னே, மானானது நீரோடையைக் கண்டு வாஞ்சித்து கதறுவதைப் போல' என்று, எனக்கு ஒரு வாய்ப்பு கிடைக்கும்? இதய தெய்வத்தை அடிக்கடி பார்ப்பேன்; அம்மா எனக்கு ஒரு வாய்ப்பு கிடைக்காதா? இந்த அரிய வாய்ப்பைக் கொடுத்தார்கள். இன்று மரணமானாலும் உங்களில் ஒருத்தியாக உங்களை என்றும் நினைத்து வாழ்பவளாக இருப்பேன் தெய்வமே! இந்த வாய்ப்பைக் கொடுத்ததற்கு. ஏனென்றால், என்னுடைய தொகுதியிலே நேற்றைக்கு குடிமங்கலம் பகுதியிலே ஒரு கிராமத்திற்குச் சென்றிருந்தேன். அங்கே நான் சொன்னேன், அம்மா மறுபடியும் சிறப்பான திட்டங்களை ஏழை எளிய மக்களுக்கு அறிவித்துள்ளார்கள். அதுமட்டுமல்ல இன்றைக்கு 10 ஆம் வகுப்பு வரையில் படிக்கும் அனைத்து சாதியினருக்கும், அனைத்து மதத்தினருக்கும், எல்லோருக்கும் இலவசமாக புத்தகங்களை வழங்க இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, இந்த ஆண்டு நிறைய பட்டாக்களைக் கொடுக்கப்போகிறார். அந்தப் பட்டாக்கள் அத்தனையும் **Revenue Department** மூலம் மட்டுமல்ல, ஆதிதிராவிடர் நலத் துறை மூலமாகவும் கொடுக்கப்போகிறார்; பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் அந்தப் பட்டாக்களைக் கொடுக்கவேண்டும் என்ற என்னுடைய ஆசையை உங்களிடம் சொல்லிக்கொள்கிறேன். ஏனென்றால், பிற்படுத்தப்பட்ட மக்கள் நிறைய பேர் இன்றைக்கு வாடகை வீடுகளில் இருந்துகொண்டு



மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கும் இந்த நிதியாண்டிலே பட்டாக்களை வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆலோசனை செய்யவேண்டும். எத்தனையோ பேர் 30 வருடங்கள், 40 வருடங்களாகக் குடியிருக்கிறார்கள். ஆனால், அவர்களுக்கெல்லாம் இன்றைக்குப் பார்த்தீர்கள் என்றால் பட்டா இல்லை, கொடுக்க முடியவில்லை என்கிறார்கள். அந்த வரைமுறையைத் தளர்த்தி அவர்களுக்கும் பட்டா கொடுக்க வேண்டும்.

பிற்பகல் 12-35

நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் அவர்கள், வீரப்பனை வீழ்த்தியது சாதாரண விஷயம் அல்ல. இன்றைக்கு உலக நாடுகளிலே, பேப்பரிலே படித்தேன்; அம்மாவினுடைய இச்செயலைச் சாதனையாளர்களுடைய வரிசையில்,—அதில் வந்து, 200 வருடங்களாக அந்தச் சாதனையாளர்களுடைய போட்டோ ஒவ்வொன்றையும், அங்கே ஒவ்வொரு வருடமும் வைக்கும்வேளையிலே, அம்மாவினுடைய படத்தைத் திறந்து, 'இவர் இந்தியாவில் ஒரு பெரிய சாதனையாளர்' என்று வைத்திருக்கிறார்கள். இதற்காக இதைச் சொல்லாமல் இருக்கமுடியாது. வாழ்நாள் சாதனையாளர் என்ற படத்தைத் திறந்திருக்கிறார்கள். அது ரொம்ப ஆனந்தமாக எனக்கு இருந்தது.

அதுமட்டுமல்ல, அம்மா என்று நினைத்துக்கொண்டால், அவர்களுடைய உழைப்பைப் பற்றிச் சொல்லவேண்டும். ஏனென்றால், சாதாரண உழைப்பு அல்ல. இன்றைக்கு 20 மணி நேரம் தன்னுடைய மக்களுக்காக, நம்மையெல்லாம் பெற்றெடுக்காத ஒரு தாயாக இருந்து செயல்பட்டுக் கொண்டிருக்கும் இந்தத் தாயைப் பார்த்து எத்தனை ஏச்சுகள், எத்தனை பேச்சுகள்? இவர்களைப் பற்றிச் சொல்லப்போனால், என்னால் இங்கு உட்கார்ந்துகொண்டு சகிக்கமுடியவில்லை. அவ்வளவு ஏச்சுகளையும், பேச்சுகளையும் வாங்கிக்கொண்டும்கூட, தன்னுடைய நிமிர்ந்த பார்வையிலே அத்தனை பேர்களையும் தூள் தூளாக்கிக் கொண்டிருக்கும் அந்தப் பார்வை சாதாரண பார்வை அல்ல.

அடிக்கடி எனக்கு நினைவுக்கு வரும். அம்மா என்று தோன்றியவுடனே, ஒரு கவிதை வரும், ஒரு பாடல் வரும், பார்த்தாலே எனக்கொரு உற்சாகம் வரும். ஒருமுறை பார்த்துவிட்டேன் என்றால், 6 மாதங்களுக்கு அந்தத் தெம்பு என்னிடத்திலே இருக்கும்! (மேசையைத் தட்டும் ஒலி) காரணம் என்னவென்றால், உலகத்திலேயே, இந்தியாவில் மட்டுமல்ல, உலக நாடுகளிலேயே இப்பேர்ப்பட்ட

ஒரு தலைவியைக் காண்பது என்றால், சாதாரண விஷயமல்ல. இவர் அமர்ந்து ஆட்சி செய்யும் இந்த வேளையிலே நான் தினந்தோறும் உட்கார்ந்து பார்த்துக்கொண்டிருக்கிறேனே! இது சாதாரண பாக்கியம் அல்ல. என்னுடைய பாரம்பரியம், என்னுடைய பேத்தி, பேரன் காலத்திலே, அம்மாவைப் பற்றிச் சொல்வார்கள். அவர்கள்கூட—அம்மா அவர்கள் மாண்புமிகு முதல்வராக இருந்த காலத்திலேதான், என்னுடைய பாட்டி எதிர்புறத்திலே உட்கார்ந்து, அங்கே சட்டமன்ற உறுப்பினராக பணியாற்றிக் கொண்டிருந்தார் என்று. (மேசையைத் தட்டும் ஒலி) அப்பேர்ப்பட்ட ஓர் உத்தமத் தலைவியை பார்த்து, நீங்கள் எல்லாம் என்னதான்,— இப்போது எதற்கு வெளியிலே போனார்கள் என்று தெரியவில்லை; எனக்கு கொஞ்சம் தலைவலி என்று வெளியிலே போய்விட்டேன்; வந்துபார்க்கிறேன், இவர்களை எல்லாம் காணோம். அம்மா அவர்களுடைய சத்தம் கேட்டவுடன் ஓடிவந்தேன். என்னவென்றே தெரியவில்லை? இவர்கள் வெளிநடப்புச் செய்வதற்காகவே, இலவசமாக ஒரு பத்திரிகை விளம்பரத்திற்காகவே இங்கு வருகிறார்கள் என்றால்,— ஏதாவது இருந்தால் இங்கே கேளுங்கள். பேரவைத் தலைவர் சொல்கிறார், (மேசையைத் தட்டும் ஒலி) பேரவைத் தலைவர் சொல்கிறார். மாண்புமிகு உறுப்பினர்களே, எழுந்திருக்கவேண்டாம், உட்காருங்கள். ஒருத்தர் மட்டும் எழுந்து பேசுங்கள் என்றால்,—இந்த விதியைப் பற்றித் தெரிந்துகொள்ளாமல்,—இது எப்பேர்ப்பட்ட மாமேதைகள் ஆண்ட பூமி? எப்பேர்ப்பட்ட மாமேதை உட்கார்ந்திருக்கிறார்! அடப்பாவிகளா! இதைச் சொல்வதற்கு எனக்கு ஆத்திரமாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இப்படியே ஓடி ஓடிப் போய்விடுகிறீர்களே? ஒருநாள் பிரச்சினை முடிந்துவிட்டது. மறுபடியும் நீங்கள் வந்து, ஒருமுறை கேளுங்கள்; இதுமாதிரி பேசுகிறீர்களே என்று சொல்லுங்கள். உடனே திடுதிடுவென பேரவைத் தலைவரை அடிப்பதுபோல ஓடுகிறீர்கள். இதற்குச் சட்டத்திலே என்ன இருக்கிறது என்று natural–ஆக எனக்குத் தெரியவில்லை. இந்தச் சட்டமன்றத்திலே, இப்படியெல்லாம் அடிக்க ஓடனுமா என்பதெல்லாம் எனக்குத் தெரியவில்லை. இருந்தாலும் இதுமாதிரி செய்கிறார்களே? உங்களுடைய ஆதங்கத்தை வந்து நீங்கள் பேசுங்கள், ஒவ்வொருத்தராகப் பேசுங்கள், பேரவைத் தலைவர் அனுமதி தருகிறார். ஆனால், இருந்தாலும் இவர்களுக்குள்ளே ஏன் இந்த காழ்ப்புணர்வு? அப்படியென்றால் ஆட்சியை மட்டும் செய்யத்தான் இவர்கள் பிறந்தவர்கள்போல. தமிழகத்திலே இவர்களை விட்டால் அறிவாளிகளே இல்லை என்று நினைக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.



இதுமாதிரி ஓர் எண்ணம் இருக்கிறது. அதுமட்டுமல்ல, அடிக்கடி இப்ப போய்விடுமா ஆட்சி? அப்புறம் போய்விடுமா? எப்பத்தான் போனால் போகட்டுமே, மறுபடியும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மாதான். (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் திறமையிருந்தால், திறன் இருந்தால், தெம்பிருந்தால், தைரியம் இருந்தால், தமிழிலே எத்தனை வார்த்தைகள் இருந்தாலும் சரி, அத்தனை வார்த்தைகளையும் உபயோகப்படுத்தி செய்யுங்கள். முடியாது; உங்களாலே முடியாது.

பிற்பகல் 12–40

அதோ பாருங்கள், வெண்ணிலா வானத்திலே தவழ்வதுபோல் அம்மா உட்கார்ந்திருக்கிறார்கள். அம்மா அவர்கள் அறிக்கைகளை, விதி 110–ன்கீழ் படிக்கும்போதே, இவர்களுக்கு அப்படியே வயிற்றெரிச்சல் வந்துவிடுகிறது; இன்றைக்கு என்ன படிக்கப் போகிறார்களோ என்று. ஏனப்பா? நாடு முன்பு சீர்கெட்டுக் கிடந்தது; நாடு இன்றைக்கு சீராகிவிட்டது. நாட்டில் உள்ள மக்களுக்கு அம்மா அறிவிக்கிறார்கள். அதை சந்தோஷமாகத் தட்டுங்களேன்! இவர்கள் நல்லது பேசினாலும், நான் தட்டுவேன், நிச்சயமாக. ஆனால், நல்லதே பேசவில்லையே; எப்படித் தட்டுவது? நல்லது எதாவது ஒன்று செய்திருந்தால், நல்லது ஒன்றைப் பாராட்டியிருந்தால் அதற்காகத் தட்டலாம். அம்மா, இத்தனை அள்ளி, அள்ளி வழங்கினாலும், தட்டமாட்டேன்; நாங்கள் வெளிநடப்புத்தான் பண்ணுவோம் என்கிறார்கள்.

ஓட்டுப்போட்ட மக்களுக்கு ஒன்றே ஒன்று நான் சொல்ல விரும்புகிறேன். மதிப்பிற்குரிய மக்களே, மதிப்பிற்குரிய வாக்காளப் பெருமக்களே, உங்களுக்கு எல்லாம் ஒன்று தயவுசெய்து சொல்கிறேன். இதைப் பேப்பரிலே போடுங்கள். நான் எத்தனையோ மேடையிலே என்ன சொன்னாலும் அதெல்லாம் அவ்வளவு வராது. இந்த எதிர்க்கட்சிக்காரர்கள் எல்லாம் இன்று மக்களுக்குச் சேவை செய்வதற்கு கண்டிப்பாக வரவில்லை. அவர்கள் பிள்ளைகளுக்குப் பதவி வாங்க, அவர்கள் பிள்ளைகளை எப்படியாவது அமைச்சராக ஆக்கவேண்டும். எந்தக் கட்சி, பாரதிய ஜனதா வந்தாலும் அதிலேயும் கூட்டணி, காங்கிரஸ் வந்தாலும் அதிலேயும் கூட்டணி. அடடே! இவர்கள் கொள்கை என்ன? இவர்கள் கொள்கைதான் என்ன என்று தெரியவில்லையே! பாரதிய ஜனதாவுக்கும், எங்களுக்கும் போன தடவையும் சொன்னார்கள், எங்களுடைய கொள்கைக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லையென்று. ஆனால், சொன்ன மறு மாதமே போய், அப்படியே இணைந்து மந்திரி பதவியை வாங்கி விட்டார்கள்.

பதவி சுகம் இவர்களை விட்டுப் போகவே போகாது. மதிப்பிற்குரிய வாக்காளப் பெருமக்களே, இன்று சொல்கிறேன். பதவி சுகத்திற்காக ஏங்கும் இந்த மக்களை ஓட்ட விரட்டுவது உங்கள் கையில்தான் இருக்கிறது என்று இந்த நேரத்திலே சொல்லிக்கொண்டு (மேசையைத் தட்டும் ஒலி) எனக்கு இந்த அரிய வாய்ப்பைக் கொடுத்து இருக்கிறீர்கள். அதற்காக, இன்னும் ஐந்து நிமிடத்திலே முடித்துவிடுகிறேன். மணியை மட்டும் தட்டிவிடாதீர்கள். மணி என்றாலே எனக்கு பயம். மணியைத் தட்டினாலே அதன்மேலேயே எனக்கு ஞாபகம் வரும்.

என்னுடைய தாராபுரம் தொகுதியிலே நீண்ட நாட்களாக, 40 கிலோ மீட்டர் சுற்றிப் போய், ஒரு வருடத்திற்கு குறைந்தபட்சம் 6,000, 7,000 பேர் அடுத்த ஊரில் உள்ள college-லே சேருகிறார்கள். என்னுடைய தொகுதிக்கு அரசுக் கல்லூரி ஒன்று கொடுத்தால் அம்மா அவர்களுடைய ஆட்சியில் அதைச் செய்தால், என்னுடைய தொகுதிவாழ் மக்கள் என்றும் நன்றியுள்ளவர்களாக இருப்பார்கள்.

அதேபோல், இப்போது பார்த்தீர்கள் என்றால், அம்மா அவர்கள், வீரப்பனை வீழ்த்தியதில் எத்தனையோ பேருக்குப் பரிசு கொடுத்து, அவர்களெல்லாம் குடும்பத்தோடு சந்தோஷமாக இருக்கிறார்கள். ஆனால், அவர்களிலே ஒரு சில பேரை விட்டு விட்டார்கள். அந்தப் பெயர்களைக்கூட அம்மா அவர்களிடம் கொடுத்து இருக்கிறேன். அதையும் பரிசீலனை செய்து அவர்களுக்கும் பரிசு கொடுக்க வேண்டும்.

என்னுடைய தொகுதியின் பக்கத்திலே நம்ம அண்ணன் கால்நடைத் துறை அமைச்சர் அவர்களுடைய தொகுதி; அங்குள்ள உப்பாறு Dam-இலே தண்ணீர் இல்லாமல் மக்கள் கஷ்டப்படுகிறார்கள். திருமூர்த்தி அணையிலிருந்து கொஞ்சம் தண்ணீர், நான்கு நாட்களுக்கு மட்டும் கொடுத்து, அந்த மக்களுக்கு அவர்களுடைய தாகத்தைத் தீர்க்கவேண்டும். மாண்புமிகு இதய தெய்வம் கோடானுகோடி மக்களுக்குத் தாகம் தீர்க்கிறார்கள். இன்றைக்கு பார்த்தீர்கள் என்று சொன்னால், என் தொகுதியில் போன ஆண்டு—எவ்வளவோ நான் சொல்லிக்கொண்டே இருப்பேன்—ரூ.20 கோடியே, 68 இலட்சம் கொடுத்தது குறித்து என் தொகுதிவாழ் மக்கள் எப்போதும் உங்களைத் தவிர, வேறு மாறவே மாட்டார்கள். அதை உறுதியாகச் சொல்கிறேன். யாரையாவது கூப்பிட்டு, வீதியிலே போகிற ஆளை நிற்கவைத்து, இவர்தான்; இவரைத்தான் நீங்கள் எம்.எல்.ஏ.-ஆக ஆக்க வேண்டும் என்று அம்மா சொல்லிவிட்டால், அவர்தான். என் தொகுதிக்கு ரூ.20 கோடியே 68 இலட்சம் கொடுத்து, என் தொகுதிவாழ் மக்கள்



இன்றைக்கு காவிரி தண்ணீர் குடித்துக்கொண்டு இருக்கிறார்கள். அடுத்த மாதம் திறப்பு விழா பண்ணிவிடுகிறோம். அதைக் கொடுத்து இருக்கிறீர்கள். அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், நிறைய பேச வேண்டும் என்று நினைக்கிறேன். பேசினால் ஏதாவது சட்டச் சிக்கல் வந்துவிடுமோ என்று எனக்குப் பயமாக இருக்கிறது. இருந்தாலும் பரவாயில்லை. நான் சொல்லுகிறேன். மறுபடியும், மறுபடியும் நான் வலியுறுத்துவதெல்லாம் என்னவென்றால், இவர்களுக்குச் சரியான பாடம் கற்பிக்க வேண்டும். மக்கள் ஓட்டு போட்டார்கள், நாமெல்லாம் வந்தோம். இல்லை, படித்து பட்டம் பெற்றதற்காகக் கொடுத்த பரிசா இது? இல்லை. எத்தனைப் பெரிய படிப்பு படித்தாலும், மக்கள் ஓட்டு போட்டால்தான் இங்கே வரமுடியும். உண்மைதானுங்க ஐயா! நீங்கள் எவ்வளவுதான் படித்தாலும், படிப்பறிவு இல்லாத பாமர மக்களைக்கூட மக்கள் தேர்வு செய்கிறார்கள். நான் எட்டாவதுதான் படித்தேன். தேர்வு செய்தார்கள். அந்த மக்களுக்கு நன்றிக் கடனாக இருக்க வேண்டுமா? இருக்கக்கூடாதா? அந்த நன்றியே இல்லாத இவர்களை என்ன செய்யலாம்? இவர்களுடைய address-ஐயே அழித்துவிட வேண்டும். அந்தமாதிரி தமிழக மக்கள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நிறைய சொல்ல வேண்டுமென்று நினைக்கிறேன்; இருந்தாலும் அம்மா உலக அதிசயத்தில் ஒன்று. இன்றைக்கு அம்மா அவர்களுடைய வாழ்நாள் சாதனையாளர் பற்றி சொல்லாமல் இருக்க முடியாது. எத்தனையோ பரிசுகள் வழங்கியிருந்தாலும்கூட இந்தச் சட்டமன்றத்தில் ஆதிதிராவிட மக்களுக்கு, நான் அப்போதே சொன்னேன்,

"கார் வந்தால் மழை பொழியும்;
களம் கண்டால் வீரன் மகிழ்வான்;
தேர் வந்தால் வீதி சிறக்கும்,
திரு வந்தால் குலம் சிறக்கும்."

யார் வருவார் நம் நலனுக்காக என்று எண்ணியிருந்த மக்களுக்கு விடிவெள்ளியாக அத்தனையையும் பார்க்கும் நான்தான் உன் அன்னை என்று, அந்த ஆதிதிராவிட மக்களுக்கும், அந்த பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் வாழ்வளித்த தாயே! உங்களுக்கு நன்றி சொல்லி விடைபெறுகிறேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12-45*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முனைவர் செ.கு. தமிழரசன்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் நலன், பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலன் சிறுபான்மையினர் நலன் ஆகிய மானியக் கோரிக்கைகளின்பேரில் எங்கள் அமைப்பின் சார்பிலே இங்கே பேச வாய்ப்பளித்திருக்கிற தங்களுக்கு முதலிலே எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதிலும் குறிப்பாக தமிழக சட்டமன்ற வரலாற்றில் ஆதிதிராவிடர் நல மானியக் கோரிக்கையிலே மிக அதிகமான முறை பேசியவன் என்கின்ற அந்தச் சிறப்பை எனக்குத் தருகிற வகையிலே இந்த முறையும் பேசுவதற்கு வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் எனது இதயபூர்வமான நன்றியை நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். பதினைந்தாவது முறையாக எனது மனபூர்வமான நன்றியை நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழக மக்கள் தொகையிலே ஐந்திலே ஒரு பங்கு ஒடுக்கப்பட்ட மக்கள், நலிந்த மக்கள், அடித்தளத்து மக்கள், தலித் மக்கள் என்று அழைக்கப்படுகின்ற ஆதிதிராவிட மக்கள் இருக்கிறார்கள். ஒரு கோடியே நாற்பது இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தமிழகத்திலே இழிந்தவர்களாய், ஒதுக்கப்பட்டவர்களாய், சமூகத்தால் புறக்கணிக்கப்பட்டவர்களாய் இருந்து கொண்டிருக்கிறார்கள். இந்த மக்களின் பிரச்சினைகளை சட்டப் பேரவையிலே ஆண்டுக்கு ஒரு நாள்தான் இந்த மானியக் கோரிக்கை விவாதத்தின்போது அவர்களுடைய வளர்ச்சிக்கு திட்டமிடுவதற்கு அவர்களுடைய அரசியல் சமூகப் பொருளாதார விடுதலைக்கு வழி காண்பதற்கு இப்படிப்பட்ட மானியக் கோரிக்கைகளை வைத்து, அதன்பேரில் விவாதங்களை ஜனநாயக நெறிமுறைப்படி நாம் அமைத்து செயல்பட்டு வருகிறோம்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இவ்வளவு பெரிய மக்கள் தொகை ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக புறக்கணிக்கப்பட்டு வருகிற அந்த சமூகத்தின் பிரச்சினை இவற்றை பேசுவதற்குக்கூட, இந்தச் சட்டப் பேரவையிலே இந்த ஆரோக்கியமான விவாதங்களிலே ஈடுபடுவதற்குக்கூட எதிர்க் கட்சிகள் எல்லாம் இல்லையே என்கின்ற அந்த வருத்தம், அந்த ஆதங்கம் அடித்தளத்து



மக்களின் பிரதிநிதியாகிய எனக்கு மிகப் பெருமளவிலே அப்படிப்பட்ட ஓர் ஆதங்கம் என்னை வருந்தச் செய்கிறது. எந்த மக்கள் இவர்களைத் தேர்ந்தெடுத்து சட்டப் பேரவைக்கு அனுப்புகிறார்களோ, எந்த மக்கள் இவர்கள் எல்லாம் எங்களுக்கு வாழ்வளிப்பார்கள் என்று நம்புகிறார்களோ, அந்த அடித்தளத்து மக்களுடைய பிரச்சினைகளை விவாதிக்கிற இந்த மிக முக்கியமான ஒரு தருணத்திலே அவர்களைப் பற்றி பேசுவதற்குக்கூட அக்கறை இல்லாமல், இன்றைக்கு எதிர்க்கட்சிகள் எல்லாம் அதை ஒரு பொருட்டாகக் கருதாமல் தங்கள் கௌரவப் பிரச்சினை, தங்கள் சொந்தப் பிரச்சினை இவற்றை முன்வைத்து வெளியேறுகிறார்களே என்கிறபோது அடித்தளத்து மக்கள் இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள், இவற்றையெல்லாம் மிகக் கூர்மையாகக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். மிகப் பெருமளவிலே வாக்களிக்கிற அந்தச் சமூகம் காலம் வருகிறபோது கட்டாயம் உங்களுக்குத் தகுந்த பாடத்தைக் கற்பிப்பார்கள் என்கின்ற அந்த உணர்வை நான் முதலிலே இங்கே சொல்ல விரும்புகிறேன்.

*பிற்பகல் 12–50*

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி, மாண்புமிகு அம்மா அவர்களுடைய தலைமையிலே, அடித்தளத்து மக்களின் நலன்களைப் பேணிக் காப்பதிலும், அவர்களுடைய உரிமைகளைப் பாதுகாப்பதிலும், அவர்களுக்கு புதிய புதிய திட்டங்களை வகுத்து, கைதூக்கி விடுவதிலும், மிகுந்த ஆர்வத்தோடு, கனிவோடு நடைபோட்டு வருகிறது என்பதை நாடு அறியும். வாய்ப்புக் கிடைக்கிற போதெல்லாம் அதை வெளியே நாங்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறோம். இரண்டு நாட்களுக்கு முன்னாலேகூட, 40 ஆண்டுகாலக் கோரிக்கையை ஒரு நொடிப்பொழுதிலே நிறைவேற்றி வைத்த—தமிழகத்திலே ஒடுக்கப்பட்ட மக்களுக்கு முதல் இயக்கம் கண்ட, ஆதிதிராவிட மக்களுக்கு முதலிலே ஓர் அமைப்பைக் கண்ட, பாபா சாகிப் அம்பேத்கர் அவர்களோடு, இலண்டன் வட்டமேசை மாநாட்டிற்கு இந்தியாவின் அடுத்த பிரதிநிதியாய், அவரோடு சென்று, இலண்டன் மாநாட்டிலே குரல் கொடுத்த எங்கள் அருமைத் தலைவர் தாத்தா இரட்டைமலை சீனிவாசனுக்கு, ஒரு நொடிப்பொழுதிலே மணிமண்டபம் கட்டப்படும் என்ற அந்த அறிவிப்பைத் தந்த (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவியை, இரண்டு நாட்களுக்கு முன்னாலே, தமிழகத்திலே இருக்கிற 50-க்கும் மேற்பட்ட தலித் அமைப்புகள் ஒருங்கிணைந்து, தீர்மானம் நிறைவேற்றி, மகிழ்வோடு அந்தப் பாராட்டை நாங்கள் தெரிவித்துக்கொண்டிருக்கிறோம். வெளியே அவ்வளவு செய்துகொண்டிருக்கிறோம். உள்ளேயும் பாராட்டுவதற்கு நிறைய இருக்கிறது.

இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களிலே சொல்லவேண்டிய பிரச்சினைகளை, எடுத்துச்சொல்ல வேண்டிய தேவைகளை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டுவரவேண்டும் என்பதனாலே, நான் சிலவற்றை மட்டும், நேரத்தின் அருமை கருதி இங்கே கோடிட்டுக்காட்ட வேண்டுமென்று விரும்புகிறேன். முதலிலே, நம்முடைய மக்கட்தொகை விகிதாச்சார, அந்த உயர்விற்கேற்ப, இன்றைக்கு தமிழக மக்கட் தொகையிலே 21 சதவிகிதம் தலித் மக்கள் இருக்கிறார்கள். இது நம்முடைய அரசாங்கம் தருகிற மக்கட்தொகை புள்ளிவிவரக் கணக்கு. 20–க்கும் மேலேபோய், 21–ஐ நெருங்கிக் கொண்டிருக்கிறது. ஆகவே, ஏற்கெனவே வழங்கப்பட்டு வருகிற ஆதிதிராவிட மக்களுக்கான 18 சதவிகிதம், மலைவாழ் மக்களுக்கான 1 சதவிகிதம் என்பதை நாம் உயர்த்தியாக வேண்டிய கட்டாயத்திலே இருக்கிறோம். 18 ப்ளஸ் 1 என்று இருப்பதை, 20 ப்ளஸ் 1 என்று உயர்த்துகிற வகையிலே, நம்முடைய அரசாங்கம் தருகிற அந்த மக்கட்தொகைக் கணக்கெடுப்பிற்குத் தகுந்தாற்போல், 21 சதவிகிதமாக உயர்த்த வேண்டும் என்கிற அந்தக் கோரிக்கையை நான் முன்வைக்க விரும்புகிறேன்.

அதேபோல, இன்றைக்கு தலித் மக்களுடைய சாதிச் சான்றிதழை பிறர் பெறுவது என்பதும், அதன்மூலம் வேலைவாய்ப்புகளைப் பெறுவது என்பதும், கல்வி வாய்ப்புகளைப் பெறுவது என்பதும் நடைமுறையிலே ஒரு மிகப்பெரிய சிக்கலாய், ஒரு சவாலாய் விளங்கிக் கொண்டிருக்கிறது என்கிற உண்மையை நாம் நிச்சயம் மறுக்க முடியாது. அண்ணா பல்கலைக்கழகத் துணைவேந்தரே ஒரு செய்தியாளர் கூட்டத்திலே, 400-க்கும் மேற்பட்ட போலிச் சாதிச் சான்றிதழ்கள், அண்ணா பல்கலைக்கழகத்திலே இருப்பதாகத் தகவல் சொல்கிறது; நாங்கள் அதை ஆராய, அதற்காக ஒரு குழுவை நியமித்திருக்கிறோம் என்று அறிவித்திருக்கிறார்கள். கிராமங்களிலே ஒரு பழமொழி உண்டு. "பிச்சை போட்டதாம் பெருமாள், அதையும் பறிச்சதாம் அனுமான்" என்று. அதைப்போல, அரசு வழங்குகிற சலுகைகளை, போலிச் சாதிச் சான்றிதழ் கொடுத்து, மற்றவர்கள் பெறுகிற ஓர் அவல நிலைமை, இன்றைக்கு மிகப் பெருமளவிலே இருக்கிறது. ஆகவே, போலிச் சாதிச் சான்றிதழ்களைக் கண்டு அறிந்து, கட்டாயமாக கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டு, உரிய நடவடிக்கைகளின் வழியாக, அதைத் தடுப்பதற்கு எல்லா வகையிலும் நம்முடைய அரசு முன்வர வேண்டுமென்கிற என்னுடைய கோரிக்கையை நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன். இந்த இடஒதுக்கீட்டிலேகூட, இந்த போலி சாதிச் சான்றிதழ் மூலமாக—அதிலே எவ்வளவு பிரச்சினை என்றால்—உண்மையாகவே



சிலருக்குப் பிரச்சினை வருகிறது. நம்முடைய மருத்துவக் கல்லூரியிலே, M.B.B.S. படித்த பின்னாலே, இப்படிப்பட்ட ஐயத்தினாலே, ஐந்தாண்டுகளுக்கு மேலாக, தாழ்த்தப்பட்ட மாணவர்களிலே சிலர், தங்களுடைய கல்விச் சான்றிதழ்களைப் பெறமுடியவில்லை. ஐந்தாண்டு காலமாகியும்கூட, மருத்துவத் துறையிலே, தாழ்த்தப்பட்ட மாணவர்கள், ஐந்தாண்டு காலத்திற்குப் பிறகுகூட தங்களுடைய கல்விச் சான்றிதழ் இருக்கிறதே, Degree Certificate, உண்மையாகவே சிலர் பெற முடியவில்லை, மற்றவர்களுடைய இந்த இடர்ப்பாட்டினால். இதை நாம் ஆராய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 12-55

பதவி உயர்விலே இடஒதுக்கீடு இருக்கிறது. இந்தப் பதவி உயர்விலே இடஒதுக்கீடு, எந்த வகையிலே எல்லாம், அந்த அந்தத் துறையிலே, சில நேரங்களிலே அலைக்கழிக்கப்பட்டிருக்கிறது என்பதற்கு ஒரு சான்றை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன். பதவி உயர்விலே இடஒதுக்கீட்டை வலியுறுத்தி, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதல்வராக இருந்தபோது, 1988–லே ஓர் அரசாணை போட்டார். கட்டாயமாக அனைத்துத் துறைகளிலும் பதவி உயர்விலே இடஒதுக்கீடு இருந்தாகவேண்டுமென்று. அதற்குப் பிறகு, அது நடைமுறையிலே வந்தது.

1990-லே திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருந்தபோது, இதை நடைமுறைப்படுத்திட வேண்டிய அவசியமில்லையென்று ஓர் அரசாணை வெளியிட்டது. 1990-லே அந்த அரசாணை வெளியிடப்பட்டது. அதற்குப் பின்னாலே 1991-லே புரட்சித் தலைவி ஆட்சிக்கு வந்த பிறகு, அந்த அரசாணையைப் பற்றி கவலைப்படவில்லை கிடப்பிலே போட்டார்கள். 1996 வரையிலும் கிடப்பிலே கிடந்தது. அதற்கு பிறகு அப்படியே இருந்த அந்த அரசாணை, இன்றைய அரசுக்குத் தெரியாமலேயே, அது அரசுக்குத் தெரிந்திருக்குமா, தெரியவில்லையா என்பது தெரியவில்லை. மூன்று மாதங்களுக்கு முன்னாலே—அன்று 1990–லே திராவிட முன்னேற்றக் கழக அரசால் போடப்பட்ட அந்த அரசாணை, இன்றைக்கு மூன்று மாதத்திற்கு முன்னாலே—அது இந்த அரசுக்கு நிச்சயமாகத் தெரிந்திருக்க முடியாது—அது நடைமுறையிலே வந்திருக்கிறது. கல்வித் துறையிலே முதல்வராக இருந்த பல தலித்துக்கள் எல்லாம், இன்றைக்கு பேராசிரியர்களாக பதவி குறைக்கப்பட்டிருக்கிறார்கள், கல்லூரிகளிலே, அரசுக் கல்லூரிகளிலே. அது நிச்சயமாக இந்த அரசுக்குத் தெரிந்திருப்பதற்கான வாய்ப்பில்லை.

அதனை இந்த அரசு பரிசீலிக்க வேண்டும் என்ற இந்தக் கோரிக்கையை நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன்.

மருத்துவக் கல்லூரிகளிலே, M.B.B.S. சேர்க்கையிலே இடஒதுக்கீடு இருக்கிறது. ஐந்திலே ஒரு பங்கு இருக்கிறது, இடஒதுக்கீடு. ஆனால், M.D., M.S., M.Ch., இதுபோன்ற உயர் படிப்புகளிலே— M.B.B.S. அளவிலே ஐந்திலே ஒரு பங்கு; ஆனால், இந்த M.D., M.S., M.Ch., என்று வருகிறபோது எட்டு பேருக்கு ஒருவர்தான் இடஒதுக்கீடு என்று சொல்கிற அப்படிப்பட்ட ஒரு முறை, விதி, மரபு பின்பற்றப்பட்டு வருகிறது. M.B.B.S.–லே ஐந்தில் ஒன்று என்று இருப்பது, M.D.–க்கு மட்டும் எப்படி எட்டிலே ஒன்று என்று மாறும்? அங்கேயும் ஐந்தில் ஒன்றுதான் இருக்க வேண்டும். ஆகவே, அன்புகூர்ந்து மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், இதை கனிவோடு பரிசீலிக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறும்போது இங்கே இடஒதுக்கீட்டைப் பற்றி பேசினார்கள். இடஒதுக்கீட்டைப் பொறுத்தளவில், *31, 30, 20, 18, 1* என்று அந்தக் கணக்கீட்டின் அடிப்படையிலே, மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதல்வர் அவர்கள், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலே அந்த இடஒதுக்கீட்டில், அதுவும் குறிப்பாக, மருத்துவக் கல்லூரிகளாக இருந்தாலும்சரி, அதேபோன்று நீங்கள் கூறியது போல, M.D., M.S.,–ஆக இருந்தாலும், தமிழகத்திலே இருக்கக்கூடிய அந்த ஒதுக்கீடு முறைப்படி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அகில இந்திய அளவிலே அங்கேயிருந்து வரக்கூடிய அந்தக் கோட்டாவை எடுத்துக்கொண்டால், அவர்கள் அங்கே அந்த இடஒதுக்கீட்டினை merit–லே செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகையினாலேதான் அந்த அடிப்படையிலே, அந்த ஒதுக்கீடு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. எட்டு என்பது ஆண்டாண்டு காலத்திலே, அந்த ratio–வினுடைய அந்தக் கணக்கை எடுத்துக்கொள்வதற்காகத்தான் அதை வைத்திருக்கிறார்கள். ஆகவே, அந்த முறைப்படிதான் இதுவரை நடந்துகொண்டிருக்கிறது என்பதை நான் இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மரபைதான் நாம் கொஞ்சம் மாற்ற வேண்டும். ஏற்கெனவே அங்கு எட்டில் ஒன்று என்று கொடுத்துவருகின்றார்கள். ஆனால், M.B.B.S.–ல் ஐந்தில் ஒன்று என்று இருக்கும்போது,



M.D., M.S.,–லே மட்டும் ஏன் எட்டில் ஒன்று என்று இருக்க வேண்டும்? இரண்டிற்கும் ஒரே மாதிரியான அளவுகோலை வைத்துக்கொள்ளலாம். அதை எட்டிலே ஒன்று என இருப்பதை, ஐந்திலே ஒன்று என மாற்ற வேண்டும். பிற மாநிலங்களிலே அந்தந்த மக்கள் தொகைகளின் விகிதாசாரத்திற்கு ஏற்ப அங்கே வழங்குகிறார்கள். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலே 20 சதவிகிதம் என்று இருப்பதனாலே, அந்த மரபை மாற்றி, ஐந்தில் ஒன்றாக மாற்ற வேண்டுமென்கின்ற அந்தக் கோரிக்கையைதான் நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன்.

அதேபோல, M.D., M.S., M.Ch., இருக்கிறதே, அதிலே ஐந்துக்கு உள்ளேயிருந்தால், இடஒதுக்கீடு பின்பற்றப்படுவதில்லை. ஒரு M.S. (Neuro Surgery) என்று இருக்கிறது என்றால், 5 இடங்களுக்கு மேற்பட்டிருந்தால்தான் இடஒதுக்கீடு. 5–க்கு உள்ளே இருந்தால் M.S.(Neuro Surgery) என்றாலும் கிடையாது. நான் அதிலே என்ன சொல்ல விரும்புகிறேன் என்று சொன்னால், 100 point roaster என்ற அந்தத் திட்டம், 100 சதவிகிதத்தை ஓர் இலக்காக வைத்து, 100 வருகிற வரை, இன்றைக்கு ஒன்றிலே தொடங்கினால் ஐந்திற்குப் பிறகு ஆறாவது, அடுத்தடுத்த ஆண்டு, அல்லது அடுத்த ஆண்டு, அடுத்த ஆண்டு, என்று 100 என்பதை ஓர் இலக்காக வைத்து, இந்த ஆண்டு இல்லாவிட்டால், மறு ஆண்டு இடஒதுக்கீடு தரலாம். மறு ஆண்டு இல்லாவிட்டால் அதற்கு அடுத்த ஆண்டு இடஒதுக்கீட்டினைத் தரலாம். ஆகவே, 100 point roaster இது மத்திய அரசு கல்லூரிகளிலே பின்பற்றப்படுகின்ற ஒரு வாடிக்கையாக இருக்கிறது. அதைச் செய்யலாம் என்கின்ற அந்த யோசனையையும், நான் முன்வைக்க விரும்புகிறேன்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித்துளிகளிலே பேசி முடித்துக்கொள்ளுங்கள். இரண்டு அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** சீக்கிரம் பேசி முடித்துக்கொள்கிறேன். அதேபோல, நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்கள், 1993–லே, இந்தியாவிலேயே முன்னுதாரணமாக ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். தலித்துக்களுக்காக ஒரு தனித் தொழிற்பேட்டையை திருப்பூரிலும், ஈங்கூரிலும் அமைத்தார்கள். வேறு எந்த மாநிலத்திலும் இப்படிப்பட்ட ஒரு மிக உயர்வான ஒரு திட்டம், ஓர் அற்புதமான திட்டம், ஒடுக்கப்பட்ட மக்களை தொழில் அதிபர்களாக்குகிற திட்டம்

பிற்பகல் 1-00

கிடையாது. 1993-லே அந்தத் திட்டத்தைக் கொண்டுவந்தார்கள். 100 தொழிலதிபர்களை ஈங்கூரிலும், 100 தொழிலதிபர்களை முதலிப்பாளையத்திலும் உருவாக்கி, 200-க்கும் மேற்பட்டவர்களை அங்கே உருவாக்கி, அதை பிற மாவட்டங்களிலும் அறிமுகப்படுத்துவது என்கிற வகையிலே உருவாக்கி, ஒவ்வொரு தொழிலதிபருக்கும் 1 கோடி ரூபாய் கடனாக வழங்குகிற வகையிலே, ஒடுக்கப்பட்ட, நலிந்த மக்களைக் கைத்தூக்கி விட வேண்டுமென்கிற வகையிலே அதைக் கொண்டுவந்தார்கள். அன்றைக்கு முதலிப்பாளையத்திலே 100 தொழிற்கூடங்கள் கட்டப்பட்டது; ஈங்கூரிலே 100 தொழிற்கூடங்கள் கட்டப்பட்டது. அதில் 54 பயனாளிகளுக்கு மட்டுமே அன்றைக்கு வழங்கப்பட்டது. 19 பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆணையும் வழங்கப்பட்டது. மீதி உள்ள பயனாளிகள் அப்படியே இனி தேர்ந்தெடுக்கலாம் என்ற வகையிலே நிலுவையில் வைக்கப்பட்டது. இன்றைக்கு 54 பயனாளிகள் மட்டுமே அங்கே அந்தத் தொழிலைத் தொடங்க முடிந்திருக்கிறது. அறிவிக்கப்பட்ட 19 பயனாளிகளுக்கும் அது போய் சேரவில்லை. மீதி உள்ள, நிலுவையில் உள்ளவர்களுக்கும் உரிய அந்த ஒதுக்கீடு வழங்கப்படவில்லை. அதற்கு என்ன காரணம் என்று சொன்னால், அம்மா அவர்கள் 1993-லே கொண்டுவந்த பிறகு, 1996-லே அன்றைக்கு வந்த வேறு ஓர் ஆட்சி, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அதை அப்படியே கிடப்பிலே போட்டது. இது, அவர்கள் கொண்டுவந்தது, அதிலே பலன் அடைந்தவர்கள் எல்லாம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருந்த முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர்கள், முன்னாள் அமைச்சர் குடும்பத்தைச் சார்ந்தவர்கள், அதிலே இருக்கிற முக்கிய புள்ளிகள் என்கிற வகையான ஒரு குற்றச்சாட்டைத் தந்து அன்றைக்கு இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு 5 ஆண்டு காலமாக அந்தத் திட்டத்தை அப்படியே கிடப்பில் போட்டது. இன்றைக்கு 150-க்கு மேற்பட்ட தொழில் கூடங்கள், ஒரு தொழில்கூடத்தினுடைய மதிப்பு ஏறக்குறைய 25 இலட்சம் ரூபாய். 150-க்கு மேற்பட்ட தொழிற்கூடங்கள் அப்படியே இருக்கின்றன என்பதை அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு அதைக் கொண்டுபோய்...

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த, முந்தைய ஆட்சியில் ஒரு சாதாரண ஆதிதிராவிட குடும்பத்தைச் சேர்ந்தவர், படித்த இளைஞரை கோடீஸ்வரராக



உருவாக்கக்கூடிய திட்டத்தை இந்தியாவிலே, அதுவும் குறிப்பாக ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டு அளவிற்கு பிணைத் தொகை இல்லாமல் கடனைக் கொடுக்கவேண்டும் என்கிற நோக்கத்தோடு இந்தியாவிலே பிணைத் தொகை இல்லாமல் வழங்கப்படுகிற கடனுதவி என்றால், முதலிப்பாளையத்திலே இருக்கிற அந்த பின்னலாடைத் தொழிலுக்காக நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டுவந்த சிறப்புத் திட்டத்தில் அப்பொழுது அம்மா அவர்கள் கொண்டுவந்தார்கள்.

ஆட்சி மாற்றத்திற்கு பின்பு, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் செ.கு. தமிழரசன் அவர்கள் சொன்னதைப்போல, ஆட்சி மாற்றத்தில் 1998-99 ஆம் ஆண்டு அந்த TIIC மூலமாக 34.61 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து அந்தக் கடன் தொகை முழுமையாக 1998-லிருந்து இதுவரை அதை வாங்கி தொழில் செய்கிறவர்கள் திரும்ப கட்ட முடியாத நிலையில் அவர்கள் தொழில் ஆரம்பிக்கிற நேரத்தில் சரியான வழிகாட்டுதல் முறை இல்லாத அளவிற்கு அவர்கள் திக்கு தெரியாத காட்டில் இருந்த மாதிரி அவர்கள் தொழில் செய்ததன் காரணமாக அவர்கள் திரும்ப செலுத்த முடியாமல், அதற்குண்டான வட்டி, கிட்டத்தட்ட 49.70 கோடி ரூபாய் வட்டி மட்டும் அவர்கள் மூலமாக கட்ட வேண்டுமென்று தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் மூலமாக அவர்களுக்கு தாக்கீது அறிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இதற்கு மேலும் நாங்கள் கடன் கொடுக்க முடியாது என்று சொன்னதன் அடிப்படையில் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் ஓர் உயர்மட்டக் குழுவின் மூலமாக அம்மா அவர்கள் தலைமையில் ஆய்வு செய்து எப்படியாவது இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். அதற்கு நீங்கள் வழிவகை செய்ய வேண்டுமென்று தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் Chairman-ஐயும், தலைவரையும், மேலாண்மை இயக்குநரையும் நேரடியாக அழைத்து பேசியதன் விளைவாக அவர்கள் பங்குத் தொகையாக 10 இலட்சம் ரூபாய் கட்ட வேண்டுமென்று அவர்கள் சொன்னதன்பேரில், பங்குத் தொகை 10 இலட்சம் ரூபாய்க்கு, தாழ்த்தப்பட்ட மக்கள் எங்கு செல்வார்கள். ஆகவே, அவர்கள் விரும்புகிற அளவிற்கு அந்த வங்கிகள் எந்த அளவிற்கு கடன் கொடுக்க முன்வருகிறதோ, அதை இலகுபடுத்தி, விருப்பத்திற்கிணங்க 10 இலட்சம் ரூபாய், 20 இலட்சம் ரூபாய், 25 இலட்சம் ரூபாய் போன்ற விருப்பத்திற்கிணங்க நீங்கள் கடன் தொகையை வழங்குங்கள் என்று அம்மா அவர்கள் உத்தரவிட்டதன்பேரில் இவர்கள் எப்படியாவது எனக்கு ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொழில் செய்ய வேண்டுமென்று கிட்டத்தட்ட அவர்கள் நீதிமன்றத்திற்கு வழக்குக்கு

சென்றதன் காரணமாக, நீதிமன்றத்திலும் நம்முடைய அம்மா அவர்கள் இலகுபடுத்திய அந்த அரசாணை 109–ஐ அமல்படுத்த வேண்டுமென்று அம்மா அவர்கள் சொன்னதன்பேரில் அந்த அரசாணைக்கேற்ப திட்டத்தை இலகுபடுத்திக் கொள்ளலாம். வழக்கிற்கு சென்ற, நீதிமன்றத்திற்குச் சென்ற 7 பேர்களை மட்டும் தவிர்த்துவிட்டு, மற்ற பயனாளிகள் விண்ணப்பம் கொடுத்தால் அவர்களுக்கு கடனுதவி வழங்கலாம் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கையின்மூலமாக இப்பொழுது விண்ணப்பம் 5 மட்டும் வரப்பெற்றிருக்கிறது. அந்த 5 விண்ணப்பத்திற்கும் உரிய முறையில் கடன் வழங்க வேண்டுமென்று ஆய்வு மேற்கொண்டு நடவடிக்கையில் இருந்துகொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு, அந்த நீதிமன்றத்திற்குச் சென்ற 7 பேர்களும், அவர்கள் விரும்பி வந்தால் அவர்களுக்கும் கடன் வழங்குவதற்கு நம்முடைய முதலமைச்சர் அம்மா அவர்கள் கண்டிப்பாகக் கடன் வழங்க தயாராக இருக்கிறார்கள் என்பதை மிக்க பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1–05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழரசன், இன்னும் இரண்டு மணித் துளிகளில் உரையை முடியுங்கள். இரண்டு அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டும்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயிரக்கணக்கான ஆண்டுகளாய் நீ செருப்பு தைக்க வேண்டும், நீ முடி வெட்ட வேண்டும், நீ சலவை செய்ய வேண்டும், நீ துப்புரவுத் தொழில் செய்ய வேண்டும், நீ மலம் வார வேண்டும், நீ பிணம் சுட வேண்டும் என்று அழுத்தி, அழுத்தி வைக்கப்பட்டிருந்த இந்த அடிமைச் சமுதாயத்தை இன்றைக்கு தொழில் அதிபர்களாக ஆக்குவதற்காக அம்மா கொண்டு வந்த மிக அற்புதமான திட்டம், அந்தத் திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் திட்டம் வீணாய் போய்விடக்கூடாது என்கிற அந்த ஆதங்கத்திலே, அந்த ஏக்கத்திலே, அந்த வருத்தத்திலே, அந்த வேதனையிலேதான் இதை நான் வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறேன். ஐந்தாண்டுகளாக திராவிட முன்னேற்றக் கழக அரசு அதை அப்படியே கிடப்பிலே போட்டது. இன்றைக்கு ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேலே TIIC என்று சொல்லப்படுகிற தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திற்கு வரவேண்டிய கடன் இருக்கிறது. ஆக, அவ்வளவு பெரிய கடனிலே இது ஒரு பெரிய கடன் சுமை TIIC–க்கு கிடையாது. இவர்கள் நலிந்த சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்; இப்போது ஒரு தொழிலை



தொடங்குகிறபோது, அந்தத் தொழிலை அவர்கள் மேற்கொள்கிறபோது பல சிக்கல்கள், இடர்ப்பாடுகளை அவர்கள் சந்திக்கலாம். ஆகவே, கைதூக்கி விட வேண்டியது அரசின் கடமை.

பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் வாயிலாக நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, TIIC அதற்குத் தருவதற்கு முன்வரவில்லை என்றால், தொழில் முதலீட்டுக் கழகம் முன்வரவில்லை என்று சொன்னால், வேறு வங்கிகளிடமிருந்து நீங்கள் போய் அதை வாங்கித் தரலாம். வங்கிகள் தர முன்வரவில்லை என்று சொன்னால், National Scheduled Caste Finance and NSCFDC என்று சொல்லப்படுகிற Development Corporation இருக்கிறதே, அதிலே இருந்து பெறலாம். அங்கேயெல்லாம் நீங்கள் இதைப் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, இந்தத் திட்டத்தை மட்டும்—அம்மா கொண்டு வந்தத் திட்டத்தை நாம் விட்டுவிட்டால் வேறு யாரும் அதைச் செய்ய முடியாது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தமிழரசன் கோருகிற கோரிக்கையில் நியாயம் இருக்கிறது. இதை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, அரசு இதுகுறித்து ஆவன செய்யும்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒரு பதிலுக்காகத்தான் நான் இவ்வளவு வலியுறுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஏனென்றால் இந்தியத் துணைக் கண்டத்திலேயே இப்படிப்பட்ட ஒரு திட்டம் கிடையாது. இப்படி, இந்தத் திட்டம் மட்டும் அப்படியே நடைமுறைப் படுத்தப்பட்டிருக்குமேயானால் இன்றைக்கு தமிழ்நாட்டிலே குறைந்தபட்சம் 500 தலித்துகள் கோடீஸ்வரர்களாக வந்திருக்கக்கூடிய வாய்ப்பு கிடைத்திருக்கும். அவ்வளவு ஓர் அற்புதமான திட்டம். ஆகவே, அந்தப் பதிலை தந்த மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுக்கும், நிதி அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு ஆதிதிராவிடர் நலத் துறை மானியக் கோரிக்கை நடந்துகொண்டிருக்கிற இந்தச் சந்தர்ப்பத்திலே அம்மா அவர்கள் ஒரு மகிழ்ச்சியான, தமிழ்நாட்டிலே இருக்கிற ஒடுக்கப்பட்ட மக்கள் மகிழக்கூடிய ஒரு நல்ல அறிவிப்பைத் தந்திருக்கிறார்கள். இந்தக் குறைந்தபட்ச கூலி விகிதத்தை உயர்த்தி இருக்கிறார்கள். குறைந்தபட்ச கூலி நிர்ணயச் சட்டம் என்ற ஒரு சட்டம் இருக்கிறது. அந்தச்

சட்டத்தினுடைய—ஏற்கெனவே வழங்கப்பட்ட அந்தக் கூலி விகிதத்தை இன்றைக்கு அம்மா அவர்கள் உயர்த்தியிருக்கிறார்கள். தமிழ்நாட்டிலே 80 சதவிகிதம் விவசாயக் கூலிகளாக இருந்து கொண்டிருக்கிறவர்கள் ஒடுக்கப்பட்ட, நலிந்த தலித் மக்கள். அவர்கள்தான் விவசாயக் கூலிகளாக இருக்கிறார்கள். இந்தியா ஒரு விவசாய நாடு என்று சொன்னால், விவசாயத்தை கூலித் தொழிலாக வைத்துக் கொண்டிருக்கிற—அவர்கள் Landlord கிடையாது. அவர்கள் எல்லாம் Labourers, Landless labourers. அப்படிப்பட்ட விவசாயக் கூலிகளுக்கு இன்றைக்கு இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். நான் மனப்பூர்வமாகப் பாராட்டுகிறேன். அதே சந்தர்ப்பத்திலே நான் இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். அமைப்பு சாரா தொழிலாளர்களுக்காக வாரியம் இருக்கிறது. அம்மா அவர்கள் இதேபோல கடந்த 6, 7 ஆண்டுகளுக்கு முன்னால் மே 1 ஆம் தேதி இங்கே கட்டுமானத் தொழிலாளர்களுக்காக ஒரு வாரியத்தை அறிவித்தார்கள். பொதுவாக அமைப்பு சாரா தொழிலாளர்கள் வாரியம் இருக்கிறது. கட்டுமானத் தொழிலாளர்களுக்காக ஒரு வாரியத்தை அன்றைக்கு ஏற்படுத்தி, இன்றைக்கு அந்த வாரியம் சென்னையிலே, நுங்கம்பாக்கத்திலே மிகப் பெரிய அளவிலே ஒரு கட்டடமாக உயர்ந்து, பல கோடி வைத்து, கல்லூரி வருகிற அளவுக்கு உயர்ந்து இருக்கிறது.

நான் இங்கே ஒன்றை மட்டும் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன், துப்புரவுத் தொழிலாளர்களுக்காக ஒரு வாரியத்தை ஏற்படுத்துங்கள், செருப்பு தைக்கும் தொழிலாளர்களுக்காக ஒரு வாரியத்தை ஏற்படுத்துங்கள், இந்தத் துப்புரவுத் தொழிலாளர்கள் இருக்கிறார்களே, 21–வது நூற்றாண்டிலே, மனிதக் கழிவை மனிதனே தலையிலே வைத்து சுமக்கிற அந்தப் பணியை இன்றைக்கு மனமுவந்து செய்து கொண்டிருக்கிறவர்கள் துப்புரவுத் தொழிலாளர்கள். வேறு யாரும், பெற்ற தாய், தந்தைக்குக்கூட சொந்தக் குழந்தைகளை இந்தப் பணியிலே ஈடுபடுத்திச் செய்ய முடியாது. ஆனால், துப்புரவுத் தொழிலாளர்கள் இன்றைக்கும், 21-வது நூற்றாண்டிலும், இந்த விஞ்ஞான வளர்ச்சியிலும் மனிதக் கழிவை மனிதனே தலையிலே தூக்குகிற அப்படிப்பட்ட அந்த இழிந்த பணியை மனமுவந்து செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்காக ஒரு வாரியத்தை நீங்கள் ஏற்படுத்துங்கள். அதிலே என்ன செய்ய வேண்டும்? ஏன் அதைச் சொல்ல விரும்புகிறேன் என்று சொன்னால், 50-க்கும் மேற்பட்ட துப்புரவுத் தொழிலாளிகள் எங்கெல்லாம் நியமிக்கப்படுகிறார்களோ, அது எந்த நிறுவனமாக இருந்தாலும், பொது நிறுவனமாக இருந்தாலும், அரசு நிறுவனமாக



இருந்தாலும், தனியார் நிறுவனமாக இருந்தாலும், 50-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் எங்கெல்லாம் நியமிக்கப்படுகிறார்களோ அங்கேயெல்லாம் அந்தத் துப்புரவுத் தொழிலாளர்கள் நிரந்தரப் பணியாளர்களாக நியமிக்கப்பட வேண்டும் என்பது ஒரு விதி.

பிற்பகல் 1–10

இந்த விதியை என்ன செய்தார்கள் தெரியுமா, கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, சென்னை மாநகராட்சியிலே அன்றைக்கு இருந்த ஒருவர் ஒரு மிகப் பெரிய பன்னாட்டு நிறுவனத்திற்கு இந்தத் துப்புரவுத் தொழிலைத் தாரைவார்த்துக் கொடுக்கவேண்டுமென்பதற்காக Labour Act என்று சொல்லப்படுகிற அந்தத் தொழிலாளர் சட்டத்திலேயே கை வைத்தார்கள். சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்தார்கள். சென்னை மாநகராட்சியிலே மட்டும் அந்தச் சட்டத் திருத்தம் ஏற்பட்டது. 50–க்கும் மேற்பட்டவர்கள் என்கிற அந்த விதியைத் தளர்த்தலாம் என்று தளர்த்தி, ஒரு பன்னாட்டு நிறுவனத்திற்கு, ஒரு மிகப் பெரிய முதலாளித்துவ நிறுவனத்திற்கு ONYX என்று சொல்லப்படுகிற அந்த Company–க்கு இன்றைக்கு சென்னை மாநகரத்திலே இருக்கிற துப்புரவுப் பணியை, ஓர் ஒட்டுமொத்த ஒப்பந்தமாகத் தாரைவார்த்துக் கொடுத்தார்கள். அதற்குப் பிறகு என்ன ஆனது? துப்புரவுத் தொழிலே இன்றைக்கு Contract Labour–ஆக, ஒரு தற்காலிக அடிப்படை வேலையாக, தமிழ்நாடு முழுவதும் மாறிப் போகிற ஓர் அவல நிலை வந்திருக்கிறது. இந்த சென்னை மாநகராட்சியைப் பின்பற்றி இன்றைக்கு மும்பையிலே, கொல்கத்தாவிலே, மற்ற பிற நகரங்களிலே, பெரிய நகரங்களிலே எல்லாம் இந்தத் திருத்தத்தைக் கொண்டு வருவதற்காக அவர்கள் முயற்சிக்கிறார்கள். இந்திய துப்புரவுத் தொழிலாளர்களுக்கே ஒரு மிகப் பெரிய துரோகத்தை அன்றைக்கு சென்னை மாநகராட்சி செய்தது. ஆகவேதான் கேட்க விரும்புகிறேன் துப்புரவுத் தொழிலாளர்களுக்காக ஒரு தனி வாரியத்தைக் கொண்டு வாருங்கள்.

செருப்புத் தைக்கும் தொழிலாளர்களுக்காக ஒரு தனி வாரியத்தைக் கொண்டு வாருங்கள். செருப்புத் தைக்கும் தொழிலாளர்கள் இன்னமும் நகரத்தின் platform–களிலே உட்கார்ந்து, உச்சி வெய்யிலிலும், கடும் மழையிலும் அவர்கள் வேதனையோடு அந்தத் தோலை வைத்துக்கொண்டு, குத்தூசியை வைத்துக் கொண்டு, உட்கார்ந்து கொண்டிருக்கிற அந்த வேதனை இருந்துகொண்டிருக்கிறது. செருப்புத் தைக்கும் தொழிலாளர்களுக்காக ஒரு தனி வாரியத்தைக் கொண்டுவந்து

அவர்கள் வழியாக குறைந்தபட்சம்—நம்முடைய காவல் துறையிலே கோடிக் கணக்கிலே shoes பெற வேண்டிய, காலணிகள் பெறவேண்டிய அவசியம் ஏற்படுகிறது; காவல் துறைக்கு மட்டும் கோடிக் கணக்கிலே அம்மா அவர்கள் இலவசமாக shoes வாங்கித் தருகிறார்கள்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழரசன், மற்ற நேரங்களிலே பேசலாம். இன்னும் இரண்டு அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டும்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** உரையை முடித்து விடுகிறேன். ஆக, இந்த இரண்டு வாரியங்களைக் கொண்டு வாருங்கள் என்பதை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பாபா சாகிப் அம்பேத்கர் அவர்கள் சமத்துவ சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்று சொன்னால் நாம் கலப்புத் திருமணங்களை ஊக்குவிக்க வேண்டுமென்று மிகத் தெளிவாகக் கருத்தளித்தார்கள். தந்தை பெரியாரும் உண்மையான சமத்துவ சமுதாயத்தை உருவாக்க முடியும் என்று சொன்னால் அது கலப்புத் திருமணத்தால்தான் முடியும் என்றார்கள். ஏனென்றால் வேறு எதற்கும் ஜாதி தேவைப்படுவதில்லை. திருமணங்களுக்கு மட்டும்தான் உலகத்திலே, சமூகத்திலே ஜாதி தேவைப்படுகிறது, எனவே அதை ஒழிக்க வேண்டுமென்று தந்தை பெரியாரும், பேரறிஞர் அம்பேத்கரும் விரும்பினார்கள். ஆகவே, கலப்புத் திருமணத்தை ஊக்குவிக்கிற வகையிலே கலப்புத் திருமணத் தம்பதிகளுடைய குழந்தைகளுக்கு ஓர் இடஒதுக்கீட்டைக் கொண்டு வாருங்கள். அவர்களுக்காக ஒரு குறிப்பிட்ட reservation-ஐ அன்புகூர்ந்து கொண்டு வாருங்கள். அதிலேயும் கலப்புத் திருமணம் செய்து கொள்கின்றபோது நமது அரசு கொடுக்கிற ஊக்கத் தொகை இருக்கிறதே, அது 21 வயதுள்ள பெண்ணை மணந்துகொண்டால்தான் அந்த ஊக்கத் தொகை என்கிற அளவிலே இருக்கிறது. ஆனால், சட்டத்திலே 18 வயது இருந்தாலே ஒரு பெண் திருமணம் செய்து கொள்ளலாம். ஆகவே, 18 வயது இருந்தாலே போதும், 21 வயது என்பதைத் தளர்த்தி, 18 வயதாகக் கொண்டு வாருங்கள். அது பலருக்கும் ஊக்கத் தொகையைப் பெறுகிற வகையில் பயன்படும் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழரசன், உரையை முடித்து விடுங்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** முடித்து விடுகிறேன். இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு, இந்தப் பிரச்சினைகளை முழுமையாக



நிறைவேற்றுவதற்கு, சட்டப் பேரவையிலே உள்ள ஆதிதிராவிடர் நல சட்டமன்ற உறுப்பினர்கள் கொண்ட குழு ஒன்றை— பாராளுமன்றத்திலே இருக்கிறது, வேறு சில மாநிலங்களிலே இருக்கிறது— அதுபோல் கொண்டு வாருங்கள்.

அதேபோல, அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்கிற அந்த அற்புதமான திட்டத்தை, அம்மா அவர்கள் அறிவித்த அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துங்கள் என்கிற பல கோரிக்கைகளை வைத்து, வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிடத்தின் ஒளி விளக்கே, தமிழகத்தின் குல விளக்கே, ஆறரை கோடி மக்கள் அன்போடு போற்றுகின்ற அன்புத் தாயே, ஒரு கோடி தொண்டர்களின் ஒப்பற்ற தலைவியே, வீரப்பனை வீழ்த்தி வீரத்தை நிலைநாட்டி தீரத்தின் திருவுருவாய்த் திகழ்கின்ற வீரத்தாயே, வீராணம் தண்ணீரை விவேகத்தால் கொண்டு வந்து சென்னைப் பெருநகரின் தாகத்தைத் தணித்த தாய்க்கெல்லாம் தாயே, (மேசையைத் தட்டும் ஒலி) தங்கத் தாரகை என்று தரணி எல்லாம் போற்றுகின்ற சிங்க நிகர்த் தலைவியே, செந்தமிழர் திணைத் தலைவி, பிற்பட்டோருக்குப் பெருந்துணையாய்த் திகழ்ந்துவரும் அற்புதமே, ஏழைகளின் அட்சய பாத்திரமே, வள்ளலே, தமிழக வரலாற்றின் இமயமே, உலகமே வியக்கின்ற உன்னத முதல்வர் அம்மா அவர்களே, இதய தெய்வம் எங்கள் அன்னையே, உங்கள் இணையடிகள் போற்றி வணங்கி, எனது உரையைத் தொடங்குகிறேன்.

பிற்பகல் 1–15

**"தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்**
**சொல்லலும் வல்லது அமைச்சு"**

என்ற வள்ளுவரின் குறளுக்கிணங்க, மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் அம்மா அவர்களின் சீரிய ஆலோசனையின்படியும், வழிகாட்டுதலின்பேரிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, புத்துணர்ச்சியுடனும், புது வேகத்துடனும் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவிப்பதிலே பெருமகிழ்ச்சியடைகின்றேன். பிற்படுத்தப்பட்டோர், மிகவும்

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையின மக்களின் கல்வி, சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்கான பல்வேறு நலத் திட்டங்களைத் தீட்டுவதிலும், செயல்படுத்துவதிலும் மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் அம்மா அவர்களின் அரசு அகில இந்திய அளவிலே முன்னோடியாகத் திகழ்கின்றது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கு தரமான கல்வி வழங்குவதன் மூலமாக அவர்களின் ஒட்டுமொத்த பின்தங்கிய நிலைமையினை உயர்த்த இயலும் என்பதில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் அம்மா அவர்கள், இவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக நிதி ஒதுக்கீட்டில் சுமார் 95 சதவிகிதத்தை ஒதுக்கீடு செய்து, திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றார்கள். பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையின மக்களின் நலனை முன்னிட்டு, 2004-2005 ஆம் ஆண்டில் ரூபாய் 150 கோடியே 79 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் அம்மா அவர்கள் 2005-2006 ஆம் ஆண்டுக்கு ரூபாய் 287 கோடியே 23 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளார்கள். கடந்த ஆண்டைவிட 80 சதவிகிதம் அதிகமான தொகையைப் பிற்படுத்தப்பட்ட நலத் துறைக்கு இதுவரை இல்லாத இமாலய சாதனையாக நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுப் பணிகளில் நியமனம் மற்றும் கல்வி நிலையங்களில் சேர்க்கை ஆகியவற்றில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், ஆதிதிராவிட வகுப்பினர் மற்றும் பழங்குடியினர் ஆகியோருக்கு இடஒதுக்கீடுகள் வழங்குவதில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இந்தியத் துணைக் கண்டத்திலேயே முன்னோடியாகத் திகழ்கின்றது என்பதை இந்தப் பேரவையில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த வகுப்பினர் சமூக, கல்வி மற்றும் பொருளாதாரத்தில் கணிசமான முன்னேற்றம் காண இடஒதுக்கீட்டுக் கொள்கை நல்ல பயனைத் தந்துள்ளது. மொத்த இடஒதுக்கீடு 50 சதவிகிதத்திற்கு மிகக் கூடாது என மண்டல் கமிஷன் வழக்கில் உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பின் காரணமாக நமது மாண்புமிகு முதல்வர் இதயதெய்வம் அம்மா அவர்களுடைய சீரிய தலைமையிலான அரசு சமூகத்தில் நலிவுற்ற பிரிவினருக்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் 69 சதவிகித ஒதுக்கீடு



செய்து, வரலாற்று சிறப்புமிக்க சட்டத்தை, சட்டமன்றத்தில் இயற்றி (மேசையைத் தட்டும் ஒலி) இச்சட்டத்தின்மூலம் தற்போதைய இடஒதுக்கீட்டு நிலையைத் தக்க வைத்ததோடு, இப்பிரிவினரின் நலன் காக்க இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 9-வது அட்டவணையில் இடம் பெறச் செய்து சாதனை படைத்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதைப் பணிவோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்று கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் இவ்வகுப்பினர்கள் 69 சதவிகித இடஒதுக்கீடு என்ற வகையில் கூடுதல் பயன் பெற்று வர மாண்புமிகு அம்மா அவர்கள் உரிய காலத்தில் எடுத்த நடவடிக்கைகளே முக்கிய காரணமாகும் என்பதைப் பெருமையுடன் இந்த அவைக்கு தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மைய அரசுப் பணிகளில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இடஒதுக்கீட்டை 27 சதவிகிதத்திலிருந்து 50 சதவிகிதமாக உயர்த்துமாறும், அனைத்திந்தியப் பணிகள் மற்றும் மத்திய அரசுப் பணியிடங்களுக்கான தேர்வுகளில் இந்த இடஒதுக்கீட்டுக் கொள்கையைச் செயல்படுத்துமாறும், மைய அரசுப் பணிகளில் மட்டுமன்றி, அதன் கட்டுப்பாட்டின் கீழுள்ள கல்வி நிலையங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களில் இடஒதுக்கீட்டினை நீட்டிக்க வேண்டுமென்றும் மைய அரசை மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் அம்மா அவர்களின் அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றது.

மாநில அரசுகள் தங்கள் தேவைக்கேற்ப இடஒதுக்கீட்டினை நிர்ணயிக்கும் அதிகாரத்தினை அந்தந்த மாநில அரசுக்கே அளிக்க இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரவேண்டுமென்று சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றியும், கடிதம் மூலமும் மத்திய அரசினை மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் அம்மா அவர்களின் அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றது' என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

'அட்டில்களும், அடுப்பினை ஊதுதலும்
கரிய சட்டி தேய்த்தலும் மட்டுமே
மாதர் தம் கடனென்ற, கருத்தை வெட்டி வீழ்த்தும்
சமர் செய்ய நேரிலும்
சவாலை ஏற்க மகளிரால் முடியும்'

என்ற நிலை இன்று தொடர்ந்து வருகின்றது எனில், அதற்கு முழு முதற்காரணம் மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் அம்மா

அவர்களே ஆகும். தமிழ்நாட்டிலுள்ள மாணவியர்கள் கல்வி கற்க ஊக்கம் அளிக்கும் வகையில், பிளஸ் 1 மற்றும் பிளஸ் 2 பயிலும் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் சமுதாயத்தைச் சேர்ந்த மாணவியர்களுக்கு இலவச சைக்கிள் வழங்கும் திட்டத்தை, இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத, முன்னோடித் திட்டமாக மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்து செயல்படுத்தி வருகின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்படி சுமார் ரூ. 40 கோடி செலவில், சுமார் 2,50,000 மாணவிகள் பயன்பெறும் வகையில், இத்திட்டம் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பிற்பகல் 1–20

இலவச மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தை சுமார் ரூ. 24 கோடியே 50 இலட்சம் செலவில் 1,26,840 மாணவ மாணவிகள் பயன்பெறும் வகையில், 2005–2006-லும் தொடர்ந்து செயல்பட மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்கள் பொறுப்பேற்றபோது, தமிழகத்தில் 972 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருடைய நல விடுதிகள் இயங்கி வந்தன. அதில் 202 விடுதிகளுக்கு மட்டுமே அரசுக் கட்டடங்களில் இயங்கி வந்தன. 770 விடுதிகள் தனியார் கட்டடங்களில் இயங்கி வந்தன. கடந்த தி.மு.க. ஆட்சியிலே 36 மாணவர் விடுதிகளுக்கு மட்டுமே கட்டடம் கட்டப்பட்டிருந்தன. தனியார் கட்டடங்களில் இயங்கி வந்த விடுதிகளில் அடிப்படை வசதிகள், குடிநீர், மின்சாரம் மற்றும் கழிவறைகள் இல்லாமல் தவித்த மாணவர்களின் நலன் கருதி, கடும் நிதி நெருக்கடியிலும், மாணவச் செல்வங்களின் வாழ்வு நலம் பெற வேண்டும் என்ற நோக்கத்திலும், மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்கள் அனைத்து அடிப்படை வசதிகளுடனும் விடுதிகளுக்கு அரசுக் கட்டடம் கட்டும் மிகப்பெரும் திட்டத்தை அறிவித்தார்கள். அதன்படி கடந்த நான்கு ஆண்டுகளில் ரூ.100 கோடி செலவில் 312 விடுதிக் கட்டடங்கள் கட்ட ஆணையிட்டார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்வதிலே மகிழ்ச்சியடைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2005–2006 ஆம் ஆண்டில் தமிழக வரலாற்றிலேயே இதுவரை இல்லாத அளவிற்கு, ஓர் ஆண்டில் ரூ.100 கோடி செலவில் 318 புதிய மாணவர் விடுதிகளுக்கு அரசுக் கட்டடம் கட்டும் மிகப் பெரிய



திட்டத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்கள் அறிவித்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவர்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலம் ஒரு பொற்காலம் என்பதை அவையில் தெரிவித்துக்கொள்வதில் பெருமிதம் அடைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிரமலைக் கள்ளர்கள், சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த இனத்தவர் அதிகம் உள்ள மதுரை, தேனி, திண்டுக்கல் மாவட்டங்களில் இச்சமுதாயத்தைச் சார்ந்த மாணவ மாணவிகள் கல்வி மேம்பாட்டுக்காக 260 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் இத்துறையின்கீழ் அரசுக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. இதிலே 48,898 மாணவ மாணவிகள் பயின்று வருகிறார்கள். கள்ளர் சீரமைப்புப் பள்ளி விடுதிகள், பள்ளிகளுக்கு புதிய கட்டடங்கள் கட்டவும், அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும், தமிழக வரலாற்றிலேயே முதன்முறையாக 1922–க்குப் பின்னர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கூடுதலாக ரூ. 20 கோடியே 11 இலட்சம் அளித்துள்ளார்கள் என்பதைப் பணிவோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2004–2005 ஆம் ஆண்டில் 12,07,000 மாணவர்களுக்கு ரூ.86,59,00,000 உதவித் தொகை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் வழங்கப்பட்டது. ஆனால், இத்தொகையில் மைய அரசு கொடுத்தது வெறும் ரூ.5 கோடியே 10 இலட்சம் மட்டும்தான் என்பதை அவைக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாணவ மாணவியர்கள் நலனில் அக்கறை கொண்ட மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் மாநில மற்றும் மாவட்ட அளவிலே அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவ மாணவிகளுக்கு ஊக்கப் பரிசுகள், பேரறிஞர் அண்ணா நினைவுப் பரிசு மற்றும் தந்தை பெரியார் நினைவுப் பரிசு ஆகிய பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

நடப்பாண்டில் ரூ.42 இலட்சம் செலவில் மூவாயிரம் பித்தளை சலவைப் பெட்டிகளும், ரூ. 20 இலட்சம் செலவில் ஆயிரம் தையல் இயந்திரங்களும் வழங்கிட மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மாணவ மாணவியர்களுக்கு வேலைவாய்ப்பு நோக்கில் அமைந்துள்ள பயிற்சித் திட்டங்களின்கீழ், நடப்பாண்டில் இத்திட்டத்திற்காக

ரூ.90 இலட்சம் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்கள் ஒதுக்கீடு செய்துள்ளார்கள்.

நடப்பாண்டில் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்கள் அறிவித்த, தமிழகத்தில் இதுவரை இல்லாத அளவில், ஒரே ஆண்டில் ரூ.50 கோடி செலவில் கிராமப்புற ஏழைகளுக்கு 2 இலட்சம் வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டத்தில் இச்சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் பெருமளவில் பயனடைவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்வதில் பெருமைப்படுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் இனத்தைச் சார்ந்த மக்களின் பொருளாதாரம் மேம்பாடு அடைய குறைந்த வட்டி விகிதத்திலே கடன் வழங்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், இதுவரை 40,770 பயனாளிகளுக்கு ரூ.44,81,22,000/- மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் வழங்கப்பட்டுள்ளது என்பதைப் பணிவோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு சிறு தொழில் மற்றும் சிறு வியாபாரம் செய்வதற்காக தலா ரூ.2,000/- வீதம் கூட்டுறவு வங்கிகள் மூலம் சிறு கடன் வழங்கும் திட்டத்தினை மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு இதுவரை, 62,806 மகளிர் பயனடையும் வகையிலே ரூ.12,56,12,000/- கடனாக வழங்கப்பட்டுள்ளது என்பதைப் பெருமையோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1–25

சமூக நீதி காத்த தந்தை பெரியார் விருது, சமூக நீதிக்காக பாடுபடுவோரைக் கௌரவிக்கும் விதமாக சமூக நீதி காத்த வீராங்கனை மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் அம்மா அவர்கள் சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது வழங்க ஆணையிட்டு, அதன்படி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவு செய்யும் ஒருவருக்கு 1995 ஆம் ஆண்டு முதல் ரூபாய் 1 இலட்சம் ரொக்கமும், ஒரு சவரன் தங்கப் பதக்கமும் வழங்கப்பட்டு வருகிறது என்பதைப் பெருமையோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

புதிய அறிவிப்புகள். பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலனுக்கென மாண்புமிகு தமிழக



முதல்வர் இதயதெய்வம் அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க புதிய திட்டங்கள் நடப்பாண்டிலே செயல்படுத்தப்படும் என்பதை இப்பேரவைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஒவ்வொரு விடுதிக்கும் ரூ.5,000/- வீதம் 500 விடுதிகளுக்கு ரூ.25.00 இலட்சம் செலவில் பாத்திரங்கள் வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அனைத்து விடுதிகளிலும் மாணவ/மாணவியர்களுக்கு ரூ.16 இலட்சத்து 43 ஆயிரம் செலவில் பாய்கள் வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

விடுதிகளில் தங்கியுள்ள மற்றும் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் படிக்கும் 10, 12 ஆம் வகுப்பு மாணவ/மாணவியர்களுக்கு மேல்படிப்பில் அவர்களின் எதிர்காலம் குறித்து நிர்ணயம் செய்ய ரூ.15 இலட்சத்து 8 ஆயிரம் செலவில் கலந்தாய்வு நடத்த மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

கல்லூரி விடுதி மாணவ/மாணவியர்களுக்கு ரூ.1 இலட்சத்து 87 ஆயிரம் செலவில் வேலைவாய்ப்புக்கான நேர்காணல் அமைத்துத் தர மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

கள்ளர் சீரமைப்புப் பள்ளி ஆசிரியர்கள் மற்றும் விடுதிக் காப்பாளர்கள்/காப்பாளினிகளுக்கு அவர்கள் தம் பணி சம்பந்தமான உள்பயிற்சி ரூ.12 இலட்சத்து 53 ஆயிரம் செலவில் அளிக்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் மற்றும் விடுதிகளில் தங்கியுள்ள மாணவ/மாணவியர்களுக்கு ரூ.12 இலட்சத்து 32 ஆயிரம் செலவில் மருத்துவப் பரிசோதனை செய்ய மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒவ்வொருவருக்கும் ரூ.14,760 செலவில் 500 பிற்படுத்தப்பட்டோர்/ மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினர்களுக்கு ரூ.73 இலட்சத்து 80 ஆயிரம் செலவில் கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி அளிக்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

விடுதிகளில் பணிபுரியும் தொகுப்பூதிய சமையல் உதவியாளர்களின் தொகுப்பூதியத்தை ரூ.23 இலட்சத்து 11 ஆயிரம் செலவிலே மாதம் ரூ.500/— பெற்றிருந்தவர்களுக்கு ரூ.850/— ஆக உயர்த்தி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒவ்வொரு விடுதிக்கும் ரூ8,000 வீதம் 50 விடுதிகளுக்கு ரூ4.00 இலட்சம் செலவில் மாவு அரவை இயந்திரம் மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்க ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவைத் தலைவர் அவர்களே, இல்லத்தில் இதயத்தை கழட்டி வைத்து பணப் பெட்டிதனை மட்டும் தோளில் மாட்டி பாரடா, பார், நான் தமிழன் என்று சொல்லி பிணம் கொத்திக் கழுகாக பிதற்றுகின்ற தலைவர்கள் தன் பேச்சை முழக்கம் என்றால், முத்தான வார்த்தைகளால் மலர்ந்த முகத்தோடு மற்றவர்களுக்கு முகவரி தரும் எம்தாயை மிஞ்சிட எவருண்டு? (மேசையைத் தட்டும் ஒலி) எம்தாயை மிஞ்சிட எவருண்டு இவ்வுலகில்?

தீ மொழிகள் பல கூறி ஏசினாலும், பொய்யுரையைத் திறமையுடன் வீசினாலும், கனி வீசி காய் தின்னும் எத்தர்கள் எம்தாயைப் பார்த்து வசைபாடி திரிந்தாலே வாயழுகிப் போகாதோ (மேசையைத் தட்டும் ஒலி) என்று, தாய்க் குலமும், தமிழ் குலமும் வசைபாடி தீர்க்கும்தானே. தருமத்தின் சார்பிலே தனிஒருவராய் களத்தில் நின்று பண பலத்தையும், பதவி எனும் படை பலத்தையும் வென்றார் எம் தலைவி. புனிதத்தால், புரட்சியால்; தூய தொண்டால் கனிவுடைய இன்சொல்லால் பகையோரை வெற்றி கொண்டார். சில நேரம் இந்நெருப்பில் பூவும் பூக்கும்; சிரிக்காதீர்; நீரும் பூக்கும். விளங்காமல் நீங்கள் எல்லாம் அலட்சியமாய் தொட்டபோது அலங்கோல தழும்பினையே பெற்றதும் வரலாறு. எல்லோரும் தொழுகின்ற வேள்வித் தீயாம் எங்கள் அம்மா என்பதை மறவாதீர், மறவாதீர். (மேசையைத் தட்டும் ஒலி) பிற்பட்டோர் சுவாசிக்க பிராணவாயு தந்து வாழ்வளித்த....

*பிற்பகல் 1—30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. கவிஞர் வேலுசாமி தொடரலாம்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** பிற்பட்டோர் சுவாசிக்க பிராணவாயு தந்து வாழ்வளித்த நம்பிக்கை திரு உருவே, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களே, தங்கள் பாத மலர்களை வணங்கி



என்னுடைய பதில் உரையை நிறைவு செய்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் பல அரிய கருத்துகளைக் கூறியுள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துகளையும், வெட்டுத் தீர்மானங்களில் உள்ள கோரிக்கைகளையும் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு இந்த பிற்பட்டோர், மிகப் பிற்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறையினுடைய மானியங்களை ஏற்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர். (குறுக்கீடு) முடித்து விடட்டும். அவர் முடித்து விடட்டும்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் தமிழகத்தை முதல் மாநிலமாக்கும் செயல்பாட்டில் ஒரு நாளைக்கு 20 மணி நேரம் உழைத்து, சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கான திட்டங்களைக் கொண்டுவந்து அண்ணல் அம்பேத்கர் அவர்களும், பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் இந்த நாட்டிற்கு செய்ய நினைத்ததை நம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் வழி நின்று செய்து முடித்த பெருமைக்குரியவர், சமூகப் பொருளாதார அறிவியல் மேதை, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) ஐந்தாண்டு கால தி.மு.க. ஆட்சியில் திவாலாகியிருந்து தமிழ்நாட்டையும், கலவர அச்சத்தால் இருந்த மக்களையும், அமைதிப் பூங்காவாக மாற்றிய முதல் மாநில முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) சமூக, பொருளாதார, விஞ்ஞானப் பார்வையுடன் திட்டங்களைத் தீட்டி, நாட்டையும், நாட்டு மக்களையும் காப்பாற்றிய தேச மாதா மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

விரிந்து, பரந்த பாரத நாட்டில் வெகு நாளாய் புகழ்பாடும் தென்புலத்துச் சீமை என்று சீறாக அழைக்கப்படும் தங்கத் தமிழகமாம் தரணிபோற்றும் பொன்னான நாடாம் தாய்த் தமிழ் திருநாட்டில் காலங் காலமாய் ஆண் ஆதிக்கத்தின் பிடியில் சிக்கித் தவித்த அரசியல் சதுரங்கத்தில், அரசியல் சூழ்ச்சியில், ஆண்களுக்கு நிகரென்ன, அதைவிடப் பன்மடங்கு அதிகமாகவே மக்கள் சேவை செய்ய

முடியுமென்று நிரூபித்துக்காட்டி, இந்தியாவிற்கே முன்னோடியாக, முதல் மாநிலமாக தமிழகத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியைப் பார்த்து (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அகிலமும், அதன் அரசியல் தலைவர்களும் ஆராய்ச்சி செய்யும் அளவிற்கு தமிழகத்தில் இருண்ட நிலை மாறி, ஒளி நிறைந்த முன்னேற்றமாகி, வறுமை இனி இங்கு இல்லையென வரலாறு உருவாக்கி, புரட்சி மலர் தோட்டத்தில் பூத்த தனிப் பூவாக, துணிச்சலில் வேங்கை, தொண்டிலே வாழை, உழைப்பிலே தேனி, உள்ளத்தில் வானம், அரசியலில் அறிவுச் சுரங்கம், ஆற்றலில் பெருங்கடல், அன்பிலே தேன் மழை, சிந்தனைப் பேரொளி, சீர்திருத்தச் செம்மல், குருட்டுக் கண்களைத் திறக்க வந்த அறிவு மருத்துவர், இருட்டு மேகத்தை கிழித்து வந்த எழுச்சி நிலா, தேய்ந்த தமிழுக்குக் கிட்டிய சர்க்கரைப் பொங்கல், பாய்ந்து வரும் பஞ்சத்தின் பல்லைப் பிடுங்கிய பாரி வள்ளல்—அரசியல் வானில் புதிய விண்மீன்கள் ஒளியை உமிழ்ந்தன. சமுதாயக் காட்டில், புதிய பாதைகள் பல போடப்பட்டன. பொருளாதாரக் கடலிலே புதுமைப் படகுகள் பல மிதக்க விடப்பட்டன. மொத்தத்தில் என் கடன் பணிசெய்து இருப்பதே என்று பலர் வாழ வழிகாட்டி, வாழவைத்து, பலரால் பாராட்டப்படும், வாழ்த்தப்படும், வணங்கப்படும், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) முதலமைச்சருக்கெல்லாம் முதன்மையாக இந்தியாவின் தங்கத் தாரகை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசைநோக்கி பணிந்து, வணங்கி எனது பதிலுரையை அவைக்கு அளிக்கின்றேன்.

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தியாவிலே முன்னோடித் திட்டமான ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவியருக்கு புரட்சிகரமான இலவச சைக்கிள் வழங்கும் திட்டத்தைக் கொண்டுவந்து, நான்கு ஆண்டுகளில் 31.32 கோடி ரூபாய் செலவில் மொத்தம் 2,03,566 சைக்கிள்கள் வழங்கி, மாணவிகளின் கல்வித் தரத்தை உயர்த்தியும், உடல் ஆரோக்கியத்தையும் கொடுத்தவர் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) 2005–2006 ஆம் ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ரூ.8.82 கோடி இத்திட்டத்திற்காக ஒதுக்கி, 50,600 மாணவிகளுக்கு இலவச சைக்கிள்கள் வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் 5 ஆண்டுகளில் மொத்தம்



41.14 கோடி ரூபாய் செலவில் 2,54,166 ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவியர்களுக்கு இலவச சைக்கிள்கள் வழங்கப்படுகின்றன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–35

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2001–ல் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் பெண்களுக்கு முதுகலைப் பட்ட மேற்படிப்பு வரை இலவசக் கல்வி கற்பதற்கு ஆணையிட்டார்கள். அதன்படி, இத்திட்டத்தின்கீழ் 4 ஆண்டுகளில் ரூபாய் 76.26 இலட்சம் செலவில் 7,990 ஆதிதிராவிட மாணவிகள் பயனடைந்துள்ளனர். இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டப் படிப்புப் பயிலும் ஆதிதிராவிட மாணவ மாணவியர்களுக்கு முறையே ரூபாய் 6,500 மற்றும் 7,000 கல்விக் கடனாக வழங்கப்பட்டு வந்த திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2002–2003 ஆம் ஆண்டு முதல் முழு மானியத் திட்டமாக மாற்றி ஆணையிட்டார்கள். இதன்படி, 2002–2003 ஆம் ஆண்டு முதல் 2004–2005 ஆம் ஆண்டு வரை 27,812 இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டப் படிப்பு பயிலும் ஆதிதிராவிட மாணவ மாணவியர்களுக்கு 22.61 கோடி ரூபாயை முழு மானியமாக மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கியுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அம்மா, கல்லாத பேரையெல்லாம் கல்வி பயிலச் செய்து,
கல்லாத பேரையெல்லாம் கல்வி பயிலச் செய்து
காண்பதில்தான் இன்பம் அம்மாவுக்கே,
காண்பதில்தான் இன்பம் அம்மாவுக்கே. (மேசையைத் தட்டும் ஒலி)

இலவச சைக்கிள் திட்டம், பெண்களுக்கு முதுகலை மேற்படிப்பு வரை இலவசக் கல்வித் திட்டம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பசி நேரத்திலே ஓர் இசை உணவு.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** இளங்கலை மற்றும் முதுகலை உயர் கல்வி, முழு மானியம் ஆகிய மூன்று திட்டங்களுக்கும் தி.மு.க. ஆட்சியில் cypher. அதாவது

இரப்போர்க்கு ஈதலிலும், இரந்துண்டு வாழ்வதிலும்,
இரப்போர்க்கு ஈதலிலும், இரந்துண்டு வாழ்வதிலும்,
இன்பம் உண்டாவதில்லை எதிர்க்கட்சிக்கு,
இன்பம் உண்டாவதில்லை எதிர்க்கட்சிக்கு. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 5 ஆண்டு
கால தி.மு.க. ஆட்சியில் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவ
மாணவியர்களுக்கு கல்வி உதவித் தொகை ரூபாய் 213.32 கோடி மட்டும்
செலவு செய்து 56.25 இலட்சம் மாணவ மாணவியர்கள் மட்டுமே
பயனடைந்துள்ளனர். ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா
அவர்கள் ஆட்சியில் 4 ஆண்டு கால பொற்கால ஆட்சியில் 285.26
கோடி ரூபாய் அதிகமான செலவில் (மேசையைத் தட்டும் ஒலி) 62.83
இலட்சம் மாணவ மாணவியர்கள் பயனடைந்துள்ளனர். 2005–2006
ஆம் ஆண்டுக்கு ரூபாய் 79.89 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளார்கள். ஆக
மொத்தம், ரூபாய் 365.15 கோடி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்
தலைவி அம்மா அவர்கள் கல்வி உதவித் தொகையாக வழங்கியுள்ளார்கள்
என்பதைப் பெருமகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத்
தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர் அரசன் அவர்கள், தனியார் கல்லூரிகளில்
படிக்கின்ற ஆதிதிராவிட மாணவ மாணவியர்களுக்கு கல்வி உதவித்
தொகை வழங்கப்படவில்லை என்று சொன்னார்கள். முழுமையாக
அந்தந்த ஆண்டுக்கு மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை
வழங்கப்படுவது இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் நம்முடைய
மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில்தான்
என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அரசன்
அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆதிதிராவிட மாணவ மாணவியர்களுக்கு குறிப்பேடுகள் மற்றும்
பாடப் புத்தகங்கள் வழங்க கடந்த 5 ஆண்டு கால தி.மு.க. ஆட்சியில்
ரூபாய் 64.03 கோடி மட்டும் செலவு செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு
புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் கடந்த 4 ஆண்டுகளில்
ரூபாய் 57.23 கோடி செலவில் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவ
மாணவியர்களுக்கு குறிப்பேடுகள் மற்றும் பாடப் புத்தகங்கள்
வழங்கப்பட்டன. 2005–2006 ஆம் ஆண்டு குறிப்பேடுகள் மற்றும் பாடப்
புத்தகங்கள் வழங்க ரூபாய் 23.20 கோடி நிதியை மாண்புமிகு முதலமைச்சர்



புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒதுக்கியுள்ளார்கள். (மேசையைத்
தட்டும் ஒலி) ஆக மொத்தம், ரூபாய் 80.43 கோடியாகும். தி.மு.க.
ஆட்சியில் ஒதுக்கிய தொகையோ ரூ.64.03 கோடி மட்டுமே. ஆனால்,
மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்
ஆட்சியில் ஒதுக்கப்பட்ட அதிக தொகை ரூபாய் 16.40 கோடியாகும்
என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத்
தட்டும் ஒலி)

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்
முந்தைய ஆட்சிக் காலத்தில் 5 இலட்சம் இலவச வீட்டுமனைப்
பட்டாக்கள் வழங்கி சாதனை படைத்தார்கள். கடந்த 5 ஆண்டு கால
தி.மு.க. ஆட்சியில் அம்மா அவர்களின் வழித்தோன்றலாக
நினைத்தார்களோ என்னவோ தெரியவில்லை, 3 இலட்சம் அளவுக்கு
வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கியுள்ளார்கள்.

பிற்பகல் 1–40

மாண்புமிகு அம்மா அவர்கள் மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன்,
ஏற்கெனவே வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கிய இடங்களில்
பயனாளிகள் வீடு கட்டி குடியேறாமல் இருந்ததால், அந்த இடங்கள்,
அந்த மக்களுக்குப் பயன்படாமல் இருந்த நிலையை அறிந்த மாண்புமிகு
முதலமைச்சர் அம்மா அவர்கள், அப்படிப்பட்ட காலி மனையிடங்களில்
அடிப்படை வசதிகளான சாலை வசதி, தெரு விளக்கு வசதி, குடிநீர்
வசதி போன்ற வசதிகளைச் செய்வதற்கு, ஒவ்வோர் ஆண்டும், ஒரு
கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து அடிப்படை வசதிகளைச் செய்து
கொடுத்ததால், தானாகவே வீடு கட்டியும் மற்றும் தொகுப்பு வீடுகள்
கட்டியும், அங்கு பயனாளிகள் குடியேறி பயனடைந்து வருகிறார்கள்.
இவ்வாறு பயன்பெறாமல் காலியாக இருந்த மனைப்பட்டா இடங்களில்,
ஆதிதிராவிட மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டு வந்தவர்
நம்முடைய முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா
அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோல், வீட்டுமனைப்
பட்டாக்களும், தகுதியான பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது
என்பதையும் மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

கடந்த ஐந்தாண்டு கால தி.மு.க. ஆட்சியில் 124 விடுதிகளுக்கு மட்டுமே
கட்டடங்கள் கட்ட உத்தரவிடப்பட்டு, அவை முழுமையாக கட்டி
முடிக்கப்படாமல் இருந்தன. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி
அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், முடிக்கப்படாமல்

இருந்த கட்டடப் பணிகளை கட்டி முடிக்கவும், வாடகைக் கட்டடங்களில் இயங்கிவந்த 574 விடுதிகளுக்கும், அரசு சொந்தக் கட்டடங்களாக கட்டப்பட ஆணையிட்டு 264 விடுதிகள் கட்டி முடிக்கப்பட்டு உள்ளன. மீதம் உள்ள 310 விடுதிகளுக்கு பல்வேறு நிலைகளில் பணிகள் நடைபெற்று வருகின்றன. விரைவில் அவை கட்டி முடிக்கப்படும். இந்தியாவிலே ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையில் 1,076 விடுதிகளும், அரசு சொந்தக் கட்டடங்களாக மாற்றிய பெருமை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இந்தியாவிலே தமிழகம் முன்னோடி மாநிலம் என்பதற்கு இதுவும் வரலாற்றுச் சான்று ஆகும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தாட்கோ நிலம் வாங்கி வழங்கும் சிறப்புத் திட்டத்தின்கீழ் 28–2–2005 தேதிய நிலவரப்படி 11,577 பயனாளிகளிடமிருந்து நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வரப்பெற்று உள்ளன. இதில் 11,274 விண்ணப்பங்கள் சரி பார்க்கப்பட்டு, வேளாண்மை அலுவலர்களின் ஆய்வுக்காக அனுப்பி வைக்கப்பட்டன. வேளாண்மை அலுவலர்களால், நில ஆய்வு செய்யப்பட்டு, 9,090 விண்ணப்பங்கள் திரும்ப வரப்பெற்று, நிர்ணயிக்கப்பட்ட பயனாளிகள் இலக்கான 7,000–க்கும் மேலாக, 8,100 பயனாளிகளின் விண்ணப்பங்கள் வங்கிகளுக்கு கடன் வழங்க பரிந்துரைக்கப்பட்டுள்ளன. இதில் 1,357 விண்ணப்பங்களுக்கு வங்கிகள் கடன் வழங்க ஒப்புதல் அளித்துள்ளன. 2005 பிப்ரவரி வரை 692 விண்ணப்பதாரர்களுக்கு ரூ.8.75 கோடி அளவிற்கு தாட்கோ மானியத்துடன் கடன் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் வரப் பெற்றுள்ள விண்ணப்பங்களின் அடிப்படையில் விவசாயக் கூலிகளாக வேலை பார்த்துவரும் சுமார் 12,000 ஆதிதிராவிட குடும்பத்தினரை, நிலச் சுவான்தார்களாக ஆக்கும், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சிகரமான, சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கான திட்டமாகும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 5 ஆண்டுகளில், 95,398 பேர்களுக்கு, ரூ.185.35 கோடி திட்ட மதிப்பீட்டில் பல்வேறு கடன் உதவிகள் மற்றும் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில், கடந்த 4 ஆண்டுகளில் 4,75,395 பேர்களுக்கு ரூ.307.48 கோடி மதிப்பீட்டில் (மேசையைத் தட்டும் ஒலி) கடன் உதவிகளும், வேலைவாய்ப்பு பயிற்சிகளும்



வழங்கப்பட்டுள்ளன. இதில் 2004–2005 ஆம் ஆண்டில், பிப்ரவரி வரையில் 1,29,124 பயனாளிகளுக்கு ரூ.82.08 கோடி திட்ட மதிப்பீட்டில் கடன் உதவிகளும், பயிற்சிகளும் வழங்கப்பட்டுள்ளன. இதில் 90 சதவிகிதம் பெண்கள் ஆவார்கள். 2005–2006 ஆம் ஆண்டிற்கு, தாட்கோ மூலமாக வறுமைக் கோட்டின்கீழ் வாழ்கின்ற 1.50 இலட்சம் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின பயனாளிகள் பயன்பெறுவதற்கு ரூ.100 கோடி அளவிலான தாட்கோ நலத் திட்டங்களை செயல்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தாட்கோமூலம் தமிழகத்தில் உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை பெருக்கிடவும், சொந்தமாகத் தொழில் தொடங்கவும், தாட்கோமூலம் 185 பயிற்சி நிறுவனங்களில், 513 பல்வேறு தொழில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் கடந்த 2001 ஆம் ஆண்டு முதல் 2004 ஆம் ஆண்டு வரை, தாட்கோமூலம் 1,24,891 நபர்கள் பயிற்சி பெற்று உள்ளார்கள்.

பிற்பகல் 1–45

அதற்காக தாட்கோ அளித்த மானியம் ரூபாய் 21.62 கோடியாகும். 2004–2005 ஆம் ஆண்டில் இப்பயிற்சிகளில் 4,803 பெண்களும், அதாவது 42 சதவிகிதம், 6,497 ஆண்களும், ஆகமொத்தம் 11,300 பயிற்சியாளர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். இப்பயிற்சி நிறுவனங்கள் மத்திய அரசு அல்லது மாநில அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்கள் ஆகும். பயிற்சியின் கால அளவு 3 மாதம், 6 மாதம் மற்றும் ஒரு வருட காலம் வரை ஆகும். பயிற்சிக்கான உதவித் தொகை மாதம் ஒன்றுக்கு, ஒரு பயிற்சியாளருக்கு ரூபாய் 400 வீதம் வழங்கப்பட்டு வருகிறது. உதாரணமாக, ஒரு வருட கணினி மென்பொருள் பயிற்சி 2,114 இளைஞர்களுக்கு பாலிடெக்னிக்குகளில் வழங்கப்படுகிறது. ஒரு வருட செவிலியர் உதவியாளர் பயிற்சி 1,608 மாணவிகளுக்கு வழங்கப்படுகிறது. இதுபோன்று உணவு தயாரித்தல் மற்றும் பரிமாறுதல் பயிற்சி, Mechanical, Electrical and Plastic Engineering போன்ற பல்வேறு பயிற்சிகளில் பயிற்சி பெற்று வருகிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பழங்குடியினர் நலனுக்காக 4 ஆண்டுகளில், ஏறக்குறைய 25 கோடி ரூபாய் அளவுக்கு மைய அரசு நிதி உதவியுடன் உண்டு உறைவிடப் பள்ளிகள் தொடங்குதல், வீடுகள் கட்டிக் கொடுத்தல், குடிநீர் வசதி செய்து கொடுத்தல், சூரிய ஒளி மின் விளக்கு வசதி செய்து கொடுத்தல்,

சூரிய ஒளி மின் வேலி அமைத்தல், சாலைகள் அமைத்தல், ஆடுகள் மற்றும் கறவை மாடுகள் வழங்குதல் போன்ற வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் ஆதிதிராவிடர் நலத் துறை பள்ளிகளுக்குக் கூடுதலாக 300 வகுப்பறைக் கட்டடங்கள் ரூபாய் 8.01 கோடி செலவில் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு அறிவியல் ஆய்வுக்கூடங்கள் ரூ.176.04 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளன. இந்த ஆண்டு கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் கட்டுவதற்கு ரூபாய் 171.41 இலட்சத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் ஒதுக்கீடு செய்துள்ளார்கள்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் விடுதிகள். கடந்த 5 ஆண்டு கால தி.மு.க. ஆட்சியில் பராமரிக்கப்படாமல் இருந்து வந்த விடுதிகளை எல்லாம் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன்—அந்த விடுதிகள் எல்லாம் நல்ல முறையில் சுகாதார வசதியோடு குறைவின்றி இயங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உரிய நடவடிக்கை எடுத்து, அதற்கான தொகை, கடந்த 4 ஆண்டுகளில் ரூ.9.34 கோடி ஒதுக்கீடு செய்து, அடிப்படை வசதிகள் முழுமையாகச் செய்து கொடுக்கப்பட்டு வருகின்றன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டின் வளர்ச்சிக்காகவும், சமுதாய ஏற்றத்தாழ்வுகளைப் போக்கவும் பாடுபட்ட தலைவர்களை வருங்கால சமுதாயம் மறந்திடாமல் இருக்கவும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் அந்தத் தலைவர்களின் பெயரில் மாவட்டங்களுக்குப் பெயரிட்டும், விழாக்கள் எடுத்தும் சிறப்புச் செய்யப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் செ.கு. தமிழரசன் இந்த அவையில் பெரியவர், தாத்தா இரட்டைமலை சீனிவாசன் அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்தவுடன், சற்றும் காலம் தாழ்த்தாமல், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் இருந்து வந்த தாத்தா இரட்டைமலை சீனிவாசன் அவர்களுக்கு இந்த அரசு மணிமண்டபம் அமைக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவிப்பு செய்தார்கள். இதனை இந்த நேரத்தில் பெருமகிழ்ச்சியோடு தெரிவித்து, இதயம் கனிந்த நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.



அதேபோல், மாண்புமிகு உறுப்பினர் பெரியவர், திரு. சந்தானம் அவர்கள் தவசீலர் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் வாழ்ந்த இடத்தை நினைவிடமாக மாற்றக் கோரி கேட்ட உடனே மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தேவர் திருமகன் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் வாழ்ந்த இடம் நினைவிடமாக மாற்றப்படும் என்று அறிவித்தார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் செ.கு. தமிழரசன் சொன்னார்கள். SC/ST சான்றிதழ் முறையாகவும் வழங்கப்படவில்லை, சில இடங்களில் போலியான சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன, அவை ஆய்வு செய்யப்பட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். உண்மையிலேயே கடந்த தி.மு.க. 5 ஆண்டு கால ஆட்சியில் தகுதியானவர்களுக்கு, உண்மையான நபர்களுக்கு சாதிச் சான்றிதழ், அது SC சான்றாக இருந்தாலும் சரி, ST சான்றாக இருந்தாலும் முறையாக வழங்கப்படாமல் இருந்தன. இப்போது அவையெல்லாம் ஆய்வு செய்யப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு வருகின்றன என்பதை நான் மிக்கப் பணிவோடு அவருக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், மாண்புமிகு உறுப்பினர் செ.கு. தமிழரசன் சொன்னார்கள். மனிதக் கழிவை மனிதனே சுமந்து அகற்றும் நிலை, மாண்புமிகு அம்மா அவர்களின் கடந்த, முந்தைய ஆட்சியிலேயே, மாண்புமிகு அம்மா அவர்களின் அந்த ஆட்சிக் காலத்திலேயே மனிதக் கழிவை மனிதனே சுமப்பதைத் தடுக்க வேண்டுமென்று, முந்தைய ஆட்சிக் காலத்திலேயே ஒழிக்கப்பட்டுவிட்டது. அந்த Dry Latrine எங்கெல்லாம் உள்ளதோ அதையெல்லாம் Flush–out latrine ஆக மாற்றிக் கட்டப்பட வேண்டுமென்று ஆணையிட்டு அது முழுமையாக நிறைவேற்றப்பட்டுவிட்டது. இப்போது தமிழ்நாட்டில் எங்கும் மனிதக் கழிவை மனிதனே சுமப்பதில்லை (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–50

மேலும், நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து ஊராட்சிகளிலும் மகளிர்க்கு கழிப்பிடங்கள், அதுபோன்ற வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டுமென்று சொல்லி,

மகளிர் சுகாதார வளாகங்கள், அனைத்து ஊராட்சிகளிலும் கட்டி முடிக்கப்பட்ட ஒரே ஆட்சி, இந்தியாவிலேயே தமிழகத்தில் நம்முடைய முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சி என்பதை இந்த நேரத்தில் மிக்க பணிவோடு தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடப்பாண்டில் கூடுதலாகச் செயல்படுத்த ஒப்புதல் அளித்துள்ள புதிய திட்டங்களுக்கான அறிவிப்புகள்.

(1) ரூ.72.42 இலட்சம் செலவில் 3 அரசு ஆதிதிராவிடர் நல நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

(2) ரூ.27.58 இலட்சம் செலவில் ஓர் அரசு ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளி மேல்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

(3) ரூ.24.11 இலட்சம் செலவில் ஓர் அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட நடுநிலைப் பள்ளி உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

(4) ரூ.11.50 இலட்சம் செலவில் நாமக்கல் மாவட்டம், இராசிபுரம், முள்ளுக்குறிச்சியிலுள்ள அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட மேல்நிலைப் பள்ளி, ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப் பள்ளிகளாகப் பிரிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

(5) ரூ.20.76 இலட்சம் செலவில் 5 அரசு ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 5 ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளிகளுக்கு இருக்கையுடன் கூடிய சாய்வு மேசைகள் வழங்கப்படும்.

(6) ரூ.99.00 இலட்சம் செலவில் அரசு ஆதிதிராவிடர் நல உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்குக் கூடுதலாக 30 வகுப்பறைகள் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

(7) ரூ.12.00 இலட்சம் செலவில் 4 ஆதிதிராவிட நல மாணவியர் விடுதிகளுக்குச் சுற்றுச் சுவர் கட்டப்படும்.

(8) ரூ.32.00 இலட்சம் செலவில் 2 அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட மேல்நிலைப் பள்ளிகளுக்கு அறிவியல் ஆய்வுக்கூடக் கட்டடங்கள் கட்டப்படும்.



(9) ரூ.30.00 இலட்சம் செலவில் 100 ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதிகளுக்கு சமையல் எரிவாயு இணைப்புகள் வழங்கப்படும்.

(10) ரூ.26.25 இலட்சம் செலவில் ஆதிதிராவிடர் நல விடுதிகளில் தங்கிப் படிக்கும் 750 மாணவர்களுக்கு அறைகலன் வசதி செய்து தரப்படும்.

(11) ரூ.19.95 இலட்சம் செலவில் ஆதிதிராவிடர் நல கல்லூரி மாணவர் விடுதிகளுக்கு நூலகப் புத்தகங்கள் மற்றும் அலமாரிகள் வழங்கப்படும்.

(12) ஊட்டியிலுள்ள ஆதிதிராவிடர் நல கல்லூரி மாணவியர் விடுதிக்கான தொடரின மற்றும் தொடராச் செலவினை மேற்கொள்ள ரூ.6.19 இலட்சம் வழங்கப்படும்.

(13) ரூ.3.98 இலட்சம் செலவில் சென்னை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல மாவட்ட அலுவலகத்திற்கு ஒரு ஜீப் வழங்கப்படும்.

(14) ரூ.5.50 இலட்சம் செலவில் தலைமைச் செயலக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைக்கு கணினிகள் வழங்கப்படும்.

(15) ரூ.1.00 இலட்சம் செலவில் தலைமைச் செயலக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைக்கு ஒரு ஜெராக்ஸ் இயந்திரம் வழங்கப்படும்.

(16) ரூ.5.00 இலட்சம் செலவில் 10 கணினிகள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்ககத்திற்கு வழங்கப்படும்.

(17) ரூ.1.00 இலட்சம் செலவில் பழங்குடியினர் நல இயக்ககத்திற்கு 2 கணினிகள் வழங்கப்படும்.

(18) ரூ.1.00 இலட்சம் செலவில் பழங்குடியினர் நல இயக்ககத்திற்கு ஒரு ஜெராக்ஸ் இயந்திரம் வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன்னைப் பற்றியும் தன் குடும்ப வளர்ச்சியைப் பற்றியும் நினைத்து செயலாற்றிக் கொண்டிருக்கும் சில போலியான தலைவர்கள் மத்தியில், சட்டமன்ற வரலாற்றில் அவை நிகழ்ச்சியில் கலந்துகொள்ளாமலே உறுப்பினராக நீடிப்பவரும், தன் வாரிசுக்காக வாழ்ந்து கொண்டிருப்பவரும் இருக்கத்தான் செய்கிறார்கள். இவர்களும் முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படுவதுபோல பேராசையில் குடும்ப வாரிசு அரசியலை நடத்திக் கொண்டு இருப்பதையும் தமிழ்நாட்டு மக்கள் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அன்புக்கு வணங்கு வள்ளலாரைப் போல்,

அறிவுக்கு வணங்கு வள்ளுவரைப் போல்,

கவிதையை வழங்கு பாரதியைப் போல்,

கருணையை வழங்கு புரட்சித் தலைவரைப் போல் (மேசையைத் தட்டும் ஒலி)

துணிவுக்குப் புரட்சித் தலைவி அம்மா போல், (மேசையைத் தட்டும் ஒலி)

துணிவுக்குப் புரட்சித் தலைவி அம்மா போல், (மேசையைத் தட்டும் ஒலி)

நல்ல நல்ல முதல்வர் அம்மாவை நம்பி,

இந்த நாடே இருக்குது நம்பி,

நல்ல நல்ல முதல்வர் அம்மாவை நம்பி

இந்த நாடே இருக்குது நம்பி. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஸ்டாலின் இங்கே இல்லை. அவர்களும் இல்லை. எதிர்க்கட்சிகளும் ஓடிப்போய்விட்டன. இனிமேல் நிற்க முடியாது. மாண்புமிகு உறுப்பினர் ஸ்டாலின் அவர்கள் பேசும்போது பனங்காட்டு நரி இந்தச் சலசலப்பிற்கு அஞ்சாது என்று சொன்னார். நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்வது, பனங்காட்டு நரி கூட்டமாக வந்தாலும், சிங்க நிகர்த் தலைவி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முன் நிற்க முடியாமல் ஓடிவிடுவீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–55

அம்மா அவர்களே,

வெள்ளி நிலவே உங்களை மேகம் மறைத்தாலும்

வெள்ளி நிலவே உங்களை மேகம் மறைத்தாலும்

தங்க மலரே உங்களைத் தரம் பிரித்தாலும்

உண்மை என்ற ஒன்றே போதும் அம்மா ஆட்சி அமையுமே (மேசையைத் தட்டும் ஒலி)



உண்மை என்ற ஒன்றே போதும் மீண்டும் அம்மா ஆட்சி அமையுமே. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் வெட்டுத் தீர்மானங்கள் மூலமாகவும் மற்றும் இந்த மானியக் கோரிக்கையில் பங்கு கொண்டும், நல்ல பல கருத்துகளைக் கூறியிருக்கிறார்கள். அவர்களது கருத்துகளை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு தாயுள்ளத்தோடு தக்கவாறு கவனத்தில்கொள்ளும் என்று உறுதியளிக்கிறேன்.

இந்த பதிலுரை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு திருப்தி அளிக்கும் என்று நம்புகிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்பை நல்கிய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு தமிழக ஆதிதிராவிட மக்கள் சார்பாக நன்றியினை காணிக்கையாக்கிக் கொண்டு, மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து, வணங்கி அமர்கின்றேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே எல்லோரும் கல்வி கற்றவர்களாக, நூற்றுக்கு நூறு விழுக்காடு கல்வி கற்ற மாநிலமாக ஆக்க வேண்டுமென்கின்ற முயற்சியோடு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கின்ற இந்த அரசு பல்வேறு நிலைகளிலே உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும், நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும் ஆக்கிக் கொண்டிருக்கிறது. அதோடு, மாணவ மாணவியர் விடுதிகளை எல்லாம் சிறப்பாக சீராகக் கட்டி அந்த மாணவர்கள் சுகாதாரத்தோடு அந்த விடுதியிலே தங்குகின்ற நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. ஆனால், இந்த ஆண்டு பல்வேறு இடங்களிலே இன்றைக்கு ஆதிதிராவிடர் நலத் துறையிலேகூட சில உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட்டிருக்கின்றன என்கின்ற செய்தி இருக்கிறது. அப்படிப்பட்ட இடங்களிலெல்லாம் மாணவர்கள் தங்குகின்ற விடுதி தேவை என்கின்ற நிலை தமிழகம் எங்கும் இருக்கிறது. எனவே, இந்த நிலையினை இந்த இரண்டு அமைச்சர்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று இந்தக் கல்வியாண்டிலே புதியதாக தேவையான சில இடங்களுக்கு, மிக அத்தியாவசியமான இடங்களுக்கு அமைத்துத் தருவதற்கு இந்த அரசு முன்வர வேண்டுமென்று கேட்டு,

அதற்கு அமைச்சர்கள் ஆவன செய்வார்களா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய விடுதிகளுக்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு சென்று பரிசீலிக்கப்படும் என்று இந்த நேரத்தில் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

## (அ) கோரிக்கை எண் 4 – ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை 4 – ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வி. முரளிதரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.407,33,95,000/–, மூலதனக் கணக்கில் ரூ.42,31,89,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.25,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

## (ஆ) கோரிக்கை எண் 9 – பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை எண் 9 – பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வி. முரளிதரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.190,69,23,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.96,53,56,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (29–3–2005) காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1–59 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

80. சேலம், சங்ககிரியைச் சேர்ந்த நாகப்ப செட்டியார் என்பவரின் மகன் திரு.என். சேகர் என்பருக்கு சொந்தமான TDE–7459 ஆம் எண்ணுள்ள லாரிக்கு 1-1-1992 முதல் 27-3-1994 வரையிலான கால அளவுக்கு செலுத்த வேண்டிய வசூலிக்க இயலா மோட்டார் வண்டி வரி மற்றும் அபராதத் தொகையினையும் தள்ளுபடி செய்தது குறித்து உள் (போக்குவரத்து–1) துறையின், 20-1-2005 ஆம் நாளிட்ட 58 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].



81. 2003–2004 ஆம் ஆண்டுக்கான அரியலூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

82. 2003–2004 ஆம் ஆண்டுக்கான பெரம்பலூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

83. 2003–2004 ஆம் ஆண்டுக்கான நாமக்கல் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

84. 2003–2004 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் இருபதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

128. செய்தி மற்றும் சுற்றுலாத் துறை – எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2005–2006. (தமிழ்)

129. பட்டு வளர்ச்சித் துறை – தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் –தமிழ்நாடு பனைபொருள் வளர்ச்சிக் கழகம் மற்றும் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2005–2006. (தமிழ்)

130. சிறுதொழில்கள் துறை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகள், 2005–2006. (தமிழ்)

[2005 மார்ச் 28

131. மானியக் கோரிக்கை எண் 4 – ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006. (தமிழ், ஆங்கிலம்)

132. மானியக் கோரிக்கை எண் 9 – பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை – சிறுபான்மையினர் நலன் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006. (தமிழ், ஆங்கிலம்)

133. மானியக் கோரிக்கை எண் 9 – பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006. (தமிழ், ஆங்கிலம்).

134. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின் செயல்முறைத் திட்டம், 2005–2006. (தமிழ், ஆங்கிலம்)



2005 மார்ச் 28]

## இணைப்பு I

(307 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மானியக் கோரிக்கை எண் 4

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த நலிவுற்ற மக்கள் முன்னேற்றம் அடையவேண்டியதன் அவசியத்தை உணர்ந்து, அனைத்து வகைகளிலும் அவர்தம் நிலையை மேம்பாடு அடையச் செய்வதற்கு இந்த அரசு சிறப்பு உந்துகை அளித்துவருகிறது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களில் பெரும்பாலோர் பொருளாதாரத்தில் நலிவடைந்து சமுதாயத்தில் பின்தங்கிய நிலையிலுள்ளனர். அநேக குடும்பங்கள் போதிய வள ஆதாரங்கள் இல்லாத நிலையில் அவர்தம் கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் ஏனைய வருவாய் ஈட்டக்கூடிய நடவடிக்கைகள் ஒரு வரம்பிற்குள்ளேயே உள்ளன. இச்சமூகத்தவரின் துரித சமூக பொருளாதார மேம்பாட்டினை உறுதி செய்வதற்காக, பல்வேறு நலத் திட்ட நடவடிக்கைகள் ஆதிதிராவிடர் நல இயக்ககம், பழங்குடியினர் நல இயக்ககம் மற்றும் தாட்கோ மூலமாக செயல்படுத்தப்படுகின்றன. தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையில் ஆதிதிராவிடர் 19 விழுக்காடும், பழங்குடியினர் 1.04 விழுக்காடும் உள்ளனர். 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, ஆதிதிராவிடர் இனத்தவரின் எழுத்தறிவு விகிதம் 39.47%–ம், பழங்குடியினரிடையே 23.35%–மாக உள்ளது. இது மாநிலத்தின் பொது எழுத்தறிவு விகிதமான 73.45% உடன் ஒப்பிடுகையில் மிகக் குறைவாக உள்ளது. பிற வளர்ச்சி குறியீடுகளிலும் கூட இப்பிரிவினருக்கும் மாநிலத்தில் உள்ள பிற மக்களுக்குமிடையே குறிப்பிடத்தக்க இடைவெளி உள்ளது. எனவே, மாநிலத்தின் வளர்ச்சிக்காக, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிப்பது அவசியமாகிறது. இவர்தம் கல்வி மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்காக இத்துறை பல்வேறு திட்டங்களைத் தீட்டி, அவற்றை உரிய வழிகளில் செயல்படுத்தி வருகிறது.

[2005 மார்ச் 28

## I. ஆதிதிராவிடர் நலம்

கல்வி அறிவை அளிப்பதன் மூலம் நலிவடைந்துள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் சமூக மற்றும் பொருளாதார நிலையில் நிரந்தரமான மாறுதலை ஏற்படுத்த இயலும் என்பதை உணர்ந்துள்ள இந்த அரசு, கல்விக்கு முன்னுரிமை அளித்து வருகின்றது. எனவே 2005–2006 ஆம் ஆண்டில், இத்துறைக்கான மொத்த நிதி ஒதுக்கீடான ரூ.453.91 கோடியில் சுமார் 70%–க்கும் அதிகமான நிதி கல்வி சார்ந்த திட்டங்களுக்காகவே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்துறையின்கீழ் 1,048 ஆதிதிராவிடர் நலப்பள்ளிகளும், 280 பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளிகளும் நடத்தப்பட்டு வருகின்றன. அதன் விவரங்கள் பின்வருமாறு:–

| பள்ளியின் வகைப்பாடு | ஆதிதிராவிடர் நலப் பள்ளிகள் | | பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளிகள் | |
|---|---|---|---|---|
| | பள்ளிகளின் எண்ணிக்கை | மாணவர்களின் எண்ணிக்கை | பள்ளிகளின் எண்ணிக்கை | மாணவர்களின் எண்ணிக்கை |
| தொடக்கப் பள்ளிகள் | 780 | 81865 | 198 | 18576 |
| நடுநிலைப் பள்ளிகள் | 157 | 37722 | 63 | 12411 |
| உயர்நிலைப் பள்ளிகள் | 51 | 20781 | 8 | 3678 |
| மேல்நிலைப் பள்ளிகள் | 60 | 87254 | 11 | 13136 |
| **மொத்தம்** | **1048** | **227622** | **280** | **47801** |

மாநிலத்திலுள்ள மாவட்ட வாரியான ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகள் குறித்த விவரங்கள் பட்டியல் எண்கள் 1, 2 மற்றும் 3–ல் கொடுக்கப்பட்டுள்ளன.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின குடியிருப்புகளுக்கு அருகிலேயே கல்வி வாய்ப்பு வசதிகளை அமைத்துத் தருவதை இன்றியமையாததாக இந்த அரசு கருதுகிறது. இதனைக் கருத்திற் கொண்டு இத்துறையின்கீழ் இயங்கும் பள்ளிகள் படிப்படியாக அடுத்த நிலைக்கு உயர்த்தப்படுகின்றன. 2004–2005–ல் தேனி மாவட்டத்தில் குன்னூர் ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளி மேல்நிலைப் பள்ளியாகவும், நாகப்பட்டினம்



2005 மார்ச் 28]

மாவட்டத்தில் காரைமேடு ஆதிதிராவிடர் நடுநிலைப் பள்ளி உயர்நிலைப் பள்ளியாகவும், 10 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்தப்பட்டன. பள்ளிக் கல்வித் துறையின் சர்வ சிக்ஷா அபியான் (அனைவருக்கும் கல்வி) திட்டத்தின்கீழ் 7 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்பட்டன. பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளிகளைப் பொறுத்தவரை, 5 தொடக்கப்பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், ஒரு நடுநிலைப் பள்ளி உயர்நிலைப் பள்ளியாகவும், ஒரு உயர்நிலைப் பள்ளி மேல்நிலைப் பள்ளியாகவும் நிலை உயர்த்தப்பட்டன. மேலும், அனைவருக்கும் கல்வி திட்டத்தின்கீழ் 11 அரசு உண்டு உறைவிட தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்பட்டன.

இப்பள்ளி மாணவர்கள், தகவல் தொழில்நுட்பவியலை தெரிந்துகொள்ளும் வகையில் 31 உயர்நிலைப் பள்ளிகளுக்கு அரசு கணினி வசதிகளை செய்துள்ளது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் இயங்கும் 62 மேல்நிலைப் பள்ளிகளில் கணினி அறிவியல் பாடப்பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளன. மார்ச் 2004–ல் கணினி அறிவியலில் +2 பொதுத் தேர்வில் ஆதிதிராவிடர் இன மாணவ/மாணவியரின் தேர்ச்சி 99.80% என்பது குறிப்பிடத்தக்கது.

49 ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளிகளுக்கு அறிவியல் ஆய்வுக் கூடங்கள் அமைத்துத் தரப்பட்டுள்ளன. அனைத்து 60 ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளிகளுக்கும் அறிவியல் ஆய்வுக் கூடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

### 1. கல்விக் கட்டணச் சலுகை

அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் பயிலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவ மாணவியர்கள் வருமான வரம்பு ஏதுமின்றி கல்விக் கட்டணம் செலுத்துவதிலிருந்து முழுவதுமாக விலக்களிக்கப்பட்டுள்ளனர்.

### 2. இலவசக் கல்வி

இளங்கலை பட்டப்படிப்பு வரை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு இலவசக் கல்வி வழங்கப்படுகிறது. கடந்த 4 ஆண்டுகளில் பயனடைந்தோர் விவரம் பின்வருமாறு:–

| வருடம் | செலவு (ரூபாய் இலட்சத்தில்) | பயனடைந்த மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2001-2002 | 70.22 | 13728 |
| 2002-2003 | 80.83 | 9617 |
| 2003-2004 | 75.04 | 8066 |
| 2004–2005 (31–12–2004 முடிய) | 49.64 | 5335 |

**முதுகலைப் பட்டப்படிப்பு வரை மாணவியருக்கான இலவசக் கல்வி**

இந்த அரசு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவியரின் உயர்கல்வி பங்கேற்பில் ஆழ்ந்த அக்கறை கொண்டுள்ளது. எனவே, 2001–2002 ஆம் கல்வி ஆண்டு முதல் இம்மாணவியருக்கு கல்விக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ள சலுகை முதுகலைப் பட்டப் படிப்பு வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. கடந்த 4 ஆண்டுகளில் பயனடைந்தோர் விவரம் பின்வருமாறு:–

| வருடம் | செலவு (ரூபாய் இலட்சத்தில்) | பயனடைந்த மாணவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2001–2002 | 0.62 | 41 |
| 2002–2003 | 27.27 | 1325 |
| 2003–2004 | 31.26 | 4281 |
| 2004–2005 (31–12–2004 முடிய) | 17.11 | 2343 |

**3. கல்வி உதவித் தொகை**

**(அ) ப்ரிமெட்ரிக் உதவித் தொகை**

6 முதல் 10 ஆம் வகுப்பு வரை கல்வி பயிலும் அனைத்து ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் / கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவ / மாணவிகள் சிறப்புக் கட்டணம் செலுத்துவதிலிருந்து





விலக்களிக்கப்படுகின்றனர். இதன் பொருட்டு ஏற்படும் இழப்புத் தொகையினை பாதிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களுக்கு இத்துறை வழங்குகிறது. இதேபோல் 10 மற்றும் 12 ஆம் வகுப்பில் பயிலும் மாணவ/ மாணவிகள் பொதுத் தேர்வுக் கட்டணங்கள் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டு இத்தொகை முழுவதும் இத்துறையால் அரசுத் தேர்வுகள் இயக்ககத்திற்கு வழங்கப்படுகிறது.

**(ஆ) சுகாதாரக் குறைவான தொழில் புரிவோரின் குழந்தைகளுக்கான ப்ரிமெட்ரிக் உதவித் தொகைத் திட்டம்**

சுகாதாரக் குறைவான தொழில் புரிவோரின் குழந்தைகளுக்கு சாதி, மதம் மற்றும் வருமான வரம்பின்றி 1 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை விடுதியில் தங்காது பயிலும் மாணவ/ மாணவியருக்கு, மாதம் ஒன்றிற்கு ரூ. 40/– முதல் ரூ.75/– வரை மைய அரசு உதவித்தொகை வழங்குகிறது. விடுதியில் தங்கி பயில்வோருக்கு 3 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரையில் மாதம் ரூ.300/–ம், 9 ஆம் வகுப்பு மற்றும் 10 ஆம் வகுப்பில் பயில்வோருக்கு மாதம் ரூ.375/–ம் வழங்கப்படுகிறது. இதுவன்றி, தனி மானியமாக விடுதியில் தங்காது பயிலும் மாணவர் ஒருவருக்கு ஆண்டொன்றுக்கு ரூ..550/–ம், விடுதியில் தங்கி பயில்வோருக்கு ரூ.600/–ம், 1–4–2003 முதல் வழங்கப்படுகிறது. கடந்த 4 ஆண்டுகளில் இத்திட்டத்தின்கீழ் ஏற்பட்ட செலவு மற்றும் பயனாளிகளின் விவரம் கீழே தரப்பட்டுள்ளன:–

| வருடம் | செலவு (ரூபாய் இலட்சத்தில்) | பயனடைந்த மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2001–2002 | 363.19 | 43812 |
| 2002–2003 | 340.51 | 39450 |
| 2003–2004 | 365.07 | 42334 |
| 2004–2005 (31–12–2004 முடிய) | 305.57 | 35374 |

**(இ) போஸ்ட் மெட்ரிக் உதவித்தொகை**

மைய அரசு திட்டத்தின்கீழ் 10 ஆம் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்பு பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இன மாணவ மாணவியருக்கு பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம்

ரூ. 1,00,000/–க்கு மிகாமல் இருப்பின், கல்வி நிறுவனங்களுக்கு அவர்கள் செலுத்த வேண்டிய குறிப்பேடுகள் வாங்குதல் போன்ற கட்டாயச் செலவுகள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்குக் கொடுக்க வேண்டிய கட்டாயக் கட்டணங்கள் ஆகியவற்றை ஈடுசெய்ய, மாதம் அதிகபட்சமாக ரூ330/– படிப்புக்கு ஏற்றவாறு வழங்கப்படுகிறது. இவர்கள், விடுதியில் தங்கி கல்வி பயில்பவராக இருப்பின் இத்தொகை மாதம் அதிகபட்சமாக ரூ.740/– படிப்பிற்கு ஏற்றவாறு பராமரிப்புப் படியாக வழங்கப்படுகிறது. இதுவன்றி, மாணவர்களால் அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களுக்கு செலுத்தப்பட வேண்டிய கட்டாயக் கட்டணங்கள் நேரடியாக வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் கடந்த 4 ஆண்டுகளில் ஏற்பட்ட செலவு மற்றும் பயனாளிகள் விவரம் பின்வருமாறு:–

| வருடம் | செலவு (ரூபாய் இலட்சத்தில்) | பயனடைந்த மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2001–2002 | 3678.56 | 190694 |
| 2002–2003 | 4013.28 | 201437 |
| 2003–2004 | 5993.51 | 234324 |
| 2004–2005 (31–12–2004 முடிய) | 4150.00 | 163685 |

மாவட்ட வாரியான விவரங்கள் பட்டியல் எண் 6-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

மருத்துவம், பொறியியல், வேளாண்மை, கால்நடை மருத்துவம், பாலிடெக்னிக், சட்டம், வணிக நிருவாக முதுகலைப் பட்டம், பட்டயக் கணக்கியல், உயிர் அறிவியல் மற்றும் இதர தொழில்நுட்பம் சார்ந்த படிப்பினை மேற்கொள்ளும் மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக புத்தக வங்கித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் ரூ.2,400/– முதல் ரூ.7,500/– வரை மதிப்பிலான புத்தகங்கள் இரண்டு பேருக்கு ஒரு செட் வீதம் வழங்கப்படுகின்றன. 2003–2004 ஆம் ஆண்டு முதல் இத்திட்டம் மைய அரசின் போஸ்ட் மெட்ரிக் உதவித்தொகை திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.



**(ஈ) போஸ்ட் மெட்ரிக் சிறப்பு உதவித் தொகை திட்டம்**

மாநில அரசின் இத்திட்டத்தின்கீழ், 10 ஆம் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்பு பயிலும் ஆதிதிராவிட, பழங்குடியின மற்றும் கிருத்துவ மதம் மாறிய விடுதியில் தங்காது பயிலும் மாணவ, மாணவியருக்கு பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.50,000/–க்கு மிகாமல் இருப்பின் மாதம் ரூ.65/– முதல் ரூ.125/– வரையில் பராமரிப்புப்படி மற்றும் கட்டாயக் கட்டணங்களுக்காக படிப்புக்கு ஏற்றவாறு வழங்கப்படுகிறது. இதுவே விடுதியில் தங்கி கல்வி பயில்பவராக இருப்பின் பராமரிப்புப்படி மற்றும் கட்டாயக் கட்டணங்களுக்காக மாதம் ரூ.115/– முதல் ரூ.280/– வரையில் படிப்பிற்கு ஏற்றவாறு உதவித்தொகையாக வழங்கப்படுகிறது. மைய அரசு மற்றும் மாநில அரசின் கல்வி உதவித் தொகைகள் வழங்குவதற்கு அந்தந்த கல்வி நிலையத் தலைவர்களுக்கு ஒப்பளிக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மாநில அரசின் சிறப்பு படிப்பு உதவித் திட்டத்தின்கீழ், பத்தாம் வகுப்பு தேறாதவர்களுக்கான தொழிற்பயிற்சி மற்றும் இதர பயிற்சிகள் போஸ்ட் மெட்ரிக் படிப்பு எனக் கருதப்பட்டு அதற்குரிய உதவித் தொகை பெறுவதற்கு தகுதியுண்டு.

இத்திட்டத்தின்கீழ் கடந்த 4 ஆண்டுகளில் ஏற்பட்ட செலவு மற்றும் பயனாளிகள் விவரம் பின்வருமாறு:–

| வருடம் | தொகை (ரூபாய் இலட்சத்தில்) | பயனடைந்த மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2001–2002 | 231.67 | 16011 |
| 2002–2003 | 170.40 | 16294 |
| 2003–2004 | 462.85 | 29589 |
| 2004–2005 (31–12–2004 முடிய) | 221.21 | 13253 |

மாவட்ட வாரியான விவரங்கள் பட்டியல் எண் 7–ல் கொடுக்கப்பட்டுள்ளன.

[2005 மார்ச் 28

## 4. உயர் கல்வி சிறப்பு உதவித் தொகை

2002–2003 ஆம் ஆண்டு முதல் கல்விக் கடன் உதவித்தொகைத் திட்டம் மானியமாக மாற்றப்பட்டு, உயர்கல்வி சிறப்பு உதவித்தொகை என வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், மாணவர்களுக்கு இளங்கலைப் பட்டப் படிப்பிற்காக ஆண்டொன்றுக்கு ரூ.6,500/–ம், முதுகலை பட்டப்படிப்பு மற்றும் தொழிற்கல்வி படிப்புக்காக ஆண்டொன்றுக்கு ரூ.7,000/–ம் வழங்கப்படுகிறது. மேற்படி உதவித்தொகை மருத்துவப் படிப்பு பயிலும் மாணவ, மாணவியர்களைப் பொறுத்தவரை 75% தொகை மானியமாகவும், 25% தொகை கடனாகவும் மற்றவர்களுக்கு முழுவதும் மானியமாக வழங்கப்படுகிறது. இம்மானியத்திற்குத் தகுதி பெற பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.50,000/–க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். இத்திட்டத்தின்கீழ், கடந்த 3 ஆண்டுகளில் ஏற்பட்ட செலவு மற்றும் பயனாளிகள் விவரம் பின்வருமாறு:–

| வருடம் | செலவு (ரூபாய் இலட்சத்தில்) | பயனடைந்த மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2002–2003 | 451.34 | 6686 |
| 2003–2004 | 645.38 | 9554 |
| 2004–2005 (31–12–2004 முடிய) | 383.65 | 5902 |

மாவட்ட வாரியான விவரங்கள் பட்டியல் எண் 8-ல் கொடுக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்காக 2005–2006 ஆம் ஆண்டில், ரூ.449.20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 5. வெளிநாடு சென்று பயில உதவித் தொகை

வெளிநாடுகளில் சென்று பொறியியல், தொழில்நுட்பவியல் மற்றும் அறிவியல் போன்ற குறிப்பிடத்தக்க களங்களில் முதுகலைப் பட்டப்படிப்பு நிலையில் ஆராய்ச்சித் திட்டங்களில் மேற்படிப்பைத் தொடர தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு இத்திட்டம் நிதியுதவி வழங்க வகை செய்கிறது. இத்திட்டத்தில் பயன்பெற விரும்பும் பணியிலுள்ள மாணவர் அல்லது அவரின் பெற்றோர் / பாதுகாவலரின் மாத வருமானம் எல்லா விதங்களிலும் ரூ.12,000/–க்கு மிகாமலிருக்க வேண்டும்.



2005 மார்ச் 28]

2005–2006 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கென ரூ.10.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 6. இலவச பாடப் புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள் வழங்கும் திட்டம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளில் 1 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் இலவசமாக பாடப் புத்தகங்களும், 3 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு இலவசமாக குறிப்பேடுகளும் வழங்கப்படுகின்றன. பள்ளிக் கல்வித் துறைப் பள்ளிகளில் பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களைப் பொறுத்தமட்டில் 9 ஆம் வகுப்பு மற்றும் 10 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு இலவச பாடப் புத்தகங்களும், 4 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு இலவச குறிப்பேடுகளும் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ், 2004–2005 ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர் நலப் பள்ளிகள் மற்றும் அரசு பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளிகளில் பயிலும் இம்மாணவர்களுக்கு ரூ.388.70 இலட்சம் செலவில் பாடப் புத்தகங்களும், குறிப்பேடுகளும் பொதுப் பள்ளிகளுக்கு ரூ.1,548.92 இலட்சம் செலவில் பாடப் புத்தகங்களும், குறிப்பேடுகளும் வழங்கப்பட்டன.

## 7. சிலேட்டுகள்

இத்துறை நடத்தும் பள்ளிகளில் பயிலும் ஒன்றாம் வகுப்பு மாணவ, மாணவியர்க்கு சிலேட்டுகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் கடந்த 4 ஆண்டுகளில் ஏற்பட்ட செலவு மற்றும் பயனாளிகளின் விவரம் பின்வருமாறு:–

| வருடம் | செலவு (ரூபாய் இலட்சத்தில்) | பயனடைந்த மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2001–2002 | 2.91 | 34493 |
| 2002–2003 | 2.96 | 35895 |
| 2003–2004 | 2.48 | 35313 |
| 2004–2005 (31–12–2004 முடிய) | 2.74 | 35384 |

[2005 மார்ச் 28

## 8. சீருடைகள்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளில் 1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவ, மாணவியருக்கும், ஆதிதிராவிடர் நல விடுதிகளில் தங்கிப்பயிலும் அனைத்து மாணவ, மாணவியருக்கும், ஆண்டு ஒன்றுக்கு இரண்டு ஜோடி சீருடைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. 2003–2004 ஆம் ஆண்டு முதல் பருத்தி மற்றும் பாலியஸ்டர் இணைந்த சீருடைகள் விநியோகிக்கப்பட்டு வருகிறது. 2004–2005 ஆம் ஆண்டிலிருந்து மாணவர்கள் தங்கள் அளவுக்கேற்ப தைத்துக் கொள்ளும் விதத்தில் துணிகள் மற்றும் தையற்கூலி மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது. நடப்பு ஆண்டிற்கு ரூ.11.00 கோடி இத்திட்டத்திற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 9. பெண் கல்வி ஊக்குவிப்பு சிறப்புத் திட்டம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின பெண் குழந்தைகளின் 100% பள்ளிச் சேர்க்கையை உறுதிப்படுத்திடும் நோக்கத்தோடு பெண் கல்வி ஊக்குவிப்புத் திட்டத்தின்கீழ், 3 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரையில் கல்வி பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின பெண் குழந்தைகள் 60,000 பேருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.50/–வீதம் 10 மாதங்களுக்கு ரூ.500/– வழங்கப்படுகிறது. இத்திட்டம், கல்வியில் பின்தங்கியுள்ள மாவட்டங்களான தருமபுரி, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, கடலூர், விழுப்புரம், விருதுநகர், காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், சேலம், நாமக்கல், திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், கரூர், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களிலும், சென்னை தவிர்த்து அனைத்து மாவட்டங்களிலுமுள்ள பழங்குடியின பெண்குழந்தைகளுக்கும் செயல்படுத்தப்படுகிறது. அதேபோன்று 6 ஆம் வகுப்பில் சேர்ந்து கல்வி பயிலும் மாணவியர் கல்வியைத் தொடர ஊக்குவிக்கும் வகையில் 30,000 ஆதிதிராவிடர்/பழங்குடியின மாணவியர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100/–வீதம் 10 மாதங்களுக்கு ரூ.1000/– சென்னையைத்தவிர மற்ற அனைத்து மாவட்டங்களுக்கும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ்



2005 மார்ச் 28]

கடந்த 4 ஆண்டுகளில் ஏற்பட்ட செலவினமும் பயனாளிகளின் விவரமும் பின்வருமாறு:–

| வருடம் | செலவு (ரூபாய் இலட்சத்தில்) | பயனடைந்த பெண்கள் எண்ணிக்கை | செலவு (ரூபாய் இலட்சத்தில்) | பயனடைந்த பெண்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| | 3 முதல் 5ஆம் வகுப்பு வரை | 3 முதல் 5ஆம் வகுப்பு வரை | 6ஆம் வகுப்பு | 6ஆம் வகுப்பு |
| 2001–2002 | 251.90 | 50380 | 279.48 | 27948 |
| 2002–2003 | 299.435 | 59887 | 293.48 | 29348 |
| 2003–2004 | 300.00 | 60000 | 300.00 | 30000 |
| 2004–2005 (31–12–2004 முடிய) | 233.93 | 46786 | 268.54 | 26854 |

இத்திட்டத்திற்காக 2005–2006 ஆம் ஆண்டில் ரூ.6.00 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

## 10. இலவச மிதிவண்டி வழங்கும் திட்டம்

மாணவியரின் கல்வி முன்னேற்றத்தில் அதிக அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 11 மற்றும் 12 ஆம் வகுப்பில் கல்வி பயிலும் ஆதிதிராவிடர், பழங்குடியின மற்றும் கிறித்துவ மதம் மாறிய மாணவியருக்கு இலவச மிதிவண்டிகள் வழங்கும் உன்னதமான திட்டத்தை அறிவித்தார். இத்திட்டத்தின்கீழ், கடந்த 4 ஆண்டுகளில் இலவச மிதிவண்டிகள் மாணவியருக்கு வழங்கப்பட்ட விவரம் பின்வருமாறு:–

| மிதிவண்டிகள் விநியோகம் | | |
|---|---|---|
| வருடம் | செலவு (ரூபாய் இலட்சத்தில்) | பயனடைந்தோர் எண்ணிக்கை |
| 2001–2002 | 620.19 | 56525 |
| 2002–2003 | 833.15 | 47501 |
| 2003–2004 | 798.13 | 50384 |
| 2004–2005 | 881.00 | 49156 |

[2005 மார்ச் 28

2001–2004 ஆம் ஆண்டுகளில் பயனடைந்தோரின் மாவட்டவாரியான விவரங்கள் பட்டியல் எண் 9–ல் கொடுக்கப்பட்டுள்ளன. 2005–2006 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.8.82 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**11. முதுகலைப் பட்டம் பயிலும் மாணவியருக்குச் சலுகை மற்றும் விடுதி வசதி**

2001–2002 ஆம் ஆண்டு முதல் ஆதிதிராவிடர், கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவியருக்கு முதுகலைப் பட்டப் படிப்பு வரை இலவசக் கல்வித் திட்டம் நீட்டித்து ஆணையிடப்பட்டுள்ளது. அதேபோல், முதுகலைப் பட்டப் படிப்பு பயிலும் ஆதிதிராவிடர், கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவியர் 50 பேர் தங்கிப் பயிலும் ஒரு தனி விடுதி சென்னையில் 2001–2002 முதல் தொடங்கப்பட்டுள்ளது.

**12. பரிசுத் தொகைகள் (மாநில அளவில்)**

10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் அதிக விழுக்காடு மதிப்பெண்கள் பெறும் மாணவர்களுக்கு மாநில அளவில் பொதுப் பரிசுகள் கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகின்றன:–

| | | |
|---|---|---|
| 1 | 12ஆம் வகுப்பு | பன்னிரெண்டாம் வகுப்புத் தேர்வில் மாநில அளவில் முதலாவதாக வரும் ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் / கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் இனம் ஒவ்வொன்றிலும் ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு பரிசு ரூ.25,000/– வீதம் |
| 2 | 10ஆம் வகுப்பு | பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் மாநில அளவில் முதலாவதாக வரும் ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் இனம் ஒவ்வொன்றிலும் ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு பரிசு ரூ.10,000/– வீதம் |



2005 மார்ச் 28]

| | | |
|---|---|---|
| 3. | 12ஆம் வகுப்புத் தேர்வு மாநில அளவில் தேர்ச்சி (25 பாடங்கள்) | பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் மாநில அளவில் ஒவ்வொரு பாடங்களிலும் (25 பாடங்கள்) முதல் மதிப்பெண் பெற்ற ஆதிதிராவிடர்/ பழங்குடியினர்/கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் இனம் ஒவ்வொன்றிலும் ஒரு மாணவர் அல்லது ஒரு மாணவிக்கு பரிசு ரூ.2,000/– வீதம். |
| 4. | 10 ஆம் வகுப்பு தேர்வில் மாநில அளவில் (முதல் 5 பாடங்கள்) | பத்தாம் வகுப்பு தேர்வில் மாநில அளவில் ஒவ்வொரு பாடத்திலும் (5 பாடங்கள்) முதல் மதிப்பெண்கள் பெற்ற ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிட இனம் ஒவ்வொன்றிலும் ஒரு மாணவர் அல்லது ஒரு மாணவிக்கு பரிசு ரூ.1,000/– வீதம். |

**13. பரிசுத் தொகைகள் (மாவட்ட அளவில்)**

மாவட்ட அளவில் 10 ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் அதிக விழுக்காடு மதிப்பெண்கள் பெறும் மாணவர்களுக்கு பொதுப் பரிசுகள் வழங்கப்படும் விவரங்கள் பின்வருமாறு:–

| | | |
|---|---|---|
| 1 | 12ஆம் வகுப்பு | ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிட இனம் ஒருங்கிணைந்து ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு பரிசுகள் ரூ.3,000/– வீதம் |
| 2 | 10ஆம் வகுப்பு (3 பரிசுகள்) முதல் பரிசு | ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/ கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிட இனம் ஒருங்கிணைந்து ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு பரிசுகள் ரூ.1,000/– வீதம் |

[2005 மார்ச் 28

| | | |
|---|---|---|
| 3. | இரண்டாம் பரிசு | ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிட இனம் ஒருங்கிணைந்து ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு பரிசுகள் ரூ.500/– வீதம் |
| 4. | மூன்றாம் பரிசு | ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/ கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிட இனம் ஒருங்கிணைந்து ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு பரிசுகள் ரூ.300/– வீதம் |

**14 (அ) முதலமைச்சரின் தகுதிப் பரிசுகள்**

+2 பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் மாணவர்களை ஊக்குவிக்க ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவர்களில் முதல் 1,000 பேருக்கும், மாணவிகளில் முதல் 1,000 பேருக்கும் அவர்கள் மேல்படிப்பினைத் தொடர ஆண்டுக்கு ஒவ்வொருவருக்கும் ரூ.1,500/– வீதம் 5 ஆண்டுகளுக்கு தகுதிப் பரிசு வழங்கப்படுகிறது. கடந்த 4 ஆண்டுகளில் ஏற்பட்ட செலவு மற்றும் பயனாளிகள் விவரம் பின்வருமாறு:–

| வருடம் | செலவு (ரூபாய் இலட்சத்தில்) | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2001–2002 | 65.47 | 4365 |
| 2002–2003 | 40.90 | 2730 |
| 2003–2004 | 72.40 | 4827 |
| 2004–2005 (31–12–2004 முடிய) | 42.23 | 2815 |

**(ஆ) பரிசுத் தொகை திட்டம்**

இத்திட்டத்தின்கீழ், பட்டப்படிப்பு, முதுகலைப் பட்டப்படிப்பு, தொழிற்கல்வி படிப்புகளில் 60% மற்றும் அதற்கு மேல் மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெற்ற ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவ, மாணவியர்களுக்கு பரிசுத் தொகை



2005 மார்ச் 28]

வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி, பரிசுத் தொகையாக ரூ.2,000/– முதல் ரூ.5,000/– வரையில் மொத்தம் 550 மாணவ/மாணவியர்களுக்கு வழங்கப்படுகிறது. கடந்த 3 ஆண்டுகளில் ஏற்பட்ட செலவு மற்றும் பயனாளிகள் விவரம் பின்வருமாறு:–

| வருடம் | செலவு (ரூபாய் இலட்சத்தில்) | பயனடைந்தோர் எண்ணிக்கை |
|---|---|---|
| 2001–2002 | 18.55 | 551 |
| 2002–2003 | 18.49 | 550 |
| 2003–2004 | 18.50 | 550 |

**(இ) சிறந்த மாணவர்க்கான பரிசுத் தொகை**

ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர், கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் ஆகிய ஒவ்வொரு பிரிவிலும் எஸ்.எஸ்.எல்.சி. (10 ஆம் வகுப்பு ) பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் முதல் இரண்டு மாணவர் மற்றும் இரண்டு மாணவியர் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்கள் படிப்பினை தொடர இத்தொகை வழங்கப்படுகிறது. இப்பரிசுத் தொகைக்காக தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்களுக்கு முதல் ஆண்டுக்கு ரூ.800/–ம், அடுத்து வரும் ஐந்து ஆண்டுகளுக்கு ஓராண்டிற்கு ரூ.960/– வீதமும் அவர்கள் படிப்பினைத் தொடர்ந்தால் மட்டும் ஆறு ஆண்டுகளுக்கு வழங்கப்படும். இத்திட்டத்தின்கீழ், கடந்த 4 ஆண்டுகளில் ஏற்பட்ட செலவு மற்றும் பயனாளிகள் விவரம் பின்வருமாறு:–

| வருடம் | செலவு (ரூபாய் இலட்சத்தில்) | பயனடைந்தோர் எண்ணிக்கை |
|---|---|---|
| 2001–2002 | 5.79 | 575 |
| 2002–2003 | 5.83 | 565 |
| 2003–2004 | 5.98 | 589 |
| 2004–2005 (31–12–2004 முடிய) | 4.34 | 432 |

[2005 மார்ச் 28

### (ஈ) காந்தி நினைவு பரிசுத் தொகை

இந்தப் பரிசுத் தொகை +2 பொதுத்தேர்வில் தேர்ச்சி பெற்று மேற்படிப்பினைத் தொடரும் இந்து ஆதிதிராவிட மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் முதல் மதிப்பெண்கள் பெறும் ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவி இத்திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்படுவர். இப்பரிசுத் தொகை முதல் வருடத்திற்கு ரூ.1,500/– வீதமும், அடுத்து வரும் ஐந்து ஆண்டுகளுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.1,000/– வீதமும் வழங்கப்படுகிறது. கடந்த 4 ஆண்டுகளில் ஏற்பட்ட செலவு மற்றும் பயனாளிகள் விவரம் பின்வருமாறு:–

| வருடம் | செலவு (ரூபாய் இலட்சத்தில்) | பயனடைந்தோர் எண்ணிக்கை |
|---|---|---|
| 2001–2002 | 1.36 | 99 |
| 2002–2003 | 1.34 | 97 |
| 2003–2004 | 1.71 | 116 |
| 2004–2005 (31–12–2004 முடிய) | 0.65 | 58 |

### (உ) தகுதி வழிவகை பரிசுத் தொகை

தகுதி வழிவகை பரிசுத் தொகை காந்தி நினைவு பரிசுத் தொகையை போல் ஒவ்வொரு மாவட்டத்திலும் கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவர் மற்றும் மாணவி ஒருவருக்கும், பழங்குடியின மாணவர் மற்றும் மாணவி ஒருவருக்கும் வழங்கப்படுகிறது. கடந்த 4 ஆண்டுகளில் ஏற்பட்ட செலவு மற்றும் பயனாளிகள் விவரம் பின்வருமாறு.:–

| வருடம் | செலவு (ரூபாய் இலட்சத்தில்) | பயனடைந்தோர் எண்ணிக்கை |
|---|---|---|
| 2001–2002 | 0.34 | 26 |
| 2002–2003 | 0.26 | 22 |
| 2003–2004 | 0.08 | 8 |
| 2004–2005 (31–12–2004 முடிய) | 0.89 | 85 |



2005 மார்ச் 28]

## 15. விடுதிகள்

மாநிலத்தில் ஆதிதிராவிடர்களுக்கென 1,076 விடுதிகளும், பழங்குடியினருக்கென 26 விடுதிகளும் இயங்கி வருகின்றன. பழங்குடியினருக்கான அனைத்து 26 விடுதிகளும் அரசுக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. இவ்விடுதிகள் குறித்த விவரங்கள் பட்டியல் எண்கள் 4 மற்றும் 5–ல் கொடுக்கப்பட்டுள்ளன. வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் அனைத்து ஆதிதிராவிடர் நல விடுதிகளையும் அரசுக் கட்டடத்திற்கு கொண்டுவரவேண்டும் என்ற கொள்கை முடிவை மாண்புமிகு முதலமைச்சர் 2001–ல் அறிவித்தார். அதன்படி, ரூ.155.30 கோடி செலவில் 493 விடுதிகள் கட்ட ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதில் 264 விடுதிகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

## 16. பள்ளிக் கல்வித் துறையுடன் ஒருங்கிணைந்து செயலாற்றுதல்

"அனைவருக்கும் கல்வி" என்ற "சர்வ சிக்ஷா அபியான்" திட்டத்தின் மூலம் பள்ளிக் கல்வித் துறையுடன் சேர்ந்து செயலாற்ற இத்துறை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இதன்மூலம் தொடக்க, நடுநிலை மற்றும் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் எட்டாம் வகுப்புவரை தரமும் வசதிகளும் உயர்வடையும். "அனைவருக்கும் கல்வி" எனும் இத்திட்டத்தின்கீழ் ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளில் பணிபுரியும் இடைநிலை ஆசிரியர்கள் அனைவருக்கும் பணியிடைப்பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும், ஒலி–ஒளி துணைக்கலங்கள் பயன்படுத்தி பாடம் கற்பிக்கும் வகையில் ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி மூலம் ஆசிரியர்களின் கல்வி மற்றும் கற்பிக்கும் திறன் வளர்ச்சி அடைகிறது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை, 5,920 ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

## 17. குடியுரிமைப் பாதுகாப்பு

### (அ) தீண்டாமை ஒழிப்பு

இம்மாநிலத்தில் தீண்டாமை பழக்கத்தை ஒழிக்கவும் மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு எதிராக நிகழும் வன்கொடுமைகளைத் தடுக்கவும், 1955 ஆம் ஆண்டு குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் மற்றும் பட்டியலில் கண்ட சாதியினர் மற்றும் பட்டியலில் கண்ட பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்புச்) சட்டம் 1989 ஆகியவை சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதற்கென

காவல் துறை இயக்குநர் (சமூக நீதி குற்றப் புலனாய்வுத் துறை) தலைமையின்கீழ் மனித உரிமைகள் மற்றும் சமூக நீதிப் பிரிவு இயங்கி வருகிறது. அவருக்கு உதவியாக சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு காவல் துறை துணைத் தலைவர் பணியாற்றி வருகிறார். இதற்கென மாவட்டங்களில் 7 காவல் சரகங்களில் 7 துணை காவல் கண்காணிப்பாளர் தலைமையில் 34 காவல் ஆய்வாளர்கள் பணியாற்றுகின்றனர். மாநில அளவில் விழிப்பு மற்றும் கண்காணிப்புக் குழு ஒன்று செயல்பட்டு வருகிறது. மாவட்ட ஆட்சியரின் தலைமையின்கீழ் மாவட்ட அளவிலான விழிப்பு மற்றும் கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டு, இச்சட்டங்களை நடைமுறைப்படுத்துதல், நடப்பிலுள்ள பணிகள், பாதிக்கப்பட்டோர் மற்றும் அவரை சார்ந்திருப்பவர்களுக்கு தீருதவி வழங்கல் மற்றும் மறுவாழ்வு அளித்தல் ஆகிய பணிகள் இக்குழுவின் மூலம் ஆய்வு செய்யப்படுகின்றன. 2004–2005 ஆம் ஆண்டில் (31–12–2004 முடிய) ரூ.104.07 இலட்சம் செலவில் 690 பேர் பயனடைந்துள்ளனர்.

மேலும் இவ்விரு சட்டங்களை செயல்படுத்த முதல் நிலை குற்றவியல் நீதிபதிகளைக் கொண்ட 4 சிறப்பு நீதி மன்றங்கள் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் இயங்கி வருகின்றன. மற்ற மாவட்டங்களில் குற்றவியல் அமர்வு நீதி மன்றங்களுக்கு இவ்வழக்குகளை விசாரணை செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. மாநிலத்தில் தற்போது 13 சிறப்பு குற்றவியல் அரசு வழக்குரைஞர்கள் சென்னை, விழுப்புரம், மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி , கடலூர், ஈரோடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, நீலகிரி, வேலூர், திருவண்ணாமலை, தருமபுரி ஆகிய மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றனர்.

### (ஆ) தீண்டாமை ஒழிப்பு பிரச்சாரம்

தீண்டாமையின் தீமை குறித்து பொதுமக்களுக்கு எடுத்துரைக்கும் பணியை மேற்கொள்ள பணியாளர்கள் மற்றும் ஒலி–ஒளி அமைப்புடன் கூடிய இரண்டு நடமாடும் விளம்பரப் பிரிவுகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. இவை மாநிலத்தில் அனைத்து மாவட்டங்களிலும் தமது விளம்பரப் பணியை செய்து வருகின்றன. இது தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படும் வகையில் “புதிய சரித்திரம்”, “வாழு, வாழவிடு” மற்றும் “காலம் மாறிடுச்சு” போன்ற திரைப்படங்கள் கிராமங்களில் திரையிடப்படுகின்றன.



### (இ) தீண்டாமை ஒழிப்பில் சிறந்த கிராமங்களைத் தேர்ந்தெடுத்தல்

ஒவ்வொரு மாவட்டத்திலும் தீண்டாமையை கடைப்பிடிக்காமல் பொது மக்கள் நல்லிணக்கத்துடன் வாழும் ஒரு கிராமம் தேர்ந்தெடுக்கப்பட்டு அக்கிராமத்திற்கு ரூ.1.00 இலட்சம் வழங்கப்பட்டு வருகிறது. இத்தொகையைக் கொண்டு அக்கிராமத்தின் பயன்பாட்டிற்கு ஊராட்சி மன்றம் நிர்ணயித்தபடி குடிநீர் வழங்கல், பாதை வசதி, பள்ளிக்கூடடம் கட்டுதல், குழந்தைகள் நல மையம் போன்ற அடிப்படை வசதிகள் அளித்தல் அல்லது பஞ்சாயத்து முடிவின்படி கிராமத்திற்குத் தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன.

மனித நேய வார விழா ஒவ்வோர் ஆண்டும் மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் ரூ.5.15 இலட்சம் செலவில் ஜனவரி 24 முதல் 30 ஆம் நாள் வரை பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கூட்டங்கள் நடத்தி கொண்டாடப்படுகிறது. வில்லுப்பாட்டு கலைஞர்கள்மூலம் பொதுமக்களுக்குத் தீண்டாமை ஒழிப்பு குறித்து விளம்பரப்படுத்தப்படுகிறது.

சமபந்தி விருந்து ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 26, ஆகஸ்டு 15, அக்டோபர் 2 அல்லது அந்தந்த மாவட்டங்களில் முக்கியத்துவம் வாய்ந்த நாட்களில் ஏற்பாடு செய்யப்படுகிறது.

### (ஈ) தலித் கலை, இலக்கிய மேம்பாட்டு நிறுவனம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் தொடர்பான கலை, கலாச்சாரம், இலக்கியம் இவற்றைப் படைக்கும் திறனை ஊக்குவிக்கவும் இவர்கள் குறித்த ஆராய்ச்சியை மேற்கொள்ளவும் “தலித் மற்றும் பழங்குடியினர் செயல்கள் நிறுவனம்” (DATA) என ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

## 18. இட ஒதுக்கீடு

அரசுப் பணியாளர் தேர்வு முகமைகளான தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், ஆசிரியர் தேர்வு வாரியம் மற்றும் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் ஆகியவற்றின் மூலம் மேற்கொள்ளப்படும் நேரடி நியமனங்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் முறையே 18% மற்றும் 1% சட்டப்படியான இட ஒதுக்கீட்டின்படி நியமனம் செய்யப்படுகின்றனர். தகுதி வாய்ந்த

[2005 மார்ச் 28

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் போதிய அளவில் கிடைக்கப் பெறாத பட்சத்தில் அவர்களுக்கான அந்தப் பணியிடங்கள் பின்னடைவு காலிப் பணியிடங்களாக அறிவிக்கப்பட்டு, அடுத்து வருகின்ற தேர்வுகள் அல்லது சிறப்புத் தேர்வுகள்மூலம் நிரப்பப்படுகின்றன. இத்தகைய பின்னடைவு காலிப் பணியிடங்கள் காலாவதியாக அனுமதிக்கப்படுவதில்லை.

மேலும், அரசுத் துறைகள், அரசு சார்பு நிறுவனங்கள் / வாரியங்கள் மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றில் A,B,C,D ஆகிய ஒவ்வொரு பிரிவு பணியிடங்களிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் போதிய பங்கேற்பு இருப்பதை உறுதி செய்யும் நோக்கத்தோடும் மற்றும் இந்தப் பங்கேற்பு குறைவுபடுகின்ற இனங்களில் அந்தந்தப் பிரிவில் நுழைவு நிலையில் நேரடி நியமனம் மூலமாகவோ அல்லது பணிமாறுதல் மூலமாகவோ அப்பணியிடங்களை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின உறுப்பினர்களைக் கொண்டு நிரப்புவதற்கும், தேவைப்படின் அந்தந்தப் பணியிடங்களுக்கான பணி விதிகளுக்கு உரிய திருத்தங்கள் மேற்கொள்ளவும் விரிவான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. இதனை ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் தலைமையில் ஓர் உயர்மட்டக் குழு ஆய்வு செய்து வருகிறது.

## 19. கொத்தடிமை ஒழிப்பு

தேசிய அளவில் கொத்தடிமை முறையை நீக்குவதற்காக கொத்தடிமை (ஒழிப்புச்) சட்டம் 1976-ல் இயற்றப்பட்டது. இச்சட்டம் இயற்றப்பட்ட அதே ஆண்டு முதல் தமிழகத்திலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இம்மாநிலத்தில் மட்டுமின்றி பிற மாநிலங்களிலும் கொத்தடிமைத்தனத்தில் சிக்கியுள்ளவர்களை விடுவித்து அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்க இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. கொத்தடிமை ஒழிப்புச் சட்டத்தை மாநிலத்தில் திறம்பட நிறைவேற்றிடவும் அதன்மூலம் நிவாரணப் பணியை கண்காணிக்கவும் பல்வேறு துறைகளில் செயல்படுத்தப்படும் நலத் திட்டங்களின்மூலம் கொத்தடிமையிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளித்தல், குறிப்பாக வீட்டுவசதி வழங்குதல் போன்றவை குறித்து முடிவு எடுப்பதற்கும் அந்தந்த மாவட்ட ஆட்சியரை தலைவராகக் கொண்டு மாவட்டக்குழு அமைக்கப்பட்டுள்ளது. மாநில அளவில் தலைமைச் செயலாளர் தலைமையில் ஓர் உயர்மட்ட கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு இச்சட்டத்தின் கீழுள்ள கொத்தடிமை ஒழிப்பு குறித்து ஆய்வு செய்கிறது. கடன் வழங்குவோர் மற்றும் முதலாளிகளிடம்



2005 மார்ச் 28]

கொத்தடிமைகளாக இருந்து விடுவிக்கப் பட்டோருக்கு உடனடி நிவாரணத் தொகையாக ரூ.1,000/-ம், பின்னர் வருவாய் ஈட்டும் தொழில் மேற்கொள்ள அவர்களுக்கு மறுவாழ்வு நிதியாக ரூ.19,000/-ம் வழங்கப்படுகிறது. இதுவரையில் ரூ.1,342.46 இலட்சம் செலவில் 13,288 நபர்கள் கொத்தடிமையிலிருந்து விடுவிக்கப்பட்டு மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளனர்.

கொத்தடிமைத் தொழிலாளர்கள் தொடர்பான பிரச்சினைகளுக்கு களப் பணியாளர்கள் மற்றும் அரசு சாரா தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வண்ணம், தேசிய மனித உரிமை ஆணையத்துடன் இணைந்து 2005 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 4 மற்றும் 5 தேதிகளில் இரண்டு நாள் கருத்தரங்கினை இத்துறை சென்னையில் நடத்தியுள்ளது.

### திருவள்ளூர் மாவட்டத்தில் கொத்தடிமைத் தடுப்பு மற்றும் மறுவாழ்வு மாதிரி திட்டம்

இந்த அரசு கொத்தடிமைகள் விடுவிப்பு மற்றும் அவர்தம் மறுவாழ்வு மீது அக்கறை செலுத்துவதோடுமட்டுமல்லாமல், அவர்கள் மேலும கடனாளிகளாக ஆவதைத் தடுப்பதிலும் கவனம் செலுத்துகிறது. அகில உலக தொழிலாளரமைப்பின் தீவிர ஈடுபாட்டுடன் திருவள்ளூர் மாவட்டத்தில் கொத்தடிமை முறையை தடுக்கும்விதத்தில் திட்டங்கள் செயல்படுத்த ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைச் செயலாளர் தலைமையின்கீழ் திட்ட அறிவுரைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

## 20. சாதிச் சான்றிதழ்கள்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தவர்களுக்கு அரசியல் அமைப்பின்கீழ் அளிக்கப்பட்டுள்ள இட ஒதுக்கீட்டை, போலியான சாதிச் சான்றுகள் அளித்து இதர இனத்தவர் கல்வி நிறுவனங்களில் சேர்தல், பொதுப் பணிகளில் நியமனம் பெறுதல் மூலம் உண்மையான ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் பாதிக்கப்படுகின்றனர். எனவே, அவ்வாறு அளிக்கப்பட்ட சான்றுகளின் மெய்த்தன்மையினை முறையாக ஆய்வு செய்தல் இன்றியமையாததாகும். இதற்கென உச்சநீதிமன்றம் A.I.R. 1995 SC. 94-ல் சமூகநிலைச் சான்று வழங்குதல், அதன் மெய்த்தன்மையினை ஆய்வு செய்தல் மற்றும் ஒப்பளித்தல் குறித்து வழிகாட்டி நெறிமுறைகளை வகுத்தளித்துள்ளது. அதனடிப்படையில் சாதிச் சான்றிதழ்களை ஆய்வு செய்வதற்காக அரசு மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் முறையே இரு குழுக்களை அமைத்துள்ளது. மாவட்ட

[2005 மார்ச் 28

விழிப்புணர்வுக் குழுக்கள் இத்தகு நிகழ்வுகளை, உரிய ஆவணங்களைப் பரிசீலித்து ஆய்வு செய்த பின், சாதிச் சான்றிதழ்கள் பொய்த்தன்மை வாய்ந்ததாய் இருப்பின் அவற்றை இரத்து செய்து விரிவான ஆணைகள் வெளியிடுகின்றன. மாவட்ட விழிப்புணர்வுக் குழுக்களால் வெளியிடப்படும் ஆணைகளை மாநில கூர்நோக்குக் குழு மறு ஆய்வு செய்வதுடன், மாவட்ட விழிப்புணர்வுக் குழுக்களின் ஆணையினால் பாதிக்கப்பட்டவர்கள் தொடரும் மேல்முறையீடுகளையும் ஆய்வு செய்கிறது.

**21. இலவச வீட்டுமனைப் பட்டாக்கள்**

வறுமைக் கோட்டிற்குக்கீழே வாழும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் தொடர்ந்து பல ஆண்டுகளாக வழங்கப்பட்டு வருகின்றன. மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்ட பல இடங்களில் அடிப்படை வசதிகள் இல்லாத காரணத்தால் பயனாளிகள் அவ்விடங்களில் குடியேறாமல் உள்ளனர். மனைப் பட்டாக்கள் வழங்கி எண்ணிக்கையைப் பெருக்குவதற்குப் பதிலாக அப்படிப்பட்ட இடங்களில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 2001–2002 ஆம் ஆண்டில் ரூ.5.00 கோடி ஒதுக்கப்பட்டது. 2002–2003 முதல் 2004–2005 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு ஆண்டும் ரூ.1.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதனால் பயனாளிகள் தாங்களாகவே முன்வந்து வீடுகளை கட்டிக் கொண்டு குடியேறினர். இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் மற்றும் அடிப்படை வசதிகள் செய்ய கடந்த 4 ஆண்டுகளுக்கான செலவினம் மற்றும் பயனடைந்தோர் விவரம் பின்வருமாறு:–

**வீட்டுமனைப் பட்டாக்கள்**

| வருடம் | செலவினம் (ரூபாய் இலட்சத்தில்) | பயனடைந்தவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2001–2002 | 396.77 | 17240 |
| 2002–2003 | 290.50 | 13080 |
| 2003–2004 | 381.84 | 13395 |
| 2004–2005 (31–12–2004 முடிய) | 117.17 | 3670 |



2005 மார்ச் 28]

**அடிப்படை வசதிகள்**

| வருடம் | செலவினம் (ரூபாய் இலட்சத்தில்) | குடியிருப்புகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2001–2002 | 93.00 | 21 |
| 2002–2003 | 100.00 | 95 |
| 2003–2004 | 100.00 | 74 |
| 2004–2005 (31–12–2004 முடிய) | 39.00 | 47 |

**22. வீட்டு வசதி**

ஊரக வளர்ச்சித் துறை மூலம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின பயனாளிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் தொகுப்பு வீடுகள் கான்கிரீட் கூரை வேயப்பட்ட வீடுகளாக கட்டிக்கொள்ள உதவும் வகையில் ஒவ்வொரு தொகுப்பு வீட்டிற்கும் ரூ.12,000/– மானியமாக ஊரக வளர்ச்சித் துறை நிதியுடன் இத்துறை மூலம் வழங்கப்படுகிறது.

**23. சமுதாயக் கூடங்கள்**

ஆதிதிராவிடர்கள் திருமணங்கள் நடத்துவதற்கும், சமுதாய விழாக்கள், கூட்டங்கள் போன்ற நிகழ்ச்சிகளை நடத்துவதற்கான தேவையினை பூர்த்தி செய்வதற்கும் ஆதிதிராவிடர்கள் குடியிருப்புகளில் சமுதாயக் கூடங்கள் கட்டப் படுகின்றன. 2004–2005 ஆம் ஆண்டில் இரண்டு சமுதாயக் கூடங்கள் ரூ.12.00 இலட்சம் செலவில் திருநெல்வேலி மாவட்டத்தில் பழங்கோட்டை, பெரம்பலூர் மாவட்டத்தில் வேப்பந்தட்டை ஆகிய இடங்களில் கட்டப்பட்டுள்ளன. 2005–2006 ஆம் ஆண்டில் இதற்கென ரூ.14.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**24. மயானங்கள் மற்றும் பாதை வசதி**

ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கான மயான வசதி மற்றும் மயானப் பாதைகள் இத்திட்டத்தின்கீழ் அமைத்துத் தரப்படுகின்றன. இத்திட்டத்திற்குத் தேவையான நிலத்தினை வாங்குவதற்கும், கையகப்படுத்துவதற்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. ஊராட்சி ஒன்றியங்களும் தமது நிதியிலிருந்து ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து தருகின்றனர். இதற்காக

குடிநீர் வசதிக்கு 15% ம் இணைப்புச்சாலை வசதிக்கு 10%-ம் இத்துறையின் பங்குத் தொகையாக வழங்கப்படுகின்றது. கடந்த 4 ஆண்டுகளில் இத்திட்டம் தொடர்பான விவரங்கள் பின்வருமாறு:-

| வருடம் | ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) | | செலவினம் (ரூபாய் இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|
| | சிறு பணிகள் | நிலங்கள் | சிறு பணிகள் | நிலங்கள் |
| 2001–2002 | 61.00 | 183.00 | 56.82 | 74.78 |
| 2002–2003 | 22.50 | 91.50 | 21.90 | 44.00 |
| 2003–2004 | 10.00 | 91.50 | 9.44 | 46.04 |
| 2004–2005 | 10.00 | 66.00 | 6.69 (31-12-2004 முடிய) | 26.71 (31-12-2004 முடிய) |

2005-2006 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.71.01 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 25. ஈமச் சடங்குக்கு உதவித் தொகை

ஆதிதிராவிடர், கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடும்பத்தில் ஒருவர் இறந்துவிட்டால் அவரின் ஈமச் சடங்கிற்கான செலவினை மேற்கொள்ள நிதி உதவியாக ரூ.500/- வழங்கப்படுகிறது. இதற்கான ஆண்டு வருமான வரம்பு ரூ.24,000/- ஆகும். 2005-2006 ஆம் ஆண்டில் இதற்கென ரூ.62.30 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## 26. சிறப்பு உள்ளடக்கத் திட்டம்

ஆறாவது ஐந்தாண்டு திட்டக் காலத்திலிருந்து ஆதிதிராவிடர் மக்கள் தொகையின் விகிதத்திற்கேற்ப அவர்களுக்குரிய பயன்கள் சென்றடைய வேண்டுமென மைய அரசு உணர்ந்ததால் சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தினை ஆதிதிராவிடர்களுக்கென அறிமுகப்படுத்தியது. சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்படும் நிதி முழுமையாக பயன்படுத்தப்படுவதை உறுதிசெய்யும் பொருட்டு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை ஒருங்கிணைப்புத் துறையாக செயல்படுகிறது.



பல்வேறு அரசுத் துறைகள் வாயிலாக வழங்கப்படும் அரசின் நிதியுதவி ஆதிதிராவிடர்களை எளிதாகச் சென்றடைவதை உறுதி செய்வதற்காக இத்திட்டத்தை இறுதி செய்து செயல்படுத்தி ஒருங்கிணைத்து வரும் மாநில திட்டக்குழுவின் உறுப்பினர் செயலரை (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்) தலைமையாகக் கொண்ட உயர்மட்டக் குழு, அதிகாரம் அளிக்கப்பட்ட குழுவாக உயர்த்தப்பட்டுள்ளது. இக்குழு பகுக்கப்படும் மற்றும் பகுக்கப்படாத புதிய திட்டங்களை முடிவு செய்து பல்வேறு அரசுத் துறைகளின் வாயிலாக நிறைவேற்றுவதைத் தீர்மானிக்கும்.

2000-2002 ஆம் ஆண்டுகளில் சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின் முன்னேற்ற அறிக்கை பின்வருமாறு :-

(ரூபாய் இலட்சத்தில்)

| வருடம் | மாநில திட்ட மதிப்பீடு | சிறப்பு உள்ளடக்கத் திட்டம் (19.18%) | செலவினம் | சி.உ.தி. பொறுத்த செலவினத்தின் விழுக்காடு | திட்ட மதிப்பீட்டினைப் பொறுத்த செலவினத்தின் விழுக்காடு |
|---|---|---|---|---|---|
| 2000–2001 | 570026.24 | 101337.00 | 76453.07 | 75.44% | 13.41% |
| 2001–2002 | 520000.00 | 98778.27 | 74331.68 | 75.25% | 14.29% |

2002–2003 ஆம் ஆண்டிலிருந்து சிறப்பு உள்ளடக்கத் திட்டமானது ஆதிதிராவிடர் மக்கள் நேரடியாக பயன் பெறும் திட்டம் மற்றும் மற்ற மக்களுடன் சேர்ந்து பயன்பெறும் திட்டம் என இருவகையாக பிரிக்கப்பட்டு செலவின விவரங்கள் மேற்கொள்ளப்பட்டன. அதன் விவரம் பின்வருமாறு:-

[2005 மார்ச் 28

(ரூபாய் இலட்சத்தில்)

| வருடம் | மாநிலத் திட்ட மதிப்பீடு | சிறப்பு உள்ளடக்கத் திட்டம் (19.18%) | செலவினம் | | | சி.உ.தி. பொறுத்த செலவினத்தின் விழுக்காடு | மாநில திட்ட மதிப்பீட்டின் செலவின விழுக்காடு |
|---|---|---|---|---|---|---|---|
| | | | பகுக்கக் கூடியது | பகுக்க முடியாதது | மொத்தம் | | |
| 2002-2003 | 575152.96 | 110373.55 | 40209.13 | 79069.95 | 119279.08 | 108.06% | 20.73% |
| 2003-2004 | 700013.16 | 135370.64 | 61388.49 | 100125.28 | 161513.77 | 119.31% | 23.07% |
| 2004-2005 | 800108.10 | 154343.79 | 33596.24 | 40780.27 | 74376.51* | 48.00%* | 9.26%* |

(*31-12-2004 வரையுள்ள செலவினம் )

இச்செயல்பாடுகளை ஒருங்கிணைக்கும் பொருட்டு ஒவ்வொரு துறையிலும் ஒருங்கிணைக்கும் அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.



2005 மார்ச் 28]

## II. தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ)

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களின் முன்னேற்றத்திற்கென தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகம், 1974 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது. இக்கழகம் தொழில்நுட்பப் பிரிவு மற்றும் வளர்ச்சிப் பிரிவு என்ற இரு பிரிவுகளை உள்ளடக்கியது. பிரிவு மற்றும் வளர்ச்சிப் பிரிவு என்ற இரு பிரிவுகளை உள்ளடக்கியது. விடுதிகள், பள்ளிக் கட்டடங்கள், ஆசிரியர் குடியிருப்புகள் வகுப்பறைகள் போன்ற கட்டுமானப் பணிகளைத் தொழில்நுட்பப் பிரிவு மேற்கொண்டு வருகிறது. 1980-1981-லிருந்து இக்கழகத்தின் வளர்ச்சிப் பிரிவு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் தேவையின் அடிப்படையிலான பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை, இப்பிரிவினர், பொருளாதார மேம்பாடு அடையும்வண்ணம் நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

## 27. பொருளாதார மேம்பாட்டு முனைப்பு நடவடிக்கைகள்

### (அ) திட்டங்கள் செயல்முறையைப் பன்முகப்படுத்துதல்

2002-2003 ஆம் ஆண்டு முதல், மாவட்டச் செயலாக்கத் திட்டம், அந்தந்த மாவட்ட ஆட்சியர்களால் அம்மாவட்டத்திலுள்ள ஆதிதிராவிட மக்களின் தேவை மற்றும் தொழில் செய்வதற்கு அம்மாவட்டத்திலுள்ள வசதி வாய்ப்புகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பயனாளிகள் பன்முகப்படுத்தப்பட்டு, வட்டார அளவில் தெரிவு செய்யப்படுகின்றனர்.

### (ஆ) மகளிர் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள்

திட்ட இலக்கு, தனிநபர் பயனாளிகளுக்கு மட்டும் உதவுவது என்ற நிலை மாறி, தற்சமயம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும்வகையில், மாவட்டச் செயலாக்கத் திட்டத்தின் 75% ஒதுக்கீடு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சுய உதவிக் குழுக்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

### (இ) தனி நபர் பயனாளிகளுக்கான நிதி உதவி

தனிநபர் பயனாளிகளுக்கான திட்டத்தின்கீழ், 17,849 நபர்களுக்குச் சுய தொழில்கள் துவங்க, ரூ.34.17 கோடி நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது.

[2005 மார்ச் 28

## (ஈ) தொழிற் பயிற்சி

ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு அளிக்கப்படும் தொழிற் பயிற்சித் திட்டங்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் அமைக்கப்பட்ட மாவட்டத் தொழிற் பயிற்சித் தேர்வுக் குழுவால் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. இப்பயிற்சிகள் மத்திய, மாநில அரசு நிறுவனங்கள் மற்றும் தொழில்நுட்பக் கல்வி இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநர் ஆகியோரால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் ஆகியவற்றின்மூலம் அளிக்கப்படுகின்றன. 2003–2004 ஆம் நிதியாண்டில், தொழிற் பயிற்சித் திட்டத்தின்கீழ், 452 தொழிற் பயிற்சி நிறுவனங்களில், 505 பயிற்சிகள் நடத்தப்பட்டு அதன்மூலம் 8,336 ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு, அதிக வேலைவாய்ப்பு பெறும் திறனை அளிக்கும் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

## (உ) மாவட்ட ஆட்சியரின் விருப்புரிமை நிதி

நலிவடைந்த ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் மேம்பாட்டிற்கென 2002–2003 முதல் மாவட்ட ஆட்சியரின் விருப்புரிமை நிதி தொடங்கப்பட்டு, ஏற்கெனவே நடைமுறையிலுள்ள திட்டங்கள் மூலம் பயன்பெற இயலாத நிலையிலுள்ள மிகவும் நலிவடைந்த ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு நூறு விழுக்காடு மானியம் அடிப்படையில் வருமானம் ஈட்டக்கூடிய தொழிலைத் தொடங்குவதற்கு மாவட்ட ஆட்சியர்மூலம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ், 3,139 பயனாளிகளுக்கு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

## (ஊ) தேசிய துப்புரவுப் பணியாளர் விடுவிப்பு மற்றும் மறுவாழ்வுத் திட்டம்

தேசிய துப்புரவுப் பணியாளர் மறு வாழ்வுத் திட்டம் சீரமைக்கப்பட்டு துப்புரவுப் பணியாளர் மற்றும் முற்றிலும் அவர்களைச் சார்ந்து வாழ்பவரின் பொருளாதாரத்தினை மேம்படுத்தும்வகையில், சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு, வருமானம் ஈட்டக்கூடிய தொழிலை மேற்கொள்ள போதிய பயிற்சியும் பொருளாதார உதவியும் அவர்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் சனவரி 2005 வரையில் 792 சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

## (எ) நிலம் வாங்கும் திட்டம்

2003–2004–ல் நிலம் வாங்கும் திட்டம் என்ற புத்தமைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 2004–2005 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தின்கீழ் 7,000 ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினர் மகளிர்

2005 மார்ச் 28]

பயன்பெறும் வகையில் நிலம் வாங்கவும் பிற வேளாண் முதலீடு செய்யவும் ரூ.70.00 கோடி நிதி உதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், நிலம் வாங்க, நில மேம்பாடு மற்றும் சிறிய அளவிலான நீர்ப்பாசனம் மற்றும் கால்நடை பராமரிப்பதற்காக 50% தாட்கோ மானியமும் 50% வங்கிக் கடனும் அளிக்கப்படுகிறது. திட்டத்தின் மொத்த நிதி உதவியான ரூ.2.00 இலட்சத்தில் நிலம் வாங்க ரூ.1.00 இலட்சமும் நில மேம்பாட்டிற்கு ரூ.1.00 இலட்சமும் வழங்கப்படுகிறது. ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின ஏழை பெண்களுக்காக மட்டுமே, இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இத்துடன், இந்த ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினப் பயனாளிகளுக்கு விவசாயத்திற்காக 5,000 வேளாண் பணி இணைப்புகள் முன்னுரிமை அடிப்படையில் வழங்க வகைசெய்யப்பட்டுள்ளது. மேலும், இப்பயனாளிகளுக்கு முத்திரைத் தாள் மற்றும் பத்திரப் பதிவு கட்டணத்தில் 75% விலக்கு அளிக்கப்படும்.

## (ஏ) சிறப்புப் பொருளாதாரத் திட்டங்கள்

2004–2005 ஆம் நிதியாண்டில் "சிறப்புப் பொருளாதாரத் திட்டங்கள்" என்ற புதிய திட்டம் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினக் குடும்பங்களில், குறிப்பிட்டோரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த தொடங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் பிழைப்புக்கு ஆதாரமாக நிரந்தர வருவாய் ஈட்டக்கூடிய குறிப்பிட்ட தொழில்முறை கண்டறியப்பட்டு அதற்கான நிதியுதவி செயல்திட்ட வடிவில் அளிக்கப்படும். இத்திட்டத்தின்கீழ், ரூ.15.00 கோடி நிதியுதவி மானியமாக வழங்கப்பட்டு, 6,000 ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினப் பயனாளிகள் பயன்பெறுவர்.

## (ஐ) இளைஞர்களுக்கான சுய தொழில் வேலைவாய்ப்புத் திட்டம்

2004–2005 ஆம் நிதியாண்டு முதல் இளைஞர்களுக்கான சுய தொழில் வேலைவாய்ப்புத் திட்டம் என்ற புதிய திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதன்மூலம் மாவட்டத்திற்கு உரித்தான நிரந்தர தொழில்முறைகள் கண்டறியப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட இளைஞர்களுக்குப் பயிற்சி அளித்து, அவர்களை வழிநடத்தும் முகமை மூலம் அவர்களால் நடத்தக்கூடிய சிறிய தொழில்கள் தொடங்க வழிவகை செய்யப்படும். இத்திட்டத்தின்கீழ், 4,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்கள் பயனடையும்வகையில் ரூ.10.00 கோடி நிதி உதவி மானியமாக வழங்கப்படும்.

தாட்கோவின் மேம்பாட்டுத் திட்டங்கள் மூலமாக, 2005–2006 ஆம் ஆண்டில் வறுமைக் கோட்டிற்குக்கீழ் இருக்கும் 1.50 இலட்சம் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினப் பயனாளிகள் பயன்பெறுவர்.

[2005 மார்ச் 28

## III. பழங்குடியினர் நலன்

2001 ஆம் வருட மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டில் 6.51 இலட்சம் பழங்குடியினர் உள்ளனர். இது மொத்த மக்கட் தொகையில் 1.04% ஆகும். பழங்குடியினர் நலனுக்காக தனியே ஓர் இயக்ககம் 1-4-2000 முதல் செயல்பட்டு வருகிறது. பழங்குடியினர் நல இயக்ககம் பழங்குடியினர்கள் அதிகம் வாழும் 13 மாவட்டங்களில் தனிக் கவனம் செலுத்தி வருகிறது. மாநிலத்தின் 36 வகை பழங்குடியினர்களில் 6 வகை பழங்குடியினர் அதாவது தோடா, கோட்டா, குரும்பாஸ், இருளர், பனியன், காட்டுநாயகன் ஆகியோர் பண்டைய பழங்குடியினர்களாகக் கண்டறியப்பட்டுள்ளனர். பழங்குடியினர் மொத்த மக்கட் தொகையில் 50%–க்கும் அதிகமாக வாழும் பகுதி ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதியென அறிவிக்கப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப்பகுதி 6 மாவட்டங்களில் உள்ளது. பரவலாக வாழும் மற்ற பழங்குடியினர்கள் பரவி வாழும் பழங்குடியினர்கள் என்று அழைக்கப்படுகின்றனர்.

### 28. பழங்குடியினர் துணைத் திட்டம்

பழங்குடியினர்களின் பொருளாதார, கல்வி, சமூக நிலையை மேம்படுத்தி பழங்குடியினர்க்கும், பழங்குடியினரல்லாதவர்க்கும் உள்ள இடைவெளியைக் குறைப்பது அவசியமாகிறது. பழங்குடியினரின் நிலை, தொழிலாளர் முனைப்பான திட்டம் மற்றும் அதன் செயலாக்கத்தின் அவசியத்தை வலியுறுத்துகிறது. பழங்குடியின மேம்பாட்டின் முக்கிய குறிக்கோள் இம்மக்களைப் பொருளாதார மற்றும் சமூக மேம்பாட்டு நீரோட்டத்தில் ஒருங்கிணைப்பதாகும். 1976–1977 ஆம் ஆண்டிலிருந்து நலம் மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளைச் செயல்படுத்தும் அனைத்துத் துறைகளும் மாநிலத்திலுள்ள மக்கட் தொகையிலுள்ள பழங்குடியினரின் விகிதத்திற்கேற்ப அவர்களது திட்டங்களால் பயன்பெறுவதை உறுதி செய்யவேண்டும் என்ற நோக்கில் பழங்குடியினர் துணைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. மேற்குறிப்பிடப்பட்ட அனைத்தையும் கருத்தில்கொண்டு அரசின் நோக்கங்களை நிறைவேற்றும்வகையில் பழங்குடியினர் துணைத் திட்டம் உருவாக்கப்படுகிறது. பழங்குடியினர் துணைத் திட்டம் பல்வேறு துறைகளின் உதவியுடன் மாநிலப் பழங்குடியினர் மக்கட்தொகையான 1.04%–க்கு நிதி ஒதுக்கீடு செய்து



2005 மார்ச் 28]

திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. 2000–2002 ஆம் ஆண்டுகளுக்கான பழங்குடியினர் துணைத்திட்ட முன்னேற்ற அறிக்கை பின்வருமாறு:–

(ரூபாய் இலட்சத்தில்)

| வருடம் | மாநில திட்ட முதலீடு | திட்டமிடப்பட்ட பழங்குடியினர் துணைத் திட்டம் (1.03%) | செல வினம் | திட்டமிடப் பட்ட பழங்குடி யினர் துணைத் திட்டம் விழுக்காடு | ஆண்டுத் திட்ட செலவினம் விழுக்காடு |
|---|---|---|---|---|---|
| 2000–2001 | 570026.24 | 5859.87 | 1754.88 | 29.94% | 0.30% |
| 2001–2002 | 520000.00 | 7295.46 | 1615.80 | 22.14% | 0.31% |

2002–2003 ஆம் ஆண்டிலிருந்து பழங்குடியினர் துணைத் திட்ட செலவின விவரம் பகுக்கக்கூடியவை, பகுக்கக்கூடாதவை எனப் பிரித்து அளிக்கப்பட்டுள்ளது:–

(ரூபாய் இலட்சத்தில்)

| வருடம் | மாநிலத் திட்ட மதிப்பீடு | பழங்குடியினர் துணைத் திட்டம் (1.03%) | செலவினம் | | | ப.து.தி. பொறுத்த செலவினத்தின் விழுக்காடு | மாநில திட்டமதிப்பீட்டினைப் பொறுத்த செலவினத்தின் விழுக்காடு |
|---|---|---|---|---|---|---|---|
| | | | பகுக்கக் கூடியது | பகுக்க முடியாதது | மொத்தம் | | |
| 2002–2003 | 575152.96 | 5941.03 | 2001.99 | 1427.01 | 3429.00 | 57.71% | 0.59% |
| 2003–2004 | 700013.16 | 8606.00 | 3629.88 | 4869.70 | 8499.58 | 98.76% | 1.21% |
| 2004–2005 | 800108.10 | 8406.42 | 1009.50 | 1864.69 | 2874.19* | 34.19%* | 3.88%* |

(*31–12–2004 வரையுள்ள செலவினம்)

இச்செயல்பாடுகளை ஒருங்கிணைக்கும் பொருட்டு ஒவ்வொரு துறையிலும் ஒருங்கிணைக்கும் அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

[2005 மார்ச் 28

## 29. பழங்குடியினருக்கான அடிப்படைக் கட்டுமான அமைப்பு

### (அ) வீட்டுவசதித் திட்டம்

மலைப்பகுதி மற்றும் சமவெளிப் பகுதியில் வாழும் பழங்குடியினர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக அரசால் ஆண்டுதோறும் சமவெளிப் பகுதிகளில் ஒரு வீட்டிற்கு ரூ.32,000/– வீதமும் மலைப் பகுதிகளில் ரூ.34,000/– வீதமும் அவர்களுக்கு வீடுகள் கட்டித் தரப்படுகின்றன. இத்திட்டத்தின் முழுச் செலவினமும் அரசால் மேற்கொள்ளப்படுகிறது. 2004–2005–ல், இத்திட்டத்திற்கென ரூ.16.80 இலட்சம் ஒதுக்கப்பட்டு வீடுகள் கட்டுமானப் பணி நடந்தேறிவருகிறது. இத்திட்டத்திற்காக 2005–2006 ஆம் ஆண்டில், ரூ.16.80 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (ஆ) பொருளாதார மேம்பாடு

பழங்குடியினர் நலனுக்காக தமிழ்நாட்டில் 19 பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் (LAMPS) சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்கள் மூலம் பழங்குடியினருக்குச் சிறு கடன் உதவிகள் வழங்கப்படுகின்றன. மேலும், அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு நியாயமான விலைகள் கிடைக்கப் பெறுவதற்கும் இச்சங்கங்கள் உதவி புரிகின்றன. 19 பெரும் பலநோக்கு கூட்டுறவுச் ( LAMPS ) சங்கங்களின் விவரங்கள் பட்டியல் 10–ல் தரப்பட்டுள்ளன.

வேலைவாய்ப்பில் வழிகாட்டும்வகையில் 4 தொழில் நெறி வழிகாட்டு மையங்கள் உதகமண்டலம், சங்கராபுரம், கொல்லிமலை, ஜவ்வாது மலைப் பகுதிகளிலும் மற்றும் விழுப்புரம் மாவட்டம் சங்கராபுரத்தில் ஒரு தொழிற்பயிற்சி நிலையமும் செயல்பட்டு வருகின்றன. பழங்குடியினர் நல்வாழ்வைக் கருத்தில்கொண்டு, 25 ஆரம்ப சுகாதார நிலையங்களும், 76 துணை சுகாதார நிலையங்களும், 7 சித்த மருத்துவமனைகளும், 5 அரசு மருந்தகங்களும் மற்றும் ஒரு நடமாடும் சித்த மருத்துவ நிலையமும் செயல்பட்டு வருகின்றன. 25 ஆரம்ப சுகாதார நிலையங்களின் விவரங்கள் பட்டியல் எண் 11–ல் தரப்பட்டுள்ளன.

### (இ) குடும்ப வருவாய் ஈட்டித் தரும் திட்டங்கள்

பண்டைய பழங்குடியினர் மற்றும் பரவி வாழும் பழங்குடியினர் ஆகியோரின் குடும்ப வருவாய் ஈட்டித் தரும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ஆடு அலகுகள் பழங்குடியினர்களுக்கு வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் 2004–2005 ஆம் ஆண்டில்



2005 மார்ச் 28]

68 ஆடு அலகுகள் ரூ.6.12 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளன. 2005–2006 ஆம் ஆண்டில் இதற்கென ரூ.6.12 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (ஈ) குடிநீர் வசதி

ஒவ்வோர் ஆண்டும் பழங்குடியினர்களுக்குக் குடிநீர் வசதி செய்துதர நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. 2004–2005 ஆம் ஆண்டில் குடிநீர் வசதி வழங்குவதற்காக ரூ.32.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. 2005–2006 ஆம் ஆண்டிலும் ரூ.32.00 இலட்சம் ஒதுக்கீட்டுடன் இத்திட்டம் தொடரப்படும்.

### (உ) மைய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள்

பழங்குடியினர் பகுதியில் பின்வரும் மைய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன:–

#### (i) பழங்குடியினர் துணைத் திட்டத்திற்கான சிறப்பு மைய உதவி

இத்திட்டத்தின்கீழ், நிதி ஒதுக்கீடு பழங்குடியினர்களுக்கு வருவாய் ஈட்டித் தரும் திட்டத்திற்கு முதன்மையாகவும் இதில் ஒரு பகுதி (30% மிகாமல்) இந்த வருவாய் ஈட்டித் தரும் திட்டத்திற்கான அடிப்படை வசதிகளுக்காகச் செலவிடப்படுகிறது. 2004–2005 ஆம் ஆண்டில் ரூ.290.99 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

#### (ii) இந்திய அரசியலமைப்புச் சட்ட விதி 275(1)-ன்கீழ் விடுவிக்கப்படும் நிதி

கடந்த நான்காண்டுகளில் இத்திட்டத்தின்கீழ் ரூ.2.95 கோடி செலவில் விழுப்புரம் மாவட்டம் கல்ராயன் மலையில் உள்ள வெள்ளிமலையில் மாதிரி உண்டு உறைவிட மேல்நிலைப் பள்ளி ஏற்படுத்தப்பட்டது. கோயம்புத்தூர் மாவட்டத்தில் தோலாம்பாளையம் முதல் கோபனாரி வரை புதிய சாலை அமைத்தல் பணிக்கு ரூ.310.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. ரூ.63.00 இலட்சத்தில் பழங்குடியினருக்கு வீடுகளும் மற்றும் மின்வசதி திட்டமும் செயல்படுத்தப்பட்டுள்ளது. பழங்குடியினர் வாழும் பகுதிகளுக்கு ரூ.239.77 இலட்சத்தில் உள் கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கோவை மாவட்டத்தில் பழங்குடியினர் நலனுக்கென ரூ.70.00 இலட்சம் செலவில் 5 இணைப்புச் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் நாமக்கல் மாவட்டத்தில் முள்ளுக்குறிச்சி முதல் நரியன்காடு வரை தார்ச் சாலை அமைப்பதற்கு ரூ.70.00 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இதனைத் தவிர்த்து, பழங்குடியினர் பகுதிகளில்

சாலை வசதிகள், குடிநீர் வசதி, தெருவிளக்கு மற்றும் வீடுகள் கட்டித் தருதல் போன்ற பல்வேறு வசதிகள் செய்து தருவதற்காக ரூ.213.48 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2004–2005 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கென ரூ.113.76 இலட்சம், முதல் தவணையாக விடுவிக்கப்பட்டுள்ளது.

### (iii) பண்டைய பழங்குடியினர் மேம்பாட்டிற்கான மைய அரசின் நிதியுதவி

நீலகிரி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் உள்ள பழங்குடியினருக்காக சூரிய ஒளி விளக்குகள் அமைக்கும் பணி ரூ.49.54 இலட்சத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டத்தில் பனியா பண்ணை வீடுகள் பண்டைய பழங்குடியினர்களுக்குக் கட்டிக் கொடுப்பதற்காகவும், பண்டைய பழங்குடியினர் புள்ளிவிவரக் கணக்கெடுப்புப் பணி மேற்கொள்வதற்காகவும் ரூ. 45.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. பண்டைய பழங்குடியினர் புள்ளிவிவர கணக்கெடுப்புப் பணி, ஊட்டி பழங்குடியினர் ஆராய்ச்சி மையத்தால் மேற்கண்ட கணக்குத் தலைப்பின்கீழ் ஒதுக்கப்பட்டுள்ள நிதியின்மூலம் நடைபெற்று வருகிறது. திருவள்ளூர் மாவட்டத்தில் ரூ.10.00 இலட்சம் செலவினத்தில் பழங்குடியினர் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி செய்துதரப்பட்டுள்ளது. 2004–2005 ஆம் ஆண்டில் ரூ.136.50 இலட்சம் இத்திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (iv) ஜனஸ்ரீ பீமா யோஜனா (JBY)

பண்டைய பழங்குடியினரிடையே இயற்கைக்கு மாறான மரணம் குறித்த அறிக்கையைக் கருத்திற்கொண்டு வறுமைக்கோட்டிற்குக் கீழ் மற்றும் அதற்குச் சிறிதளவு மேலாக வாழும் 18 முதல் 58 வயது வரையுள்ள பண்டைய பழங்குடியினருக்கென ஒரு காப்பீட்டுத் திட்டம் வடிவமைக்கப்பட்டது. 2004–2005 ஆம் ஆண்டு முதல் இத்திட்டத்தில் 8000 பண்டைய பழங்குடியினர்களுக்கு ஆண்டு பிரீமியம் நபர் ஒன்றுக்கு ரூ.100/– வீதம் ஐந்தாண்டுகளுக்கு செலுத்துவதற்காக மைய அரசு ரூ.40.00 இலட்சம் அளித்துள்ளது.

### (v) பழங்குடியினர் ஆராய்ச்சி மையம் மற்றும் அருங்காட்சியகம்

பழங்குடியினரின் தொன்மைக்கால வரலாற்றை நினைவுகூறும் வகையில் பழங்குடியினர்களுக்காக அருங்காட்சியகம் ஒன்று ஊட்டி





பழங்குடியினர் ஆராய்ச்சி மையத்தில் ரூ.200.00 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. இதில் ரூ.120.00 இலட்சம் ஏற்கெனவே விடுவிக்கப்பட்டுள்ளது. பழங்குடியினர் ஆராய்ச்சி மையத்தில் பழங்குடியினர்கள் தொடர்பான ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் பழங்குடியினர் திட்டங்களை ஆய்வு செய்தல், பழங்குடியினர் புள்ளி விவரக் கணக்கெடுப்பு ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. பழங்குடியினரின் வரைவு தேசிய கொள்கை குறித்து கலந்துரையாட தென்மண்டலக் கருத்தரங்கு ஒன்று, 2004 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 22 மற்றும் 23 ஆம் தேதிகளில் உதகமண்டலத்தில் நடைபெற்றது.

## 30. பழங்குடியினருக்கான இதர திட்டங்கள்

### (அ) பழங்குடியினர் சுய உதவிக் குழுக்கள்

பழங்குடியின மகளிருக்கு அதிகாரம் அளிக்கும்வகையில் சுய உதவிக் குழுவிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. தற்போது 1,261 சுய உதவிக் குழுக்களில் 19,872 பழங்குடியினப் பெண்கள் திறம்பட செயல்பட்டு வருகின்றனர்.

### (ஆ) இந்திய மருத்துவ ஆராய்ச்சி கழகத் ( ICMR ) திட்டம்

2001–2002 ஆம் ஆண்டு முதல் இந்திய மருத்துவக் கழக ஆராய்ச்சிக் குழுமத் திட்டப் பணிகள், காஞ்சிபுரம், திருவள்ளூர், நீலகிரி ஆகிய மூன்று மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகின்றன. பண்டைய பழங்குடியினரின் மருத்துவ நலன் கருதி அதற்கு வசதிகள் செய்யும் பொருட்டு பழங்குடியினர் நலப் பணியாளர்கள் மற்றும் தாய்ஸ் ஆகியோரை நியமித்து அவர்களுக்கு இத்திட்டப்பணிகளுக்கான தொடர் பயிற்சி அளிக்கப்படுகிறது.

### (இ) மலைப் பகுதி மேம்பாட்டுத்திட்டம் (HADP)

நீலகிரியில் வாழும் பழங்குடியினர்களின் நலனுக்காக நீலகிரி மாவட்ட ஆட்சியரால் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. நடப்பு ஆண்டில் இதற்கென ரூ.106.05 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## IV. நிதி ஒதுக்கீடு

## 2005–2006 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடு

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | கணக்குத் தலைப்பு | திட்டத்தில் சேராதது | திட்டம் | மைய அரசு பொறுப்பேற்புத் திட்டம் | மைய அரசு மற்றும் மாநில அரசு பங்கேற்கும் திட்டங்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2225 01 ஆதிமபந மற்றும் இதர பிற்பட்ட வகுப்பினர் நலன் | 17189.51 | 10594.32 | 7303.50 | 343.02 | 35430.35 |
| | 02 பழங்குடியினர் நலன் | 2283.08 | 416.83 | 733.84 | 0 | 3433.75 |
| | 80 பொது | 1669.32 | 16.26 | 0 | 0 | 1685.58 |
| 2 | 2235 00 சமூக பாதுகாப்பு மற்றும் நலன் | 0 | 0 | 0 | 0 | 0 |
| | 01 மறுவாழ்வு | 0 | 0 | 0 | 225.00 | 225.00 |
| | 60 இதர சமூக பாதுகாப்பு மற்றும் நலத் திட்டங்கள் | 110.00 | 0 | 0 | 0 | 110.00 |
| 3 | 2251 00 தலைமைச் செயலகம்– சமூகப் பணிகள் | 0 | 0 | 0 | 0 | 0 |
| | 090 தலைமைச் செயலகம் | 249.28 | 0 | 0 | 0 | 249.28 |
| 4 | 4225 00 ஆதிபந மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் குறித்த முதலீட்டுத் தொகை. | 0 | 0 | 0 | 0 | 0 |
| | 01 ஆதிதிராவிடர் நலன் | 0 | 3063.29 | 0 | 1000.00 | 4063.29 |
| | 02 பழங்குடியினர் நலன் | 0 | 168.60 | 0 | 0 | 168.60 |
| 5 | 6225 00 ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலனுக்கான கடன்கள். | 0 | 0 | 0 | 0 | 0 |
| | 01 ஆதிதிராவிடர்கள் நலன் | 0 | 25.00 | 0 | 0 | 25.00 |
| | மொத்தம் | 21501.19 | 14284.30 | 8037.34 | 1568.02 | 45390.85 |



## V. பட்டியல்களின் சுருக்கம்

| | |
|---|---|
| I | ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை விவரம் |
| II | ஆதிதிராவிடர் நலத் துறையில் உள்ள பள்ளிகளின் எண்ணிக்கை |
| III | பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை விபரம் |
| IV | பழங்குடியினர் விடுதிகள் விவரம் |
| V | அரசு ஆதிதிராவிடர் விடுதிகள் மற்றும் தங்கிப் படிக்கும் மாணவர்கள் விவரம் |
| VI | மைய அரசின் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்ட விவரங்கள் |
| VII | மாநில அரசின் சிறப்பு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்ட விவரங்கள் |
| VIII | உயர்கல்வி சிறப்பு உதவித் தொகை வழங்கப்பட்ட விவரங்கள் |
| IX | ஆதிதிராவிடர் / பழங்குடியின மாணவிகளுக்கு இலவச மிதிவண்டி வழங்கிய விவரம் |
| X | பெரும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் (LAMPS) பட்டியல் |
| XI | பழங்குடியினருக்கான ஆரம்பச் சுகாதார நிலையங்களின் பட்டியல் |

## பட்டியல் – 1

## ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை விவரம்

| வ. எ | மாவட்டம் | தொடக்கப் பள்ளி | | | நடுநிலைப் பள்ளி | | | உயர் நிலைப் பள்ளி | | | மேல் நிலைப் பள்ளி | | | மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) | (15) | (16) | (17) |
| 1 | சென்னை | 895 | 835 | 1730 | 505 | 457 | 962 | 102 | 193 | 295 | 1157 | 1200 | 2357 | 2659 | 2685 | 5344 |
| 2 | காஞ்சிபுரம் | 4864 | 4959 | 9823 | 2448 | 2554 | 5002 | 2554 | 2432 | 4986 | 3780 | 3228 | 7008 | 13646 | 13173 | 26819 |
| 3 | திருவள்ளூர் | 2795 | 2685 | 5480 | 1457 | 1366 | 2823 | 660 | 622 | 1282 | 2836 | 25078 | 27914 | 7748 | 29751 | 37499 |
| 4 | திருவண்ணாமலை | 1706 | 1138 | 2844 | 2511 | 1352 | 3863 | .. | .. | 0 | .. | .. | 0 | 4217 | 2490 | 6707 |
| 5 | வேலூர் | 5502 | 5427 | 10929 | 2341 | 2475 | 4816 | 898 | 741 | 1639 | 4671 | 4099 | 8770 | 13412 | 12742 | 26154 |
| 6 | கடலூர் | 5631 | 5841 | 11472 | 1442 | 1433 | 2875 | 370 | 810 | 1180 | 5177 | 3853 | 9030 | 12620 | 11937 | 24557 |
| 7 | விழுப்புரம் | 3652 | 3786 | 7438 | 1587 | 1626 | 3213 | 664 | 567 | 1231 | 2589 | 2252 | 4841 | 8492 | 8231 | 16723 |
| 8 | நாகப்பட்டினம் | 1667 | 1677 | 3344 | 120 | 126 | 246 | 296 | 310 | 606 | 643 | 591 | 1234 | 2726 | 2704 | 5430 |
| 9 | திருவாரூர் | 1177 | 1488 | 2665 | 165 | 136 | 301 | 194 | 198 | 392 | 526 | 549 | 1075 | 2062 | 2371 | 4433 |
| 10 | தஞ்சாவூர் | 3417 | 3391 | 6808 | 1004 | 1063 | 2067 | 2033 | 1966 | 3999 | 414 | 269 | 683 | 6868 | 6689 | 13557 |
| 11 | புதுக்கோட்டை | 306 | 301 | 607 | 201 | 204 | 405 | .. | .. | 0 | 699 | 625 | 1324 | 1206 | 1130 | 2336 |
| 12 | திருச்சி | 3009 | 3061 | 6070 | 1592 | 1580 | 3172 | 924 | 913 | 1837 | 7198 | 6470 | 13668 | 12723 | 12024 | 24747 |
| 13 | பெரம்பலூர் | 885 | 873 | 1758 | 812 | 784 | 1596 | 372 | 329 | 701 | .. | .. | 0 | 2069 | 1986 | 4055 |
| 14 | கரூர் | 815 | 909 | 1724 | 451 | 458 | 909 | 489 | 481 | 970 | 377 | 316 | 693 | 2132 | 2164 | 4296 |
| 15 | நாமக்கல் | 295 | 287 | 582 | .. | .. | 0 | 99 | 98 | 197 | 816 | 679 | 1495 | 1210 | 1064 | 2274 |
| 16 | சேலம் | 203 | 162 | 365 | 89 | 130 | 219 | .. | .. | 0 | 433 | 324 | 757 | 725 | 616 | 1341 |
| 17 | ஈரோடு | 107 | 110 | 217 | .. | .. | 0 | .. | .. | 0 | . | . | 0 | 107 | 110 | 217 |
| 18 | தருமபுரி | 345 | 270 | 615 | 126 | 68 | 194 | .. | .. | 0 | 372 | 355 | 727 | 843 | 693 | 1536 |
| 19 | கோயம்புத்தூர் | 829 | 850 | 1679 | 383 | 363 | 746 | 140 | 146 | 286 | . | . | 0 | 1352 | 1359 | 2711 |
| 20 | நீலகிரி | 141 | 143 | 284 | 144 | 126 | 270 | 135 | 96 | 231 | . | . | 0 | 420 | 365 | 785 |
| 21 | திண்டுக்கல் | 317 | 275 | 592 | 250 | 199 | 449 | .. | .. | 0 | 386 | 192 | 578 | 953 | 666 | 1619 |
| 22 | தேனி | 407 | 350 | 757 | 65 | 48 | 113 | 89 | 118 | 207 | 396 | 289 | 685 | 957 | 805 | 1762 |
| 23 | மதுரை | 526 | 524 | 1050 | 420 | 386 | 806 | 151 | 106 | 257 | 871 | 716 | 1587 | 1968 | 1732 | 3700 |
| 24 | இராமநாதபுரம் | 15 | 29 | 44 | 317 | 310 | 627 | .. | .. | 0 | . | . | 0 | 332 | 339 | 671 |
| 25 | சிவகங்கை | 202 | 202 | 404 | .. | .. | 0 | 173 | 169 | 342 | 565 | 421 | 986 | 940 | 792 | 1732 |
| 26 | விருதுநகர் | 710 | 742 | 1452 | 242 | 234 | 476 | .. | .. | 0 | 444 | 343 | 787 | 1396 | 1319 | 2715 |
| 27 | திருநெல்வேலி | 221 | 215 | 436 | 358 | 386 | 744 | .. | .. | 0 | 512 | 543 | 1055 | 1091 | 1144 | 2235 |
| 28 | தூத்துக்குடி | 206 | 196 | 402 | 197 | 182 | 379 | .. | .. | 0 | . | . | 0 | 403 | 378 | 781 |
| 29 | கன்னியாகுமரி | 93 | 84 | 177 | 223 | 226 | 449 | 69 | 74 | 143 | . | . | 0 | 385 | 384 | 769 |
| 30 | கிருஷ்ணகிரி | 69 | 48 | 117 | .. | .. | 0 | 74 | 87 | 161 | . | . | 0 | 143 | 135 | 278 |
| | மொத்தம் | 41007 | 40858 | 81865 | 19450 | 18272 | 37722 | 10412 | 10369 | 20781 | 34862 | 52392 | 87254 | 105731 | 121891 | 227622 |

## பட்டியல் – 2

## ஆதிதிராவிடர் நலத்துறையில் உள்ள பள்ளிகளின் எண்ணிக்கை

| வ. எண் | மாவட்டம் | தொடக்கப் பள்ளி | நடுநிலைப் பள்ளி | உயர்நிலைப் பள்ளி | மேல்நிலைப் பள்ளி | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | சென்னை | 7 | 2 | 1 | 2 | 12 |
| 2 | கோயம்புத்தூர் | 18 | 2 | 1 | 0 | 21 |
| 3 | கடலூர் | 100 | 12 | 2 | 8 | 122 |
| 4 | தருமபுரி | 8 | 1 | 0 | 1 | 10 |
| 5 | திண்டுக்கல் | 8 | 2 | 0 | 1 | 11 |
| 6 | ஈரோடு | 4 | 0 | 0 | 0 | 4 |
| 7 | காஞ்சிபுரம் | 62 | 15 | 6 | 6 | 89 |
| 8 | கன்னியாகுமரி | 2 | 2 | 1 | 0 | 5 |
| 9 | கரூர் | 14 | 5 | 4 | 1 | 24 |
| 10 | கிருஷ்ணகிரி | 1 | 0 | 1 | 0 | 2 |
| 11 | மதுரை | 5 | 7 | 1 | 2 | 15 |
| 12 | நாகப்பட்டினம் | 39 | 2 | 2 | 1 | 44 |
| 13 | நாமக்கல் | 5 | 0 | 1 | 1 | 7 |
| 14 | நீலகிரி | 4 | 2 | 1 | 0 | 7 |
| 15 | பெரம்பலூர் | 39 | 8 | 3 | 1 | 51 |
| 16 | புதுக்கோட்டை | 8 | 2 | 0 | 1 | 11 |
| 17 | இராமநாதபுரம் | 1 | 6 | 0 | 0 | 7 |
| 18 | சேலம் | 6 | 3 | 0 | 1 | 10 |
| 19 | சிவகங்கை | 3 | 0 | 2 | 1 | 6 |
| 20 | தஞ்சாவூர் | 85 | 6 | 8 | 1 | 100 |
| 21 | தேனி | 5 | 1 | 1 | 2 | 9 |
| 22 | திருநெல்வேலி | 8 | 4 | 0 | 2 | 14 |
| 23 | திருவள்ளூர் | 41 | 8 | 4 | 5 | 58 |
| 24 | திருவண்ணாமலை | 41 | 15 | 0 | 0 | 56 |
| 25 | திருவாரூர் | 26 | 1 | 1 | 1 | 29 |
| 26 | திருச்சி | 59 | 17 | 4 | 10 | 90 |
| 27 | தூத்துக்குடி | 8 | 3 | 0 | 0 | 11 |
| 28 | வேலூர் | 91 | 15 | 4 | 6 | 116 |
| 29 | விழுப்புரம் | 67 | 14 | 3 | 4 | 88 |
| 30 | விருதுநகர் | 15 | 2 | 0 | 2 | 19 |
| | மொத்தம் | 780 | 157 | 51 | 60 | 1048 |

## பட்டியல் - 3

### பழங்குடியினர் உண்டு உறைவிட பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை விவரம்

| வ. எண் | மாவட்டம் | தொடக்கப் பள்ளி: பள்ளிகள் எண்ணிக்கை | தொடக்கப் பள்ளி: மாணாக்கர் எண்ணிக்கை: மாணவர் | தொடக்கப் பள்ளி: மாணாக்கர் எண்ணிக்கை: மாணவியர் | நடுநிலைப் பள்ளி: பள்ளிகள் எண்ணிக்கை | நடுநிலைப் பள்ளி: மாணாக்கர் எண்ணிக்கை: மாணவர் | நடுநிலைப் பள்ளி: மாணாக்கர் எண்ணிக்கை: மாணவியர் | உயர்நிலைப் பள்ளி: பள்ளிகள் எண்ணிக்கை | உயர்நிலைப் பள்ளி: மாணாக்கர் எண்ணிக்கை: மாணவர் | உயர்நிலைப் பள்ளி: மாணாக்கர் எண்ணிக்கை: மாணவியர் | மேல்நிலைப் பள்ளி: பள்ளிகள் எண்ணிக்கை | மேல்நிலைப் பள்ளி: மாணாக்கர் எண்ணிக்கை: மாணவர் | மேல்நிலைப் பள்ளி: மாணாக்கர் எண்ணிக்கை: மாணவியர் | மொத்தம்: பள்ளிகள் எண்ணிக்கை | மொத்தம்: மாணாக்கர் எண்ணிக்கை: மாணவர் | மொத்தம்: மாணாக்கர் எண்ணிக்கை: மாணவியர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | விடுதி மாணவர்கள் | | | | | | | | | | | | | | | |
| 1 | சென்னை | 1 | 20 | 25 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 1 | 20 | 25 |
| 2 | திருவண்ணாமலை | 20 | 1305 | 515 | 5 | 284 | 72 | 1 | 40 | 26 | 0 | 0 | 0 | 26 | 1629 | 613 |
| 3 | வேலூர் | 13 | 462 | 276 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 13 | 462 | 276 |
| 4 | விழுப்புரம் | 24 | 1595 | 1170 | 17 | 1156 | 980 | 1 | 120 | 30 | 2 | 868 | 480 | 44 | 3739 | 2660 |
| 5 | திருச்சி | 24 | 670 | 680 | 3 | 158 | 126 | 1 | 73 | 78 | 1 | 76 | 62 | 29 | 977 | 946 |
| 6 | நாமக்கல் | 8 | 321 | 237 | 0 | 0 | 0 | 1 | 140 | 130 | 2 | 1721 | 1226 | 11 | 2182 | 1593 |
| 7 | சேலம் | 32 | 1610 | 1531 | 13 | 1491 | 1012 | 1 | 342 | 289 | 1 | 222 | 167 | 47 | 3665 | 2999 |
| 8 | ஈரோடு | 13 | 480 | 410 | 4 | 520 | 322 | 0 | 0 | 0 | 1 | 172 | 75 | 18 | 1172 | 807 |
| 9 | தருமபுரி | 22 | 736 | 554 | 3 | 272 | 247 | 0 | 0 | 0 | 1 | 222 | 210 | 26 | 1230 | 1011 |
| 10 | கோயம்புத்தூர் | 15 | 578 | 478 | 4 | 302 | 263 | 1 | 386 | 302 | 0 | 0 | 0 | 20 | 1266 | 1043 |
| 11 | நீலகிரி | 12 | 436 | 379 | 12 | 1138 | 1121 | 0 | 0 | 0 | 1 | 173 | 119 | 25 | 1747 | 1619 |
| 12 | திண்டுக்கல் | 6 | 186 | 132 | 0 | 0 | 0 | 1 | 306 | 109 | 0 | 0 | 0 | 7 | 492 | 241 |
| 13 | தேனி | 2 | 25 | 21 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 2 | 25 | 21 |
| 14 | விருதுநகர் | 1 | 8 | 6 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 1 | 8 | 6 |
| 15 | திருநெல்வேலி | 2 | 44 | 37 | 0 | 0 | 0 | 1 | 19 | 78 | 0 | 0 | 0 | 3 | 63 | 115 |
| 16 | கன்னியாகுமரி | 3 | 40 | 39 | 1 | 40 | 33 | 0 | 0 | 0 | 2 | 901 | 760 | 6 | 981 | 832 |
| 17 | பெரம்பலூர் | 0 | 0 | 0 | 1 | 72 | 65 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 1 | 72 | 65 |
| | மொத்தம் | 198 | 8516 | 6490 | 63 | 5433 | 4241 | 8 | 1426 | 1042 | 11 | 4355 | 3099 | 280 | 19730 | 14872 |
| | வெளி மாணவர்கள் | | 2132 | 1438 | | 1471 | 1266 | | 728 | 482 | | 3940 | 1742 | | 8271 | 4928 |
| | ஆக மொத்தம் | 198 | 10648 | 7928 | 63 | 6904 | 5507 | 8 | 2154 | 1524 | 11 | 8295 | 4841 | 280 | 28001 | 19800 |
| | | | | | | | | | | | | | | | | 47801 |



## பட்டியல் - 4

### பழங்குடியினர் விடுதிகள் விவரம்

| வ. எண் | மாவட்டம் | மாணவர் விடுதி: எண்ணிக்கை | மாணவர் விடுதி: மாணவர் எண்ணிக்கை | மாணவியர் விடுதி: எண்ணிக்கை | மாணவியர் விடுதி: மாணவியர் எண்ணிக்கை | மொத்தம்: எண்ணிக்கை | மொத்தம்: மாணாக்கர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | திருவள்ளூர் | 1 | 60 | 0 | 0 | 1 | 60 |
| 2 | திருவண்ணாமலை | 0 | 0 | 1 | 55 | 1 | 55 |
| 3 | வேலூர் | 2 | 97 | 0 | 0 | 2 | 97 |
| 4 | விழுப்புரம் | 3 | 213 | 0 | 0 | 3 | 213 |
| 5 | திருச்சி | 1 | 55 | 3 | 150 | 4 | 205 |
| 6 | நாமக்கல் | 0 | 0 | 1 | 50 | 1 | 50 |
| 7 | சேலம் | 5 | 213 | 1 | 28 | 6 | 241 |
| 8 | கோயம்புத்தூர் | 2 | 115 | 0 | 0 | 2 | 115 |
| 9 | நீலகிரி | 2 | 97 | 0 | 0 | 2 | 97 |
| 10 | திண்டுக்கல் | 2 | 68 | 0 | 0 | 2 | 68 |
| 11 | கன்னியாகுமரி | 0 | 0 | 2 | 126 | 2 | 126 |
| | மொத்தம் | 18 | 918 | 8 | 409 | 26 | 1327 |

## பட்டியல் – 5

## அரசு ஆதிதிராவிடர் விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவர்கள் விவரம்

| வரிசை எண் | மாவட்டம் | முதுகலை விடுதி | | | | கல்லூரி விடுதி | | | | தொழிற்பயிற்சி விடுதி | | | | பள்ளி விடுதி | | | | மொத்த விடுதிகளின் எண்ணிக்கை | | | | ஆக மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மாணவர் | | மாணவியர் | | மாணவர் | | மாணவியர் | | மாணவர் | | மாணவியர் | | மாணவர் | | மாணவியர் | | மாணவர் | | மாணவியர் | | | |
| | | விடுதிகளின் எண்ணிக்கை | எண்ணிக்கை | விடுதிகளின் எண்ணிக்கை | எண்ணிக்கை | விடுதிகளின் எண்ணிக்கை | எண்ணிக்கை | விடுதிகளின் எண்ணிக்கை | எண்ணிக்கை | விடுதிகளின் எண்ணிக்கை | எண்ணிக்கை | விடுதிகளின் எண்ணிக்கை | எண்ணிக்கை | விடுதிகளின் எண்ணிக்கை | எண்ணிக்கை | விடுதிகளின் எண்ணிக்கை | எண்ணிக்கை | விடுதிகளின் எண்ணிக்கை | எண்ணிக்கை | விடுதிகளின் எண்ணிக்கை | எண்ணிக்கை | விடுதிகளின் எண்ணிக்கை | எண்ணிக்கை |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 1 | சென்னை | 1 | 110 | 1 | 55 | 6 | 1452 | 1 | 110 | 2 | 308 | 1 | 55 | 2 | 283 | 3 | 395 | 11 | 2153 | 6 | 615 | 17 | 2768 |
| 2 | காஞ்சிபுரம் | | | | | 1 | 30 | 1 | 37 | | | | | 29 | 1522 | 8 | 387 | 30 | 1552 | 9 | 424 | 39 | 1976 |
| 3 | திருவள்ளூர் | | | | | 2 | 110 | 1 | 55 | | | | | 25 | 1581 | 8 | 434 | 27 | 1691 | 9 | 489 | 36 | 2180 |
| 4 | திருவண்ணாமலை | | | | | 1 | 60 | 1 | 60 | | | | | 25 | 1423 | 14 | 823 | 26 | 1483 | 15 | 883 | 41 | 2366 |
| 5 | வேலூர் | 1 | 58 | | | 2 | 147 | 1 | 80 | 2 | 114 | | | 23 | 1313 | 14 | 710 | 26 | 1632 | 15 | 790 | 43 | 2422 |
| 6 | கடலூர் | | | | | 3 | 204 | 2 | 95 | 2 | 121 | 1 | 55 | 30 | 3415 | 17 | 2151 | 35 | 3740 | 20 | 2301 | 55 | 6041 |
| 7 | விழுப்புரம் | | | | | 2 | 255 | | | | | | | 57 | 3672 | 18 | 1111 | 59 | 3927 | 18 | 1111 | 75 | 5038 |
| 8 | நாகப்பட்டினம் | | | | | 1 | 58 | 1 | 60 | | | | | 15 | 695 | 10 | 608 | 16 | 753 | 11 | 668 | 27 | 1421 |
| 9 | திருவாரூர் | | | | | 2 | 198 | | | | | | | 15 | 896 | 12 | 864 | 17 | 1094 | 12 | 864 | 29 | 1758 |
| 10 | தஞ்சாவூர் | | | | | 2 | 220 | 2 | 110 | | | | | 29 | 1747 | 8 | 672 | 31 | 1967 | 10 | 782 | 41 | 2749 |
| 11 | புதுக்கோட்டை | | | | | 1 | 264 | 2 | 258 | | | | | 26 | 1821 | 14 | 835 | 27 | 2085 | 16 | 1093 | 43 | 3178 |
| 12 | திருச்சி | 1 | 83 | | | 1 | 345 | 1 | 88 | 1 | 83 | | | 23 | 1833 | 10 | 887 | 26 | 2344 | 11 | 975 | 37 | 3319 |
| 13 | பெரம்பலூர் | | | | | 1 | 154 | | | | | | | 28 | 2406 | 17 | 1213 | 29 | 2580 | 17 | 1213 | 46 | 3773 |
| 14 | கரூர் | | | | | 1 | 83 | | | | | | | 10 | 614 | 5 | 366 | 11 | 707 | 5 | 369 | 16 | 1076 |
| 15 | நாமக்கல் | | | | | 2 | 213 | 1 | 95 | | | | | 19 | 887 | 10 | 549 | 21 | 1100 | 11 | 644 | 32 | 1744 |
| 16 | சேலம் | | | | | 2 | 341 | 1 | 121 | | | | | 22 | 1220 | 8 | 404 | 24 | 1561 | 9 | 525 | 33 | 2086 |
| 17 | ஈரோடு | | | | | 1 | 165 | | | | | | | 18 | 1415 | 13 | 1138 | 19 | 1580 | 13 | 1138 | 32 | 2718 |
| 18 | தருமபுரி | | | | | 1 | 403 | 1 | 100 | | | | | 15 | 784 | 9 | 470 | 16 | 1187 | 10 | 570 | 26 | 1757 |
| 19 | கோயம்புத்தூர் | | | | | 2 | 291 | 1 | 121 | 1 | 99 | | | 22 | 1366 | 10 | 693 | 25 | 1756 | 11 | 814 | 36 | 2570 |
| 20 | நீலகிரி | | | | | 1 | 60 | | | | | | | 11 | 778 | 5 | 520 | 12 | 838 | 5 | 520 | 17 | 1358 |
| 21 | திண்டுக்கல் | | | | | 1 | 126 | 1 | 94 | 1 | 44 | | | 22 | 1299 | 12 | 897 | 24 | 1469 | 13 | 991 | 37 | 2460 |
| 22 | தேனி | | | | | | | | | | | | | 16 | 935 | 11 | 917 | 16 | 935 | 11 | 917 | 27 | 1852 |
| 23 | மதுரை | 1 | 75 | | | 2 | 190 | 2 | 155 | 1 | 103 | | | 30 | 1953 | 9 | 1766 | 34 | 2321 | 11 | 1921 | 45 | 4242 |
| 24 | இராமநாதபுரம் | | | | | 2 | 134 | 1 | 27 | | | | | 21 | 1923 | 10 | 835 | 23 | 2057 | 11 | 862 | 34 | 2919 |
| 25 | சிவகங்கை | | | | | 3 | 182 | 2 | 133 | | | | | 23 | 1552 | 8 | 588 | 26 | 1734 | 10 | 721 | 36 | 2455 |
| 26 | விருதுநகர் | | | | | 1 | 55 | 1 | 77 | | | | | 39 | 2885 | 8 | 743 | 40 | 2940 | 9 | 820 | 49 | 3760 |
| 27 | திருநெல்வேலி | 1 | 51 | | | 1 | 100 | 2 | 115 | | | | | 29 | 1667 | 18 | 1352 | 31 | 1818 | 20 | 1467 | 51 | 3285 |
| 28 | தூத்துக்குடி | | | | | 1 | 60 | 1 | 61 | 1 | 55 | | | 23 | 1513 | 16 | 1244 | 25 | 1628 | 17 | 1305 | 42 | 2933 |
| 29 | கன்னியாகுமரி | | | | | 1 | 118 | 1 | 55 | 1 | 44 | | | 5 | 198 | 7 | 342 | 7 | 360 | 8 | 397 | 15 | 757 |
| 30 | கிருஷ்ணகிரி | | | | | 1 | 176 | | | | | | | 13 | 749 | 5 | 286 | 14 | 925 | 5 | 286 | 19 | 1211 |
| | மொத்தம் | 5 | 377 | 1 | 55 | 48 | 6204 | 28 | 2107 | 12 | 971 | 2 | 110 | 665 | 44345 | 315 | 24003 | 730 | 51897 | 346 | 26275 | 1076 | 78172 |

## பட்டியல்–6

### மைய அரசின் போஸ்ட்மெட்ரிக் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்ட விவரங்கள்

(ரூபாய் இலட்சத்தில்)

| | | 2001–2002 | | 2002–2003 | | 2003–2004 | | 2004–2005 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| வ. எண் | மாவட்டம் | செலவு | பயனாளிகளின் எண்ணிக்கை | செலவு | பயனாளிகளின் எண்ணிக்கை | செலவு | பயனாளிகளின் எண்ணிக்கை | செலவு | பயனாளிகளின் எண்ணிக்கை |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| 1 | அரியலூர் | 21.00 | 1409.00 | 24.25 | 1921.00 | 43.34 | 1112.00 | 30.00 | 1383.00 |
| 2 | சென்னை | 523.94 | 11417.00 | 483.27 | 17859.00 | 714.72 | 26700.00 | 550.00 | 19440.00 |
| 3 | கோயம்புத்தூர் | 174.59 | 8780.00 | 178.09 | 6866.00 | 283.00 | 8900.00 | 156.74 | 5022.00 |
| 4 | கடலூர் | 258.59 | 12385.00 | 243.07 | 9964.00 | 420.00 | 17800.00 | 210.00 | 4400.00 |
| 5 | தருமபுரி | 101.91 | 6254.00 | 107.75 | 6520.00 | 137.15 | 3950.00 | 55.00 | 3321.00 |
| 6 | திண்டுக்கல் | 105.00 | 6218.00 | 115.99 | 6519.00 | 214.00 | 8700.00 | 100.00 | 2881.00 |
| 7 | ஈரோடு | 98.00 | 5046.00 | 105.49 | 6995.00 | 156.31 | 7396.00 | 100.00 | 3927.00 |
| 8 | காஞ்சிபுரம் | 179.91 | 9880.00 | 188.50 | 12368.00 | 300.00 | 14267.00 | 195.00 | 10700.00 |
| 9 | கன்னியாகுமரி | 44.16 | 2555.00 | 49.86 | 2758.00 | 49.96 | 1512.00 | 46.23 | 1580.00 |
| 10 | கரூர் | 38.60 | 2455.00 | 39.08 | 2839.00 | 76.38 | 2228.00 | 70.00 | 2714.00 |
| 11 | மதுரை | 185.00 | 8400.00 | 213.39 | 10175.00 | 224.92 | 8814.00 | 210.00 | 4441.00 |
| 12 | நாகப்பட்டினம் | 99.97 | 6641.00 | 89.99 | 6470.00 | 169.50 | 7780.00 | 115.00 | 4215.00 |
| 13 | நாமக்கல் | 64.05 | 5000.00 | 71.37 | 4154.00 | 198.00 | 7844.00 | 80.00 | 4045.00 |
| 14 | நீலகிரி | 40.00 | 4000.00 | 48.24 | 3058.00 | 65.48 | 2858.00 | 45.00 | 1635.00 |
| 15 | பெரம்பலூர் | 24.40 | 4329.00 | 34.89 | 376.00 | 67.50 | 2770.00 | 40.00 | 1354.00 |
| 16 | புதுக்கோட்டை | 74.49 | 4765.00 | 83.98 | 5067.00 | 129.55 | 3975.00 | 90.00 | 4140.00 |
| 17 | இராமநாதபுரம் | 51.71 | 3103.00 | 65.90 | 3910.00 | 77.35 | 2805.00 | 66.00 | 2549.00 |
| 18 | சேலம் | 115.00 | 6793.00 | 136.00 | 5860.00 | 214.53 | 8252.00 | 165.00 | 7611.00 |
| 19 | சிவகங்கை | 75.00 | 3994.00 | 118.58 | 6770.00 | 138.24 | 6517.00 | 100.00 | 4447.00 |
| 20 | தஞ்சாவூர் | 140.00 | 7682.00 | 190.00 | 9448.00 | 229.90 | 9251.00 | 200.00 | 11502.00 |
| 21 | தேனி | 45.78 | 2117.00 | 51.92 | 3258.00 | 97.16 | 3805.00 | 66.00 | 2687.00 |
| 22 | திருநெல்வேலி | 120.00 | 8758.00 | 150.44 | 9530.00 | 199.99 | 6950.00 | 149.28 | 4215.00 |
| 23 | திருவள்ளூர் | 119.95 | 7106.00 | 120.00 | 5620.00 | 205.00 | 8012.00 | 115.00 | 8497.00 |
| 24 | திருவண்ணாமலை | 80.00 | 5504.00 | 118.49 | 6075.00 | 114.99 | 3722.00 | 110.00 | 5993.00 |
| 25 | திருவாரூர் | 61.96 | 4690.00 | 68.50 | 5047.00 | 106.09 | 3297.00 | 57.00 | 2425.00 |
| 26 | திருச்சி | 333.61 | 11413.00 | 386.00 | 10859.00 | 566.99 | 20800.00 | 469.99 | 16250.00 |
| 27 | தூத்துக்குடி | 107.75 | 6257.00 | 111.00 | 6651.00 | 139.49 | 4138.00 | 114.99 | 4518.00 |
| 28 | வேலூர் | 180.00 | 11638.00 | 193.75 | 11612.00 | 332.60 | 15325.00 | 172.00 | 5255.00 |
| 29 | விழுப்புரம் | 118.00 | 5980.00 | 119.22 | 6760.00 | 189.02 | 9600.00 | 120.00 | 5431.00 |
| 30 | விருதுநகர் | 80.59 | 5796.00 | 90.67 | 5730.00 | 107.90 | 4657.00 | 82.00 | 4282.00 |
| 31 | கிருஷ்ணகிரி | 74.49 | 4765.00 | 83.98 | 5067.00 | 129.55 | 3975.00 | 90.00 | 4140.00 |
| | இயக்குநரகம் | 51.71 | 3103.00 | 65.90 | 3910.00 | 77.35 | 2805.00 | 66.00 | 2549.00 |
| | மொத்தம் | 3678.56 | 190694.00 | 4013.28 | 201437 | 5993.51 | 234324 | 4150.00 | 163685 |

## பட்டியல் - 7

## மாநில அரசின் சிறப்பு போஸ்ட்மெட்ரிக் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்ட விவரங்கள்

(ரூபாய் இலட்சத்தில்)

| | | 2001-2002 | | 2002-2003 | | 2003-2004 | | 2004-2005 31-12-2004 வரை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| வ. எண் | மாவட்டம் | செலவு | பயனாளிகளின் எண்ணிக்கை | செலவு | பயனாளிகளின் எண்ணிக்கை | செலவு | பயனாளிகளின் எண்ணிக்கை | செலவு | பயனாளிகளின் எண்ணிக்கை |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| 1 | அரியலூர் | 0.00 | 0 | 1.36 | 171 | 3.37 | 227 | 1.74 | 108 |
| 2 | சென்னை | 18.21 | 1151 | 13.64 | 1143 | 71.63 | 3866 | 15.00 | 937 |
| 3 | கோயம்புத்தூர் | 6.93 | 534 | 5.60 | 469 | 8.10 | 547 | 6.49 | 405 |
| 4 | கடலூர் | 16.00 | 1154 | 16.00 | 1341 | 16.00 | 1081 | 3.72 | 232 |
| 5 | தருமபுரி | 2.49 | 248 | 0.82 | 85 | 1.00 | 57 | 2.00 | 125 |
| 6 | திண்டுக்கல் | 10.49 | 718 | 6.98 | 495 | 16.00 | 1078 | 1.24 | 77 |
| 7 | ஈரோடு | 3.13 | 312 | 1.00 | 84 | 1.50 | 101 | 9.00 | 562 |
| 8 | காஞ்சிபுரம் | 10.46 | 602 | 5.90 | 1646 | 10.00 | 760 | 12.00 | 750 |
| 9 | கன்னியாகுமரி | 16.30 | 1489 | 13.08 | 1356 | 38.60 | 6802 | 9.63 | 601 |
| 10 | கரூர் | 0.37 | 18 | 0.38 | 42 | 0.66 | 65 | 0.40 | 25 |
| 11 | மதுரை | 7.59 | 450 | 7.10 | 408 | 11.30 | 763 | 7.50 | 468 |
| 12 | நாகப்பட்டினம் | 2.90 | 185 | 2.49 | 251 | 2.60 | 175 | 0.00 | 0 |
| 13 | நாமக்கல் | 0.00 | 0 | 0.22 | 18 | 0.15 | 10 | 0.20 | 12 |
| 14 | நீலகிரி | 1.15 | 58 | 1.38 | 74 | 1.50 | 101 | 0.92 | 57 |
| 15 | பெரம்பலூர் | 0.50 | 52 | 0.29 | 27 | 1.33 | 81 | 0.50 | 31 |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| 16 | புதுக்கோட்டை | 4.42 | 415 | 4.40 | 478 | 7.00 | 472 | 3.30 | 211 |
| 17 | இராமநாதபுரம் | 4.98 | 342 | 4.90 | 469 | 5.35 | 361 | 4.90 | 306 |
| 18 | சேலம் | 0.99 | 89 | 0.49 | 74 | 0.85 | 57 | 0.14 | 8 |
| 19 | சிவகங்கை | 4.49 | 303 | 4.69 | 271 | 7.00 | 472 | 5.00 | 312 |
| 20 | தஞ்சாவூர் | 11.78 | 925 | 6.25 | 746 | 50.00 | 3378 | 5.00 | 310 |
| 21 | தேனி | 4.15 | 157 | 3.96 | 259 | 8.21 | 657 | 6.49 | 405 |
| 22 | திருநெல்வேலி | 21.00 | 1555 | 13.75 | 1150 | 28.88 | 1882 | 12.00 | 750 |
| 23 | திருவள்ளூர் | 16.00 | 349 | 7.99 | 642 | 65.00 | 1883 | 34.14 | 2133 |
| 24 | திருவண்ணாமலை | 0.60 | 24 | 0.50 | 42 | 0.53 | 35 | 0.50 | 31 |
| 25 | திருவாரூர் | 2.08 | 217 | 2.12 | 649 | 2.20 | 221 | 0.00 | 0 |
| 26 | திருச்சி | 30.98 | 1925 | 16.25 | 1109 | 44.36 | 148 | 50.00 | 2562 |
| 27 | தூத்துக்குடி | 7.69 | 541 | 7.24 | 569 | 11.00 | 890 | 9.48 | 592 |
| 28 | வேலூர் | 18.00 | 1405 | 15.77 | 1827 | 34.00 | 2297 | 5.00 | 312 |
| 29 | விழுப்புரம் | 4.00 | 370 | 2.75 | 157 | 11.18 | 755 | 11.42 | 713 |
| 30 | விருதுநகர் | 3.99 | 423 | 2.90 | 242 | 3.55 | 367 | 3.00 | 187 |
| 31 | கிருஷ்ணகிரி | | | 0.00 | 0 | 0.00 | 0 | 0.50 | 31 |
| | இயக்குநரகம் | 0.00 | | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 |
| | மொத்தம் | 231.67 | 16011 | 170.40 | 16294 | 462.85 | 29589 | 221.21 | 13253 |

## பட்டியல்–8

## உயர்கல்வி சிறப்பு கல்வி உதவித் தொகை (HESS) வழங்கப்பட்ட விவரங்கள்

(ரூபாய் இலட்சத்தில்)

| வ.எண் | மாவட்டம் | 2002–2003 | | 2003–2004 | | 2004–2005 31–12–04 வரை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | செலவு | பயனாளிகளின் எண்ணிக்கை | செலவு | பயனாளிகளின் எண்ணிக்கை | செலவு | பயனாளிகளின் எண்ணிக்கை |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 1 | அரியலூர் | 0 | 0 | 0.40 | 6.00 | 0.40 | 6.00 |
| 2 | சென்னை | 24.12 | 357.00 | 50.34 | 741.00 | 22.25 | 342.00 |
| 3 | கோயம்புத்தூர் | 18.57 | 272.00 | 28.97 | 429.00 | 14.51 | 223.00 |
| 4 | கடலூர் | 88.56 | 1311.00 | 118.98 | 1763.00 | 80.00 | 1234.00 |
| 5 | தருமபுரி | 4.21 | 63.00 | 3.97 | 59.00 | 2.00 | 30.00 |
| 6 | திண்டுக்கல் | 23.40 | 347.00 | 35.53 | 527.00 | 14.03 | 215.00 |
| 7 | ஈரோடு | 2.31 | 35.00 | 2.80 | 41.00 | 2.00 | 30.00 |
| 8 | காஞ்சிபுரம் | 6.69 | 97.00 | 6.46 | 96.00 | 5.25 | 80.00 |
| 9 | கன்னியாகுமரி | 1.74 | 26.00 | 2.29 | 34.00 | 1.00 | 15.00 |
| 10 | கரூர் | 1.18 | 17.00 | 1.18 | 17.00 | 0.53 | 8.00 |
| 11 | மதுரை | 58.84 | 817.00 | 107.40 | 1591.00 | 75.00 | 1163.00 |
| 12 | நாகப்பட்டினம் | 0.00 | 0.00 | 11.58 | 171.00 | 0.00 | 0.00 |
| 13 | நாமக்கல் | 3.31 | 51.00 | 5.82 | 87.00 | 3.00 | 46.00 |
| 14 | நீலகிரி | 1.31 | 20.00 | 0.99 | 15.00 | 0.35 | 5.00 |
| 15 | பெரம்பலூர் | 0.00 | 0.00 | 1.08 | 16.00 | 0.90 | 13.00 |



| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
|---|---|---|---|---|---|---|---|
| 16 | புதுக்கோட்டை | 2.21 | 32 | 3 | 44 | 0.56 | 8 |
| 17 | இராமநாதபுரம் | 9.04 | 133 | 9 | 133 | 7.96 | 122 |
| 18 | சேலம் | 13.37 | 198 | 12.98 | 192 | 7 | 107 |
| 19 | சிவகங்கை | 11.78 | 174 | 19.95 | 295 | 10 | 153 |
| 20 | தஞ்சாவூர் | 37.58 | 557 | 49.86 | 739 | 24 | 369 |
| 21 | தேனி | 14.59 | 219 | 14.96 | 222 | 9.8 | 150 |
| 22 | திருநெல்வேலி | 30.24 | 429 | 38.63 | 571 | 0.26 | 4 |
| 23 | திருவள்ளூர் | 0 | 0 | 0 | 0 | 0.07 | 1 |
| 24 | திருவண்ணாமலை | 3.27 | 49 | 3.95 | 59 | 47.39 | 729 |
| 25 | திருவாரூர் | 0.07 | 1 | 0 | 0 | 24.69 | 379 |
| 26 | திருச்சி | 54.9 | 891 | 68.8 | 1019 | 3 | 46 |
| 27 | தூத்துக்குடி | 7.62 | 112 | 17.95 | 266 | 7 | 107 |
| 28 | வேலூர் | 3.77 | 55 | 4.1 | 59 | 2.6 | 40 |
| 29 | விழுப்புரம் | 1.61 | 23 | 2 | 30 | 2 | 30 |
| 30 | விருதுநகர் | 27.05 | 400 | 22.41 | 332 | 16.1 | 247 |
| 31 | கிருஷ்ணகிரி | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| | இயக்குநரகம் | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| | மொத்தம் | 451.34 | 6686 | 645.38 | 9554 | 383.65 | 5902 |

## பட்டியல் – 9

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவிகளுக்கு இலவச மிதிவண்டி வழங்கிய செலவு விவரம்

| வ. எண் | மாவட்டம் | 2001–2002 | | 2002–2003 | | 2003–2004 | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பயனாளிகள் | செலவினம் | பயனாளிகள் | செலவினம் | பயனாளிகள் | செலவினம் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 1 | அரியலூர் | 662 | 900095 | .. | .. | | |
| 2 | சென்னை | 5726 | 7785413 | 3730 | 5375242 | 4098 | 6486800 |
| 3 | கோயம்புத்தூர் | 2463 | 3348843 | 1633 | 2353280 | 1790 | 2844400 |
| 4 | கடலூர் | 2629 | .. | 1821 | 6198750 | 1983 | 3151086 |
| 5 | தருமபுரி | 1412 | 1919840 | 1346 | 1939703 | 1584 | 2517055 |
| 6 | திண்டுக்கல் | 1298 | 1764839 | 1556 | 2242329 | 1567 | 2469914 |
| 7 | ஈரோடு | 767 | 954481 | 1230 | 1860904 | 1362 | 2401204 |
| 8 | காஞ்சிபுரம் | 2393 | 3253666 | 3289 | 4739705 | 3424 | 5387642 |
| 9 | கன்னியாகுமரி | 850 | 815357 | 1035 | 1836879 | 720 | 1141920 |
| 10 | கரூர் | 917 | 1246808 | 603 | 868971 | 713 | 1130842 |
| 11 | மதுரை | 1834 | .. | 1284 | 4343971 | 1257 | 1993602 |
| 12 | நாகப்பட்டினம் | 1703 | 2315501 | 1959 | 2823072 | 1896 | 3012839 |
| 13 | நாமக்கல் | 980 | 1332467 | 1111 | 1601047 | 1122 | 1779492 |
| 14 | நீலகிரி | 1378 | .. | 956 | 3251282 | 909 | 1444400 |
| 15 | பெரம்பலூர் | 606 | 742374 | 893 | 1368461 | 937 | 1486251 |
| 16 | புதுக்கோட்டை | 1309 | 1637030 | 965 | 1533412 | 1473 | 2340670 |



| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
|---|---|---|---|---|---|---|---|
| 17 | இராமநாதபுரம் | 763 | 1037421 | 746 | 1075045 | 838 | 1331624 |
| 18 | சேலம் | 1509 | 2051727 | 1403 | 2021842 | 1552 | 2466206 |
| 19 | சிவகங்கை | 707 | 961280 | 929 | 1338762 | 903 | 1381000 |
| 20 | தஞ்சாவூர் | 1904 | 2588793 | 1910 | 2752459 | 2007 | 3189223 |
| 21 | தேனி | 1306 | 1747163 | 1002 | 1472501 | 925 | 1469871 |
| 22 | திருநெல்வேலி | 2006 | 2727478 | 2406 | 3467251 | 2043 | 3240198 |
| 23 | திருவள்ளூர் | 2852 | 3877750 | 2363 | 3405286 | 2939 | 4662181 |
| 24 | திருவண்ணாமலை | 1422 | .. | 1787 | 4508457 | 1415 | 2248500 |
| 25 | திருவாரூர் | 1263 | 1717251 | 1535 | 2212056 | 1547 | 2458261 |
| 26 | திருச்சி | 3805 | 5173506 | 2124 | 3060849 | 2687 | 4263500 |
| 27 | தூத்துக்குடி | 2607 | 2829452 | 1405 | 2739906 | 1225 | 1906372 |
| 28 | வேலூர் | 4376 | 5949872 | 2929 | 4220940 | 4291 | 6805600 |
| 29 | விழுப்புரம் | 2725 | 256976 | 2141 | 6533463 | 1786 | 2596507 |
| 30 | விருதுநகர் | 2253 | 2925988 | 1410 | 2169257 | 1391 | 2206126 |
| | முதலமைச்சர் விழா | 100 | 158080 | .. | .. | | |
| | மொத்தம் | 56525 | 62019451 | 47501 | 83315302 | 50384 | 79813286 |

**பட்டியல்–10**

**பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் பட்டியல்**

**(17 ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டு பகுதியிலும் 2 ஒருங்கிணைந்த பகுதி அல்லாத இடங்களிலும் உள்ளன)**

| வ.எண் | பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கும் இடங்கள் | மாவட்டம் |
|---|---|---|
| 1 | ஏற்காடு | சேலம் |
| 2 | அரநூத்துமலை | சேலம் |
| 3 | பச்சைமலை | சேலம் |
| 4 | சின்னகல்ராயன் | சேலம் |
| 5 | பெரியகல்ராயன் | சேலம் |
| 6 | கொல்லிமலை | நாமக்கல் |
| 7 | கொல்லிபவர்காடு | நாமக்கல் |
| 8 | மலையாளப்பட்டி | நாமக்கல் |
| 9 | சித்தேரி | தருமபுரி |
| 10 | பச்சமலை | திருச்சி |
| 11 | ஏலகிரி | வேலூர் |
| 12 | புதூர்நாடு | வேலூர் |
| 13 | ஜவ்வாது | திருவண்ணாமலை |
| 14 | நம்மியம்பட்டு | திருவண்ணாமலை |
| 15 | வெள்ளிமலை | விழுப்புரம் |
| 16 | கிளாக்காடு | விழுப்புரம் |
| 17 | மோட்டம்பட்டி | விழுப்புரம் |
| ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டு பகுதி அல்லாத இடங்கள் | | |
| 18 | மசினகுடி | நீலகிரி |
| 19 | சத்தியமங்கலம் | ஈரோடு |





**பட்டியல்–11**

**பழங்குடியினர்–ஆரம்ப சுகாதார நிலையங்கள்**

| வ.எண் | ஆரம்ப சுகாதார நிலையம் | மாவட்டம் |
|---|---|---|
| 1 | அர்த்தனாவூர் | வேலூர் |
| 2 | புதூர்நாடு | வேலூர் |
| 3 | ஆலங்காயம் | வேலூர் |
| 4 | ஜமனாமரத்தூர் | திருவண்ணாமலை |
| 5 | நரியப்பட்டு | திருவண்ணாமலை |
| 6 | களாக்காடு | விழுப்புரம் |
| 7 | சேராப்பட்டு | விழுப்புரம் |
| 8 | மோட்டம்பட்டி | விழுப்புரம் |
| 9 | கரியாலூர் | விழுப்புரம் |
| 10 | புதுப்பட்டி | விழுப்புரம் |
| 11 | பச்சமலை (இ) வேப்படிபலா | சேலம் |
| 12 | அரநூத்துமலை | சேலம் |
| 13 | கருமாந்துரை | சேலம் |
| 14 | நாகலூர் | சேலம் |
| 15 | வாழவந்தி | சேலம் |
| 16 | கங்கவள்ளி | சேலம் |
| 17 | கரியப்பட்டி | சேலம் |
| 18 | அரியாபாளையம் | சேலம் |
| 19 | பவர்காடு | நாமக்கல் |
| 20 | வாழவந்திநாடு | நாமக்கல் |
| 21 | சித்தேரி | தருமபுரி |
| 22 | பாப்பிரெட்டிப்பட்டி | தருமபுரி |
| 23 | டாப்செங்காட்டுப்பட்டி | திருச்சி |
| 24 | உப்பிலியாபுரம் | திருச்சி |
| 25 | பேச்சிப்பாறை | கன்னியாகுமரி |

[2005 மார்ச் 28

## இணைப்பு II

(308 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

### மானியக் கோரிக்கை எண் 9

### பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை

### கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006

**முன்னுரை**

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினரின் கல்வி, சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்கான பல்வேறு நலத் திட்டங்களைத் தீட்டுவதிலும் செயல்படுத்துவதிலும் தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. இவ்வகுப்பினருக்கு தரமான கல்வி வழங்குவதன்மூலமே அவர்களது ஒட்டுமொத்த பின்தங்கிய நிலைமையினை உயர்த்த இயலும் என்ற அவசியத்தை உணர்ந்த தமிழ்நாடு அரசு, ஒடுக்கப்பட்ட இப்பிரிவினரின் கல்வி மேம்பாட்டிற்காக அதிக நிதி ஒதுக்கி வருகிறது.

**இட ஒதுக்கீடு கொள்கை**

**2** (i) பொதுப் பணிகளில் நியமனங்கள் மற்றும் கல்வி நிலையங்களில் அனுமதி ஆகியவற்றில் கீழ் நிலையிலுள்ள வகுப்பினர்களான பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், ஆதிதிராவிடர் வகுப்பினர் மற்றும் பழங்குடியினர் ஆகியோர்களுக்கு இட ஒதுக்கீடு கொள்கையினை 1921 ஆம் ஆண்டு முதலே செயல்படுத்துவதில் தமிழ்நாடு முன்னோடியாகத் திகழ்கிறது.

(ii) இப்பிரிவினர் சமூக, கல்வி மற்றும் பொருளாதாரத்தில் கணிசமான முன்னேற்றம் காண இவ்விட ஒதுக்கீடு கொள்கை நல்ல பயனைத் தந்துள்ளது.

(iii) மாநிலத்தின் மக்கள் தொகை மற்றும் தற்போதைய இட ஒதுக்கீடு விகிதாச்சாரம் ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன.



2005 மார்ச் 28]

**தமிழ்நாடு மக்கள் தொகை (Projected)**

| வகுப்பினர் | மக்கள் தொகை (2001) | மொத்த மக்கள் தொகையில் விழுக்காடு | இடஒதுக்கீடு விழுக்காடு |
|---|---|---|---|
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | 2,87,93,980 | 46.14 | 30 |
| மிகப் பிற்படுத்தப் பட்ட வகுப்பினர் | 1,08,77,310 | 17.43 | 20 |
| சீர்மரபினர் | 21,46,755 | 3.44 | |
| ஆதிதிராவிடர் | 1,18,57,504 | 19.00 | 18 |
| பழங்குடியினர் | 6,51,321 | 1.04 | 1 |
| இதர பிரிவினர் | 80,78,809 | 12.95 | – |
| மொத்தம் | **6,24,05,679** | **100** | **69** |

(iv) பிரிவுக்கூறு 16(4)-ன்கீழ் மொத்த இட ஒதுக்கீடு 50 விழுக்காட்டிற்கு மிகக்கூடாது என மாண்புமிகு உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பினைத் தொடர்ந்து தமிழ்நாடு அரசு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையின்கீழ் மேற்கொண்ட நடவடிக்கையின் பயனாக 69% இட ஒதுக்கீட்டினை நிலை நிறுத்துவதற்கான சட்டமுன்வடிவு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டு பின்னர் சட்டமாகியது (1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டம் 45). இப்பிரிவினரின் நலன் பாதுகாத்திட இச்சட்டம் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் ஒன்பதாவது அட்டவணையிலும் சேர்க்கப்பட்டுள்ளது.

(v) தங்கள் தேவைக்கேற்ப இட ஒதுகீட்டினை நிர்ணயிக்கும் அதிகாரத்தினை அந்தந்த மாநில அரசுக்கே அளிக்க இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவர மத்திய அரசினை தமிழ்நாடு அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

**கல்வி**

**கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள்**

**3** (i) சீர்மரபினர் வகுப்பினைச் சேர்ந்த பிரமலைக்கள்ளர் இனத்தவர் அதிகமுள்ள மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில்

[2005 மார்ச் 28

பிரமலைக்கள்ளர் இன மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக 260 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் இத்துறையின்கீழ் இயங்கி வருகின்றன. இப்பள்ளிகளில் மாணவர் மற்றும் மாணவியர் ஆகிய இருபாலர்களும் அனுமதிக்கப்படுகின்றனர். 2004-2005 ஆம் ஆண்டில் 48,948 மாணவ/மாணவியர்கள் இப்பள்ளிகளில் அனுமதிக்கப்பட்டனர்.

(ii) 260 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளும் குடிநீர், மின்சாரம், மற்றும் கழிவறை ஆகிய அடிப்படை வசதிகளுடன் கூடிய அரசுக் கட்டடங்களில் இயங்குகின்றன.

(iii) அரசின் கொள்கைக்கேற்ப, கல்வித் துறையின்கீழ் இயங்கும் பள்ளிகளைப் போல, 15 கள்ளர் சீரமைப்பு மேல்நிலைப் பள்ளிகள் அனைத்திலும் கணினி கல்வி அளிக்கப்பட்டு வருகிறது.

(iv) 2004-2005 ஆம் ஆண்டில் 15 அரசு கள்ளர் சீரமைப்பு மேல்நிலைப் பள்ளிகளுக்கும், 11 அரசு கள்ளர் சீரமைப்பு உயர்நிலைப் பள்ளிகளுக்கும் மின் படிப்பெருக்கி இயந்திரங்கள் மொத்தம் ரூ.7.60 இலட்சம் செலவில் வழங்க அரசு ஆணையிட்டது. எஞ்சியுள்ள 12 அரசு கள்ளர் சீரமைப்பு உயர்நிலை பள்ளிகளுக்கான மின் படிப்பெருக்கி இயந்திரங்கள் 2005-2006 ஆம் ஆண்டில் வழங்கப்படவுள்ளது.

(v) தேனி மாவட்டம், உத்தமபாளையம் மாவட்ட கல்வி மற்றும் பயிற்சி நிலையத்திலும், திருச்சி மாவட்டம், குமுளூர் மாவட்ட கல்வி மற்றும் பயிற்சி நிலையத்திலும் தலா 50 இடங்கள் கொண்ட 2 பிரிவுகள் பிரமலைக்கள்ளர் இனத்தவர்களுக்கு இடைநிலை ஆசிரியர் பயிற்சி அளிக்க 2003-2004 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டுள்ளன.

(vi) கள்ளர் சீரமைப்புப் பள்ளி மாணவர்களிடையே படிப்பில் போட்டி மனப்பான்மையை வளர்க்க, கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 10-வது மற்றும் 12-வது வகுப்பில் அதிக மதிப்பெண்கள் பெறும் மாணவர்களுக்கு கீழ்க்கண்டவாறு பரிசுகள் வழங்கும் திட்டத்தை அரசு 2004-2005 முதல் ஏற்படுத்தியுள்ளது:—

| பரிசு | 10 ஆம் வகுப்பு | 12 ஆம் வகுப்பு |
|---|---|---|
| முதல் பரிசு (ஒன்று) | ரூ.3,000/- | ரூ.3,000/- |
| இரண்டாம் பரிசு (ஒன்று) | ரூ.2,000/- | ரூ.2,000/- |
| மூன்றாம் பரிசு (மூன்று) | ரூ.1,000/- (ஒவ்வொருவருக்கும்) | ரூ.1,000/- (ஒவ்வொருவருக்கும்) |



2005 மார்ச் 28]

(vii) 2005-2006 ஆம் ஆண்டில் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கு அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும் விடுதிகளுக்கு புதிய கட்டடங்கள் கட்டவும் கூடுதலாக ரூ.20.11 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(viii) இப்பள்ளிகளின் பராமரிப்பிற்காக 2005-2006 ஆம் ஆண்டிற்கு ரூ.21.62 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**கள்ளர் சீரமைப்புப் பள்ளி மாணவர்களுக்கு குறிப்பேடுகள், புத்தகங்கள் மற்றும் எழுது பலகைகள் வழங்குதல்**

**4** (i) கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 8-வது வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு குறிப்பேடுகளும், 10-வது வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு பாடப்புத்தகங்களும், 3-வது வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு எழுது பலகைகளும் இலவசமாக வழங்கப்படுகின்றன.

(ii) மேற்காணும் இனங்களை 2005-2006 ஆம் ஆண்டில் வழங்க ரூ.45.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சீருடை வழங்குதல்**

**5 (i) கள்ளர் சீரமைப்புப் பள்ளி மாணவர்களுக்கு**

கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் பயிலும் 8 ஆம் வகுப்பு வரையிலான மாணவ மாணவியர்களுக்கு 2 ஜோடி சீருடைகளுக்கான பாலிகாட்டன் துணி தையல் கட்டணத்துடன் வழங்கப்படுகிறது.

**(ii) பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவர் இல்ல மாணவர்களுக்கு**

பிற்படுத்தப்பட்டோர்/மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல மாணவர் இல்லங்களில் தங்கிப் பயிலும் 10 ஆம் வகுப்பு வரையிலான மாணவ/மாணவியர்களுக்கு 2 ஜோடி சீருடைகளுக்கான பாலிகாட்டன் துணி, தையல் கட்டணத்துடன் வழங்கப்படுகிறது.

(iii) 2004-2005 ஆம் ஆண்டில், இத்திட்டத்தின்மூலம் பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவர் இல்லங்கள் மற்றும் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளைச் சேர்ந்த 86,175 மாணவ/மாணவியர்கள் பயன்பெற்றனர். 2005-2006 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்கு ரூ.171.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2005 மார்ச் 28

**படிப்பு உதவித் தொகை திட்டங்கள்**

**6** (i) பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இன மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக பெற்றோரது ஆண்டு வருமானம் ரூ.50,000–க்கும் மிகாத பிற்படுத்தப்பட்டோர்/ மிகப் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் மாணவ/மாணவியருக்கு பல்வேறு படிப்பு உதவித் தொகைகளான பள்ளிப் படிப்பு உதவித் தொகை, பள்ளி மேற்படிப்பு உதவித்தொகை, பட்டப் படிப்பு, பாலிடெக்னிக், பட்டயப் படிப்பு மற்றும் தொழிற்பட்டப் படிப்புகளுக்கு இலவச கல்வி ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

(ii) மூன்று ஆண்டு கால கலை, வணிகவியல் மற்றும் அறிவியல் பட்டப் படிப்பு பயிலும் மிகப் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் மாணவ/மாணவியர்களுக்கு பெற்றோரது ஆண்டு வருமானம் குறித்த உச்சவரம்பு ஏதுமில்லை. (பி.ஏ., பி.எஸ்.சி., பி.காம். மற்றும் பிற)

**(அ) பள்ளிப் படிப்பு உதவித் தொகை**

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கான பள்ளிப் படிப்பு உதவித் தொகை திட்டத்தின்கீழ், கீழ்க்கண்ட பயன்கள் வழங்கப்படுகின்றன.

(i) அரசு மற்றும் அரசு மானியம் பெறும் பள்ளிகளில் 9 மற்றும் 10 ஆம் வகுப்பு பயிலும் மாணவ/மாணவியருக்கு சிறப்பு கட்டணத் தொகை ஈடுசெய்யப்படுகிறது.

(ii) அரசு மற்றும் அரசு மானியம் பெறும் பள்ளிகளில் 9 மற்றும் 10 ஆம் வகுப்பு பயிலும் மாணவ/மாணவியருக்கு இலவசமாக பாடப்புத்தகங்கள் வழங்கப்படுகிறது.

(iii) அரசு மற்றும் அரசு மானியம் பெறும் பள்ளிகளில் 10 ஆம் வகுப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ/மாணவியர் பொதுத் தேர்வுக்கு செலுத்த வேண்டிய தேர்வுக் கட்டணம் நேரடியாக இத்துறையால் அரசுத் தேர்வுகள் துறை இயக்குநருக்கு ஈடுசெய்யப்படுகிறது.

(iv) அரசு மற்றும் அரசு மானியம் பெறும் பள்ளிகளில் ஆங்கில மொழி வழி கல்வி பயிலும் 6 முதல் 10 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு படிப்புக் கட்டணம் ஈடுசெய்யப்படுகிறது.



2005 மார்ச் 28]

(v) பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கான மாணவர் இல்லங்களில் தங்கிப் பயிலும் 6 முதல் 8 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு இலவசமாக பாடப்புத்தகங்கள் வழங்கப்படுகிறது.

(vi) பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கான மாணவர் இல்லங்களில் தங்கி 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு இலவசமாக சிறப்பு வழிகாட்டி புத்தகங்கள் வழங்கப்படுகின்றன.

2004–2005 ஆம் ஆண்டு 6,70,800 மாணவர்கள் இத்திட்டத்தின்கீழ் பயனடைந்தனர்.

2005–2006 ஆம் ஆண்டிற்கு 7,08,000 மாணவர்கள் பயனடைய ரூ.16.85 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(ஆ) பள்ளி மேற்படிப்பு உதவித் தொகை**

(i) பள்ளி மேற்படிப்பு உதவித் தொகை திட்டத்தின்கீழ் மேல் நிலைப் பள்ளி முதல் கல்லூரி/பல்கலைக்கழகங்களில் ஆராய்ச்சி நிலை வரை படிக்கும் மாணவர்களின் படிப்புக் கட்டணம், சிறப்புக் கட்டணம், புத்தகக் கட்டணம் ஆகியவற்றில் ஒரு பகுதியும், முழு தேர்வுக் கட்டணமும் வழங்கப்படுகிறது.

(ii) இத்திட்டத்தின்கீழ், 2004–2005 ஆம் ஆண்டில் 3,71,500 மாணவர்கள் பயனடைந்தனர்.

(iii) 2005–2006 ஆம் ஆண்டில் 3,98,000 மாணவர்கள் பயனடைய ரூ.22.45 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(இ) பட்டப் படிப்பு, பாலிடெக்னிக் மற்றும் தொழில் கல்விக்கான இலவச கல்வித் திட்டம்**

(i) இலவச கல்வித் திட்டமானது, பட்டப் படிப்பு, பாலிடெக்னிக் மற்றும் தொழில்பட்டப் படிப்பு பயிலும் மாணவர்களுக்கு இலவச கல்வி வழங்கும் ஒரு தனித்தன்மைவாய்ந்த உதவித் தொகை திட்டமாகும். அரசு மற்றும் அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களுக்கென நிர்ணயிக்கப்பட்ட படிப்புக் கட்டணம், சிறப்புக் கட்டணம், தேர்வுக் கட்டணம் மற்றும் திரும்பப் பெற இயலாத இதர கட்டணங்கள் ஆகியவை செலுத்துவதிலிருந்து இவர்களுக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது.

[2005 மார்ச் 28

இத்திட்டத்தின்கீழ் 2004–2005 ஆம் ஆண்டில் 1,66,500 மாணவர்கள் பயன்பெற்றனர்.

(ii) 2005–2006 ஆம் ஆண்டில் 1,52,000 மாணவர்கள் பயனடைய ரூ.27.12 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (ஈ) இந்திய அரசின் கல்வி உதவித் தொகைகள்

#### (i) பள்ளி படிப்பு உதவித் தொகை

இந்திய அரசு 2004–2005 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டைச் சார்ந்த இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு பள்ளி படிப்பு உதவித் தொகை வழங்க ரூ.1.33 கோடி (மத்திய அரசு 50 விழுக்காடு, மாநில அரசு 50 விழுக்காடு) ஒதுக்கீடு செய்தது. இத்திட்டத்தின்கீழ் 9 மற்றும் 10 ஆம் வகுப்பு பயிலும் 26,550 மாணவர்கள் பயன் பெற்றனர். இதைத்தவிர, இத்திட்டத்தை 2004–2005-ல் செயல்படுத்த மைய அரசு கூடுதல் தொகையாக ரூ.109.80 இலட்சத்தை விடுவித்துள்ளது.

#### (ii) பள்ளி மேற்படிப்பு உதவித் தொகை

இந்திய அரசு 2004–2005 ஆம் ஆண்டில் பள்ளி மேற்படிப்பு உதவித் தொகை திட்டத்தை செயல்படுத்த ரூ.2.67 கோடி ஒதுக்கீடு செய்தது. இத்திட்டத்தின்கீழ் 2004–2005 ஆம் ஆண்டில் பட்டப் படிப்பு/ பட்டயப் படிப்பு/தொழிற்பட்டப் படிப்பு பயிலும் 25,110 இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்கள் பயன் பெற்றனர்.

### கிராமப்புற மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் பள்ளி மாணவிகளுக்கு ஊக்கத் தொகை வழங்குதல்

**7** (i) கிராமப்புறங்களில் ஆரம்பப்பள்ளி அளவிலேயே படிப்பினை நிறுத்தி விடுவது பரவலாக, குறிப்பாக மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் பெண் குழந்தைகளிடம் இருப்பதைக் குறைத்து, அவர்கள் கல்வியைத் தொடர்வதை ஊக்குவிக்கும் பொருட்டு 3 முதல் 5 ஆம் வகுப்புகள் வரை பயிலும் மிகப் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் பெண் குழந்தைகளுக்கு வருடத்திற்கு ரூ.500 வீதமும் 6 ஆம் வகுப்பில் பயிலும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் பெண் குழந்தைகளுக்கு ஒரு மாதத்திற்கு ரூ.100 வீதம் 10 மாதங்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் ஊக்கத் தொகையாக வழங்கப்படுகிறது.

(ii) இத்திட்டத்தின்கீழ் 2004–2005 ஆம் ஆண்டில் 90,000 மாணவியர்கள் பயன் பெற்றனர்.



2005 மார்ச் 28]

(iii) 2005–2006 ஆம் ஆண்டில் 90,000 மாணவியர்கள் பயன் பெற ரூ.6.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### இலவச மிதிவண்டிகள் வழங்கும் திட்டம்

**8** (i) பெண் கல்வியை ஊக்குவிக்கும் நோக்குடன் 2004–2005 ஆம் ஆண்டு முதல் அரசு மற்றும் அரசு மானியம் பெறும் பள்ளிகளில் 11 மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் அனைத்து பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவியர்களுக்கு 2004–2005-ல் இலவசமாக மிதிவண்டிகள் வழங்குமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள். இத்திட்டம் 2005–2006–லும் தொடரப்பட்டு அரசு மற்றும் அரசு மானியம் பெறும் பள்ளிகளில் +1 வகுப்புப் பயிலும் மாணவியர்களுக்கு செயல்படுத்தப்படும்.

(ii) 2005–2006 ஆம் ஆண்டிற்கு சுமார் 1,26,800 மாணவியர்கள் பயனடைய ரூ.24.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### சிறந்த மாணவர்களுக்கு பரிசுகள் வழங்குதல்

#### 9. (அ) மாநில அளவிலான பரிசுகள்

(i) ஒவ்வொரு வருடமும் 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் மாநில அளவில் முதல் மதிப்பெண் பெறும் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினர் இருவருக்கு (ஒரு ஆண் மற்றும் ஒரு பெண்) இரண்டு முதல் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

(ii) 12 ஆம் வகுப்பில் முதல் பரிசு பெறுபவர் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினராக இருந்தால் ரூ.3,000–ம் மிகப் பிற்படுத்தப்பட்ட/ சீர்மரபினர் வகுப்பினராக இருந்தால் ரூ.5,000–ம் வழங்கப்படுகிறது.

(iii) 10 ஆம் வகுப்பில், முதல் பரிசு பெறுபவர் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினராக இருந்தால் ரூ.1,500–ம் மிகப் பிற்படுத்தப்பட்டோர்/ சீர்மரபினர் வகுப்பினராக இருந்தால் ரூ.3,000–ம் வழங்கப்படுகிறது.

#### (ஆ) மாவட்ட அளவிலான பரிசுகள்

(i) ஒவ்வோர் ஆண்டும் மாவட்ட அளவில் பன்னிரெண்டாம் வகுப்பு மாணவ, மாணவியரில் உயர் தகுதியுடையவர்களுக்கு இரண்டு முதல் பரிசுகள் (மாணவருக்கு ஒன்று, மாணவியருக்கு ஒன்று) வழங்கப்படுகின்றன. பரிசு பெறுபவர் பிற்படுத்தப்பட்ட இன மாணவ/மாணவியராக

[2005 மார்ச் 28

இருப்பின் ரூ.1,500-ம் மிகப் பிற்படுத்தப்பட்ட /சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த மாணவ/மாணவியராக இருப்பின் ரூ.3,000-ம் வழங்கப்படுகின்றன.

(ii) இதுபோன்று பத்தாம் வகுப்பு படிக்கும் பிற்படுத்தப்பட்ட இன மாணவ/மாணவியருக்கு ஒவ்வொன்றும் ரூ.500 வீதம் இரண்டு முதல் பரிசுகள், ஒவ்வொன்றும் ரூ.250 வீதம் இரண்டு இரண்டாம் பரிசுகள் மற்றும் ஒவ்வொன்றும் ரூ.150 வீதம் இரண்டு மூன்றாம் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

(iii) மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த பத்தாவது பயிலும் மாணவ மாணவியர்களுக்கு முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசுகளாக முறையே ரூ.1,000, ரூ.500 மற்றும் ரூ.300 வழங்கப்படுகிறது.

2005-2006 ஆம் ஆண்டில் 240 மாணவர்கள் பயனடைய ரூ.2.15 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (இ) பேரறிஞர் அண்ணா நினைவுப் பரிசு

(i) ஒவ்வொரு மாவட்டத்திலும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இன மாணவர்களில் முதலாம் மற்றும் இரண்டாம் இடம் பெற்று தொழில் பட்டப் படிப்பில் சேர்ந்து பயிலும் இரண்டு மாணவர்கள் மற்றும் இரண்டு மாணவியர்களுக்கு வருடம் ஒன்றுக்கு ரூ.3,000 வீதம் 4/5 ஆண்டுகளுக்கு பேரறிஞர் அண்ணா நினைவுப் பரிசு வழங்கப்படுகிறது.

(ii) 2005-2006 ஆம் ஆண்டில் 465 மாணவர்கள் பயனடைய ரூ.14.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (ஈ) தந்தை பெரியார் நினைவு விருது

(i) ஒவ்வொரு மாவட்டத்திலும் பாலிடெக்னிக்களில் சேர்ந்து பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இன மாணவர்களில் 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்றவர்களில் இரண்டு மாணவர்கள் மற்றும் இரண்டு மாணவியர்களுக்கு வருடம் ஒன்றுக்கு ரூ.3,000 வீதம் மூன்று வருடங்களுக்கு தந்தை பெரியார் நினைவு விருது வழங்கப்படுகிறது.



2005 மார்ச் 28]

(ii) 2005-2006 ஆம் ஆண்டில் 333 மாணவர்களுக்கு தந்தை பெரியார் விருது வழங்கிட ரூ.10.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### மாணவர் இல்லங்கள்

**10.** (i) பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பு மாணவர்கள் நலன் கருதி, 972 மாணவர் இல்லங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இதில் 538 மாணவர் இல்லங்கள் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையாலும், 434 மாணவர் இல்லங்கள் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறையாலும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மொத்தம் 54,930 மாணவர்கள் வருடந்தோறும் பயனடைகின்றனர். பெற்றோர்களது ஆண்டு வருமானம் ரூ.50,000-க்கு மிகாமல் உள்ள மாணவ/மாணவியர் இந்த மாணவரில்லங்களில் சேர அனுமதிக்கப்படுகின்றனர். இலவச தங்கும் வசதியும் வரையறுக்கப்பட்ட வாராந்திர அட்டவணையின்படி உணவு வகையும் இலவசமாக வழங்கப்படுகிறது.

(ii) போதிய அடிப்படை வசதிகளான கழிவறை, குளியலறை மற்றும் குடிநீர் வசதி ஆகியவற்றுடன் மாணவர்கள் தங்குவதற்கு அதிகமான இட வசதியுடன் கூடிய சொந்தக் கட்டடங்களை, தனியார் கட்டடங்களில் இயங்கும் மாணவர் இல்லங்களுக்குக் கட்ட அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது.

(iii) 2000-2001 ஆம் ஆண்டு வரை 202 மாணவர் இல்லங்கள் மட்டுமே அரசு சொந்தக் கட்டடங்களில் இயங்கி வந்தது. கடந்த நான்கு ஆண்டுகளில் 312 மாணவர் இல்லங்களுக்கு அரசு சொந்தக் கட்டடம் கட்ட ஆணையிடப்பட்டுள்ளது. இதில் 193 மாணவர் இல்லங்களுக்கு கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பணிகள் விரைவில் முடிக்கப்படும். இவைதவிர, 2001-2002 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின்மூலம் 33 மாணவர் விடுதிகளுக்குக் கட்டடங்கள் கட்டப்பட்டன. 2005-2006 ஆம் ஆண்டில் 318 மாணவர் இல்லங்களுக்கு ரூ.100.00 கோடி செலவில் கட்டடங்கள் கட்டப்படவுள்ளது.

(iv) மாணவர் இல்லங்களுக்கு மாவரைக்கும் இயந்திரங்கள், வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் (கல்லூரி மாணவர் இல்லங்களுக்கு மட்டும்) விளையாட்டுச் சாதனங்கள் மற்றும் நூலக வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. இதுவரை 699 மாணவர் இல்லங்களுக்கு எரிவாயு

இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. 2005–2006 ஆம் ஆண்டில் 100 மாணவர் இல்லங்களுக்கு எரிவாயு இணைப்பு வழங்கப்படும். மீதமுள்ள 173 மாணவர் இல்லங்களுக்கு எரிவாயு இணைப்பு வரும் ஆண்டுகளில் படிப்படியாக வழங்கப்படும்.

(v) மாணவர்களது பொது அறிவுத்திறன் வளர்த்திட ஒவ்வொரு மாணவர் இல்லத்திற்கும் ஆங்கில நாளிதழ் ஒன்றும், இரண்டு தமிழ் நாளிதழ்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

(vi) 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர் இல்ல மாணவர்களுக்கு வெவ்வேறு திட்டங்களின்கீழ் இலவசமாக பாடப்புத்தகங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

(vii) பொதுத் தேர்வுகளைச் செம்மையாக செய்திட 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர் இல்ல மாணவர்களுக்குச் சிறப்பு வழிகாட்டிப் புத்தகங்கள் அனைத்துப் பாடப் பிரிவுகளிலும் வழங்கப்படுகின்றன.

(viii) மலைப் பகுதியிலுள்ள மாணவர் இல்லங்களில் தங்கிப் பயிலும் மாணவர்கள் குளிர் காலங்களில் தங்களைக் காத்திட ஏதுவாக வருடந்தோறும் கம்பளி மேலாடைகள் வழங்கப்படுகின்றன.

(ix) மாணவர் இல்லங்களில் தங்கிப் பயிலும் 10 ஆம் மற்றும் 12 ஆம் வகுப்பு பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவர்களிடையே படிப்பில் போட்டி மனப்பான்மையை ஊக்குவிப்பதற்காக அதிக மதிப்பெண்கள் பெற்றவர்களுக்கு மாநில அளவிலான கீழ்க்கண்ட பரிசுகளை 2004–2005 ஆம் ஆண்டில் அரசு ஏற்படுத்தியுள்ளது.

| பரிசு | பத்தாம் வகுப்பு | 12 ஆம் வகுப்பு |
|---|---|---|
| முதல் பரிசு | ரூ.3,000 | ரூ.3,000 |
| இரண்டாம் பரிசு | ரூ.2,000 | ரூ.2,000 |
| மூன்றாம் பரிசு | ரூ.1,000 | ரூ.1,000 |

(x) மாணவர் இல்லங்களைத் தூய்மையாக பராமரிக்கவும், தங்கிப் பயிலும் மாணவர்களை பயிலும் நேரத்தில் கண்காணிக்கவும், மாணவர்களுக்கும் பள்ளி மற்றும் கல்லூரி தலைமையாசிரியர் / முதல்வர்



ஆகியோருக்கிடையே கல்வி சம்பந்தமான விஷயங்களில் பாலமாகச் செயல்படவும், 10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் விடுதி மாணவர்கள் அதிக மதிப்பெண்கள் பெறுவதை உறுதி செய்யவும், சிறந்த விடுதி காப்பாளர் / காப்பாளினிகளுக்கு மாநில அளவிலான கீழ்க்கண்ட பரிசுகளை அரசு 2004–2005 ஆம் ஆண்டு ஏற்படுத்தியுள்ளது.

| பரிசு | தொகை |
|---|---|
| முதல் பரிசு | ரூ. 5,000 |
| இரண்டாம் பரிசு | ரூ. 3,000 |
| மூன்றாம் பரிசு | ரூ. 2,000 |

(xi) மாணவர் இல்லங்கள் முறையாகச் செயலாற்றிட ஒவ்வொரு மாணவர் இல்லத்திற்கும் விடுதி நிர்வாகக் குழு அமைத்து கண்காணிக்கப்படுகிறது.

**உணவுத் தொகை**

**11.** (i) கல்லூரி மற்றும் பள்ளி இல்ல மாணவர்களுக்கு உணவுத் தொகை நபர் ஒருவருக்கு முறையே ரூ.400 மற்றும் ரூ.300 வீதம் மாதந்தோறும் வழங்கப்படுகிறது.

(ii) 2005–2006 ஆம் ஆண்டிற்கு ரூ.16.71 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**உணவு மானியம்**

**12.** (i) பெற்றோர்களது ஆண்டு வருமானம் ரூ.50,000 க்கு மிகாமல் உள்ள பிற்படுத்தப்பட்டோர் / மிகப் பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் வகுப்பு மாணவர்கள் தங்கிப் பயிலும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட 39 தனியார் இல்ல மாணவர்களுக்கு உணவு மானியம் வழங்கப்படுகிறது. ஒரு மாணவருக்கு ரூ.150 வீதம் ஒரு வருடத்தில் 10 மாதங்களுக்கு உணவு மானியம் வழங்கப்பட்டது. இத்தொகை 1-6-2004 முதல் ரூ.200 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

(ii) 2005–2006 ஆம் ஆண்டில் சுமார் 1,462 மாணவர்கள் பயன்பெற ரூ.38.30 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## பொருளாதார மேம்பாடு

**13.** மிகவும் ஒடுக்கப்பட்ட இவ்வகுப்பினரது பொருளாதார மேம்பாட்டிற்காக, தையல் இயந்திரங்கள் மற்றும் சலவைப் பெட்டிகள் வழங்குதல் ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

### (அ) இலவச தையல் இயந்திரங்கள் வழங்குதல்

(i) ஏழ்மை நிலையிலுள்ள பிற்படுத்தப்பட்டோர்/ மிகப்பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் வகுப்பினரின் பொருளாதார நிலையை மேம்படுத்தி அவர்கள் வாழ்விற்கு வழிவகுக்க அரசு இலவசமாக தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தினை அமல்படுத்தியது.

(ii) 2004–05 ஆம் ஆண்டில் 2,000 தையல் இயந்திரங்கள் வழங்கிட ரூ.40.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

(iii) 2005–06 ஆம் ஆண்டில் 1,000 இலவச தையல் இயந்திரங்கள் வழங்கிட ரூ.20.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (ஆ) இலவச சலவைப் பெட்டிகள் வழங்குதல்

(i) சலவைத் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்த இலவச சலவைப் பெட்டிகள் வழங்கப்பட்டு வருகின்றன. சலவைப் பெட்டிகளை பெறுவதற்கு கிராமப்புறங்களில் வசிப்போருக்கு ரூ.16,000-க்கும், நகர்ப்புறங்களில் வசிப்போருக்கு ரூ.24,000-க்கும் மிகாது ஆண்டு வருமானம் இருத்தல் வேண்டும்.

(ii) 2004–2005 ஆம் ஆண்டில் 3,000 சலவைப் பெட்டிகள் வழங்க ரூ.42.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

(iii) 2005–2006 ஆம் ஆண்டிலும் 3,000 சலவைப் பெட்டிகள் வழங்க ரூ.42.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## பயிற்சியும் வேலைவாய்ப்பும் அனைத்திந்தியப் பணிகளுக்கான சிறப்புப் பயிற்சித் திட்டம்

**14.** பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்களும் மாணவியர்களும் அனைத்திந்திய சிவில் பணிகள் தேர்வுகளில் வெற்றி பெற போட்டியிடும் வகையில், 100 மாணவ/ மாணவியருக்குப் பயிற்சி அளிக்க சென்னையில் தொடங்கப்பட்ட சிறப்புப் பயிற்சி நிலையம் ஆதிதிராவிடருக்கான பயிற்சி நிலையத்துடன் இணைக்கப்பட்டு அண்ணா மேலாண்மை நிலையத்தின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டது. மேலும், வட்டாரப் பயிற்சி மையம் ஒன்றும் மதுரை காமராசர் பல்கலைக்கழக வளாகத்தில், 75 மாணவ, மாணவியருக்குப் பயிற்சி அளிக்கும் வகையில் இயங்கி வருகிறது. வருமான வரம்பு நிபந்தனை இன்றி பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த மாணவ/ மாணவியர் இப்பயிற்சி நிலையத்தில் சேரத் தகுதியுள்ளவர்கள். எனினும், பயிற்சி நிலையத்துடன் இணைந்த மாணவர் இல்லத்தில் அனுமதி பெற பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.50,000–க்கு மிகைப்படக்கூடாது. மாதம் ஒன்றுக்கு மாணவர் ஒருவருக்கு ரூ.500 வீதம் உணவுக் கட்டணம் அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 2005–2006 ஆம் ஆண்டில் ரூ.31.01 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.





## வேலைவாய்ப்பு பயிற்சித் திட்டம்

**15.** (i) பிற்படுத்தப்பட்டோர் /மிகப் பிற்படுத்தப்பட்டோர்/ சீர்மரபினர் வகுப்பு இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெற்றிட மற்றும் வருமானமுள்ள சுய தொழில் செய்திட வேலைவாய்ப்பு தொடர்பான பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. பிற்படுத்தப்பட்டோர்/மிகப்பிற்படுத்தப்பட்டோர்/ சீர்மரபினர் வகுப்பிலுள்ள படித்த வேலையில்லாத தொழில் நுட்ப அறிவுடைய இளைஞர்களுக்கு சுயதொழில் தொடங்குவது மற்றும் தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெறும் நோக்குடன் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இப்பயிற்சிகளுக்கான கட்டணம் 90:10 என்ற வகையில் முறையே அரசு மற்றும் பயனாளிகளால் செலுத்தப்படும்.

(ii) 2005–2006 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.90.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்ட இடங்களில் அடிப்படை வசதிகள் செய்து தருதல்

**16.** (i) பிற்படுத்தப்பட்டோர் /மிகப்பிற்படுத்தப்பட்டோர்/ சீர்மரபினர் மற்றும் முற்பட்டோர் வகுப்பினருக்கு அரசினால் செயல்படுத்தப்படும் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டத்தின்கீழ் இதுவரை சுமாராக 1.90 இலட்சம் பட்டாக்கள் வழங்கப்பட்டிருப்பினும், அம்மனைகளில் இதுவரை 5,000 வீடுகள் மட்டுமே பயனாளிகளால் கட்டப்பட்டுள்ளன. மேற்படி குடியிருப்புகளில் சாலை அமைத்தல், குடிநீர் வசதி மற்றும் தெரு விளக்குகள் அமைத்தல் முதலிய அடிப்படை வசதிகள்

செய்து கொடுப்பதுதான் பட்டாதாரர்கள் வீடுகள் கட்டுவதற்கு ஊக்கமாக அமையும். எனவே ஒடுக்கப்பட்ட இனத்தவர்களை மேம்படுத்த எடுக்கப்பட்டுவரும் புதிய நடவடிக்கைகளின்கீழ், உள்கட்டமைப்பு பணிகளான சாலை வசதிகள் செய்தல், தெரு விளக்குகள் அமைத்தல், குடிநீர் வசதி மற்றும் சாக்கடை வசதிகளை அக்குடியிருப்புகளில் அமைத்தல் ஆகிய பணிகள் 2001–2002 முதல் இவ்வரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ii) 2005–2006 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்கென ரூ.128.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்

**17.** மண்டல் குழு வழக்கில் இந்திய உச்ச நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவையொட்டி பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினர் பட்டியலில் சேர்ப்பது மற்றும் அப்பட்டியலிலிருந்து நீக்குவது தொடர்பான கோரிக்கைகளைப் பரிசீலனை செய்து அரசுக்கு தக்க பரிந்துரைகளை செய்ய, "தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்" என்னும் நிரந்தர ஆணையத்தை அரசு ஏற்படுத்தியது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலை குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை திருத்தி அமைக்கும் பணியும் இந்த ஆணையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் தங்கள் வகுப்புகளைச் சேர்க்குமாறு பல்வேறு வகுப்பு இயக்கங்கள் மற்றும் தனி நபர்களிடமிருந்து வரப்பெற்ற முறையீடுகள் குறித்து ஆணையம் தற்போது விசாரணை நடத்தி வருகிறது.

## தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்

**18.** தமிழக அரசின் நிறுவனமான தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் 22-5-1982-லிருந்து செயல்படத் தொடங்கியது. பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த தனி நபர், குழுக்கள் மற்றும் சங்கங்களுக்கு உதவிடும் வகையில் குறைந்த வட்டி விகிதத்தில் பொருளாதார மற்றும் நிதிநிலை அடிப்படையில் சாத்தியக்கூறு உள்ள தொழில், வியாபாரம் அல்லது திட்டங்களுக்கு நிதியுதவி வழங்குதல் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் முக்கிய நோக்கமாகும்.



தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், புது தில்லியில் அமைந்த தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் மாநில முகவராகச் செயல்படுகிறது.

கீழ்க்கண்ட நிறுவனங்கள் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் கடன்களை வழங்கவும், கடன்களை வசூலிக்கவும் துணை முகவர்களாகச் செயல்பட அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

1. தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி
2. தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம்
3. கூட்டுறவு வங்கிகள்
4. தனியார் மற்றும் அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள்
5. தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் இணையம் (ஆவின்)

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் இதுவரையில், புது தில்லியிலுள்ள தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்திடமிருந்து ரூ.5290.54 இலட்சங்கள் 1993–1994 ஆம் ஆண்டு முதல், காலக் கடனாக பெற்றுள்ளது. இத்தொகை முழுவதும் காலக் கடன் வகையில் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் சிறுபான்மையினருக்கு கடன் வழங்குவதற்காக புது தில்லியிலுள்ள தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதிக் கழகத்திடமிருந்து ரூ.464.00 இலட்சம் காலக் கடனாக பெற்றுள்ளது. தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் ஆரம்பிக்கும் முன்னர், இக்கழகத்தால் சிறுபான்மையினர்களை பொறுத்தவரையில் இத்தகைய காலக் கடன் ரூ.143.30 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. மீதித் தொகையை பயன்பாட்டுக்காக தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்கு நிதி மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதுவரையில் இக்கழகம், தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள், மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தி இணையங்களின் உறுப்பினர்கள் மற்றும் தனி நபர் கடன்களைப் (தனியார் கட்டடங்களில் இயங்கும் அரசு விடுதிகளின் அடிப்படை வசதிகளை மேம்படுத்த வழங்கும் கடன்கள் உட்பட) பொதுக் கடன் வழங்கும் திட்டத்தின்கீழ் 40,771 நபர்கள் பயன்பெறும் வகையில் மொத்தம் ரூ.4,481.22 இலட்சங்கள் கடன் வழங்கியுள்ளது.

[2005 மார்ச் 28

## சிறுகடன் வழங்கும் திட்டம்

**19.** தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகமானது சுயஉதவிக் குழுக்களில் உறுப்பினர்களாக உள்ள மகளிருக்கு சிறு தொழில் மற்றும் சிறு வியாபாரம் செய்வதற்காக தலா ரூ.2,000 வீதம் கூட்டுறவு வங்கிகளின்மூலம் சிறு கடன் வழங்கும் திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் புது தில்லி, தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் நிதியுதவியுடன் 62,806 நபர்கள் பயனடையும் வகையில், இதுவரையில் ரூ.1,256.12 இலட்சங்கள் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின்மூலம் கடன் வழங்கப்பட்டுள்ளது.

## தொழில் முனைவோர் பயிற்சி பெற்ற மகளிருக்குக் கடன் வழங்கும் திட்டம்

**20.** தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகமானது தொழில் முனைவோர் பயிற்சி பெற்ற பிற்படுத்தப்பட்டோர்/ மிகப் பிற்படுத்தப்பட்டோர்/ சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த மகளிருக்கு அதிகபட்ச திட்ட மதிப்பீட்டுத் தொகையாக ரூ.10,000 வரை கடனுதவி வழங்கி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் இதுவரையில் 149 மகளிருக்கு மொத்தம் ரூ.13.99 இலட்சங்கள் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

## சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது

**21.** 1994 ஆம் ஆண்டு முதல் சமூக நீதிக்காக பாடுபடுவோரை கௌரவிக்கும் விதமாக தந்தை பெரியார் சமூக நீதி விருது ஒன்றை அரசு ஏற்படுத்தியுள்ளது. மாண்புமிகு முதல்வர் தெரிவு செய்யும் தகுதி வாய்ந்த ஒருவருக்கு 1995 ஆம் ஆண்டு முதல் இந்தப் பரிசு வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருது ஒரு சவரன் தங்கப் பதக்கமும், ரூ.1.00 இலட்சம் ரொக்க வெகுமதியும் கொண்டதாகும்.

## தமிழ்நாடு வக்ஃபு வாரியம்

**22.** 1-1-1996 முதல் அமலுக்கு வந்த 1995 ஆம் ஆண்டு வக்ஃபு சட்டத்தின்கீழ் (மத்திய சட்டம் 43/1995) தமிழ்நாடு வக்ஃபு வாரியம் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாரியம் 13 உறுப்பினர்களைக் கொண்டதாகும் (இணைப்பு-அ). வக்ஃபு அல்லது வக்ஃபு சொத்து தொடர்பான தகராறுகளை முடிவு செய்வதற்கு, 30 மாவட்டங்களில் அதிகார வரம்பைப் பெற்றுள்ள 23 வக்ஃபு நடுவர் மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆண்டுதோறும், அரசு, தமிழ்நாடு வக்ஃபு வாரியத்திற்கு அரசு



2005 மார்ச் 28]

நிதியிலிருந்து நிருவாக மானியம் வழங்கி வருகிறது. இத்திட்டத்திற்காக 2005-2006 ஆம் ஆண்டில் ரூ.40.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், மசூதிகள் மற்றும் தர்காக்களைப் புதுப்பித்தல் மற்றும் முஸ்லிம் இடுகாடுகளுக்குச் சுற்றுச் சுவர் கட்டுதல் அல்லது முட்கம்பி வேலி அமைத்தல் ஆகியவற்றிற்கு நிதியுதவி தேவைப்படும் தகுதி வாய்ந்த வக்ஃபு நிறுவனங்களுக்கு, அரசு, தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தின் வழியாக ஒவ்வோராண்டும் மானியம் வழங்கி வருகிறது. இத்திட்டத்திற்கென 2005-2006 ஆம் ஆண்டில் ரூ.10.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## உலமா ஓய்வூதியத் திட்டம்

**23.** பேஷ் இமாம், முஅஜ்ஜின், அரபி ஆசிரியர் அல்லது முஜாவர் (முஸ்லிம்) ஆக 20 ஆண்டுகள் பணியாற்றி, 60 வயதை அடைந்தவர்களாகவும், அளவை செய்யப்பட்டு, அறிவிக்கை வெளியிடப்பட்டு, ஆண்டு சகாயத் தொகை செலுத்தும் வக்ஃபு நிறுவனங்களில் பணிபுரிந்தவர்களாகவும் இருந்து வரும் வறிய நிலையில் உள்ள உலமாக்களுக்கு, உலமா ஓய்வூதியமாக மாதமொன்றுக்கு ரூ.500 வீதம் வழங்கப்பட்டு வருகிறது. உலமா ஓய்வூதிய ஒப்பளிப்புக் குழுவின் பரிந்துரையினைப் பெற்று, உலமா ஓய்வூதியம் வழங்கி ஆணையிட தமிழ்நாடு வக்ஃபு வாரிய முதன்மைச் செயல் அலுவலருக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை 2,200. அதில் தற்போது உலமா ஓய்வூதியம் பெறும் பயனாளிகளின் எண்ணிக்கை 1,804. இத்திட்டத்திற்காக 2005-2006 ஆம் ஆண்டில் ரூ.1.20 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## அன்னதானத் திட்டம்

**24.** தமிழ்நாட்டில் உள்ள தெரிந்தெடுக்கப்பட்ட 12 தர்காக்களில் (இணைப்பு-ஆ) அன்னதானம் வழங்கும் திட்டத்தை தமிழ்நாடு வக்ஃபு வாரியம் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் 3-3-2003 அன்று சென்னையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ், வியாழக்கிழமைதோறும் ஏழை முஸ்லீம் பக்தர்களுக்கு, தர்காக்களில் கொடையாளிகள்மூலமாக பெறப்படும் பொது நன்கொடைகளிலிருந்து உணவு வழங்கப்படுகிறது. இதைத்தவிர தமிழ்நாடு வக்ஃபு வாரியம், 101 தர்காக்களில் அன்னதானம் வழங்கியுள்ளது.

**தமிழ்நாடு மாநில ஹஜ் குழு**

**25.** ஹஜ் குழு சட்டம், 2002, 5–12–2002 முதல் அமலுக்கு வந்தது. தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவை மேற்சொன்ன சட்டத்திலுள்ள பிரிவுகளின்கீழ் அமைத்து 27–6–2003 அன்று அறிவிக்கை வெளியிட்டது. இக்குழு, அலுவல்சார் உறுப்பினரான குழுவின் செயல் அலுவலருடன் சேர்த்து 16 உறுப்பினர்கள் அடங்கியதாகும். (இணைப்பு–இ).

அரசு, தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவிற்கு அதன் நிருவாகச் செலவுகளுக்காக ஒவ்வோராண்டும் ரூ.10.00 இலட்சம் மானியமாக வழங்கி வருகிறது. ஹஜ் புனித பயணத்தின்போது, வெளியூர்களிலிருந்து வரும் ஹஜ் பயணிகளுக்கு சென்னையில் தங்குவதற்கான இடவசதிகள் செய்து கொடுத்தல், தங்கியிருக்குமிடத்திலிருந்து சென்னை விமான நிலையத்திற்குச் செல்வதற்கான போக்குவரத்து வசதிகள் செய்தல், சென்னையிலிருந்து ஜித்தாவிற்கு விமானச் சேவைக்கான உரிய ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தல் போன்ற பணிகளை ஹஜ் பயணிகளுக்கு தமிழ்நாடு மாநில ஹஜ் குழு செய்து கொடுக்கிறது. நிருவாகச் செலவுகளுக்கான மானியமாக 2005–2006 ஆம் ஆண்டில் ரூ. 10.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நிருவாகச் செலவிற்கான மானியத்துடன், ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாடு அரசு, ஹஜ் தொண்டர்களை சவூதி அரேபியாவிற்கு அனுப்புவதற்கும், ஹஜ் பயணிகள் தங்குவதற்கான கட்டடங்களை தேர்வு செய்யும் குழுவின் பிரதிநிதிகளை சவூதி அரேபியாவிற்கு அனுப்புவதற்கும் ஆகும் செலவினத்திற்காக தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவிற்கு மானியம் அளித்து வருகிறது. 2005–2006 ஆம் ஆண்டில் இதற்கு ரூ.6.75 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**முஸ்லிம் மகளிர் உதவிச் சங்கம்**

**26.** முஸ்லிம் மகளிர் உதவிச் சங்கம், சங்கங்கள் பதிவிற்கான சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டு சென்னையில் 1-10-1892 அன்று தொடங்கப்பட்டது. சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் இச்சங்கத்தின் தலைவராவார். ஆதரவற்ற முஸ்லிம் விதவைகளுக்கு மாதாந்திர உதவித் தொகை வழங்குதல், தகுதியுடைய முஸ்லிம் மகளிர் மற்றும் பெண்களுக்கு உதவிகள் செய்தல், ஆதரவற்ற முஸ்லிம் மகளிருக்கு கைத்திறத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள் ஆகியவற்றில் பயிற்சி அளிப்பதற்கான நிலையம் அமைத்தல் போன்றவை இச்சங்கத்தின் முக்கிய



நோக்கங்களாகும். இச்சங்கம் தன்னார்வலர்களிடமிருந்து பெறப்படும் நன்கொடைகளின்மூலம் தேவையான நிதியைத் திரட்டுகிறது. ஆண்டுதோறும் இச்சங்கம் திரட்டும் நிதிக்கு இணையான தொகையை தமிழ்நாடு அரசு மானியமாக வழங்குகிறது. 2005–2006 ஆம் ஆண்டிற்கு மானியமாக ரூ. 1.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**புதிய திட்டங்கள்**

**27.** 2005–2006 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட புதிய திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளன.

**(ரூபாய் இலட்சத்தில்)**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மொத்த செலவு | 2005–2006-ல் செலவு |
|---|---|---|---|
| | பிற்படுத்தப்பட்டோர் | | |
| 1 | 10 மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகங்களுக்குத் தொலை நகலி, தொலைபேசி இணைப்பு வழங்குதல் | 21.00 | 21.00 |
| 2 | இயக்ககத்திற்குக் கூடுதலாக ஒளிநகல் இயந்திரம் வழங்குதல் | 1.25 | 1.25 |
| 3 | இயக்ககத்திற்கு ஒரு லேசர் அச்சுப்பொறி மற்றும் ஒரு லைன் மேட்ரிக்ஸ் அச்சுப்பொறி வாங்குதல் | 1.50 | 1.50 |
| 4 | 50 பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளுக்கு எரிவாயு இணைப்பு வழங்கல் (ரூ.30,000 வீதம்) | 15.00 | 15.00 |
| 5 | 5 பிற்படுத்தப்பட்டோர் நல மகளிர் விடுதிகளுக்கு சுற்றுச்சுவர் கட்டுதல் ( ரூ.2.75 இலட்சம் வீதம்) | 13.75 | 13.75 |
| 6 | கல்லூரி விடுதிகளில் 700 கூடுதல் மாணவர் இடங்களை ஏற்படுத்துதல் | 28.00 | 28.00 |

[2005 மார்ச் 28

| | | | |
|---|---|---|---|
| 7 | பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி மாணவர்களது பல்வகை கட்டணத்தை உயர்த்துதல் (ரூ.10/–லிருந்து ரூ.15/– மாதம் ஒன்றுக்கு) | 14.71 | 14.71 |
| 8 | உண்டி மற்றும் உறையுள் கட்டணத்தை உயர்த்துதல் (கல்வி நிறுவனங்களில் இயங்கும் விடுதிகளிலுள்ள கல்வி உதவித் தொகை பெறும் பயனாளிகள்) | 32.27 | 32.27 |
| 9 | குடிதண்ணீர் சுத்திகரிப்பு கருவி 50 விடுதிகளுக்கு வழங்குதல் ( ரூ.10,000/– வீதம்) | 5.00 | 5.00 |
| | மிகப்பிற்படுத்தப்பட்டோர் வகுப்பு | | |
| 10 | உசிலம்பட்டி மாணவர் மற்றும் மாணவியர் விடுதிகளுக்கு சமையலுக்கான நீராவி கொதிகலன் வாங்குதல் | 2.75 | 2.75 |
| 11 | இயக்ககத்திற்கு ஒரு லேசர் அச்சுப்பொறி மற்றும் இரண்டு டாட் மேட்ரிக்ஸ் அச்சுப்பொறிகள் வாங்குதல் | 1.00 | 1.00 |
| 12 | 50 மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் விடுதிகளுக்கு எரிவாயு இணைப்பு வழங்குதல் | 15.00 | 15.00 |
| 13 | 3 மாணவியர் விடுதிகளுக்கு சுற்றுச்சுவர் கட்டுதல் | 10.40 | 10.40 |
| 14 | கல்லூரி விடுதிகளுக்கு ஒப்பளிக்கப்படும் கூடுதல் மாணவர் இடங்களை 75-லிருந்து 150–ஆக உயர்த்துதல் | 3.00 | 3.00 |



2005 மார்ச் 28]

| | | | |
|---|---|---|---|
| 15 | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி மாணவர்களது பல்வகை கட்டணத்தை உயர்த்துதல் (ரூ.10/–லிருந்து ரூ.15/– மாதம் ஒன்றுக்கு) | 12.74 | 12.74 |
| 16 | தனித் துணை ஆட்சியர் (கள்ளர் சீரமைப்பு) மதுரை அலகிற்கு தொலை நகலி இயந்திரம் வழங்குதல் | 2.10 | 2.10 |
| 17 | 15 மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் 23 உயர்நிலைப் பள்ளிகளில் கூடுதலாக கழிவறை கட்டட வசதிகள் கட்டுதல் (ரூ.2.00 இலட்சம் வீதம்) | 76.00 | 76.00 |
| 18 | 3 அரசு கள்ளர் சீரமைப்பு மேல் நிலைப் பள்ளிகளிலுள்ள ஆய்வுக் கூட வசதிகளை மேம்படுத்துதல் (ரூ.3.00 இலட்சம் வீதம்)<br>1. செக்கானூரணி<br>2. நாட்டார்மங்கலம்<br>3. ராஜதாணி | 9.00 | 9.00 |
| 19 | 10 அரசு கள்ளர் சீரமைப்பு பள்ளிகளுக்கு (5 மேல்நிலை + 5 உயர்நிலை) கூடுதல் இரட்டை வகுப்பறைகள் கட்டுதல் (ரூ.5.00 இலட்சம் வீதம்) | 50.00 | 50.00 |
| 20 | 12 கள்ளர் சீரமைப்பு உயர்நிலைப் பள்ளிகளுக்கு மின்சார படிப்பெருக்கி இயந்திரம் வாங்குதல் (ரூ.29,000/– வீதம்) | 3.48 | 3.48 |
| 21 | 50 விடுதிகளுக்கு குடிநீர் சுத்திகரிப்பு கருவி வழங்குதல் (ரூ.10,000/– வீதம்) | 5.00 | 5.00 |
| 22 | 28 அரசு கள்ளர் சீரமைப்பு பள்ளிகளுக்கு மின் விசிறி, மின் விளக்கு வசதிகள் அமைத்தல் (ரூ.30,000/– வீதம்) | 8.40 | 8.40 |

[2005 மார்ச் 28

| | | | |
|---|---|---|---|
| 23 | 9 அரசு கள்ளர் சீரமைப்பு பள்ளிகளுக்கு ஆய்வுக் கூடங்கள் கட்டுதல் (ரூ.12.50 இலட்சம் வீதம்) | 112.50 | 112.50 |
| 24 | 23 அரசு கள்ளர் சீரமைப்பு உயர்நிலைப் பள்ளிகளுக்கு கணினி அறைகள் அமைத்துத் தருதல் (ரூ.3.00 இலட்சம் வீதம்) | 69.00 | 69.00 |
| | தலைமைச் செயலகம் | | |
| 25 | ஐந்து கணினிகள் அதன் உதிரி பாகங்களுடன் வாங்குதல் | 2.75 | 2.75 |
| 26 | புதிய ஒளிநகல் இயந்திரம் ஒன்று மின் நிலைப்பானுடன் வாங்குதல் | 1.00 | 1.00 |
| | தமிழ்நாடு வக்ஃபு வாரியம் | | |
| 27 | மண விலக்குப் பெற்ற முஸ்லீம் பெண்கள் பாதுகாப்புச் சட்டம் 1986–ன்கீழ் நீதிமன்றங்கள் வழங்கும் தீர்ப்புகளைச் செயல் படுத்துவதற்காக தமிழ்நாடு வக்ஃபு வாரியத்திற்கு மானியம் அளித்தல் | 6.00 | 6.00 |
| 28 | தமிழ்நாடு வக்ஃபு வாரிய அலுவலகத்திற்குக் கூடுதலாக ஐந்து கணினிகள் வாங்குதல் | 2.50 | 2.50 |
| | தமிழ்நாடு மாநில ஹஜ் குழு | | |
| 29 | தமிழ்நாடு மாநில ஹஜ் குழு அலுவலகத்திற்கு மாநாட்டுக் கூடம் மற்றும் வரவேற்பு முகப்புப் பகுதியில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல் | 2.00 | 2.00 |
| | மொத்தம் | 527.10 | 527.10 |



2005 மார்ச் 28]

**முடிவுரை**

28. தமிழக அரசு நலிவுற்ற நிலையிலுள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலனுக்கு மிக முக்கியத்துவம் அளிப்பதுடன் அவர்களின் கல்வி; சமூக, பொருளாதார நிலையினை மேம்படுத்த ஒவ்வொரு ஆண்டும் அதிக நிதி ஒதுக்கீடு செய்து மேற்குறிப்பிட்டுள்ளவாறு பல்வேறு சீரிய நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

## இணைப்பு–அ

### தமிழ்நாடு வக்ஃபு வாரிய உறுப்பினர்களின் பட்டியல்

1. திருமதி பதர் சயீத், தலைவர்
2. திரு. எம்.ஏ. காதர், முன்னாள் எம்.பி.
3. திரு. எம்.எஸ். அப்துல் காதர், முன்னாள் எம்.பி.
4. திரு. எம்.ஏ. ஹக்கீம், எம்.எல்.ஏ.
5. திரு. ஈ.ஏ. லியாவுத்தீன் சேட், எம்.எல்.ஏ.
6. திருமதி ஏ.எஸ். பீபீ ஜான், பி.ஏ., பி.எல்.
7. திரு. எம்.கே. கான், பி.எஸ்ஸி., பி.எல்.
8. டாக்டர் ஹாஜா கே. மஜீத்
9. திரு. எம். முகம்மது சிக்கந்தர்
10. திரு. எம்.எஸ்.ஏ. ஷாஜகான்
11. திரு. சையத் மொய்னுதீன்
12. திரு. என்.ஏ. மிர்ஸா
13. திரு. ஏ. முகமது அஸ்லம், இ.ஆ.ப.

[2005 மார்ச் 28

## இணைப்பு-ஆ

### அன்னதான திட்டத்தின்கீழ் உள்ள தர்காக்களின் பட்டியல்

| | |
|---|---|
| 1 | ஏர்வாடி தர்கா, இராமநாதபுரம் மாவட்டம். |
| 2 | ஹஜரத் நூர் முகமது ஷா அவுலியா தர்கா, பண்ருட்டி, கடலூர் மாவட்டம். |
| 3 | ஹஜரத் சையது அலி பாத்திமா தர்கா, ஆத்தங்கரை பள்ளிவாசல், புளிமாங்குளம், திருநெல்வேலி மாவட்டம். |
| 4 | திருச்சி தப்லே ஆலம் பாதுஷா நாதர் வலி தர்கா, திருச்சி. |
| 5 | நாகூர் தர்கா, நாகூர், நாகப்பட்டினம் மாவட்டம். |
| 6 | இரட்டை மஸ்தான் தர்கா, கெண்டி ராஜபாளையம், தஞ்சாவூர். |
| 7 | ஹஜரத் தமீம் அன்ஸாரி (ரஹ்) தர்கா, கோவளம், காஞ்சிபுரம் மாவட்டம். |
| 8 | ஹஜரத் மோதி பாவா அவுலியா தர்கா, எழும்பூர், சென்னை-8. |
| 9 | ஷேக் அப்துல்லா அவுலியா தர்கா, சிங்கம்புணரி, திருப்பத்தூர் வட்டம், சிவகங்கை மாவட்டம். |
| 10 | பாப்பாவூர் ஹஜரத் காஜா ஷேக் அலாவுதின் சிஷ்தி ஆண்டவர்கள் தர்கா, அந்தணபேட்டை, நாகப்பட்டினம் மாவட்டம். |
| 11 | மொய்தீன் ஆண்டவர் புராதன தர்கா மற்றும் பள்ளிவாசல், தெற்கு தெரு, மதுரை. |
| 12 | ஹஜரத் காஜா சையத் சுல்தான் அலாவுதின் அவுலியா தர்கா மற்றும் மசூதி, கோரிப்பாளையம், மதுரை. |



2005 மார்ச் 28]

## இணைப்பு-இ

### தமிழ்நாடு மாநில ஹஜ் குழு உறுப்பினர்களின் பட்டியல்

| | |
|---|---|
| 1 | திரு. எஸ்.பி.எம். சையது கான், எம்.பி., தலைவர், ஹஜ் குழு. |
| 2 | திரு. அன்வர் ராஜா, சட்டமன்ற உறுப்பினர். |
| 3 | திரு. எம்.ஏ. ஹக்கீம், சட்டமன்ற உறுப்பினர். |
| 4 | திரு. எஸ்.எம்.ஏ. ஜலீல், நகராட்சி கவுன்சிலர். |
| 5 | டாக்டர் (திருமதி) நிலோஃபர் கஃபீல், நகராட்சித் தலைவி, வாணியம்பாடி. |
| 6 | திரு. லத்தீப், தலைவர், கொள்ளிடம் பஞ்சாயத்து யூனியன். |
| 7 | திரு. ஹாஜி முகம்மது சலாவுதின் அயூப், தலைமை காஜி, (சுன்னி) |
| 8 | பேராசிரியர் திரு. கே.எம். காதர் மொஹிதீன். |
| 9 | திரு. குலாம் முகம்மது மெஹ்திகான், தலைமை ஷியா காஜி. |
| 10 | திரு. அல்ஹாஜ் நவாப் முகம்மது அப்துல் அலி, மேன்மைதங்கிய ஆற்காடு இளவரசர். |
| 11 | திரு. எம். முகம்மது ஹாஷிம், தலைவர், தமிழ்நாடு ஹஜ் சர்வீஸ் சொசைட்டி. |
| 12 | டாக்டர் ஹமீது அப்துல் காதர், சதக் டிரஸ்டு, சென்னை. |
| 13 | டாக்டர் ஹாஜா கே. மஜீத், மரியம் பரிசோதனை மையம், சென்னை. |
| 14 | திரு. அப்சல் சாஹிப், பர்வீன் டிராவல்ஸ், சென்னை. |
| 15 | திருமதி பதர் சயீத், தலைவர், தமிழ்நாடு வக்ஃபு வாரியம், சென்னை. |
| 16 | திரு. அலாவுதின், இ.ஆ.ப., பதவி வழி உறுப்பினர் மற்றும் செயல்-அலுவலர். |

[2005 மார்ச் 28

## இணைப்பு – ஈ

## 2005–06 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு

(ரூபாய் இலட்சத்தில்)

| துறைத் தலைவர் | திட்டம் | திட்டம் சாராதது | மொத்தம் |
|---|---|---|---|
| தலைமைச் செயலகம் | – | 132.23 | 132.23 |
| வக்ஃபு வாரியம், ஹஜ் குழு மற்றும் முஸ்லீம் மகளிர் உதவிச் சங்கம் | 10.52 | 187.75 | 198.27 |
| பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலன் | 7391.36 | 2022.07 | 9413.43 |
| மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன் | 5861.51 | 3414.71 | 9276.22 |
| பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் | – | 29.03 | 29.03 |
| மாநில சிறுபான்மையினர் ஆணையம் | – | 20.08 | 20.08 |
| மூலதனச் செலவு | | | |
| பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலன் | 6253.55 | 0.01 | 6253.56 |
| மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன் | 3400.00 | — | 3400.00 |
| மொத்தம் | 22916.94 | 5805.88 | 28722.82 |



2005 மார்ச் 28]

## சிறுபான்மையினர் நலன்

(மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பில் உள்ளது)

இம்மாநிலத்தில் பல்வேறு பிரிவினரிடையே மத மற்றும் இன நல்லிணக்க உணர்வை வளர்க்க இவ்வரசு பெரிதும் பாடுபட்டு வருகின்றது. சிறுபான்மையின மக்கள், தாமும் இம்மாநிலத்தின் ஓர் அங்கம் என்ற உணர்வைப் பெறுகின்ற வகையில், மாநில அரசால், சிறப்புத் திட்டங்கள் தீட்டப்பட்டு, திறம்பட செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

சிறுபான்மையினரின் பொருளாதார, சமூக மற்றும் கல்வி வளர்ச்சியினை உறுதிப்படுத்தும் வகையில், மாண்புமிகு பிரதமரின் 15 அம்ச சிறுபான்மையினர் நலத் திட்டம், மாநில அரசால் திறம்பட செயற்படுத்தப்பட்டு வருகிறது.

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை இத்திட்டத்தை திறம்பட செயல்படுத்துவதில் மற்ற துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகிறது.

மாநிலத்தில் சிறுபான்மையினரின் நலனுக்காக பின்வரும் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

1. தமிழ்நாடு பாடநூல் கழகம்மூலம், மொழிவழிச் சிறுபான்மையினருக்குப் பாடநூல்கள் வழங்கப்படுகின்றன.

2. சிறுபான்மை இனத்தைச் சார்ந்த மாணவ / மாணவியர் தங்களின் தாய் மொழியில் கல்வி பயில வசதிகள் செய்து தரப்படுகின்றன.

3. உருது, தெலுங்கு, மலையாளம் மொழிகளில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் முறையே சென்னை, கிருட்டிணகிரி, தேரூர் ஆகிய இடங்களில் நடத்தப்படுகின்றன.

4. காவலர் பணியாளர் நியமனத்தில் சிறுபான்மையினருக்குத் தனிச் சலுகை அளிக்கப்படுகின்றது.

5. வளர்ச்சித் திட்டங்களில் சிறுபான்மையினருக்கு நியாயமான வாய்ப்புகள் அளிக்கப்படுகின்றன.

இம்மாநிலத்தில், சிறுபான்மையினரின் வளர்ச்சிக்காக, பின்வரும் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

### தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டம்

இத்திட்டத்தின்கீழ், இஸ்லாமியர்கள் அதிகமாக வாழும் மாவட்டங்களிலிருந்து 1,000 என்று இலக்கு நிர்ணயித்து இஸ்லாமிய

இளைஞர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். அவர்களுக்கு வேலை வாய்ப்பு நோக்கிலமைந்த தொழில்நுட்பப் பயிற்சியளிக்கப்படுகிறது. பயிற்சி முடிந்தவுடன் அவர்களுக்கு சுயதொழில் தொடங்க ஒரு நபருக்கு ரூ.25,000/- வரை கடன் வழங்கப்படுகிறது.

**மகிளா சம்ரிதி யோஜனா**

சிறுபான்மையினத்தைச் சார்ந்த 40 மகளிருக்கு வேலைவாய்ப்பு நோக்கிலமைந்த அரசு சாரா நிறுவனங்கள்மூலம் ரூ.1,80,000 செலவில் தையல், பின்னல் மற்றும் பூத்தையல் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. பயிற்சிக்குப் பின்னர் இவர்கள் சுயஉதவிக் குழுக்கள் அமைத்து சிறு கடன் பெற்றிட ஊக்குவிக்கப்படுவார்கள்.

**சிறு கடன் உதவி**

தேசிய சிறுபான்மை வளர்ச்சி மற்றும் நிதிக் கழகத்திடமிருந்து, தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், குறித்த காலக் கடன் பெற்று, சிறுபான்மையினருக்கு, அவர்கள் தெரிந்தெடுக்கும் தொழில் நடத்த நபர் ஒருவருக்கு ரூ.10,000/- க்கு மிகாமல் வழங்கப்படுகிறது.

**தனிநபருக்கான குறித்த காலக் கடன்**

இத்திட்டம் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தால் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இக்கழகம், ரூ.1 இலட்சம் வரையிலான கடன்களை தானே வழங்குகிறது. ரூ.1 இலட்சத்திற்கு மேற்பட்டு ஆனால் ரூ.5 இலட்சம் என்ற உச்சவரம்பிற்குட்பட்ட கடன்களை, இக்கழகம், தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதிக் கழகத்தின் முன் அனுமதி பெற்று வழங்குகிறது.

**கறவை மாடுகள் திட்டம்**

கறவை மாடுகள் வாங்க சிறுபான்மையினருக்கு 'ஆவின்' மூலமாக நிதியுதவி வழங்கப்படுகிறது. ஒவ்வொரு பயனாளிக்கும் இரண்டு கறவை மாடுகள் வழங்கப்படும். ஒரு கறவை மாட்டின் விலை ரூ.15,000/- என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தால் செயற்படுத்தப்படுகிறது.

**மாநில சிறுபான்மையினர் ஆணையம்**

இம்மாநிலத்தில் வாழும் மதவழி மற்றும் மொழிவழி சிறுபான்மையினரின் நலன்களைப் பாதுகாக்க, மாநில அரசால் சிறுபான்மையினர் ஆணையம் ஒன்று அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.



இம்மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் பணிகள் பின்வருமாறு:—

1. சிறுபான்மையினரின் பாதுகாப்புக்கு இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் மற்றும் மாநில சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட சட்டங்களில் வழங்கப்பட்டுள்ள பல்வேறு பாதுகாப்பு அம்சங்களை பரிசீலித்து மதிப்பீடு செய்தல்.

2. அனைத்துப் பாதுகாப்பு அம்சங்களும் திறம்படச் செயற்படுத்தப்படுவதை உறுதி செய்யும் முகத்தான் பரிந்துரைகள் செய்தல்.

3. சிறுபான்மையினர் தொடர்பான மாநில அரசின் கொள்கைகளையும், செயற்படுத்தப்படும் திட்டங்களையும் கூர்ந்தாய்வு செய்யும் பணியை மேற்கொள்ளுதல்.

4. சிறுபான்மையினருக்கெதிரான பாகுபாடுகளைத் தவிர்ப்பது குறித்து ஆய்வு, ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுப் பணிகளை மேற்கொள்ளுதல்.

5. மாநில அரசு, யாதொரு சிறுபான்மையினர் தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய தக்க சட்டப்படியான மற்றும் நலப் பணி நடவடிக்கைகள் குறித்து பரிந்துரைத்தல்.

6. குறிப்பிட்ட கால இடைவெளியில் மாநில அரசுக்கு அறிக்கைகள் அளித்தல்.

இந்த ஆணையம் சிறுபான்மையின மக்கள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கைகள் தொடர்பாக மனுதாரர்களை அழைத்து, நேரடியாக விசாரணை செய்து, அம்மனுக்களில் எழுப்பப்பட்டுள்ள பிரச்சினைகள் குறித்து தொடர்புடைய அரசுத் துறைகளிடமிருந்து அறிக்கைகளைப் பெறுகிறது. சிறுபான்மையினரின் பிரச்சினைகளைக் கண்டறியும் பொருட்டு மாநிலத்தின் வெவ்வேறு பகுதிகளைப் பார்வையிட்டு, இவர்களுக்கான நலத் திட்டங்களைத் திறம்பட செயலாக்கிட அரசுக்குத் தக்க பரிந்துரைகளைச் செய்கின்றது.

மாநிலத்திலுள்ள சிறுபான்மையினரைப் பாதுகாப்பதில், தமிழ்நாடு அரசு முன்னணி வகிக்கிறது. நற்செயலாற்றும் விருப்பமுள்ள இம்மாநில அரசு நிருவாகத்தின்கீழ், சிறுபான்மையினர் பாதுகாப்பாகவும் வாழ்கின்றனர்.

♦♦♦

226622